லாங்மன்ஸ்

# செய்யுள் வாசகத் திரட்டு

## இரண்டாம் பாகம்


டாக்டர் உ. வே. சாமிநாதையர்

&

வித்துவான் R. விசுவநாதையர்



மதுரை-காமராசர் பல்கலைக் கழகத்
தமிழ்த் துறைத் அன்பளிப்பு



லாங்மன்ஸ் க்ரீன் அண்ட் கம்பனி லிமிடெட்

# செய்யுள் வாசகத் திரட்டு

## இரண்டாம் பாகம்

மகாமகோபாத்தியாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர் அவர்களாலும்
சென்னை இராஜதானிக் கலாசாலைத் தமிழாசிரியர்
வித்துவான் R. விசுவநாதையர் B.A.,
அவர்களாலும்
தொகுக்கப்பெற்றது

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

லாங்மன்ஸ் க்ரீன் அண்டு கம்பனி லிமிடெட்
36A, மௌன்ட் ரோட், மதராஸ்
1937

*All Rights Reserved*

WITH THE COMPLIMENTS OF
Messrs. LONGMANS, GREEN & Co. Ltd.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்
நூல் வரிசை எண்: 2567
நன்கொடை எண்: 2567

# முகவுரை

உயர்தர பாடசாலை மாணவர்கள் நாட்டுமொழிகளிற் படிக்கவேண்டிய பாடபுத்தகங்கள் இன்னவாறு அமைந்திருக்க வேண்டுமென்று கல்வியதிகாரிகள் ஒரு திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள்; காலத்துக்கேற்றபடி பல மாறுதல்களும் உண்டாகின்றன. இவற்றை மனத்திற் கொண்டு மாணாக்கர்களின் தகுதிக்கு ஏற்ற முறையில் உயர்தர வகுப்புக்களுக்காகச் **செய்யுள் வாசகத் திரட்டு** என்னும் பெயருள்ள இப்புத்தகம் தொகுக்கப்பெற்றுள்ளது. தமிழ்மொழியில் இயன்றவரை நல்ல பழக்கமும், அன்பும் இதனைப் படிப்பதால் மாணாக்கர்களுக்கு உண்டாகுமென்று நம்புகிறோம்.

பலவகையான செய்யுள் நூல்களிலிருந்து பல செய்யுட்களும், சரித்திரம், நீதிகள், கல்வி, கைத்தொழில் முதலியவற்றைத் தெரிவிக்கும் வசனபாகங்களும் இவ்வகுப்புக்கேற்றபடி அமைக்கப்பெற்றுள்ளன. அனுபந்தமாக எழுதப்பெற்ற செய்யுள் நூல்களைப்பற்றிய வரலாறுகளும், செய்யுட்களின் இன்றியமையாக் குறிப்புரைகளும், வினாக்களும் படிப்பவர்களுக்கு உபயோகமாக இருக்கும்.

செய்யுட்கள் யாவுமே மனப்பாடம் செய்தற்கு உரியவை. ஆயினும், மாணவர்களின் இயல்புக்கும் அவர்களுக்குக் கிடைக்கும் காலத்திற்கும் ஏற்றபடி ஆசிரியர்கள் முக்கியமான செய்யுட்களைத் தேர்ந்து மனனம் பண்ணச் செய்தல் நலமாகும். செய்யுட்களை உரிய சந்தத்துடன் படிப்பது படிப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் மிக்க இன்பந்தரும்.

வே. ச.
ஆர். வி.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

# இப்புத்தகத்திலடங்கியவை

## செய்யுட் பகுதி


| | | பக்கம் |
|---|---|---|
| I. | கடவுள் வாழ்த்து ... ... ... ... | 1 |
| II. | சங்க நூல்கள் | |
| | 1. ஐங்குறு நூறு—இளவேனிற் காலம் ... | 2 |
| | 2. பரிபாடல்—மதுரை நகர்வளம் ... ... | 3 |
| | 3. புறநானூறு ... ... ... ... | 4 |
| | 4. திருக்குறள்—பேதைமை ... ... ... | 4 |
| | 5. நாலடியார்—மெய்ம்மை ... ... ... | 5 |
| III. | காவியங்கள் | |
| | 1. மணிமேகலை—புத்தாவதாரப் பெருமை ... | 7 |
| | 2. பெருங்கதை—மகத தேசம் ... ... ... | 9 |
| IV. | இதிகாசங்கள் | |
| | 1. வில்லிபுத்தூரார் பாரதம்—கர்ணபருவம் ... | 11 |
| | 2. நைடதம்—கான்புகு படலம் ... ... | 14 |
| V. | தல புராணங்கள் | |
| | 1. திருவிளையாடற் புராணம்—உலவாக்கோட்டை யருளிய படலம் ... ... | 18 |
| | 2. திருவிரிஞ்சைப் புராணம்—பாலனுக்குத் திருமுடி வளைத்த சருக்கம் ... ... ... | 21 |
| | 3. சீகாளத்திப் புராணம்—சீகாளத்திச் சருக்கம் ... | 29 |
| VI. | பிரபந்தங்கள் | |
| | 1. திருவரங்கக் கலம்பகம் ... ... | 35 |
| | 2. திருக்குற்றாலக் குறவஞ்சி ... ... | 36 |
| VII. | நீதி | |
| | 1. பலநூல் திரட்டு—பெரியோர் இயல்பு ... | 37 |
| | 2. நீதி நூல் ... ... ... ... ... | 39 |
| VIII. | தனிப்பாடல்கள் ... ... ... ... ... | 39 |

## உரைநடைப் பகுதி


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கூத்தரும் குலோத்துங்கனும் ... ... | 41 |
| 2. | திண்ணைப் பள்ளிக்கூடங்கள் ... ... | 47 |
| 3. | 'திருச்சிற்றம்பலம்' ... ... ... | 59 |
| 4. | ஐவகை நிலங்கள் ... ... ... ... | 64 |
| 5. | கௌதம புத்தரும் அவருடைய உபதேசங்களும் | 69 |
| 6. | கலைகள் ... ... ... ... ... | 81 |
| 7. | குமரகுருபரர் ... ... ... ... | 93 |
| 8. | சங்கத்தமிழ் ... ... ... ... | 99 |
| 9. | யூகியின் ஆற்றல் ... ... ... ... | 106 |
| 10. | பணத்தின் வரலாறு ... ... ... | 120 |
| 11. | கல்வி முறை ... ... ... ... | 126 |
| 12. | தமிழ் உரை நடை ... ... ... | 134 |


## அனுபந்தம்


| | |
|---|---|
| செய்யுள் நூல்களின் வரலாறு ... ... | 143 |
| செய்யுட்களின் குறிப்புரை ... ... | 149 |
| வினாக்கள் ... ... ... ... ... | 166 |

அவ்வை
தி. சு. சண்முக நூலகம்.
தமிழிசைத்துறை.

I

# கடவுள் வாழ்த்து

## சிவபெருமான்

(ஆசிரியப்பா)

1. நீல மேனி வாலிழை பாகத்
தொருவ னிருதா ணிழற்கீழ்
மூவகை யுலகு முகிழ்த்தன முறையே. (1)

(ஐங்குறுநூறு—பாரதம் பாடிய பெருந்தேவனார்)

(தரவுகொச்சகக்கலிப்பா)

2. வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே! (2)

(திருவாசகம்—திருச்சதகம்)

## திருமால்

3. நின், வெம்மையும் விளக்கமு ஞாயிற்றுள;
நின், தண்மையுஞ் சாயலுந் திங்களுள;
நின், சுரத்தலும் வண்மையு மாரியுள;
நின், புரத்தலு நோன்மையு ஞாலத்துள;
நின், நாற்றமு மொண்மையும் பூவையுள;
நின், தோற்றமு மகலமு நீரினுள;
நின், உருவமு மொலியுமா காயத்துள;
நின், வருதலு மொடுக்கமு மருத்தினுள. (3)

(பரிபாடல்—கடுவன் இளவெயினனார்)

புத்தர்

(ஆசிரியப்பா)

4. புலவன் தீர்த்தன் புண்ணியன் புராணன்
உலக நோன்பி னுயர்ந்தோ யென்கோ?
குற்றங் கெடுத்தோய் செற்றஞ் செறுத்தோய்
முற்ற வுணர்ந்த முதல்வா வென்கோ?
காமற் கடந்தோ யேம மாயோய்
தீநெறிக் கடும்பகை கடிந்தோ யென்கோ?
ஆயிர வாரத் தாழியன் றிருந்தடி
நாவா யிரமிலே னேத்துவ தெவனோ? (4)

(மணிமேகலை)

II

# சங்க நூல்கள்

## 1. ஐங்குறு நூறு

### இளவேனிற் காலம்

(ஆசிரியப்பா)

5. அவரோ வாரார் தான்வந் தன்றே
குயிற்பெடை யின்குர லகவ
அயிர்க்கேழ் நுண்ணற னுடங்கும் பொழுதே. (1)

6. அவரோ வாரார் தான்வந் தன்றே
சுரும்புகளித் தாலு மிருஞ்சினைக்
கருங்கா னுணவங் கமழும் பொழுதே. (2)

7. அவரோ வாரார் தான்வந் தன்றே
திணிநிலைக் கோங்கம் பயந்த
அணிமிகு கொழுமுகை யுடையும் பொழுதே. (3)

8. அவரோ வாரார் தான்வந் தன்றே
அஞ்சினைப் பாதிரி யலர்ந்தெனச்
செங்க ணிருங்குயி லறையும் பொழுதே. (4)

9. அவரோ வாரார் தான்வந் தன்றே
பொரிகான் மாஞ்சினை புதைய
எரிகா லிளந்தளி ரீனும் பொழுதே. (5)

(ஓதலாந்தையார்)

## 2. பரிபாடல்

### மதுரை நகர்வளம்

10. உலக மொருநிறையாத் தானோர் நிறையாப்
புலவர் புலக்கோலாற் றூக்க—உலகனைத்தும்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்
நான்மாடக் கூட னகர். (1)

11. மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையுஞ் சீரூர் பூவின்
இதழகத் தனைய தெருவ மிதழகத்
தரும்பொகுட் டனைத்தே யண்ணல் கோயில்
தாதி னனையர் தண்டமிழ்க் குடிகள்
தாதுண், பறவை யனையர் பரிசில் வாழ்நர்
பூவினுட் பிறந்தோ னாவினுட் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில்குர லெடுப்ப
ஏம வின்றுயி லெழுத லல்லதை
வாழிய வஞ்சியுங் கோழியும் போலக்
கோழியி னெழாதெம் பேரூர் துயிலே. (2)

12. தண்டமிழ் வேலித் தமிழ்நாட் டகமெல்லாம்
நின்று நிலைஇப் புகழ்பூத்த லல்லது
குன்றுத லுண்டோ மதுரை கொடித்தேரான்
குன்றமுண் டாகு மளவு. (3)

13. செய்யாட் கிழைத்த திலகம்போற் சீர்க்கொப்ப
வையம் விளங்கிப் புகழ்பூத்த லல்லது
பொய்யாத லுண்டோ மதுரை புனைதேரான்
வையையுண் டாகு மளவு. (4)

14. ஈவாரைக் கொண்டாடி யேற்பாரைப் பார்த்துவக்கும்
சேய்மாடக் கூடலும் செவ்வேள் பரங்குன்றும்
வாழ்வாரே வாழ்வா ரெனப்படுவார் மற்றையார்
போவாரார் புத்தே ளுலகு. (5)

## 3. புறநானூறு

### (1) கைவண்மை

(ஆசிரியப்பா)

15. இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிக னாயலன் பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப்பட் டன்றவன் கைவண் மையே.
(முடமோசியார்) (1)

### (2) இனம் இனத்தைச் சேரும்

16. பொன்னுந் துகிரு முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினுந் தொடைபுணர்ந்
தருவிலை நன்கல மமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப
சாலார் சாலார் பாலரா குபவே.
(கண்ணகனார்) (2)

## 4. திருக்குறள்

### பேதைமை

### பேதைமையின் இலக்கணம்

(குறள் வெண்பா)

17. பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண்
டூதியம் போக விடல். (1)

18. பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல். (2)

### பேதையின் தீய செயல்

19. நாணுமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணுமை பேதை தொழில். (3)

20. ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில். (4)

21. ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையும்
தான்புக் கழுந்து மளறு. (5)

22. பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின். (6)

### பேதை செல்வமடைந்தால் உண்டாகும் பயன்

23. ஏதிலா ராரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை. (7)

24. மைய லொருவன் களித்தற்றாற் பேதைதன்
கையொன் றுடைமை பெறின். (8)

### பேதையின் கேண்மை

25. பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொன் றில். (9)

26. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல். (10)

(திருவள்ளுவர்)

## 5. நாலடியார்

### மெய்ம்மை

(வெண்பா)

27. இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை—நசையழுங்க
நின்றோடிப் பொய்த்த னிரைதொடீஇ செய்ந்நன்றி
கொன்றாரிற் குற்ற முடைத்து. (1)

## மேன்மக்கள்

28. அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்கும்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மன்—திங்கள்
மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின். (2)

29. கடித்துக் கரும்பினைக் கண்டகர நூறி
இடித்துநீர் கொள்ளினு மின்சுவைத்தே யாகும்
வடுப்பட வைதிறந்தக் கண்ணுங் குடிப்பிறந்தார்
கூறார்தம் வாயிற் சிதைந்து. (3)

30. பிறர் மறை யின்கட் செவிடாய்த் திறனறிந்
தேதிலா ரிற்கட் குருடனாய்த் தீய
புறங்கூற்றின் மூகையாய் நிற்பானேல் யாதும்
அறங்கூற வேண்டா வவற்கு. (4)

## இதனின் இது நன்று

31. தெளிவிலார் நட்பிற் பகைநன்று சாதல்
விளியா வருநோயி னன்றால்—அளிய
இகழ்தலிற் கோற வினிதேமற் றில்ல
புகழ்தலின் வைதலே நன்று. (5)

## நட்பிற் பிழை பொறுத்தல்

32. நல்லா ரெனத்தா நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லா ரெனினு மடக்கிக் கொளல்வேண்டும்
நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு. (6)

33. இறப்பவே தீய செயினுந்தந் நட்டார்ப்
பொறுத்த றகுவதொன் றன்றோ—நிறக்கோங்
குருவவண் டார்க்கு முயர்வரை நாட!
ஒருவர் பொறையிருவர் நட்பு. (7)

நன்றியில் செல்வம்

34. நாறாத் தகடேபோ னன்மலர்மேற் பொற்பாவாய்!
நீறாய் நிலத்து விளியரோ—வேறாய
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போலும்
நன்மக்கள் பக்கந் துறந்து. (8)

III

# காவியங்கள்

## 1. மணிமேகலை

புத்தாவதாரப் பெருமை

(ஆசிரியப்பா)

35. புத்த ஞாயிறு தோன்றுங் காலைத்
திங்களு ஞாயிறுந் தீங்குறா விளங்கத்
தங்கா நாண்மீன் றகைமையி னடக்கும்;
வானம் பொய்யாது மாநிலம் வளம்படும்;
ஊனுடை யுயிர்க ளுறுதுயர் காணா;
வளிவலங் கொட்கும்; மாதிரம் வளம்படும்;
நளியிரு முந்நீர் நலம்பல தரூஉம்;
கறவைகன் றார்த்திக் கலநிறை பொழியும்;
பறவை பயன்றுய்த் துறைபதி நீங்கா;
விலங்கு மக்களும் வெரூஉப்பகை நீங்கும்;
கலங்கஞர் நரகரும் பேயுங் கைவிடும்;
கூனுங் குறளு மூமுஞ் செவிடும்
மாவு மருளு மன்னுயிர் பெறாஅ;
அந்நாட் பிறந்தவ னருளறங் கேட்டோர்
இன்னாப் பிறவி யிகந்தோ ராகலிற்
போதி மூலம் பொருந்திய சிறப்பின்
நாதன் பாத நவைகெட வேத்துதல்
பிறவி தோறும் மறவேன் மடக்கொடி! (1)

## இந்திரவிழா

36. முரசு கடிப்பிகூஉ முதுகுடிப் பிறந்தோன்
திருவிழை மூதூர் வாழ்கென் றேத்தி
வானமும் மாரி பொழிக மன்னவன்
கோணிலை திரியாக் கோலோ னாகுக
தீவகச் சாந்தி செய்தரு நன்னாள்
ஆயிரங் கண்ணோன் றன்னோ டாங்குள
நால்வேறு தேவரு நலத்தகு சிறப்பிற்
பால்வேறு தேவரு மிப்பதிப் படர்ந்து
மன்னன் கரிகால் வளவனீங் கியநாள்
இந்நகர் போல்வதோ ரியல்பின தாகிப்
பொன்னகர் வறிதாப் போதுவ ரென்பது
தொன்னிலை யுணர்ந்தோர் துணிபொரு ளாதலின்
தோரண வீதியுந் தோமறு கோட்டியும்
பூரண கும்பமும் பொலம்பா லிகைகளும்
பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்;
காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
பூக்கொடி வல்லியுங் கரும்பு நடுமின்;
பத்தி வேதிகைப் பசும்பொற் றூணத்து
முத்துத் தாம முறையொடு நாற்றுமின்;
விழவுமலி மூதூர் வீதியு மன்றமும்
பழமணன் மாற்றுமின்; புதுமணற் பரப்புமின்;
கதலிகைக் கொடியுங் காழூன்று விலோதமும்
மதலை மாடமும் வாயிலுஞ் சேர்த்துமின்;
நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வ மீறாக
வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை
ஆறறி மரபி னறிந்தோர் செய்யுமின்;
தண்மணற் பந்தருந் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை யறிவீர் பொருந்துமின்;
ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
பட்டிமண் டபத்துப் பாங்கறிந் தேறுமின்;

பற்றா மாக்க டம்முட னாயினும்
செற்றமுங் கலாமுஞ் செய்யா தகலுமின்;
வெண்மணற் குன்றமும் விரிபூஞ் சோலையும்
தண்மணற் றுருத்தியுந் தாழ்பூந் துறைகளும்
தேவரு மக்களு மொத்துடன் றிரிதரும்
நாலேழ் நாளினு நன்கறிந் தீரென
ஒளிறுவாண் மறவருந் தேரு மாவும்
களிறுஞ் சூழ்தரக் கண்முர சியம்பிப்
பசியும் பிணியும் பகையு நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி
அணிவிழா வறைந்தன னகநகர் மருங்கென்.

(சீத்தலைச் சாத்தனார்) (2)

## 2. பெருங்கதை

### மகத தேசம்

—ஐந்திணை—

மருதம்

(எருமையின் செயல்)

[ஆசிரியப்பா]

37. வயல்கொள் வினைஞர் கம்பலை வெரீஇக்
கயமூழ் கெருமை கழைவளர் கரும்பின்
விண்ட விளமடன் முருக்கித் தண்டாது
தோகைச் செந்நெல் சவட்டிப் பாசிலை
ஒண்கேழ்த் தாமரை யுழக்கி வண்டுகள்
ஆம்ப லகவிலை முருக்கிக் கூம்பற்
குவளைப் பன்மலர் குழைத்துத் தவளைத்
தண்டுறை கலங்கப் போகி வண்டினம்
பாட லோவாப் பழனப் படப்பைக்

கூடுகுலைக் கமுகின் கொழுநிழ லசைந்து
மன்றயற் பரக்கு மருதந் தழீஇக்

குறிஞ்சி

(அருவி)

குன்றயற் பரந்த குளிர்கொ ளருவி
மறுவின் மானவர் மலிந்த மூதூர்
வெறிது சேறல் விழுப்ப மன்றெனக்
கான வாழைத் தேனுறு கனியும்
அள்ளிலைப் பலவின் முள்ளுடை யமிர்தமும்
திரடாண் மாஅத்துத் தேம்படு கனியும்
வரைதாழ் தேனொடு காஅய்விரை சூழ்ந்து
மணியு முத்து மணிபெற வரன்றிப்
பணிவில் பாக்கப் பயங்கொண்டு கவரா
நிறைந்துவந் திழிதரு நீங்காச் செல்வமொடு
சிறந்த சீர்த்திக் குறிஞ்சி கோலிக்

முல்லை

கல்லென் சும்மையொடு கார்தலை மணந்த
முல்லை முதுதிணைச் செல்வ மெய்திப்

பாலையும் நெய்தலும்

பாலையு நெய்தலும் வேலி யாகக்
கோல மெய்திக் குறையா வுணவொடு.

மகததேயம்

துறக்கம் புரியுந் தொல்லையி னியன்றது
பிறப்பற முயலும் பெரியோர் பிறந்தது
சிறப்பிடை யறாத தேசிக முடையது
மறப்பெருந் தகையது மாற்றோ ரில்லது
விறற்புக ழுடையது வீரிய மமைந்த
துலகிற் கெல்லாந் திலகம் போல்வ
தலகை வேந்த னாணை கேட்ப
தாம்பு மல்லலுங் கரம்பு மில்லது

செல்வப் பெருங்குடி சிறந்தணி பெற்றது
நல்குர வாளரை நாடினு மில்லது
நன்பெரும் புலவர் பண்புளி பன்னிய
புகழ்ச்சி முற்றா மகிழ்ச்சியின் மலிந்த
தின்னவை பிறவு மெண்ணுவரம் பிகந்த
மன்பெருஞ் சிறப்பின் மகதநன் னாடு. (1)

அன்பர் தம்முட் செய்தற்குரியன

38. அற்றங் காத்தலி னாண்மை போலவும்
குற்றங் காத்தலிற் குரவர் போலவும்
ஒன்றி யொழுகலி னுயிரே போலவும்
நன்றி யன்றிக் கன்றியது கடிதற்குத்
தகவில செய்தலிற் பகைவர் போலவும்
இனையன பிறவு மினியோர்க் கியல்க. (2)

(கொங்குவேளிர்)

IV

# இதிகாசங்கள்

## 1. வில்லிபுத்தூரார் பாரதம்

### கர்ணபருவம்

கண்ணபிரான் போர்க்களத்தில் கர்ணனை அடைந்து யாசித்தல்

கண்ணபிரான் கூற்று

(ஆசிரியவிருத்தம்)

39. தாண்டிய தரங்கக் கருங்கட லுடுத்த
தரணியிற் றளர்ந்தவர் தமக்கு
வேண்டிய தருதி நீயெனக் கேட்டேன்
மேருவி னிடைத்தவம் பூண்டேன்
ஈண்டிய வறுமைப் பெருந்துய ருழந்தேன்
இயைந்ததொன் றிக்கணத் தளிப்பாய்
தூண்டிய கவனத் துரகதத் தடந்தேர்ச்
சுடர்தரத் தோன்றிய தோன்றால்! (1)

கர்ணனது வினவும் கண்ணனது விடையும்

40. என்றுகொண் டந்த வந்தண னுரைப்ப
இருசெவிக் கமுதெனக் கேட்டு
வென்றிகொள் விசயன் விசயவெங் கணையால்
மெய்தளர்ந் திரதமேல் விழுவோன்
நன்றென நகைத்துத் தாத்தகு பொருணீ
நவில்கென நான்மறை யவனும்
ஒன்றிய படிநின் புண்ணிய மனைத்தும்
உதவுகென் றலுமுள மகிழ்ந்தான். (2)

கர்ணன் சொல்லல்

41. ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை
யகத்ததோ புறத்ததோ வறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலா நயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையால்
ஒவிலா தியான்செய் புண்ணிய மனைத்தும்
உதவினேன் கொள்கநீ யுனக்குப்
பூவில்வா ழயனு நிகரல னென்றாற்
புண்ணிய மிதனினும் பெரிதோ. (3)

கர்ணன் தன் புண்ணியத்தைத் தாரை வார்த்துக்கொடுத்தபின்பு, கண்ணபிரான் மகிழ்ந்து, ‘உனக்கு என்ன வரம் வேண்டும்’ என்று கேட்டலும், அதற்குக் கர்ணன் கூறும் விடையும்

42. மல்லலந் தொடைய னிருபனை முனிவன்
மகிழ்ந்துநீ வேண்டிய வரங்கள்
சொல்லுக வுனக்குத் தருதுமென் றுரைப்பச்
சூரன்மா மதலையுஞ் சொல்வான்
அல்லல்வெவ் வினையா லின்னமுற் பவமுண்
டாயினு மேழெழு பிறப்பும்
இல்லையென் றிரப்போர்க் கில்லையென் றுரையா
இதயநீ யளித்தரு ளென்றான். (4)

கண்ணன் வரமளித்தல்

43. மைத்துன னுரைத்த வாய்மைகேட் டையன்
மனமல ருகந்துகந் தவனைக்
கைத்தல மலரான் மார்புறத் தழுவிக்
கண்மலர்க் கருணைநீ ராட்டி
எத்தனை பிறவி யெடுக்கினு மவற்றுள்
ஈகையுஞ் செல்வமு மெய்தி
முத்தியும் பெறுதி முடிவிலென் றுரைத்தான்
மூவரு மொருவனு மூர்த்தி. (5)

கண்ணபிரான் தம் திருவுருவத்தை அவன் காணச்செய்தல்

44. போற்றிய கன்னன் கண்டுகண் களிப்பப்
புணரிமொண் டெழுந்தகார் முகிலை
மாற்றிய வடிவும் பஞ்சவா யுதமும்
வயங்குகைத் தலங்களு மாகிக்
கூற்றுறழ் கராவின் வாயினின் றழைத்த
குஞ்சர ராசன்மு னன்று
தோற்றிய படியே தோற்றினன் முடிவும்
தோற்றமு மிலாதபைந் துளவோன். (6)

கர்ணன் துதி

(வேறு)

45. அருந்தழன்மா மகம்புரிந்துங் கடவுட் கங்கை
ஆதியாம் புனல்படிந்து மனில யோகத்
திருந்துமணி மலர்தூவிப் பூசை நேர்ந்தும்
எங்குமா கியவுன்னை யிதயத் துள்ளே
திருந்தநிலை பெறக்கண்டும் போக மெல்லாம்
சிறுக்கியனைத் துயிருக்குஞ் செய்ய வொண்ணுப்
பெருந்தவங்கண் மிகப்பயின்றும் பெறுதற் கெட்டாப்
பெரும்பயனின் றிருவருளாற் பெறப்பெற் றேனே. (7)

46. நீலநெடுங் கிரியுமழை முகிலும் பவ்வ
நெடுநீருங் காயாவு நிகர்க்கு மிந்தக்
கோலமும்வெங் கதைவாளுஞ் சங்கு நேமி
கோதண்ட மெனும்படையுங் குழையுங் காதும்
மாலைநறுந் துழாய்மார்புந் திரண்ட தோளும்
மணிக்கழுத்துஞ் செவ்விதழும் வாரி சாதக்
காலைமல ரெனமலர்ந்த முகமுஞ் சோதிக்
கதிர்முடியு மிம்மையிலே கண்ணுற் றேனே. (8)

47. தருமன்மகன் முதலான வரிய காதற்
றம்பியரோ டெதிர்மலைந்து தறுக ணண்மைச்
செருவிலென துயிரனைய தோழற் காகச்
செஞ்சோற்றுக் கடன்கழித்தேன் றேவர் கோவுக்
குரைபெறுநற் கவசமுங்குண் டலமு மீந்தேன்
உற்றபெரு நல்வினைப்பே றுனக்கே தந்தேன்
மருதிடைமுன் றவழ்ந்தருளுஞ் செங்கண் மாலே
மாதவத்தா லொருதமியன் வாழ்ந்த வாறே. (9)

48. வான்பெற்ற நதிகமழ்தாள் வணங்கப் பெற்றேன்
மதிபெற்ற திருவுளத்தான் மதிக்கப் பெற்றேன்
தேன்பெற்ற துழாயலங்கற் களப மார்பும்
திருப்புயமுந் தைவந்து தீண்டப் பெற்றேன்
ஊன்பெற்ற பகழியினு லழிந்து வீழ்ந்தும்
உணர்வுடனின் றிருநாம முரைக்கப் பெற்றேன்
யான்பெற்ற பெருந்தவப்பே றென்னை யன்றி
இருநிலத்திற் பிறந்தோரில் யார்பெற் றாரே. (10)

(வில்லிபுத்தூராழ்வார்)

## 2. நைடதம்

### கான்புகு படலம்

நளன் அடைந்த கானம் வெப்பம் தீர்ந்து விளங்கிய தன்மை

(கலிவிருத்தம்)

49. களிமயில் குனித்திடக் கால மன்றியும்
துளிமுகில் பிலிற்றின துணர்த்த பூங்கொடி
முளிசினை தளிர்த்தன முகைத்த பைந்தரு
நளிகடற் றனையா னடந்த கானமே. (1)

50. விள்ளரு மதரிடை வெதும்பும் வெம்பரல்
கள்ளவிழ் மலரெனக் குழைந்து காட்டின;
ஒள்ளழற் கதிர்சுட வுலரும் வெஞ்சுரம்
வள்ளவாய் மலர்விரி மருதம் போன்றதே. (2)

51. ஊறுசெய் தூன்சுவைத் துடம்பு வீக்கிய
ஆறலை கள்வரு மளிய ராயினர்
வேறினி யுரைப்பதென் வெருவு மானொடு
மாறுகொ ளுழுவையு மாற்றந் தீர்ந்தவே. (3)

52. ஆயிடை யுயிர்நிக ரணங்க னாளொடும்
மேயதன் னகர்வயின் விசும்பு போழ்ந்துலாம்
காய்கதிர் நுழைகலாக் காவி னுடல்போற்
போயின னழலுமிழ் புலவு வேலினான். (4)

அங்கே, ஒரு குளக்கரையில் கலிபுருடன் அன்னப்பறவை உருக்கொண்டு வந்திருத்தல்

53. அள்ளிலைப் பூணினா னேகு மாற்றிடைக்
கொள்ளைவண் டினமிழி நறவு கூட்டுணும்
வள்ளவாய் மலரவிழ் வாவி யங்கரைப்
புள்ளுருக் கொடுகலி போயி னானரோ. (5)

தமயந்தி அன்னத்தைப் பார்த்தல்

54. வாவியின் மருங்குநன் மணிகள் கோத்தெனத்
தூவியம் பொற்சிறை மென்புட் டோன்றலும்
ஓவிய ரெழுதரு முருவப் பைங்கொடி
காவியங் கண்ணிணை களிப்ப நோக்கினள். (6)

'அதனைப் பிடித்துத் தருக' என்றல்

55. பன்மலர் கஞலிய பனிக்கொள் வாவியிற்
பொன்னவிர் கொடுஞ்சிறைப் புள்ளை நோக்குரு
மன்னநம் மணநிலை முடித்த வண்ணிதே
அன்னமென் புள்ளினீ தழகு வாய்ந்ததே. (7)

56. மற்றுமோ ருயிரென வளர்த்த பூவையும்
சொற்றரு கிள்ளையு மறப்பத் தூமணிப்
பொற்றடந் தோளிணுய் பொன்னம் புள்ளினேப்
பற்றிநீ தருகெனப் பணிந்து கூறினுள். (8)

57. ஓர்துகி லிருவரு முடுத்து மற்றையோர்
காரகிற் றீம்புகை கமழு நீவிகொண்
டோர்குடி யிருந்தன விலேகொள் பூணிணுய்
வார்சிறைப் புள்ளினே வளேத்து மென்றனள். (9)

அன்னம் துகிலேக்கொண்டு பறந்து செல்லல்

58. கருந்தடங் கண்ணிதன் னுள்ளங் காமுறத்
திருந்துவேற் றடக்கையான் றுகிலிற் சேர்த்தலும்
பொருந்திய துகிலொடும் வஞ்சம் பூண்டெதிர்
இருந்தபுள் ளந்தரத் தெழுந்து போயதே. (10)

59. புனே துகில் கவர்ந்துபைம் பொன்னி றத்தபுள்
பனியிரு விசும்பினிற் பறத்தல் காண்டலும்
மனேவித னருந்துயர் நோக்கி மாழ்கினுன்
வினேவலி யிதுவென மெலிவு நீக்கினுன். (11)

நளன் தமயந்தியை நோக்கி 'உன் ஊர்க்குச் செல்லும் வழி இது' என்றல்

60. கல்லதர் நடந்துபூங் கமலம் வாட்டிய
மெல்லடி சிவப்புறல் வீழி வாய்மயிற்
கொல்லுமே யெனமன முருகி யுந்தையூர்
செல்லுநீ ணெறியிது வென்று செப்பினுன். (12)

கேட்ட தமயந்தி வருந்தல்

61. ஆங்கது கேட்டலு மழுது மாழ்கிநொந்
தீங்குநின் னடியனேன் பிழைத்த தியாதுகொல்
பூங்கழற் குரிசிலோய் பொறியி லேன்றனே
நீங்கவோ விவ்வுரை நிகழ்த்தி னுயென்ருள். (13)

நளன் தேற்றல்

62. செயிரறு மதிமுகம் பசப்பச் சிந்தைநொந்
தயர்வொடு கண்பனித் தவலங் கோடலை
மயிலியற் பேதைநிற் பிரிந்து வாழ்வெனே
உயிர்பிரிந் தாலுட லுய்யு மோவென்றான். (14)

சூரியாஸ்தமனம்

63. முருகுயிர்த் தளியின மூசு பூங்குழற்
கருதரு பெருந்துயர் காண்கி லேனெனாப்
பரிநெடுந் தேரொடும் பரிதி வானவன்
உரவுநீர்க் கருங்கட லொளித்திட் டானரோ. (15)

நளன் ஒரு பாழ்மண்டபத்தை அடைதல்

64. மாயிரு ஞாலமும் வானு நுங்கிய
பாயிருட் கங்குலிற் பாவை தன்னொடும்
போயரின் முற்றிய பொலிவின் மண்டபம்
மேயின னரசர்கோன் விதியின் கொட்பினால். (16)

கவியின் கூற்று

ஊழை வியத்தல்

65. இன்னகிற் புகைதவழ்ந் தினிதின் மென்மைய
பன்மல ரமளிமேற் பள்ளி கொள்பவர்
புன்னுனை பரந்தவெம் பொடிகொள் பார்மிசை
மன்னின ரூழினும் வலிதி யாவதே. (17)

நளன் இரங்கல்

66. அனிச்சமென் புதுமல ரமளி மேயினும்
பனித்திடு மெய்யெனப் பதைத்து வாடுவேன்
கனிப்படு கிளவிவெம் பொடியிற் கண்படின்
இனித்தமி யேனுயி ரெங்ங னுய்யுமே. (18)

67. கண்ணகன் புவிக்கெலாங் களைக ணாகிய
தண்மதி நெடுங்குடை விதர்ப்பன் றாழ்குழல்
நண்ணரு மித்துய ருழந்து நண்ணுமேல்
எண்ணின்மற் றியார்துய ரெய்திடா ரென்றான். (19)

தமயந்தி இரங்கல்

68. வளைகட லுலகினின் மன்னர் தாடொழ
உளையரிப் பைந்தவி சுறையு மெம்பிரான்
முளரியா லெங்கணு முற்று மண்டபத்
தெளியர்போ லிருத்திகொ லென்று விம்மினாள். (20)

தமயந்தி நளன் கையணையில் உறங்கல்

69. தடங்கணீர் துடைத்துமெய் தைவந் தாயிழை
நடுங்கவென் றூற்றிட நள்ளி யாமத்து
மடங்கல்போன் மொய்ம்புடை மன்னர் மன்னவன்
குடங்கைமேற் றுயின்றனள் பொன்னங் கொம்பனாள்.
(அதிவீரராமபாண்டியன்) (21)

## V

# தல புராணங்கள்

## 1. திருவிளையாடற் புராணம்

—உலவாக்கோட்டையருளிய படலம்—

ஓர் உழவன் இயல்பு

[கலித்துறை]

70. பொடியார்க்கு மேனிப் புனிதர்க்குப் புனித வேற்றுக்
கொடியார்க்கு வேதக் குடுமிக்கிணை யான கூடற்
படியார்க்குஞ் சீர்த்திப் பதியேருழ வோரு ணல்லான்
அடியார்க்கு நல்லா னறத்திற்கும் புகழ்க்கு நல்லான்.
(1)

71. அனையா னறத்திற் கருள்போன்றவ ளான்ற கற்பின்
மனையாண் மரபின் வழுவாத தரும சீலை
எனையாரு நன்கு மதிக்க விருக்கு நீராள்
தனையாள் பதிக்குக் கதிக்குத்தனிச் சார்பு போல்வாள். (2)

72. பல்லே ருழவின் றொழில்பூண்டு பயன்கள் கொள்வான்
வில்லே ருழவர் கடன்கொண்டு மிகுந்த வெல்லாம்
இல்லே ருழத்தி மடைச்செல்வ மியற்றி யேந்த
அல்லேறு கண்ட னடியாரை யருத்து நீரான். (3)

73. தொகைமாண்ட தொண்டர் சுவையாறு தழீஇய நான்கு
வகைமாண்ட மாறு படுமுண்டி மறுத்த ருந்த
நகைமாண்ட வன்பின் றலையாயவ னல்க நல்கப்
பகைமாண்ட செல்வ மணற்கேணியிற் பல்கு நாளின்.
(4)

வறுமையுண்டாதல்

74. இந்நீர வாய வளங்குன்றினு மின்மை கூறுத்
தன்னீர்மை குன்று னெனுந்தன்மை பிறர்க்குத் தேற்ற
நன்னீர் வயலின் விளைவஃகி நலிவு செய்ய
மின்னீர வேணி மதுரேசர் விலக்கி னுரே. (5)

உழவன் வருந்துதல்

75. குன்று விருத்திக் கடன்கொண்டுகொண் டன்பர் பூசை
நன்று நடாத்தத் தொடுத்தான்கடன் றுனுங் கிட்டா
தொன்றுலுங் கொண்ட விரதத்துக் குறுதி யின்றி
நின்று னுடம்பை யொறுக்கின்ற நியமம் பூண்டான்.
(6)

76. கொடுப்பா ரவரே விளைவுங்கடன் கோளு மாற்றித்
தடுப்பா ரெனின்மற் றதையாவர் தடுக்க வல்லார்
அடுப்பார் விழுமங் களைவாரடி யார்க்கு நல்லூண்
மடுப்பா னியமந் தடைபட்டு வருந்து கின்றுன். (7)

77. விண்ணுறு சூடும் விடையான்றமர்க் கூட்டி யன்றி
உண்ணுத வன்றன் னுயிர்க்குத்துணை யாய கற்பிற்
பண்ணுர்மொழி தன்னெடும் பட்டினி விட்டு நெஞ்சம்
புண்ணுக வாகம் பசித்தீயிற் புழுங்கப் பட்டான். (8)

மதுரேசர்முன் செல்லுதல்

78. இறக்கும் முடம்பாற் பெறும்பேறினி யாவ தென்னு
அறக்குன் றனையான் மனையோடு மடைந்திச் செய்தி
நிறக்கின்ற செம்பொற் சிலையார்க்கு நிகழ்த்தி யாவி
துறக்கின் றதுவே துணிவென்று துணிந்து போனுன். (9)

### இறையனரிடம் விண்ணப்பித்தல்

79. ஐயன் றிருமுன்ன ரடைந்தடி தாழ்ந்து வானோர்
உய்யும் படிநஞ் சமுதுண்ட வொருவ வுன்றன்
மெய்யன்பர் பூசைக் கிடையூறு விளைய வின்றென்
செய்யும் புலமும் விளைவின்றிச் சிதைந்த வென்னு. (10)

80. விடனல்கு சூலப் படையாய்கடன் வேறு காணேன்
கடனல்க வல்லார் தமைக்காட்டுதி காட்டி லாயேல்
மடனல்கு மிந்த வுடம்பின்சுமை மாற்று வேனென்
றுடனல்கு கற்புக் குரியாளொடும் வேண்டு மெல்லை. (11)

### மதுரேசர் அருள்செய்தல்

81. பஞ்சாதி வேதப் பொருள்சொன்ன பரமன் வாக்கொன்
றஞ்சாதி வேளாண் டலைவாவு னகத்தி லின்றோர்
செஞ்சாதி யாய செழுவாலரிக் கோட்டை யுய்த்தேம்
எஞ்சா திருக்கு மெடுக்குந்தொறு மென்று மாதோ. (12)

82. நீநாளும் பூசித் ததில்வேண்டிய கொண்டு நித்தம்
ஆனுத வன்பர்க் கமுதூட்டி யெவர்க்கு மன்ன
தானுதி நானு தருமங்களுஞ் செய்தி வீடு
மேனு ளளிக்கின் றனமென்று விசும்பிற் கூற. (13)

### உழவன் உலவாக்கோட்டை பெற்று உவந்தது

83. கேட்டின்ப மெய்திக் கிளர்விம்மித னுகி வேதப்
பாட்டின் பயனைப் பணிந்தில்ல மடைந்து பண்டை
ஈட்டுந் தவப்பே றெனக்கண்டனன் றெண்டர்க் கெந்தை
கூட்டுங் கதிபோ லுலவாமற் கொடுத்த கோட்டை. (14)

84. வானூறு சூடி தருகோட்டையை வைக றோறும்
பூநாறு சாந்தம் புகையொண்சுடர் கொண்ட ருச்சித்
தானுத செவ்வி யடிசிற்கு மதற்கு வேண்டும்
நானு கருவிவிலைக்கும்மது நல்க வாங்கா. (15)

85. மின்னூர் சடையான் றமராய்ந்தவர் வேதச் செல்வர்
தென்னூடர்தெய்வம் விருந்தோக்கல் செறிந்து நட்டோர்
முன்னூ மெவர்க்கும் முகில்போல் வரையாம னல்கி
எந்நாளு நோயின் றளகாதிப னென்ன வாழ்ந்தான்.
(பரஞ்சோதிமுனிவர்) (16)

## 2. திருவிரிஞ்சைப் புராணம்

—பாலனுக்குத் திருமுடி வளைத்த சருக்கம்—

சிவநாதன் வரலாறு

(கலித்துறை)

86. சைவ வேதியர் குலத்தினி லொருவனத் தலத்தில்
தெய்வ நான்மறைப் பொருளது முடியவுந் தெளிந்தோன்
ஐவ கைப்படு வேள்வியு மறுவகைத் தொழிலும்
மெய்வி திப்படி யறிந்தவை புரிந்திடும் விதியோன். (1)

87. சத்தி யப்பொரு ளெப்படி யப்படி தழைத்தோன்
உத்த மக்குண மெத்தனை யவையெலா முடையோன்
சித்தி ரப்பெயர் முனியெனச் சிவகதை தெளிந்தோன்
அத்தி ரித்தவன் கோத்திரத் தவதரித் தருள்வோன். (2)

(ஆசிரிய விருத்தம்)

88. பயனூ ரும்பதி பசுபா
சப்புகல் பலநூ லுந்தெளிவோன்
இயலா கும்பெயர் சிவநா
தன்றின மிவனோ டின்புறுமால்
நயனூ னந்தினி வடமீ
னுந்தொழு நலமார் பண்புடையாள்
தயவா மங்கவ டருபா
லன்சிவ சருமா வென்பவனே. (3)

அவ்வை தி.க. சண்முகம்
நூல் வரிசை எண்: 256
நன்கொடை எண்: 256

89. நவமா மைங்கணே மதனே
வம்பல நடரா சன்சுதனே
உவமா னஞ்சொல வரிதா
மென்றினி துலகோ ரின்புறவே
தவமேல் வந்திட வயதோ
ரைந்தொடு தழையா நின்றிடுநாள்
பவரோ கங்களே சிவநா
தன்சிவ பதமீ தொன்றினனே. (4)

தாயத்தார் செயல்

(கலிவிருத்தம்)

90. அன்னைமக னேடுருகி யாழ்துய ருழந்தாள்
ஒன்னலர்க டாயமுடை யோர்கள்பலர் கூடி
இன்னபொருண் மாடுபகிர் வீடுபகி ரென்றே
மன்னுசிவ சன்மனே வளைத்திடர்வி ளைத்தார். (5)

91. ஞாதியரை முட்செடியை நஞ்சையழ றன்னே
ஏதமொ டழிப்பதுர மெய்துவதன் முன்னே
ஆதவி னவற்குரிமை யானபொரு ளெல்லாம்
நீதியிலர் கைக்கொளஎ நினைத்திவை யுரைப்பார். (6)

தாயத்தார் கூற்று

92. அன்றுமுத லின்றள வருச்சனே புரிந்தோம்
இன்றுனது பூசைமுறை யெங்கண்முறை யன்றே
சென்றுபுரி பூசையது செய்யமுடி யாதேல்
ஒன்றுபுரி காணிகளே யொற்றியெழு தென்றார். (7)

93. அல்லதெனின் விற்றுவிடு வன்னேமட வாணீ
சொல்லவறி யாயிது துணிந்தபொரு ளென்றார்
இல்லளவு மெய்தியுன தாயைவின வென்றார்
நல்லதம ரீதுசொல நம்பியு நடந்தான். (8)

## தாய் இரங்கல்

94. தாயமுடை யோர்மொழித ருயுட னுரைத்தான்
ஆயுமிவை கைக்கொளவியற்றினர்க ளேயா
மாயமென நொந்துகை வயிற்றிடையில் வைத்தாள்
பாயலில் விழுந்தனள் பதைத்தனள் கலுழ்ந்தாள். (9)

95. ஆருமிலே நங்கடுணே யாருமிலே நண்போர்
தேரிலுற வோருமிலர் தெய்வபல மின்றே
பாரிலெனே மானுமொரு பாவியரு முண்டோ
யாருதவி யாவரினி யாதுகதி யென்ருள். (10)

96. இன்னலே யொழித்திடுவ தேழையடி யார்கள்
சொன்னது முடிப்பதிறை தூயதொழி லென்றே
அன்னேயு நினேத்தமல ஞலயமு னெய்திச்
சந்நிதியில் வந்துவிழி தாரைவிழ நின்ருள். (11)

97. ஏத்தின ளிறைஞ்சினளெ னேழைமக வுய்யக்
காத்தருளு வீர்பழைய காணியழி யாதே
வாய்த்ததுணே யாரினி வழித்துணே வரேகண்
பார்த்தருளு வீரிது பணித்தருளு மென்ருள். (12)

98. கூற்றமென வேபகைவர் கூடினர்க ளெங்கும்
வேற்றுமுக மானதினி வேறுதுணே காணேன்
ஆற்றவரி தென்றுய ரடைக்கல முமக்கே
மாற்றமினி வேறிலே வழித்துணே மருந்தே. (13)

99. முன்புபெறு பேறெமது முந்தின தடைக்காய்
பின்புபெறு பேறவர்கள் பேறலது வேருே
என்கணவன் மாய்தவி னிளந்தலே யறிந்தே
வன்புபுரி கின்றனர் வழித்துணே மருந்தே. (14)

100. பிட்டுணவு விற்குமுது பேதைதுயர் கண்டோர்
கொட்டிஞெடு கூடைகொடு கூடலி னடந்தாய்
இட்டிரை யளித்திடு மியற்கையுன தன்ருே
மட்டுவிரி செஞ்சடை வழித்துணே மருந்தே. (15)

101. சுந்தர னகற்றவொரு தூதென நடந்தாய்
மைந்தருடன் வாணன்மனே வாசலி லிருந்தாய்
எந்தையொரு வேடனிடு மெச்சிலே நுகர்ந்தாய்
அந்தநிலே கண்டுன தடைக்கலம தானேம். (16)

கடவுள் வேதியராகத் தோன்றல்

102. என்றிவை மொழிந்துதொழு தில்லமிசை யெய்திக்
குன்றுமிரு ளூடுதுயர் கொண்டுதுயில் கின்றுள்
மன்றுணட மாடிய வழித்துணே மருந்தர்
பொன்றரிய வேதியர்கள் போலவெதிர் வந்தார். (17)

(ஆசிரிய விருத்தம்)

103. என்பெருந் தாதை போல
இருந்தநீ ரெழிலி ஞலே
மன்பதை யளிக்கு மெங்கள்
வழித்துணே மருந்தர் போலே
துன்பம தகற்ற வேண்டித்
தோன்றினீர் பெயரே தென்றுள்
அன்புடை யணங்கே யுங்கட்
கநாதியி லுறவா மென்ருர். (18)

104. வழித்துணே யிறைவர் நம்பேர்
வழிபடு மடியார்க் கெல்லாம்
விழித்துணே யாவோஞ் சைவ
வேதியர் வடிவந் தன்னே
ஒழித்துநா முறையே மந்த
உருவர னுருவ மாகும்
பழித்திரண் டாகச் சொல்வார்
பரகதி புகுதா ரென்ருர். (19)

105. ஒருத்திநான் சிறியன் பாலன்
உதவியா வொருவ ரில்லே
பெருத்தது பகையென் றெண்ணிப்
பிணங்கிடே லணங்கு போல்வாய்

திருத்தகு குளத்தே நாளைச்
சிறுவனை மூழ்கச் செய்தால்
வருத்தமற் றிடுவா யென்று
மொழிந்தனர் மறைந்து போனர். (20)

சிவசருமா அருச்சனைக்கு உரியனாதல்

106. மற்றைநா ளெழுந்து காலைப்
பொழுதினின் மகன்றன் னேடே
பெற்றதாய் தமது வீதி
ஆவணம் பெயர்ந்து நீங்கிக்
கற்றைவார் சடையான் கோயிற்
கனககோ புரத்தை யெய்திச்
செற்றலர் பலருங் காணத்
திருக்குளக் கரையைச் சேர்ந்தாள். (21)

107. மைந்தனே நம்மை யாண்டு
வழிவழி யடிமை கொண்டு
தந்தைதாய் குரவன் போல்வந்
துதவிய தலைவன் றளைப்
புந்திமே விருத்தி யிந்தப்
புனலிடை மூழ்க வென்றுள்
அந்தணர் திலக மன்னன்
முழுகின னரனை வாழ்த்தி. (22)

108. மருவியே முழுகு மைந்தன்
வலச்செவி நடுவே மாறு
தரவணி யரனே யென்ற
அரவமே முழங்கிற் றந்தக்
கரணமு மலமு மாய
களைகளைந் திடையிற் புக்க
இருவினை வகையு நீங்கி
அருச்சனைக் கிறைவ னானன். (23)

109. நெருக்குளத் தவர்க ணெஞ்சில்
நினைத்தவை யனைத்து நல்கும்
தருக்குளத் திடையிற் ரோன்றும்
தழற்கண னருளி னாலே
திருக்குளத் திடையின் மூழ்கி
எழுந்துதென் கரையிற் சேர்ந்தான்
உருக்குளத் தவத்தி னானும்
சுகனுமொப் புடைமை யுற்றான். (24)

வேறு

110. புரிநூறு வண்டு புயமார முஞ்சி
புனைகோவ ணம்பொலியவே
திருநீ றிலங்க முதுகூ டசைந்து
சிகைதாழ வங்கையிருநால்
ஒருநூறு கொண்ட மணிமாலை தங்க
ஒளிவீச வந்துலவினான்
இருநூறு கண்கள் பெறவேணு நம்பி
எழில்காண வந்தவர்களே. (25)

சிவசருமா பூசையியற்ற வருதல்

(கலித்துறை)

111. விழுப்ப மானது கண்டுகண் டனைவரும் வியந்தார்
அழுக்கு நெஞ்சினோ ரவர்களு மதிசய மானார்
ஒழுக்க மாகவே பணிந்தரன் கோயில்புக் குரவோன்
செழிக்கு நான்மறைத் தபனமண் டபந்தனைச் செறிந்தான். (26)

பூசை

112. தூய பொற்கல சத்துடன் பலமலர் தூபம்
கோயி லிற்பரி சாரக ரவன்கையிற் கொடுத்தார்
ஆயி ரக்கதி ரண்ணறன் பூசையு மற்றும்
வாயி லிற்புரி பூசையு மியற்றியுள் வந்தான். (27)

113. சந்தி யென்பவை யிரண்டையு முடித்திடு சைவன்
ஐந்து சுத்திக ளியற்றியர்க் கியமிரண் டமைத்துச்
சுந்த ரப்பெருங் கலசமொன் றெடுத்துநீர் சொரியக்
குந்தி நின்றன னுயர்ந்தது திருமுடிக் கொழுந்து. (28)

சிவபெருமான் முடி வளைதல்

114. இருக ரத்தினு லிவர்முடி தொடவரி தென்றே
கருதி யெய்த்துநொந் தினியென்கொல் செயலெனக் கவன்றான்
பாக திக்குவந் தருள்புரி பதவிச காயன்
மாக தக்கொடி யிடத்தினன் றிருமுடி வளைந்தான். (29)

115. அலைவ ளைந்திடும் புவியிடத் துடலுயி ரனைத்தும்
தலைவ ளைந்தன வளைந்தன விமையவர் தருவும்
சிலைவ ளைந்திடுஞ் செயலெனத் திசைதிசை செறிந்த
மலைவ ளைந்தன வழித்துணை யவர்முடி வளைக்க. (30)

116. என்பு நெக்குநெக் குருகவென் னிதயத்தி லிருப்பான்
மன்ப தைக்கெலா முயிருமா யுணர்வுமாய் வளர்ப்பான்
அன்ப ருக்கெலா நினைந்திடும் வரத்தையு மளிப்பான்
வன்ப ருக்கெலாங் கொடியவன் றிருமுடி வளைத்தான். (31)

117. கங்கை மாநதி குமுகுமென் றொலித்திடக் கடல்போல்
திங்க ளானது கவிழ்ந்துசிற் றமுதினைச் சிதற
அங்கை வார்சிலை நாரிபோற் சூழ்ந்திட வரவம்
மங்கை யாளுட னுறைபவன் றிருமுடி வளைத்தான். (32)

பூசை

118. ஆட்டி னான்புன லாதன மூர்த்திமா னடைவே
நாட்டி னான்கலை சாத்தின னவமணிக் கலன்கள்
பூட்டி நானமுஞ் சந்தமுஞ் சாத்தினன் போதும்
சூட்டி னனமு தேந்தினன் காட்டினன் றூபம். (33)

119. கோது தீபமும் பலவுப சாரமுங் கொடுத்தான்
தாதை தாளற வெறிந்தவன் பூசையுந் தந்தான்
பேதை நாயினுங் கடையனேன் பூசையும் பிழையும்
தீது நீபொறுத் தருளென வணங்கினன் சிறுவன். (34)

(கலிவிருத்தம்)

120. வாயாதிகண் மனமாதிகண் மாயாதிகண் மண்ணீர்
தீயாதிக ளொளியாதிக ளுடையார்தெரி வரியாய்
ஆயாகியு மகவாகியு மரிதாம்வடி வுடையாய்
தாயாதிக ணலியாதரு டலைவாசர ணென்றான். (35)

121. பிரியாவிடை பிரியாவிடை பிரியாவிடை யுடையாய்
கரியானத னுரியாகிய கலைமேலிடு தலைவா
அரியார்தொழ வரியாயென வாராமையு ரைத்தே
பரிவான்மனை சென்றேகிளை பலரோடுமகிழ்ந்தான். (36)

(ஆசிரிய விருத்தம்)

122. வாணி யாளு நாவுடையோன்
என்று வியந்த மறையோனைப்
பேணி ஞாதி யவர்வணங்கிப்
பணிந்தார் செல்வம் பெரிதுற்றார்
வேணி யாளர் தலைவனைந்தார்
என்று லந்த வேதியற்குக்
காணி யாளர் தலைவனைந்த
உரையும் வியக்குங் கட்டுரையோ. (37)

நூலின் பயன்

(கலித்துறை)

123. இந்த மாக்கதை படித்தவர் செவிகளி லேற்றோர்
கந்த வேளெனக் கழைச்சிலை வேளெனக் கலையிற்
சந்த னுசல முனியென வுறைவரித் தலத்தின்
ஐந்து மாமுகன் பதவியிற் சிவனுட னணைவர். (38)

வாழ்த்து

(கலிவிருத்தம்)

124. மாதந் தோறும் வருபுயன் மன்னுக
தீதி லாதிறை செங்கோல் செலுத்துக
நாத னுகம நாடொறு மோங்குக
வேதம் வாழ்க விரிஞ்சை விளங்கவே. (39)

(எல்லப்பநயினார்)

# 3. சீகாளத்திப் புராணம்

## —சீகாளத்திச் சருக்கம்—

### சிலந்தி இறைவனை வழிபட்டுப் பேறுபெற்ற கதை

(தரவு கோச்சகக்கலிப்பா)

125. மணியிமைக்கு மார்பவெழு வாயுகத்தி லொருசிலந்தி
புணருமுதற் பிறப்புணர்வாற் பொன்முகரிப் புனன்மூழ்கி
இணையிறிருக் கயிலாயத் திறையைவழி படவெண்ணித்
தணிவிலன்பிற் கோயிறன்வாய்த் தந்துவினாற் சமைத்ததன்றே. (1)

126. மாமதிலுங் கோபுரமு மண்டபமு மாளிகையும்
தோமில்கருப் பெயர்த்தலமுஞ் சூளிகையு முதலாய
காமர்திருக் கோயிலெலாங் களிச்சுரும்பு விளையாடும்
தேமலர்த்தா ரகன்மார்ப செய்ததாற் சிறுசிலந்தி. (2)

127. இருந்தொர்தினை யளவேனு மிளைப்பாறப் பொழுதின்றிப்
பரிந்தொழிந்த விடமெல்லாம் பண்டுபோ னூலிழைத்து
வருந்திநெடு நாளாக வழுவாது பயிலுநாட்
சுருங்கலிலா வதனன்பு சோதித்தற் கெம்பெருமான். (3)

128. முன்னெரியுந் திருவிளக்கை முழங்கிமே லெழச்செய்தான்
மென்னூலின் றிருக்கோயில் வெந்தொழிந்த தொருநொடியிற்
பொன்னுடை மால்யானைப் புகழ்வேந்த வதுகண்டு
தன்னுவி யிழந்ததுபோற் றரைப்பட்ட தச்சிலந்தி. (4)

129. அன்னேவித் திருக்கோயி லழல்பற்றி யவிந்ததுதான்
முன்னாளில் யானுற்று முடிவிறீ வினைச்செயலோ
என்னுவிக் கொருதுணையா மெம்பிரான் றனக்கிந்தப்
புன்னூலின் றிருக்கோயில் பொருந்தாமை யோவறியேன். (5)

130. ஆயிரநா ளுடல்வருந்தி யரையிருளுந் துயிலாது
வாயினல் வயிற்றிருந்து வளர்நூல்கள் பலவிழைத்துத்
தீயினு லழிந்திடற்கோ செய்தேனித் திருக்கோயில்
தாயனையான் றிருவருளுந் தமியேன்பா லிவ்வளவோ. (6)

131. என்றுபல தவவிரங்கி யெம்பெருமா னமர்கோயில்
பொன்றியது கண்டுமுயிர் போக்காமை பொல்லாதென்
றென்றியவன் புடைச்சிலந்தி யொளிவிளக்கின் வீழ்ந்திறப்பல்
என்றெழுந்த திதுகண்டா னடியர்துயர் பொறுக்கறியான். (7)

132. வெளிநின்று திருக்கையால் விளக்கில்விழா வகைவிலக்கி
அளவின்றி யெழுநம்பா லன்புடைய சிலந்திநீ
உளமொன்று வேட்கையினை யுரைதருது நாமென்றான்
ஒளிநின்ற நின்னடிக்கீ ழுறுவிப்பா யென்றதே. (8)

133. மறையீறு நன்குணர்ந்து மாதவத்தின் றுறைநின்ற
கறைதீர்ந்த பெரியவர்க்குங் கிடையாத காற்கமலத்
தறவாழி யந்தணன்று னமர்வித்தான் மற்றவன்றன்
குறையாத வருட்பெருமை யாவரே கூறவலார்? (9)

பாம்பும் யானையும் வழிபட்ட செய்திகள்

(ஆசிரிய விருத்தம்)

134. அரவொன் றிரண்டா முகத்தீற்றில்
அருமா மணிகள் கொடுவந்து
விரியும் புகழ்த்தென் கயிலைவரை
விமலற் பூசித் தொழுகிடவவ்
வரதன் றன்னைப் பூசிப்ப
வரைபோ னெடுங்கைப் பிறைக்கோட்டு
முரண்வெங் களிறென் றடைந்ததவண்
மூன்று முகத்தின் றொடக்கத்தே. (10)

135. முழங்கு திரைப்பொன் முகரிநீர்
மூழ்கிக் கையாற் புனன்முகந்து
குழந்தை மதிய முடித்தபிராற்
குறுகிப் பாம்பு புனைந்தமணி
விழுந்து சிதறத் தள்ளியந்நீர்
விழைவி ணட்டிக் கூவிளத்தின்
செழும்பல் லவங்கள் கொடுவந்து
சென்னி மேலிட் டேகிற்றால். (11)

136. மறுநா ளிரவி யெழும்பொழுது
வந்து பாம்பு திருமுடியில்
உறுகூ விளத்தின் பசுந்தழைகண்
டொளிகான் மணிகள் விழச்சிதறி
இறையோன் முடியி லிலைக்குப்பை
ஏற்றி னூர்மற் றியார்கொல்லோ
அறியே னன்னே யெனவிரங்கி
அமலற் பூசித் தகன்றதுவே. (12)

137. பின்னே நெடுங்கைக் களிறடைந்து
பெருமான் முடியிற் பன்மணிகண்
டென்னு ருயிரின் றிருமுடிமேல்
இட்ட பசுமென் றளிரகற்றிக்
கொன்னே பலகல் லிட்டுவைத்த
கொடியர் யாரோ வறிகிலேன்
அன்னே வன்னே யெனவிரங்கி
அனகற் பூசித் தகன்றதுவே. (13)

138. மற்றை ஞான்று பாம்புவந்து
வரதன் முடிமேற் பசுந்தழைகள்
உற்ற வாறு காண்டலுமே
உருமே றுண்ட தெனக்கலங்கிச்
சற்று மெண்ணு தொளிர்மணிகள்
தள்ளிப் பெருமான் முடிமேலென்
பற்ற லாரே யிதுசெய்தார்
பாவி யேன்மேற் பகைமையினல். (14)

139. இதுசெய் தகன்ருர் தமைக்காணின்
இலங்கு கடுமுள் ளெயிறமுந்தக்
கதழ்வெஞ் சினத்தா லுறக்கவ்விக்
கவ்வி யாவி குடியேனே
அதுலன் றனக்கிப் பிழைசெய்தும்
ஆவா வுய்ந்து போயினரே
முதல்வன் றனக்கீ துடம்பாடோ
எனப்பற் பலவு மொழிந்திரங்கி. (15)

140. நாளை யெல்லாங் காண்டுமென
நம்பி ரானைப் பூசித்துக்
காள மகன்ற தொருத்தல்வந்து
கடவுண் முடிமேற் கற்கள்கண்டு
நீளஞ் சனவெற் பெனவீழ்ந்து
நிலத்து நெடுங்கை யுறவடித்து
மூளுந் துயரா லலைபுரட்டு
முந்நீ ரென்ன வரற்றியதே. (16)

141. எந்தாய் நினக்குத் திருவுளமோ
இதுபன் னிறத்த கற்கடமைச்
செந்தா மரையுங் குவளையுமென்
செழுங்கூ விளத்தின் றளிருமா
நந்தாச் சுடரே கொண்டனையோ
நறுமா மலருஞ் செழுந்தளிரும்
அந்தோ வகற்றிக் கற்கடமை
ஐயா யாங்ஙன் பொறுத்திருந்தாய். (17)

142. ஆவா விறையும் பகைவர்பால்
ஆனாற் றுணையா ரினியெனக்கு
மேவார் தமையுங் காண்கிலேன்
வினையே னென்று பலவிரங்கித்
தாவாப் பகையை நாளைநான்
சாய்த்த லொன்று சாத லொன்றென்
றோவா வன்பிற் பிராற்பூசித்
துவாப்போ யிற்றாற் றன்னுழையே. (18)

பாம்பு சிறுவடிவம் கொண்டுவந்து சிவலிங்கத்தின் முடியில் ஒளித்துக்கொண்டிருந்தது; யானையும் தன் பகையைக்கொல்ல எண்ணி வந்தது. அப்பொழுது,

(வேறு)

143. ஒருத்தனு மவ்வா றெண்ணி
ஒய்யென வெய்தி யண்ணல்
திருத்தகு முடிமே லிட்ட
தேமலர் தளிர்க ளிட்டாங்

கிருத்தல்கண் டுள்ளந் தண்ணென்
றெம்பிரா னென்பூ சைக்குக்
கருத்துவந் தான்கொ லென்று
கரையில்பே ருவகை மூழ்கி. (19)

144. பின்னருச் சனைசெய் வான்போய்ப்
பிறங்குபொன் முகரி யென்னும்
நன்னதிப் புனன்மு கந்து
நனிவிரைந் தெய்தி யையன்
தன்னெழின் முடியிற் போதும்
தளிருந்தன் கையாற் றள்ளப்
பன்னக வேந்து சீறிப்
பணைக்கையின் புழைபுக் கன்றே. (20)

145. விடமொடுங் கெயிற்று வெய்ய
வியாளமத் தகம்பு குந்து
குடையமும் மதத்து நால்வாய்க்
குஞ்சர மூழி நர்ளில்
இடியெனப் பிளிறி யோடி
இன்புனன் மொண்டு மொண்டு
கடுவிசை வீசி வீசிக்
கையயர்ந் ததன்பின் மாதோ. (21)

146. நிலத்திடைக் கைய டித்து
நிறைசெழுங் குருதி சோர
உலத்தொடு மத்த கத்தை
உரிஞ்சியும் வான்றேய் கோட்டுப்
பிலத்துறு வேர்ம ரங்கள்
பெயர்த்திடத் தலையிற் பாய்ந்தும்
குலக்கடு வெகுளி நாகம்
குடைதரீ ராமை தன்னால். (22)

147. நம்முடைப் பகையுங் கொன்று
நாமுமிங் கிறத்து மென்று
மும்மதக் களிநல் யானை
முன்னுபு வெகுளி பொங்கிக்

கொம்மெனப் பின்பெ யர்ந்து
குழனெடுங் கைமு டக்கி
அம்மவெற் போடு ஞாலம்
அதிர்தரப் பாய்ந்த தன்றே. (23)

148. பாய்தலு முழக்கங் கேட்டுப்
பண்ணவர் மனந்துண் ணென்றார்
தாதுறு பூவுங் காயும்
உகுத்தன தருக்க ளெல்லாம்
சீதநீ ரருவி யெல்லாம்
சிதறின பறவை யீட்டம்
மீதெழுந் தும்பர் தாரு
வியன்சினை புக்க வன்றே. (24)

149. தாளவொண் மணிகள் சிந்தத்
தலைபிளந் தும்பல் வீழ்ந்த
தரவுமெய் நுறுங்கிற் றங்கண்
அழறிரித் தன்ன வேணிப்
பெரியவன் றேவி யோடும்
பெருந்திறல் விடைமேற் றோன்றிப்
பொருவிறன் னுருவ நல்கிப்
புரிந்துடன் கொண்டு சென்றான். (25)

150. பாயலை நெடுநீர் வேணிப்
பண்ணவன் கயிலா யக்குச்
சீயொடு காள மத்தி
எனும்பெயர்ச் சிலந்தி பாம்பு
மாயிருங் களிறிம் மூன்றும்
பரகதி பெற்ற வாற்றால்
ஆயது சீகா ளத்தி
எனும்பெய ரன்று தொட்டே. (26)

(கருணைப்பிரகாசர்

# VI

# பிரபந்தங்கள்

## 1. திருவரங்கக் கலம்பகம்

(கட்டளைக் கலித்துறை)

151. புலையாம்பிறவிபிறந்தென்செய்தோம்பொன்னிபொன்கொழிக்கும்
அலையார் திருவரங் கத்தெம்பி ரானம தன்னையொடும்
தொலையாத கானங் கடந்தவந் நாட்டடந் தோறும்புல்லாய்ச்
சிலையாய்க்கிடந்தில மேநெஞ்ச மேகழ றீண்டுகைக்கே. (1)

தவம்

(கலித்துறை)

152. காயிலை தின்றுங் கானி லுறைந்துங் கதிதேடித்
தீயிடை நின்றும் பூவலம் வந்துந் திரிவீர்காள்!
தாயினு மன்பன் பூமக ணண்பன் றடநாகப்
பாயன் முகுந்தன் கோயி லரங்கம் பணிவீரே. (2)

(ஆசிரியப்பா)

153. அரங்க மாளிகைக் கருங்கடல் வண்ணனை
ஆலிமா முகிலை வாலி காலனை
இந்த ளூருறை யெந்தைபெம் மானை
ஈச னான்முகன் வாசவன் றலைவனை
உள்ளுவா ருள்ளத் துள்ளுறை சோதியை
ஊரக நின்றரு ணீரகத் தடிகளை
எவ்வுண் மாயனைத் தெய்வநா யகனை
ஏர்மலி சிகரத்து நீர்மலை யாதியை
ஐவா யரவி லறிதுயி லமலனை
ஒருகான் மொழியினு மொழிகுவை நெஞ்சே!
ஓதநீர் ஞாலத் துழலும்
ஔவியப் பிறப்பி லழுந்திவா டுவதே. (3)

(ஆசிரிய விருத்தம்)

154. இரவியை யிரவின் மதியினை மதியுள்
இறையினை யிறையுமெண் ணரிய
காவனைக் காவின் முனிவனை முனிவர்
கருத்தனைக் கருத்தனைத் துடைத்தாள்
பரமனைப் பரம பதத்தனைப் பதத்துட்
பாரனைப் பாரநத் தூதும்
அரவனை யரவி னரங்கனை யரங்கத்
தடிகளை யடிகள்சே வியுமே. (4)

(பிள்ளைப் பெருமாளையங்கார்)

## 2. திருக்குற்றாலக் குறவஞ்சி

(ஆசிரிய விருத்தம்)

155. தக்க பூமிக்கு முன்புள்ள நாடு
சகல தேவர்க்கு மன்புள்ள நாடு
திக்கெ லாம்வளர்ந் தோங்கிய நாடு
சிவத்து ரோகமு நீங்கிய நாடு
முக்க ணுன்விளை யாடிய நாடு
முதிய நான்மறை பாடிய நாடு
மைக்க ணுள்குழல் வாய்மொழி பாகர்
வசந்த வாரிய நாடெங்கள் நாடே.

156. ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகிய ருள்ளம்
வாடக் காண்பது மின்னார்ம ருங்கு
வருந்தக் காண்பது சூலுளை சங்கு
போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறங் கீர்த்தி
திருக்குற் ருலர்தென் ஞரிய நாடே.

(திரிகூடராசப்பக் கவிராயர்)

# VII

# நீதி

## 1. பலநூல் திரட்டு

### பெரியோர் இயல்பு

(ஆசாரக்கோவை)

[வெண்பா]

157. பழியா ரிழியார் பலருள் ளூறங்கார்
இசையாத நேர்ந்து கரவார்—இசைவின்றி
இல்லாரை யெள்ளி யிகழ்ந்துரையார் தள்ளியும்
தாங்கருங் கேள்வி யவர். (1)

(அறநெறிச்சாரம்)

158. காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகு முவப்பதன்கண்
குற்றமுந் தோன்றாக் கெடும். (2)

### புறங்கூறாமை

(வளையாபதி)

[தரவு கொச்சகக் கலிப்பா]

159. ஆக்கப் படுக்கு மருந்தளைவாய்ப் பெய்விக்கும்
போக்கப் படுக்கும் புலைநரகத் துய்ப்பிக்கும்
காக்கப் படுவன விந்திய மைந்தினும்
நாக்கல தில்லை நனிவெல்லு மாறே. (3)

(அறநெறிச்சாரம்)

[வெண்பா]

160. முன்னின் றொருவன் முகத்தினும் வாயினும்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப்—பின்னின்
றிழித்துரைக்குஞ் சான்றோரை யஞ்சியே தேவர்
விழித்திமையார் நின்ற நிலை. (4)

## சினத்தின் தீமை

(காஞ்சிப் புராணம்)

[கலிவிருத்தம்]

161. வெகுளியே யுயிர்க்கெலாம் விளேக்குந் தீவினை
வெகுளியே குணந்தவம் விரத மாய்க்குமால்
வெகுளியே யறிவினேச் சிதைக்கும் வெம்மைசால்
வெகுளியிற் கொடும்பகை வேறென் றில்லையால். (5)

## ஈகை

(சீவக சிந்தாமணி)

[கலித்துறை]

162. மாசித் திங்கண் மாசன சின்னத் துணிமுள்ளின்
ஊசித் துன்ன மூசிய வாடை யுடையாகப்
பேசிப் பாவாய் பிச்சை யெனக்கை யகலேந்திக்
கூசிக் கூசி நிற்பர் கொடுத்துண் டறியாதார். (6)

## அருள்

(தாயுமானவர்)

[தாழிசை]

163. எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணி யிரங்கவுநின்
தெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே. (7)

164. தம்முயிர்போ லெவ்வுயிருந் தானென்று தண்ணருள்கூர்
செம்மையருக் கேவலென்று செய்வேன் பராபரமே. (8)

## கயவர்

(பட்டினத்தார் பாடல்)

[கட்டளைக் கலித்துறை]

165. ஓயாமற் பொய்சொல்வர் நல்லோரை நிந்திப்ப ருற்றுப்பெற்ற
தாயாரை வைவர் சதியா யிரஞ்செய்வர் சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்குப காரஞ்செய் யார்தமை யண்டினர்க்கொன்
றீயா ரிருந்தென்ன போயென்ன காண்கச்சி யேகம்பனே. (9)

## 2. நீதிநூல்

(சோம்பல்)

[கலிவிருத்தம்]

166. சிற்றெறும் பாதியாச் சீவ கோடிகள்
முற்றுமெய் யுழைத்துயிர் முறையிற் காக்குமால்
சற்றுமெய் யசைவிலாச் சழக்க ராருயிர்
அற்றவோர் சரங்கொன்மற் றசர மேகொலோ. (1)

(பெற்றோரை வணங்கல்)

[ஆசிரிய விருத்தம்]

167. எப்புவி களும்பு ரக்கும்
ஈசனைத் துதிக்க வேண்டின்
அப்பனே தாயே யென்போம்
அவரையே துதிக்க வேண்டின்
ஒப்பனை யுளதோ வேலை
உலகிற்கட் புலனிற் றோன்றும்
செப்பருந் தெய்வ மன்னார்
சேவடி போற்றாய் நெஞ்சே. (2)

(மாயூரம் வேதநாயகம்பிள்ளை)

# VIII

# தனிப்பாடல்கள்

கோடையாளிகளின் சிறப்பு

(வெண்பா)

168. பானுகிர ணம்பார்க்கும் பங்கே ருகநிலவு
தானும்வரப் பார்க்குஞ் சகோரங்கள்—வானமரும்
மையைப்பார்க் கும்மயில்கண் மாவிசயா னந்தரங்கன்
கையைப்பார்க் கும்புலவோர் கண். (1)

169. அலையான் கவடுபட்டா ளுருடனுங் காயான்
இலையென்ப தோர்நாளு மில்லை—கலைநேர்ந்த
சாலைமுத்துக் கிருஷ்ண னருள் சற்குணசிந் தாமணியைச்
சோலையென்று சொன்னவரார் சொல். (2)

170. செல்லப்பன் கச்சியிலே சேர்ந்ததற்பி ளுமணிகள்
நல்லதரு மேக நவநிதியம்—சொல்லவே
முட்டின்றி யொன்றிரண்டு மூன்றுநான் கைந்தாறேழ்
எட்டொன்பான் பத்தான வே. (3)

உலுத்தரால் வருந்திய ஒரு புலவர் செந்திலாண்டவனை
மனமிரங்கித் துதித்தது

(ஆசிரிய விருத்தம்)

171. கல்லடிக்கு முளியிரண்டு காதடிக்கு ளடிப்பதெனக்
கவிதை கேட்டுப்
பல்லடிக்கக் கிடுகிடெனப் பறையடிக்கு நெஞ்சர்தமைப்
பாடு வேனே
வில்லடிக்கும் பிரம்படிக்குங் கல்லடிக்கும் விரும்பிநின்ற
மெய்ய னீன்ற
செல்லடிக்குந் தடமதிலிற் சேறடிக்க வலையடிக்குஞ்
செந்தி லானே. (4)

பிரார்த்தனை

(கட்டளைக் கலித்துறை)

172. கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையுநின் னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே. (5)

(பட்டினத்தார்)

# உரைநடைப் பகுதி

## 1. கூத்தரும் குலோத்துங்கனும்

முற்காலத்திருந்த சோழ அரசர்கள் தமிழ்ப் புலவர்களை ஆதரித்துப் போற்றி வருவதைத் தம்முடைய முக்கியமான கடமையாகக் கொண்டிருந்தனர். விக்கிரம சோழனென்பவன் கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தரைத் தன் அவைக்களப் புலவராக நியமித்து உபசரித்து வந்தான்: கூத்தர் அம்மன்னனுடைய அன்பைப் பெற்று யாவருடைய மதிப்பையும் அடைந்து சுகமாக வாழ்ந்து வந்தனர். விக்கிரம சோழன் இத்தகைய கவிஞரொருவர் தனக்குக் கிடைத்திருப்பதை ஒரு பெரும் பேருக எண்ணி மகிழ்ந்தான். தான் அவராற் பயன் பெறுவதோடு தன் குமாரனுகிய குலோத்துங்கனும் இளமைக்கால முதலே அப்பெரியாருடைய நல்லுரைகளைக் கேட்டுச் சிறந்த கல்விமானுகலாமென்பது அவனுடைய கருத்து. அதன்படியே ஒட்டக்கூத்தரிடத்தில் இளமையிலேயே மாணுக்கனுக ஒப்பிக்கப்பட்டவன் இரண்டாங் குலோத்துங்கன்.

குலோத்துங்கன் முடிபுனைந்து சக்கரவர்த்தியாகிய காலத்தும் கூத்தருக்கு மாணுக்கனுகவே அவன் இருந்து வந்தான்; அவருடைய சிறந்த கவித்துவத்தைப் பலநாட் பழகியுணர்ந்தவனுதலின் அவரது மனங்கோணுமல் நடந்து வந்தான். தமிழ்மொழிப் பரப்பைத் தம் அறிவினுல் ஆண்டு வந்த அக்கவிச்சக்கரவர்த்தியின் பெரும் புலமையையும் தமிழ் நிலப்பரப்பைத் தன் ஆணையால் ஆண்டு வந்த புவிச் சக்கரவர்த்தியின் பேரன்பையும் தமிழ் நாட்டார் நன்ருக உணர்ந்து வியந்தனர்.

ஒட்டக்கூத்தர் குலோத்துங்கனுக்கு ஆசிரியராகவும் அவன் அவைக்களத்துப் பெரும்புலவராகவும் விளங்கினுர்.

ஆசிரியராக இருத்தலின் கூத்தருக்குத் தலைமையும் அரசனாக இருத்தலின் குலோத்துங்கனுக்குத் தலைமையும் இருந்தன. இரண்டு முறையாலும் அவர்களுக்குள் அன்பும் பற்றும் வளர்ந்து வந்தனவேயன்றிச் சிறிதும் குறையவில்லை.

கூத்தர் குலோத்துங்கனுக்கு ஞானத்தாயாக விளங்கினார்; அதனால் அவனைப் பிள்ளையாக வைத்துப் பிள்ளைத் தமிழென்னும் ஒரு பிரபந்தத்தையும், அப்பால் உலா வொன்றையும் இயற்றினார்; இவற்றையன்றி நாள்தோறும் ஒவ்வொரு செய்யுள் கூறி அவனை வாழ்த்தியும் வந்தார்.

இங்ஙனம் தன்னை அரசனென்ற முறையிற் பல படியாகக் கவிச்சக்கரவர்த்தி பாராட்டுதலை யறிந்த குலோத்துங்கன், 'தமிழ் நயங்களை வெளியிடும் இந்நூல்களாற் புகழப் பெறுவது நம் பாக்கியம்' என்று எண்ணினான். தன்னை அவ்வாறு புகழும் ஆசிரியரை வணங்கி ஒரு பாட்டேனும் இயற்றி அவர்பால் தனக்குள்ள நன்றியறிவைப் பலரும் அறியும்படி செய்யவேண்டுமென்ற விருப்பம் அவனுக்கு உண்டாயிற்று; அதனால் அதற்குரிய செவ்வியை எதிர் பார்த்திருந்தான்.

வழக்கம்போல் ஒருநாள் அரசவை கூடியிருந்தது. நியாய சபையாகிய அறங்கூரவையத்தினரும் மந்திரிகளும் பிற அதிகாரிகளும் தங்கள் தங்களுக்குரிய ஆசனங்களில் இருந்தனர். புலவர்கள் ஒருவரிசையில் களி துளும்பும் முகங்களோடு உட்கார்ந்திருந்தனர். அவர்களுக்குத் தலைவராகக் கூத்தர் அமர்ந்திருந்தார்.

நாள்தோறும் கூறும் வழக்கப்படி ஒரு புதிய கவியை ஒட்டக்கூத்தர் சொல்லத் தொடங்கி,

"ஆடுங் கடைமணி நாவசை யாம லகிலமெல்லாம்
நீடுங் குடையிற் றரித்தபிரான்"

என்று சொல்லிச் சிறிது நிறுத்தினார். உடனே தொடர்ந்தாற்போலச் சிங்காதனத்திலிருந்து,

"..................என்று நித்தநவம்
பாடுங் கவிப்பெருமான்"

என ஓர் ஒலி கேட்டது. எல்லோரும் நிமிர்ந்து அங்கே பார்த்தார்கள். என்ன வியப்பு! சோழ மன்னன் தன் ஆசிரியர் பாடலின் பிற்பகுதியைப் பாடினன்:

"...........என்று நித்தநவம்
பாடுங் கவிப்பெரு மானொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென் றேயெனைச் சொல்லுவரே"

என்று முடித்து நிறுத்தினன். சபையோர் யாவரும் பெரு வியப்புற்றனர். புலவர்கள் தம் காதையும் கண்ணையும் நம்பவில்லை. ஒட்டக்கூத்தரோ தம்மையே மறந்துவிட்டார். சோழவரசன், நெடுநாளாக எண்ணியிருந்த ஓர் அரும்பெருங் கடமையை நிறைவேற்றிய மகிழ்ச்சி தன் முகத்தே தோன்றக் குறுநகையுடன் வீற்றிருந்தான்.

'உண்மையா இது? அரசரா பாட்டுச் சொன்னர்? கூத்தருடைய பதாம்புயத்தைச் சூடுங் குலோத்துங்கனென்றல்லவோ சொல்லுகிருர்!' என்று ஒவ்வொருவரும் தமக்குள் வினவிக்கொண்டனர்.

ஒட்டக்கூத்தர் தம்முடைய உணர்வு பெற்று, "எதிர் பாராதபடி மன்னர்பிரான் இங்ஙனம் திருவாய்மலர்ந்தருளக் காரணம் என்ன?" என்று பணிவோடு கேட்டனர்.

"காரணமா? உலகம் அறிந்தது தானே? நான் தங்களுடைய மாணக்கன் அல்லனே? தங்களிடம் நான் கற்றுக் கொண்டதன் பயனையும் எனது நன்றியறிவையும் ஒருவாறு தெரிவிக்க எண்ணினேன்" என்ருன் வேந்தன்.

"நான் ஒரு புலவன்தானே! என்னை இப்படிச் சொல்லலாமா? தாங்கள் முடிமன்னரல்லவா?" என்ருர் புலவர் பிரான்.

"ஆனலும் நான் தங்கள் மாணக்கன்தானே? என்னைப் பலவாறு பாராட்டி உலகமுள்ளளவும் என் புகழ் நிலைத்திருக்கும்படி செய்யும் தேவரீருக்கு நான் என்ன கைம்

மாறு செய்ய முடியும்? இந்த ஒரு செய்யுளைத் தாங்கள் பெரிதாகப் பாராட்டுகிறீர்களே! இதிலும் தங்கள் அடியைப் பின்பற்றித்தானே நான் பாடினேன்? எனக்குத் தமிழ் விஷயத்தில் தனித்தலைமை ஏது?'' என்று அரசன் கூறித் தன் பணிவையும் நன்றியறிவையும் புலப்படுத்தினான். ஒட்டக்கூத்தரிடத்தில் அவனுக்கிருந்த அன்பை அது காறும் ஓரளவு யாவரும் அறிந்திருப்பினும் அன்று மிகவும் நன்றாக அறிந்துகொண்டனர்.

இது நிகழ்ந்த சில காலத்துக்குப் பின்னர், ஒருநாள் குலோத்துங்கன் தன் அரண்மனையில் உணவருந்திக்கொண் டிருந்தான். அப்பொழுது அவன் வாயில் ஒரு சிறு கல் அகப்படவே அவனுக்குக் கடுங்கோபம் உண்டாயிற்று. அரசனுக்கு ராஜச குணம் இயல்பல்லவா?

"இந்த மாதிரி கவனமில்லாமல் சமைத்த சமையற் காரனை வேலையை விட்டுத் தள்ளிவிடவேண்டும்'' என்று மன்னன் உத்தரவிட்டான். அவனது கட்டளைப்படியே அச்சமையற்காரன் வேலையினின்றும் உடனே விலக்கப்பட் டான். பலகாலமாக அரசனுக்கு ஊழியம் புரிந்த அவன், தன் குற்றத்தை நினைந்து வருந்தி அதிகாரிகளிடம் கெஞ்சிக் கேட்டும் அவர்கள் இரங்கவில்லை. அரசன் ஆணைக்குமேல் ஓர் ஆணையுண்டோ?

சமையற்காரன், 'இனி என் செய்வது!' என்று கவலை யோடு யோசித்தான்; 'அரசனது ஆணைக்கு மேலே ஒருவர் வார்த்தையும் செல்லாதே!' என்று எண்ணி வருந்தினான்; திடீரென்று அவனுக்கு ஒட்டக்கூத்தருடைய நினைவு வந்தது; உடனே ஓடிச் சென்று கண்ணீர் ஆறாகப் பெருக ஒட்டக்கூத்தரது மாளிகையுட் புகுந்து அவர் காலடியிற் கதறிக்கொண்டு வீழ்ந்தான்; "உங்களை விட்டால் எனக்கு வேறு கதியில்லை. இவ்வளவு காலம் சக்கரவர்த்தியிடம் ஊழியம் செய்து வந்தேன். என் தலைவிதி குறுக்கே நின்ற தால் இன்று என் வேலை போயிற்று. நீங்களே அடியேனைக் காப்பாற்றவேண்டும். சக்கரவர்த்தியின் கோபத்தை உங்

களையன்றி வேறு யாராலும் தணிக்கமுடியாது" என்று முறையிட்டான். அவனுடைய முறையீடு கூத்தருடைய உள்ளத்தை உருக்கியது. அவன் வாயிலாக நடந்தவற்றை அவர் அறிந்தார். "அரசருடைய உணவென்றால் கவனமாக இருக்கவேண்டாமா? இவ்வளவு குடிகளுக்கும் அவர் உயிரல்லவா?" என்று கேட்டார் கூத்தர்.

"பெருமானே! நான் செய்தது பெரும் பிழை. அதற்கு என் தலைவிதியை நொந்துகொள்வதை யன்றி வேறு வழியில்லை. பெரியவர்கள் இந்த ஏழையை எப்படியாவது காப்பாற்றி விடவேண்டும்" என்று மீண்டும் கதறினான் அவன்.

கூத்தர், "சரி; நீ வீட்டிற்குப் போ. என்னால் ஏதாவது முடியுமானால் செய்கிறேன்" என்று சொல்லி அவனை அனுப்பினார்.

சில தினங்கள் சென்றன. ஒருநாள் மாலையில் அரசனும் புலவரும் மகிழ்ச்சியோடு தனியே பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். இடையே உணவைப் பற்றிய பேச்சு வந்தது. அதுதான் சமயம் என்றறிந்த ஒட்டக்கூத்தர், "மகாராஜாவுடைய மடைப்பள்ளியில் ஏதேனும் விசேடம் உண்டோ?" என்று விசாரித்தார். "வழக்கமாக இருந்த ஒரு சமையற்காரன் வேலையைவிட்டு நீக்கப்பட்டான்; அதுதான் விசேடம்" என்றான் அரசன்.

கூத்தர்: என்ன காரணமோ?

அரசன்: மடையன்; சோற்றிற் கல்லும் மண்ணும் இருப்பதைக் கவனியாமலிருந்தான்.

கூத்தர்: அவன் தொழிலாலும் மடையன்தானே! மகாராஜா இந்தச் சிறு குற்றத்தைப் பெரிதாகக் கருதலாமோ? நாங்களாவது கல்லும் மண்ணும் இருந்தால் கஷ்டப்படுவோம். மகாராஜாவுக்கு அவற்றைச் சாப்பிட்ட பழக்கம் உண்டே!

அவர் சொல்வதன் கருத்து அரசனுக்கு விளங்கவில்லை; "என்ன! எனக்கு எப்படிப் பழக்கம்?" என்று வியப்போடு அவன் கேட்டான்.

"பெரிய மலைகளையும் மண்ணையும் விழுங்கிய பழக்கம் மகாராஜாவுக்கு உண்டே! அது மறந்துபோயிற்று?" என்று கவிச்சக்கரவர்த்தி சொல்லிவிட்டு,

"மீனகம் பற்றிய வேலையை மண்ணையவ் வெற்படங்கப்
போனகம் பற்றிய மாலலை யோபொருந் தாவரசர்
கானகம் பற்றக் கனவரை பற்றக் கலங்கள்பற்ற
வானகம் பற்ற வடிவேல் விடுத்த மனுதுங்கனே"

என்று ஒரு செய்யுளைப் பாடினார். குலோத்துங்கனுக்கு அவர் கருத்து விளங்கிவிட்டது.

அரசர்களைத் திருமாலின் அம்சமாகக் கருதுவது நம் பெரியோர் வழக்கம். அதனைப் பின்பற்றித் திருமால் செய்த செயல்களை யெல்லாம் அம்மன்னர்கள் செய்தன வாகப் பாடுவர் புலவர். இந்தச் செய்யுளிலும் ஒட்டக் கூத்தர் அங்ஙனம் பாடியிருக்கிறார். "நீ முன்பு சமுத்திரத் தையும் மண்ணுலகத்தையும் மலைகளையும் உணவாக உண்ட திருமாலல்லவா?" என்ற கருத்து இப்பாடலில் அமைந் துள்ளது. "இவ்வாறு மண் பரப்பையும் மலைகளையும் உண்ட நீ இப்பொழுது மண்ணும் சிறு கல்லும் உணவில் இருந்தனவென்று சினங்கொள்ளலாமா?" என்ற குறிப்பும் இதில் வெளிப்படுகின்றது.

சோழ மன்னன் அந்தப் பாட்டின் நயத்தில் ஈடுபட் டான். ஒட்டக்கூத்தருடைய சாதுர்யத்தை உணர்ந்து வியந்தான். அவருடைய திருவுள்ளத்தில் மடையன்பாற் கருணையுண்டா யிருத்தலை அவன் அறிந்தான். 'ஒட்டக் கூத்தன் பதாம்புயத்தைச் சூடுங் குலோத்துங்க சோழ' னாகிய தான் அப்புலவர்பிரானுடைய குறிப்பறிந்து நடத் தல் கடமையென்று துணிந்தான்.

"தங்கள் உள்ளக் குறிப்பை உணர்ந்தேன். இன்றிரவே அவன் நம் அரண்மனையில் மீட்டும் பணிசெய்யத் தொடங்கு வான். தாங்களும் இன்றிரவு என்னோடு விருந்துண்டு மகிழவேண்டும்" என்று அன்போடு அரசன் புகன்றான்.

வேலையினின்று விலக்கப்பட்ட சமையற்காரன் அன்றிரவு வேலைக்கு வந்து சமைத்த சமையல் மன்னனுக்காகவா, அன்றிப் புலவருக்காகவா என்பதை யாரேனும் வரையறுத்துச் சொல்ல முடியுமா?

## 2. திண்ணைப் பள்ளிக்கூடங்கள்

நம்முடைய நாட்டில் மிகப் பழைய காலத்தில் உபாத்தியாயருடைய வீடே பள்ளிக்கூடமாக இருந்தது. அதைக் குருகுலம் என்பார்கள். குரு எழுந்தருளியுள்ள கோயிலென்பது அதன் பொருள். குருகுலமில்லாத ஊர் நன்மையில்லாததென்று கருதப்பட்டது.

கணக்காயரென்பது உபாத்தியாயருக்கு ஒரு பெயர். கணக்கு என்பது நூலின் பெயர். கணக்காயரென்றால் பல நூற்றொகுதியையுடையவரென்பது பொருள். அவர்களிடம் பாடங் கேட்பவர்கள் புதிய செய்திகளை அறிந்தறிந்து, "இவர்களுக்குத் தெரிந்த விஷயங்களுக்கு ஒரு வரம்பில்லை போலும்!" என்று வியப்பார்கள். அதனாலேதான் உத்தம ஆசிரியர்களுக்கு மலையை உவமை கூறி, அம்மலை இன்ன தன்மையினால் ஆசிரியர்களுக்கு உவமையாவதென்பதை விரித்துக் கூறும்பொழுது, "அளக்கலாகா அளவும் பொருளும்" உடையதென்று பெரியோர்கள் கூறி யிருக்கிறார்கள். யார் யாருக்கு எந்த எந்த விஷயம் தெரியவேண்டுமோ, அவரவர்களுக்கு அவ்வவ் விஷயத்தை அழகுபெறக் கற்பிக்கும் திறமை அவர்களுக்கு இருந்தது. ஆதலின் அவர்கள் ஊரில் இல்லையெனின் ஊருக்கு மங்கலமே இல்லை யென்பது நம்முன்னோர்களுடைய கொள்கை. அவர்களை மாணாக்கர்கள் தெய்வமாகவே எண்ணி வழிபட்டார்கள்.

தமிழ்ச் சுவடிகளை எழுதும் பிள்ளைகள் 'நன்றாக, குரு வாழ்க, குருவே துணை' என்று எழுதுவது பழைய வழக்கம். இதனால் ஆசிரியர்களிடத்து அக்காலத்தினருக்கு இருந்த மதிப்பு விளங்கும்.

தமிழ் நாட்டில் இருந்த பழைய ஆசிரியர்கள் தமிழ் இலக்கிய இலக்கணங்களிலும் கணக்கு, சோதிடம், வைத்தியம், சங்கீதம் முதலியவற்றிலும் பயிற்சி மிக உடையவர்கள். வடமொழி, தெலுங்கு முதலிய வேறு பாஷைகளிலும் அவர்களுக்கு ஓரளவு பயிற்சி இருந்தது. இவ்வளவு துறைகளிலும் பரந்த அறிவு வாய்ந்த அவர்களிடம் படிக்கும் பிள்ளைகளும் அப்படியே பல வழியிலும் நல்ல ஞானத்தை அடைவார்களென்பதில் என்ன தடை? பல இடங்களில் உபாத்தியாயரே வைத்தியராகவும் சோதிடராகவும் இருப்பதுண்டு.

தம்முடைய வாழ்வு முழுவதும் பிறர் நன்மைக்கு உழைக்கும் இயல்புடையவர்களாக அவ்வாசிரியர்கள் இருந்தார்கள். சங்க காலத்துப் புலவர்களில் பலர் உபாத்தியாயர்களாக இருந்து ஜீவனம் செய்தனர்.

கிராமந்தோறும் இருந்த பள்ளிக்கூடங்களைத் திண்ணைப் பள்ளிக்கூடங்களென்று நாம் சொல்லுகிறோம்; தெற்றிப் பாடசாலைகளென்றும் சொல்வதுண்டு. ஊர்தோறும் பொதுவான இடத்தில் ஒரு பெரிய மரத்தினடியே மேடையொன்று அமைக்கப்பட்டிருக்கும். அதனை மன்றமென்றும் அம்பலமென்றும் கூறுவர். ஊருக்குப் பொதுவான விஷயங்கள் அந்த இடங்களில் யோசிக்கப்படும். சங்கீத வித்துவான்கள் முதலியவர்கள் வந்தால் அங்கே தங்கியிருப்பார்கள். அங்கே வெயிலுக்கும் மழைக்கும் தங்குதற்கேற்ற இடங்களும் இருக்கும். அவ்வம்பலத்திலுள்ள தெற்றிகளிலே மரநிழலில் முற்காலத்துப் பள்ளிக்கூடங்கள் நடைபெற்றிருக்கலாமென்று தோன்றுகின்றது.

இயற்கையாக உள்ள மரத்தடியிலும், வனங்களிலும் சென்று பழைய காலத்து மாணாக்கர்கள் கல்வி கற்றனர். இப்பொழுது பள்ளிக்கூடம் இருக்குமிடத்தில் செடிகொடிகளை வருவித்து வனம் உண்டாக்குகிறோம். நாடகத்தில் வனங்களைத் திரையில் எழுதித் தொங்கவிடுவது போலப்

பள்ளிக்கூடங்களில் சட்டியிலும் வாயில்களிலும் செடி கொடிகளை வளர்க்கிறோம்.

மரத்தடியில் இருந்த பள்ளிக்கூடங்கள் நாளடைவில் சிறு குடிசைகளாக மாறின. பல இடங்களிலே மடங்களிற் பாடசாலைகள் உண்டாயின. பள்ளியென்னும் சொல் ஜைன மடங்களுக்கும் பாடசாலைகளுக்கும் பொதுவான பெயர்.

தவம் புரிவோர் இடங்களுக்குப் பள்ளியென்னும் பெயர் வழங்கியதும் உண்டு. அங்கே நூல்களைப் படிப்பதும், படிப்பிப்பதுமாகிய செயல்கள் மிகுதியாக நடந்தன. பாடசாலைகள் வேறு, மடங்கள் வேறு என்ற வேறுபாடின்றி இரண்டும் ஒன்றாகவே கருதப்பட்டமையின், பள்ளி யென்னும் பெயர் இரண்டிற்கும் பொதுவாக வழங்கியதென்று சொல்லலாம். பழைய சிலா சாஸனங்களைப்பார்க்கும்போது மடங்களில் இன்ன இன்ன நூல்களைப் படிக்கும் பொருட்டு மாணுக்கர் இருந்தார்கவென்ற செய்தி தெரியவருகின்றது.

தமிழ்ப் பள்ளிக்கூடங்களைப்பற்றி அதிகமாகச் சாஸனங்கள் கூறாவிட்டாலும் பரம்பரையாக வந்த வழக்கத்தைக்கொண்டு ஆராய்ந்தால் ஊர்தோறும் அவை இருந்தன வென்பது தெரியவரும். ஒருவரிடத்தில் பல மாணுக்கர்கள் சேர்ந்து பாடங்கேட்கும் வழக்கம் தொன்றுதொட்டே இந்நாட்டில் இருந்து வந்தது. அகத்தியருடைய மாணுக்கர்கள் பன்னிருவரென்று நாம் அறிகிறோம்.

குருகுலத்தில் பிள்ளைகள் தங்கள் உயர்நிலையை மறந்து பழகி வந்தார்கள். சக்கரவர்த்தியும் பிக்ஷுகனும் சமமாக இருந்தனர். அவர்களுக்குள் வேறுபாடு உண்டாகவில்லை. பெரிய அரச குமாரனாகிய துருபதனும் ஏழைப் பிராமணராகிய துரோணரும் பாடசாலையில் ஒருவரோடு ஒருவர் கலந்து பழகினார்கள் என்பது பாரதத்திற் கண்ட கதை. அங்ஙனம் பழகிய பழக்கம் வாழ்நாள் முழுவதும் மாறாமல் இருந்தது. துருபதன் அங்ஙனம் இராமையால் அதற்கேற்ற துன்பத்தை அனுபவித்தான்.

பெரிய அரசனுகிய கண்ணபிரானும் வறிய அந்தணராகிய குசேலரும் ஒருசாலை மாணுக்கர்கள். பாடசாலைப் பழக்கம் பின்பு வாழ்நாள் முழுதும் அவர்களிடம் இருந்ததைக் குசேலோபாக்கியானத்தால் அறியலாம்.

குருகுலவாசம் செய்தவர்கள் பிக்ஷையெடுத்து அதைத் தம் ஆசிரியர்பாற் கொடுத்து எஞ்சியதைத் தாம் உண்டு வந்தார்கள். அந்த வழக்கம் அவர்களிடத்திற் பொறுமையையும் பணிவையும் உண்டாக்கியது. ஊரிலுள்ளாரும் அவர்களிடம் மதிப்பு வைத்து ஒழுகி வந்தனர். தாய் தந்தையர் மக்களைப் பெற்ற கடமையோடு அமைகின்றனர். மக்களை மக்களாக்கும் அறிவைப் புகட்டி அவர்களுடைய வாழ்க்கையை இன்பமயமாக்குதற்குரிய அடிப்படையான பயிற்சியைச் செய்விப்பவன் ஆசிரியனே ஆவான்.

நிறைந்த செல்வம் முதலியவற்றை ஒரு தந்தை தன் தனயனுக்கு வைத்திருந்தும் பயனில்லை. அச்செல்வமாதியவற்றை நல்ல வழியிலே பயன்படுத்தி வாழும் நிலைமை உண்டாக்குவது கல்வியே. ஆதலின் மகன் கல்வி கற்கும்படி செய்தலே தந்தையின் முதற்கடமை. அரண்மனையிற் பிறந்த அரசகுமாரனும் பள்ளிக்கூடத்திற் சாணையிடப் பட்டால்தான் பிற்காலத்தில் பிரகாசிப்பான். நிறைந்த செல்வமிருந்தும் பள்ளிக்கூடப் பயிற்சி யில்லாமல் தாழ்ந்த நிலையை அடைந்த ஒருவன் பின்பு தன் தந்தையை நொந்து கொள்வதாக ஒரு புலவர்,

"அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னும் ஆடையும் ஆதரவாக்
கொள்ளிக்கும் பட்ட கடனுக்கும் என்னைக் குறித்ததல்லால்
துள்ளித் திரிகின்ற காலத்தி லென்றன் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்தில னேதந்தை யாகிய பாதகனே"

என்னும் செய்யுளை இயற்றியிருக்கிருர். செம்பொன்னும் ஆடையும் இருந்தும் பள்ளிக்கூடத்துப் பயிற்சியின்மையால் அவன் கெட்டுப்போனதை இப்பாடல் விளக்குகின்றது.

முதன்முதலில் ஐந்தாம் பிராயத்தில் வித்தியாப்பியாசம் செய்யும்பொழுது தாய் தந்தையர் பிள்ளைகளை ஆசிரியர்களிடம் அடைக்கலமாக ஒப்பித்து வந்தார்கள்.

பிள்ளைகள் தமிழெழுத்தை ஆரம்பிக்கும்போது 'ஓம் நமச்சிவாய' என்றுவது, 'ஓம் நமோநாராயணாய' என்று வது எழுதத் தொடங்குவது வழக்கம். ஜைனர்கள் 'ஓம் ஜிநாயநம' என்று தொடங்குவார்கள். விஜயதசமி யன்று பள்ளிக்கூடத்தில் வைப்பது மரபு. அன்று தொடங்குவதனால் கலைமகள் திருவருள் உண்டாகுமென்பர்.

பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் வைக்கும் காலம் ஒரு பெரிய விசேட நாளாகக் கொண்டாடப்பெறும். அன்று உபாத்தியாயருக்குப் பலவகையான ஊதியம் கிடைக்கும். ஏட்டின்மீது மஞ்சட் பூசிப் பூசித்துப் பையனிடம்கொடுத்து வாசிக்கச் செய்வார்கள். உபாத்தியாயர் நெடுங்கணக்கைச் சொல்லிக்கொடுக்க, மாணாக்கன் அதனைப் பின்பற்றிச் சொல்லுவான். இப்படி உபாத்தியாயர் ஒன்றைச் சொல்ல அதை மாணாக்கர்கள் பலரும் சேர்ந்து சொல்வதை முறை வைப்பதென்று கூறுவார்கள். உபாத்தியாயருக்குப் பிரதியாகச் சில சமயங்களிற் சட்டாம்பிள்ளை முறை வைப்பதுண்டு. அக்ஷராப்பியாசத்துக்குப் பிறகு ஒவ்வொரு சுவடியையும் படிக்கத் தொடங்கும் காலமும் ஒரு சிறு திருவிழாவாகச் செல்வர்களாற் கொண்டாடப்படும். சுவடி துவக்கலென்று அதனைச் சொல்வார்கள்.

உபாத்தியாயர் சொல்வதைப் பிள்ளைகள் தொடர்ந்து கூறும்பொழுது பலவகை வேறுபாடுடைய ஒலிகளும் ஒன்றுகூடிக் கேட்கும் அவ்வோசையைப் பல தவளைகள் சேர்ந்து சத்தமிடுதலுக்குக் கம்பர் உவமிக்கின்றார்.

> "கல்வியிற் றிகழ்கணக் காயர் கம்பலைப்
> பல்விதச் சிறாரெனப் பகர்வ பல்லரி"

என்று கூறுகின்றார்.

பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். அதனால் அவர்களுடைய எழுத்துக்கள் வரிசையாகவும் நன்றாகவும் அமையும். உபாத்தியாயர் முதலில் தரையில் எழுத அதன்மேல் பிள்ளைகள் விளம்புவார்கள். பிறகு தாமே எழுதி எழுதிப் பழகுவார்கள்.

எழுத்துக்கள் ஒன்றோடொன்று படாமல் வரிகோணாமல் பழைய காலத்தில் எழுதி வந்தார்கள். பழைய ஏட்டுச் சுவடிகளைப் பார்த்தால் இது விளங்கும்.

எழுத்துக்களின் உருவங்கள் பல காலமாக மாறாமல் இருந்துவந்தன. புள்ளி, கால், கொம்பு, விலங்கு முதலியவை வரியெழுத்தின் உறுப்புக்கள். பெரியோர்கள் பழக்கி வந்த பழக்கத்தால் பல நூறு வருஷங்களாகியும் எழுதும் வழக்கத்தில் பெரிய மாறுபாடுகள் ஏற்படவில்லை.

அக்காலத்துப் பாடமுறைக்கும் இக்காலத்து முறைக்கும் அதிக வேறுபாடு உண்டு. அடிப்படையான நூல்களெல்லாம் பிள்ளைகளுக்கு மனனமாக இருக்கும். தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதிநூல்கள் முதலியன பாடமாக இருக்கும். கணிதத்தில் கீழ்வாயிலக்கம், மேல் வாயிலக்கம், குழிமாற்று முதலிய பல வகை வாய்பாடுகள் பாடமாகவேண்டும். வடமொழியில் அமரம் முதலியன மனனமாகவேண்டும். ஞாபக சக்தியை விருத்திபண்ணுவதை மிகவும் முக்கியமானதென்று பழைய காலத்திற் கருதினர். அதற்காகப் பலவகையான முறைகள் இருந்தன. வேதத்திலுள்ள கனம், ஜடை முதலிய முறைகளைப் பார்க்கையில் அவையும் மனனத்தின் சிறப்பைக் காட்டுவன வென்பதை அறியலாம். 'தலை கீழ்ப் பாடம்' என்று சொல்வதை அம்முறைகளிற் காணலாம்.

இளஞ்சிறார்களுக்கு ஞாபக சக்தியை விருத்தி பண்ணுவதற்கு உபாத்தியாயர்கள் சில முறைகளை மேற்கொண்டனர். பள்ளிக்கூடம் விட்டுப் பிள்ளைகள் வீட்டுக்குப் போகும்போது அவர்களிடம் ஒரு மலரையோ, காயையோ, பழத்தையோ, விலங்கையோ, பறவையையோ

சொல்லி, மறுநாள் வரும்போது அதைச் சொல்லவேண்டும் என்று உபாத்தியாயர் நியமிப்பார். பிள்ளைகள் தம் வீடு சென்றவுடன் உபாத்தியாயர் சொன்னவற்றைத் தம் தாய் மார்களிடம் சொல்லிவிடுவார்கள். தாங்களும் மனத்தில் வைத்துப் படுத்துக்கொள்வார்கள். விடியற்காலையில் எழுந்தவுடன் அவற்றை ஞாபகப்படுத்திக்கொள்வார்கள். தம் தாய்மார்களிடம் அவற்றைச் சொல்லி அவை சரியா என்பதை அறிந்துகொண்டு உபாத்தியாயரிடம் சொல்வார் கள். இதனால் அவர்களுடைய ஞாபகம் விருத்தியாயிற்று.

சிறுவர்கள் படிக்கும் ஆத்திசூடி, கொன்றைவேந்த னென்பவை அகராதி வரிசையில் அமைந்தமை அவர்களு டைய ஞாபகத்தில் அவை பதிவதன்பொருட்டே யாகும். இப்படியே அந்தாதி முறையைக்கொண்டும், எதுகை மோனைகளைக்கொண்டும் செய்யுட்களை ஞாபகப்படுத்திக் கொள்வார்கள். அந்தாதி நூல்களை இளம்பருவத்தே கற் பிப்பதற்குப் பயன் ஞாபக சக்தியடைவதே. நிகண்டுநூல் எதுகை வகையில் அமைந்ததுவும் ஞாபகத்தில் எளிதிற் பதிவதன்பொருட்டேயாகும். நூல்களிலுள்ள செய்யுட் களின் முதல் நினைப்பை எழுதி, அதைப் பாடம் பண்ணிக் கொண்டு ஞாபகத்தில் வைப்பது பழைய வழக்கம்.

பள்ளிக்கூடப் பிள்ளைகள் தமக்குத் தெரிந்த பாடங்களை அடிக்கடி சிந்தித்து வருவார்கள். பலர் ஒருங்குகூடிக் கேள்விகள் கேட்டும் விடை கூறியும் கற்று வருவார்கள். இதனால் அவர்களுடைய கல்வி எந்த வேளையிலும் தடை யின்றிப் பயன்பட்டது. புத்தகத்தின் துணையின்றியும் குறிப்புக்களின் துணையின்றியும் ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசுவதும், ஒரு செய்யுளுக்குப் பொருள் கூறுவதும், ஒரு செய்தியுள்ள இடங்களைச் சொல்லுவதும் அவர்களுக்குச் சுலபமாக இருந்தன.

மாணாக்கர்கள் விடியற்காலையில் எழுந்து படித்து வந்தார் கள். இந்தப் பழக்கத்தை உபாத்தியாயர் உண்டாக்கி வைப்பார். முதற் கோழி கூவும்பொழுது சில பிள்ளைகள்

பள்ளிக்கூடத்துக்கு வந்துவிடுவார்கள். நேரங் கழித்துச் சென்ருல் உபாத்தியாயர் பிரம்பால் அடிப்பாராகையால், எல்லோருக்கும் முன்பே போய்விட வேண்டுமென்று கருதித் தூங்கிக்கொண்டிருக்கும் தாய் தந்தையரைத் தாமே எழுப்பிவிட்டுப் பள்ளிக்கூடம் செல்பவர்களும் உண்டு. உபாத்தியாயர் பாடம் தொடங்கும்போது பிள்ளைகளை அவர்கள் வந்த நேரத்தை அநுசரித்து வரிசையாக நிறுத்தி வைப்பார். முதலில் வந்தவனுக்கு வேத்தானென்று பெயர்; ஏத்தானென்றும் சொல்வதுண்டு.

பிள்ளைகள் தங்கள் சுவடிகளை மிகவும் நன்ருக வைத்திருப்பார்கள். இளம்பிள்ளைகளுக்கு உபாத்தியாயர் ஓலையை வாரி ஒழுங்காக நறுக்கித் துளையிட்டுக் கயிறு கோத்துத் தருவார். ஒரு துளையிடுவதும் இரண்டு துளையிடுவதும் உண்டு. மற்றப் பிள்ளைகள் தாங்களே செய்துகொள்ளுவார்கள். பனையேடு, சீதாள பத்திரம் முதலியவற்றில் எழுதுவது வழக்கம். அந்தக் காலத்துச் சுவடிகள் பல நூறு வருஷங்களாகியும் அழியாமலிருந்தன. சுவடிகளின் மேலேடுகளில் பலவகையான சித்திரங்கள் எழுதுவார்கள். மேலே சட்டமாகப் பனைமட்டையின் காம்பை நறுக்கிக் கோப்பார்கள்; மரச் சட்டங்களையும் அமைப்பார்கள்; செப்புத் தகட்டாலும் சட்டஞ் செய்து கோப்பார்கள். அந்தச் சட்டங்களின்மேல் வர்ண மையினுற் பலவகையான சித்திரங்கள் எழுதுவதுண்டு. இரட்டைத் துளையுள்ள ஏடுகளில் ஒரு துளையில் செப்புக் கம்பி அல்லது மூங்கிற் குச்சியைச் செருகிக் கட்டுவார்கள். அதற்கு நாராசம் என்று பெயர்.

சுவடிகளிற் சில விசித்திரமான உருவங்கள் உண்டு. உருண்டைக் கழிகள் போலச் சில சுவடிகள் இருக்கும். சிவலிங்கத்தைப்போன்ற சில சுவடிகளும் இருந்தன.

சுவடியைக் கோக்கும் கயிற்றின் ஒரு தலைப்பில் தடையாக, பனையோலையை ஈர்க்கோடு கிளிமூக்குப்போலக்

கத்தரித்து அமைப்பார்கள். அதற்குக் கிளிமூக்கென்பது பெயர்.

சுவடிகளைக் கயிற்ருற் கட்டுவதற்கே ஒரு முறையுண்டு. சரியாகக் கட்டுகிருர்களாவென்று பரீக்ஷிப்பதற்காக ஆசிரியர் மாணுக்கர்களிடம் சுவடிகளைப் பிரித்துக் கொடுத்து மறுபடி கட்டச் சொல்வதுண்டு.

இப்போது அச்சுப் புத்தகங்களின் அளவில் எவ்வளவு வேறுபாடுகள் உண்டோ அவ்வளவு பனையோலைச் சுவடிகளிலும் உண்டு.

ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணியில் பல பேதங்கள் உண்டு. எழுத்தாணியை ஊசி யென்றும் கூறுவார்கள். மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி என்பன எழுத்தாணியின் வகைகள். ஒரு பக்கம் வாருவதற்குக் கத்தியும் மறுபக்கம் எழுதுவதற்கு எழுத்தாணியும் அமைந்ததைப் பார்த்தே பேனுக்கத்தியென்ற பெயர் வந்ததென்று தோற்றுகின்றது. ஒரு பக்கத்தில் இரண்டு கத்தியும் ஒருபக்கம் இரண்டு எழுத்தாணியும் உள்ள மடக்கெழுத்தாணிகளும் இருந்தன.

ஒரு பக்கத்தில் மிக நுண்ணிய எழுத்துக்களாக இருபது முப்பது வரி வரையில் எழுதுவதற்குரிய மெல்லிய எழுத்தாணிகள் இருந்தன. எழுதுபவர்கள் எழுத்தாணியை வலக்கையிற் பிடித்துக்கொண்டு இடக்கையால் ஏட்டைப் பிடித்திருப்பார்கள். எழுதும்பொழுது இடக்கைப் பெருவிரல் நகத்தில் சிறிதளவு பள்ளஞ்செய்து அந்த இடத்தில் எழுத்தாணியைச் சார்த்திக்கொண்டு எழுதுவார்கள். நாம் இக்காலத்தில் காகிதத்தில் எழுதுவதைப் போன்ற வேகத்தோடே ஏட்டில் எழுதுவதுண்டு. ஏட்டில் எழுதும் வழக்கத்தை இக்காலத்தில் பள்ளிக்கூடங்களில் காணமுடியாது. ஆனுல் அது சில ஆலயங்களிலும், சில தனவணிகர்கள் கடைகளிலும் இன்னும் இருந்து வருகிறது. பழைய காலத்தில் கிரயம், தானம், பாகப்பிரிவு, ஒற்றி, உடன்படிக்கை முதலிய பலவகையான பத்திரங்களும்

பலவகைக் கணக்குகளும் பனையேடுகளிலேயே எழுதப் பெற்று வந்தன.

மாணாக்கர்களுக்கு எழுதும் பழக்கம் நன்றாக உண்டாக வேண்டுமென்று ஆசிரியர்கள் ஒவ்வொருநாளும் அவர் களைத் தனித்தனியே ஏடுகளில் தாம் மேலே எழுதி அதைப் போல் எழுதிவரச் சொல்வார்கள். இதற்குச் சட்டம் (Copy) என்று பெயர்.

சுவடிகளை வைப்பதற்கும் எடுத்துச் செல்வதற்கும் உப யோகப்படும் கருவிக்குத் தூக்கு என்று பெயர். தூக்குத் தூக்கி என்ற நாடகத்தில் வரும் அரசகுமாரன் சுவடித் தூக்குகளைத் தூக்கியதால் அப்பெயர் பெற்றனன். அதனை அசை யென்றும் சொல்வதுண்டு.

அதிகாலையில் மாணாக்கர்கள் எழுந்து பல்லுக் கொம்பு களுடன் ஆற்றுக்குச் சென்று பல் துலக்கிவிட்டு, மணலை எடுத்துக்கொண்டு துதி சொல்லிய வண்ணம் பள்ளிக்கூடத் துக்கு வந்து ஆசிரியரை வழிபட்டுப் பாடம் பயிலும் பழைய முறைகள் இக்காலத்தில் யாவருக்கும் விசித்திர மாகத் தோற்றும். ஐம்பெருங்குரவர்களுள் ஒருவராக உபாத்தியாயர் கருதப்பெற்று வந்தார். அவருக்கு வேண் டிய காரியங்களை மாணாக்கர்கள் செய்து வந்தனர்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பையனும் உபாத்தியாய ருக்குத் தன்னுடைய குடும்பத்தின் நிலைக்கு ஏற்றபடி ஏதே னும் ஒரு பொருளைக் கொணர்ந்து தருவான்; சிலர் காய்கறி கொடுப்பார்கள்; சிலர் பால் கொடுப்பார்கள். ஒன்றும் இயலாதவர்கள் ஒரு விறகு கட்டையையேனும் கொணர்ந்து அளிப்பார்கள். அவர்கள் அளிக்கும் பொருள்கள் தம்முள் வேறுபட்ட மதிப்புடையனவாக இருப்பினும் ஆசிரிய ருக்கு எல்லோரிடத்திலும் ஒரே மாதிரி அன்பே இருக்கும். கால் ரூபாயைப் போன்றதொரு தொகைதான் அவர்கள் மாணாக்கரிடமிருந்து மாதந்தோறும் பெறும் பேருதியம். ஆயினும் அவர்களுடைய வாழ்விற் குறைவொன்றும் இராது.

விசேட நாட்களிற் பலவகையான பொருள்கள் அவர்களுக்குக் கிடைக்கும்.

ஊரிலுள்ளவர்கள் உபாத்தியாயர் கூலியைத் தாமதமின்றிக் கொடுத்துவிடுவார்கள்; இவற்றால் ஆசிரியர்கள் தம்முடைய ஜீவனாதாரத்தைப்பற்றித் தாமே கவலையுற்றுத் தேடி அலையும்படி ஊரினர் வைக்கவில்லை யென்பதையும், அவர்களுடைய குடும்ப க்ஷேமத்தைக் கவனிப்பதை முதற் கடமையாகக் கொண்டனரென்பதையும் உணரலாம்.

பிள்ளைகளுக்குப் பௌர்ணமி, அமாவாசை, அஷ்டமி, பிரதமையாகிய திதிகளிலும், விசேஷமான பண்டிகைகளிலும், ஊரில் நடைபெறும் முக்கியமான உத்ஸவ தினங்களிலும் விடுமுறை உண்டு. அக்காலங்களில் பிள்ளைகள் ஒன்று சேர்ந்து சந்தோஷமாகப் பொழுதைக் கழிப்பார்கள். விடுமுறைத் தினங்களை வாவு நாட்களென்பர். உவாவென்பதன் திரிபே அது. பௌர்ணமியும் அமாவாசையும் உவாவெனப்படும். அவ்விரண்டு நாட்களும் விடுமுறையாதலின் மற்ற விடுமுறை நாட்களுக்கும் அப்பெயரே வழங்கப்பட்டது. நவராத்திரிப் பண்டிகையில் தினந்தோறும் கோலாட்டம் முதலியன நடைபெறும். அக்காலத்தில் உபாத்தியாயர்களுக்கு ஊரினர் பொருள் உதவி செய்வார்கள். இக்காலத்திலும் சில கிராமங்களிலுள்ள பள்ளிக்கூட உபாத்தியாயர்களுக்கு நவராத்திரியில் தக்க வருவாய் கிடைக்கும்.

முற்காலத்தில் கொடிய தண்டனைகள் இல்லை. ஆசிரியர்கள் மாணாக்கர்களை அன்பினால் வழிப்படுத்தி வந்தார்கள். அவர்கள்பால் இருந்த மரியாதை மாணாக்கர்களுக்குப் பயத்தை உண்டாக்கியது. பிழைகளை மறந்தும் புரியாத நிலையில் அவர்கள் இருந்தனர்.

ஆசானுடன் பழகும் மாணாக்கனை, நெருப்பை மிக அணுகாமலும் மிக விலகாமலும் குளிர்காயும் ஒருவனோடு பெரியோர் ஒப்புக் கூறுகின்றனர்.

கல்வியில் வாதம் செய்தல் பள்ளிக்கூடங்களில் இருந்தது. வடமொழியாளர் இதனை வாக்கியார்த்த

மென்பர். மிகச் சிறந்த நூற்பயிற்சி யுடையவர்கள் அரச வைகளில் வாது புரிந்து தம் கல்வித் திறமையை நிலை நாட்டுவர். அதன்பொருட்டு அவர்கள் கொடிகட்டி யிருப்ப ரென்று மதுரைக் காஞ்சி முதலிய தமிழ் நூல்களால் அறி கிறோம். இந்த வாதம்புரியும் பழக்கம் பாடசாலைகளி லிருந்தே வளர்ச்சியுற்று வந்தது. பள்ளிக்கூடத்தில் மாணாக்கன் நூல்பயிலும் இயல்பை விளக்க வந்த பழைய சூத்திரமொன்று பலவற்றைச் சொல்லிவிட்டு,

"வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை
கடனாக் கொளினே மடநனி இகக்கும்"

என்று முடிக்கின்றது. ஆட்சேப சமாதானங்கள் சொல் லிப் பழகிய பழக்கங்களே முதிர்ந்த நிலையில் வாதங்களாக வளர்ச்சியுறுகின்றன.

பல நூல்களையும் பள்ளிக்கூடத்தில் பயின்றதோடு நில் லாமல் வாழ்நாள் முழுவதும் நம் நாட்டார் படித்துவந் தார்கள்.

"என் ஒருவன் சாந்துணையும் கல்லாத வாறு?"

என்ற குறளினால், திருவள்ளுவர் ஒருவன் இறக்குமளவும் படிக்கவேண்டு மென்பதை விதிக்கின்றார். பள்ளிக்கூடத் தில் ஏற்பட்ட அடிப்படையான பழக்கங்களே நாளடைவில் விருத்தியாகி வாழ்க்கையைப் பயனுடையதாக்கின.

பள்ளிக்கூடத்திலிருந்து கற்கும் காலங் கடந்தபிறகு பழைய காலத்தவர்கள் பின்பும் எங்கெங்கே கலைகளைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இருந்தார்களோ, அங்கங்கே சென்று அவர்களிடம் தாம் முன்பு கல்லாதவற்றைக் கற்று வந்தார்கள்.

காலத்தின் வேகம் அந்தப் பழைய காலத்துப் பள்ளிக் கூடங்களை மாற்றி யமைத்துவிட்டாலும், அவற்றால் உண் டான நற்பயன்களையும், அவற்றிற் படித்த பேரறிஞர்கள் நமக்கு ஈட்டி வைத்துள்ள நூற் செல்வத்தையும் நினைக்கும் போது, நம்மையறியாமல் நமக்கு ஒரு பெருமிதம் உண்டா

கின்றது; அத்தகைய காலம் மீண்டும் வரக்கூடாதா என்ற ஏக்கம் ஏற்படுகின்றது. அக்காலத்து முறைகளே மீளா விடினும், அப்பள்ளிக்கூடங்களின் அடிப்படையான உண்மைகளையேனும் நாம் அறிந்துகொண்டு வாழ முயலுவோமாக!

## 3. 'திருச்சிற்றம்பலம்'

மனிதர்களுக்குள்ள தீய குணங்கள் பல; அவற்றுள் பிறருடைய நன்மையைக் கண்டு மனம் பொறாமல் வருந்தி அந்நன்மையுடையவர்களுக்குத் தீமையுண்டாக்கக் கருதும் குணத்தை அழுக்காறு, பொறாமை, அசூயை யென்னும் மொழிகளால் வழங்குவர். அக்குணம் மிகவும் கொடிய தென்பதைத் திருவள்ளுவர் தம் திருக்குறளில்,

"அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்"

என்பதில் வெளிப்படுத்தி யிருக்கின்றார். அறம் செய்யத் தொடங்குபவர்கள் நான்கு இயல்புகளை விலக்கிவிட்டுச் செய்யவேண்டுமென்று அப்புலவர்பிரான் வற்புறுத்துகின்றார்;

"அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொல் நான்கின்
இழுக்கா வியன்ற தறம்".

இதில் அழுக்காற்றை முதலில் வைத்துக் கூறியது அதன் கொடுமையை எல்லோரும் நன்றாக அறிந்துகொள்வதற்கேயாகும்.

செல்வர்களுக்குள் பொறாமையிருப்பதுபோலவே வித்துவான்களுக்குள்ளும் பொறாமை யிருப்பதுண்டு. கல்வியறிவோடு நல்லொழுக்கமும் இயைந்துள்ள பெரியோர்களிடத்தில் இத் தீயகுணத்தைக் காணுதல் அரிது. நிறைந்த கல்விமான்களிடத்திலும் பொறாமை தலைகாட்டாது; நிறைகுடம் துளும்பாது அல்லவா? குறைவான கல்வியையுடையார்களிடத்தில் உள்ள பொறாமைக் குணத்தால் பல வகையான கேடுகள் நிகழ்வதுண்டு. அங்ஙனம் பொறாமை

யால் விளைந்த நிகழ்ச்சி ஒன்று சிவஞான முனிவரென்னும் பெரியாருடைய வரலாற்றிற் காணப்படுகின்றது.

சிவஞான முனிவரென்பவர் திருநெல்வேலி ஜில்லாவில் பொதியமலை யடிவாரத்தைச் சார்ந்துள்ள விக்கிரம சிங்கபுர மென்னும் ஊரில் சைவவேளாளர் குலத்திற் பிறந்தவர். அவருடைய தந்தையார் பெயர் ஆனந்தக்கூத்தரென்பது. தாயார் மயிலம்மை. இளமை முதலே கல்வி கேள்விகளிலும் சிவபக்தியிலும் சிறந்தவராக விருந்தார். அவருடைய இயற்பெயர் முக்களாலிங்கரென்பது. அப்பால் திருவாவடுதுறையிலுள்ள ஆதீன மடத்திற்கு வந்து உபதேசம் பெற்றுத் துறவியானார். அவர் வடமொழியிலும் தென்மொழியிலும் நல்ல புலமையை யடைந்தார். இலக்கண நூல்களிலும், தருக்க சாஸ்திரங்களிலும், சைவ சித்தாந்த நூல்களிலும், மிகச்சிறந்த பயிற்சியும் எதிரிகளோடு வாதிட்டு வெல்லும் ஆற்றலும் பெற்றார். திருவாவடுதுறை யாதீனத்திலிருந்த அனைவரும் அவருடைய புலமையை அறிந்து மகிழ்ந்தனர்.

முனிவர் பல பிரபுக்களால் அழைக்கப்பெற்றுப் பல இடங்களுக்குச் சென்று அங்கங்கே யுள்ளவர்களுடைய ஆதரவையடைந்து தம்முடைய புலமைத் திறத்தை வெளிப்படுத்தியவர்; பல நூல்களை இயற்றினார். அவருடைய நூல்கள் இலக்கணம், புராணம், பிரபந்தம், சைவ சித்தாந்தமென்னும் பலவகையிலும் உயர்ந்தனவாக எண்ணப்படுகின்றன. எல்லோராலும் பயிலப்படும் தமிழிலக்கணமாகிய நன்னூலுக்குச் சங்கர நமச்சிவாய ரென்பவர் ஓர் உரை எழுதியிருந்தார். அதை அம்முனிவர் விரித்தும் சுருக்கியும் திருத்தியும் விருத்தியுரை யொன்று இயற்றினார். தமிழ் பயிலும் மாணுக்கர்களுக்கு அவ்வுரை பெரிதும் உபயோகமாக இருக்கின்றது.

சைவ சித்தாந்த நூலாகிய சிவஞான போதத்திற்குப் பெரிய உரை யொன்று எழுதினார். அதனை, திராவிட மகா பாஷ்யம் என்று கூறுவார்கள்.

அவர் இயற்றிய பிரபந்தங்கள் பல. அவற்றுள் சோமேசர் முதுமொழி வெண்பா, அமுதாம்பிகை பிள்ளைத்தமிழென்பன மிகவும் பிரசித்தமானவை. அவர் காஞ்சிப்புராணத்தின் முதற்பாகத்தை இயற்றினர். அதன் பிற்பகுதி அவருடைய மாணுக்கர்களுட் சிறந்தவரும் துறவியுமாகிய கச்சியப்ப முனிவரால் இயற்றப் பெற்றது.

சிவஞான முனிவர் பல மாணுக்கர்களுக்குத் தமிழ் நூல்களையும் சித்தாந்த சாஸ்திரங்களையும் போதித்தார். அவர் மாணுக்கர்களும் அவரைப்போலவே சிறந்த புலவர்களாக விளங்கிப் பல நூல்களை இயற்றிப் புகழ்பெற்ருர்கள். அவர்களுள்ளே கச்சியப்ப முனிவர் சிவஞான முனிவருடைய பேரன்புக்குப் பாத்திரராக நடந்துவந்தவர்.

சிவஞான முனிவர் காஞ்சீபுரத்திற் சிலகாலம் தம் மாணுக்கர்களுடன் இருந்துவந்தார். அக்காலத்தில் அவரை அங்கிருந்த செங்குந்தச் செல்வர்கள் பலர் உபசரித்து ஆதரித்துவந்தார்கள். அவர்களுடைய வேண்டுகோளின்படி முனிவர் காஞ்சிப்புராணத்தைத் தமிழ்ச் செய்யுள் நடையில் இயற்றத் தொடங்கினர். அதன் முதற்காண்டம் நிறைவேறியவுடன் அதனை அம்முனிவர் காஞ்சீபுரத்திலே ஒரு பெரிய மண்டபத்தில் அரங்கேற்றத் தொடங்கினர்.

கச்சியப்ப முனிவர் முதலிய மாணுக்கர்களும் வேறு பல பெரிய வித்துவான்களும் செல்வர்களும் உடனிருந்தார்கள். சிவஞான முனிவர்பால் அழுக்காறுகொண்ட சிலர், 'இவர் ஒரு நூலைப் பாடுவதும், அதனை அரங்கேற்றுவதும், அதனை நாம் பார்த்திருப்பதும் சரியா? இவரது புராணத்தில் ஏதேனும் குறைகூறி இவருக்குள்ள மதிப்பை எவ்வகையாலேனும் குறைக்கவேண்டும்' என்று நினைந்து, கோயில் ஓதுவார் ஒருவரை அழைத்து ஊக்கிவிட்டு ஆட்சேபனை செய்யும்படி ஏவினர்கள். அவரோ கல்விப்பயிற்சியில்லாதவர்; தேவாரம் மட்டும் நாள் தவருமல் திருக்கோயிலில் ஓதி வருபவர். அவர்கள் சொல்லியதற்கு உடன்பட்டுத் தைரி

யத்தோடு எல்லோருக்கும் முன்னே சபையில் வந்து இருந்தார்.

அரங்கேற்றம் ஆரம்பிக்கப்பட்டது. விநாயகர் வணக்கங்களாகிய முதல் இரண்டு செய்யுட்களைப் படித்து முனிவர் பொருள் கூறினர். அப்பால் மூன்ருவது செய்யுளாகிய ஸ்ரீநடராசப் பெருமான் துதியைப் படிக்கத் தொடங்கினர்; "சங்கேந்து மலர்த்தடங்கைப் புத்தேளும்" என்று வரும், அதனைக் கூறிவிட்டுப் பொருளும் சொன்னர். மேலே விசேஷ அர்த்தம் சொல்லத் தொடங்கும்போது முன்னே குறிப்பிட்ட ஓதுவார், "முதலில் சங்கையா ஆரம்பித்தீர்கள்?" என்று இழிப்புக்குறிப்போடு கேட்டார். சங்கை யென்பதற்குச் சந்தேகமென்பது பொருள். உடனே சிவஞான முனிவர், "பாடலில் இருப்பது சங்கென்னும் சொல்தான்; உம்முடைய வாக்கிலேதான் சங்கை உண்டாயிற்று" என்று விடை சொன்னர். அதற்குமேல் அந்த விஷயத்தைப்பற்றி வாதிப்பதை விட்டு விட்டு ஓதுவார், "முத்திநகரங்கள் ஏழிலொன்றும் பிரசித்த ஸ்தலமுமாகிய இந்தக் காஞ்சீபுரத்திற்குப் புராணம் பாடவந்த நீங்கள் சிதம்பரம் நடராஜருக்கு எப்படி முதலில் துதி கூறலாம்? ஸ்ரீஏகாம்பர நாதர் துதியையல்லவோ முதலிற் சொல்லவேண்டும்? எல்லாத் தல புராணங்களிலும் உள்ள அமைப்பைப் பாருங்கள்" என்ருர். அப்போது சிவஞானமுனிவர் ஸ்ரீசபாபதியின் பெருமையையும் சிதம்பரதலத்தின் மகிமையையும் வேறுபல விஷயங்களையும் எடுத்துக்கூறிச் சமாதானம் சொன்னர். ஓதுவார் விதண்டாவாதத்திற்காகவே கங்கணங்கட்டிக்கொண்டு வந்தவராதலால் முனிவர் கூறக்கூற மேலும் மேலும் தடைகளைக் கூறிக்கொண்டே வந்தார்.

இவற்றை யெல்லாம் அங்கே இருந்த கச்சியப்ப முனிவர் கவனித்தார்; 'இந்த ஓதுவார் உண்மையிலே சந்தேகத்தைப் போக்கிக்கொள்ள வந்தவரல்லர். வேண்டுமென்றே குற்றம் கூறி நம் ஆசிரியருக்கு இகழ்ச்சியுண்டாக்க எண்ணி வந்தவர். இந்த ஸ்தலத்து ஓதுவாரென்ற உரிமையினல் இவ்

வளவு தைரியத்தோடு வந்திருக்கிறர். அயலூரார் ஒருவர் இந்த ஸ்தலபுராணம் பாடி அரங்கேற்றுவது தமக்கு அவமானமென்று கருதிய சில புல்லறிவாளர்களுடைய தூண்டுதலும் இதற்குக் காரணமாக இருக்கலாம். இந்த மனிதரை நியாயமாக வெல்வது இயலாதகாரியம். இவரோ கல்வி யறிவுள்ளவராகத் தோற்றவில்லே. முரட்டுப் பிடிவாதம் செய்கிறர். சாந்தமூர்த்தியாகிய நம் ஆசிரியரிடம் இவரை விடக்கூடாது. நாமே முன்சென்று இந்த விஷமக்காரரை அடக்கவேண்டும்' என்று யோசித்தார்; உடனே சிவஞான முனிவரை நோக்கி அஞ்சலி செய்து, "இவரை அடியேன்பால் விட்டுவிடப் பிரார்த்திக்கிறேன்" என்று சொல்லிவிட்டு, ஓதுவாரைப்பார்த்து அதிகாரத் தொனியோடு, "இங்கே நேரேவந்து உட்காரும்; நீர் யார்? ஏதேனும் படித்திருக்கிறீரா?" என்று கேட்டார்.

ஓதுவார்:—நான் இத்தலத்து ஓதுவார்களுள் ஒருவன்; ஏதோ ஒருவாறு தமிழ் கற்றிருக்கிறேன்.

கச்சி:—உமக்குத் தேவாரம் தெரியுமா?

ஓதுவார்:—நன்முகத் தெரியும். என்னுடைய வேலேயே தேவாரம் ஓதுவதுதானே? இதைக்கூடக் கேட்கவேண்டுமா?

கச்சி:—அப்படியானல் இந்தத் தலத்துத் தேவாரத்தைச் சொல்லும் பார்ப்போம்.

ஓதுவார் தம்முடைய சாமர்த்தியத்தைக் காட்டுவதற்குரிய சந்தர்ப்பம் நேர்ந்துவிட்டதென்ற சந்தோஷம் மேலிட்டு ஊக்கத்துடன் சொல்லத் தொடங்கி, "திருச்சிற்றம்பலம்" என்ருர். தேவாரம் ஓதுபவர்கள் பாடத்தொடங்குமுன் முதலில் 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லிவிட்டு ஆரம்பித்தலே முறை. உடனே கச்சியப்ப முனிவர் கம்பீரமாக, "நிறுத்தும், உம்மைக் காஞ்சீபுரம் தேவாரம் சொல்லச் சொன்னல் திருவேகம்பமென்று சொல்லாமல் திருச்சிற்றம்பலமென்று ஏன் சொல்லுகின்றீர்?" என்று கேட்டார்.

ஓதுவார்:—எல்லாத் தலங்கட்கும் அது பொதுவானது.

கச்சி:—இங்கே காஞ்சிப்புராணத்திற் கூறப்பட்ட முறைக்குக் காரணமும் அதுவே. பல சைவ நூல்களைப் படித்திருந்தால் உமக்கு இந்த மரபு தெரிந்திருக்கும்.

உடனே ஓதுவார் தலைகவிழ்ந்தார்; "அடியேன் செய்த குற்றத்தை க்ஷமிக்கவேண்டும்" என்று வருந்திக் கேட்டுக் கொண்டு வணங்கினர். சபையிலுள்ள யாவரும் சந்தோஷத்தால் ஆரவாரித்துக் கச்சியப்ப முனிவருடைய திறமையை மிகவும் பாராட்டினர்.

## 4. ஐவகை நிலங்கள்

பண்டைத் தமிழர் பொருள்களின் தன்மைகளைத் துருவி ஆராயும் ஆற்றலைப் பெரிதும் படைத்திருந்தனர். மக்களின் இயல்பும் அவர்கள் செய்யும் தொழில்களும் அவர்கள் வாழும் நிலத்தையே பெரும்பாலும் சார்ந்திருக்கும் என்னும் உண்மை அவர்கட்குச் செவ்வையாய்த் தெரிந்திருந்தது. முற்காலத்துப் புலவர்கள் பாடிய பாடல்கள் இன்றும் தம் சிறப்பிற் குன்றாது கொண்டாடப்படுதற்கு அப்புலவர்களின் இயற்கையறிவும் உண்மை நிலையினின்று வழுவாத தன்மையுமே காரணங்களாகும்.

பொருள்களின் இலக்கணங்களை அவர்கள் நன்றாக அறிந்து பொருளிலக்கணம் ஒன்றனையும் வகுத்துவைத்தனர். உலகத்திலுள்ள பொருள்களை மனத்தால் உணர்வன, பொறிகளால் உணர்வன என இருவகையாகப் பிரித்து மனத்தால் உணர்வனவற்றை அகம் என்றும், பொறிகளால் உணர்வனவற்றைப் புறம் என்றும் பெயரிட்டனர். மனிதரின் மனத்தினிடையே நிகழும் இன்ப துன்பங்களை இத்தகையனவெனக் கூறுவது இயலாத காரியம். அத்தகைய உணர்ச்சிகளையும் ஊடுருவிப் பார்த்துத் தம் செய்யுட்களில் அவற்றை அமைத்துக் காட்டலே புலமையின் திறனை நன்கு விளக்கும் என அவர்கள் எண்ணினர். அழகு என்பதனைச் சித்திரிக்க விரும்பும் ஒருவன் அழகிய காட்சி

யொன்றைச் சித்திரித்து அதனில் தன் கருத்தையெல்லாம் காட்ட முயல்வதுபோல அகப்பொருளுக்கு இலக்கணம் வகுக்க முயன்ற சான்றோர் ஒரு தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே நிகழும் உள்ள நெகிழ்ச்சிகளை விளக்கப் புகுந்தனர். அதைப்போலவே கண்ணுக்குப் புலனாகும் புறப்பொருளின் இலக்கணத்தை வகுக்க வந்தவர் உலகத்தில் எல்லாச் செல்வங்களும் பலவித ஆற்றல்களும் நிறைந்து விளங்கும் மன்னனொருவனின் தொழில்களை விளக்கினார்.

அகம், புறமாகிய இரண்டு பொருள்களும் மக்களிடையே தோன்றுமாதலின் அம்மக்கள் வாழும் நிலங்கள் முதலிற் கூறப்பட்டன. நிலத்தின் இயற்கைப் பகுதிகள் நான்கு; அவையாவன: மலையும் மலையையொட்டின பிரதேசமும், காடும் காடு சார்ந்த நிலமும், விளைவயலும் அதற்கருகிலுள்ள பூமியும், கடலும் கடலையடுத்த இடங்களும் ஆகிய இவைகளே; இந்நான்கு பிரிவுகளே யுள்ளமையால் இப்பூமியை நானிலம் என்பர் பெரியோர். இவை ஒன்றோ பலவோ திரிந்துகொடிய பாலைநிலமாவதுமுண்டு. பாலையையும் கூட்டி ஐந்நிலம் என்று கூறுவதும் உண்டு. இவற்றையெல்லாம் அன்றி வேறோர் இயற்கைப்பிரிவு இல்லையென்பது எவர்க்கும் புலனாகும். இந்நிலப்பகுதிகளின் தகுதிகளைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

மலையும் மலையைச்சார்ந்த இடமும் குறிஞ்சி என்று பெயர் பெறும். அந்நிலத்து வாழும் மக்கள் குறவரும், கானவரும் ஆவர். அவர்களின் தொழில் தேன் அழித்தல், கிழங்கு அகழ்தல், தினை விளைத்தல், கிளிகடிதல், வேட்டையாடுதல் முதலியன. அவர்களின் உணவு தினையும், மூங்கிலரிசியும், தேனுமாம்; வெற்பு, சிலம்பு என்பன மலையின் பெயர்கள்; ஆகவே ஆங்குள்ள தலைவர்களை விளிக்கும்போது வெற்பர், சிலம்பர் என்று அழைத்தல் வேண்டும். அவர்கள் வாழும் இடங்கள் சிறுகுடியென்றும் குறிச்சியென்றும் கூறப்படும். அம்மலை நாட்டில் அருவிகளினின்றும் சுனையினின்றும் குடிக்கும் நீரை அந்நாட்டினர் பெறுவர். அப்பிரதேசத்தில் காணப்

படும் மரங்களில் அகில், ஆரம், தேக்கு, வேங்கை என்பன சிறந்தவை; வேங்கையின் பூவும், சுனைக்குவளையும், காந்தள் என்னும் ஒருவகைப் பூவும் கானவர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. புலி, யானை, கரடி, பன்றி ஆகிய மிருகங்களும், கிளி, மயில் போன்ற பறவைகளும் அங்கே காணப்படும். இத்தகைய இயற்கைப்பொருள்கள் அமைந்த மலைநாட்டு மக்கள் முருகனைத் தெய்வமாகக் கொண்டாடுகின்றனர். அவனுக்கு அவர்கள் தொண்டகம், முருகியம் முதலிய பறைகளை முழக்கிக் குரவையென்னும் ஒருவகை கூத்தையாடிப் பூஜை செய்வர். அப்பூஜைக்குரிய காலம் கூதிரும் யாமமும்; அவன் அவர்களுக்கு மழைவளனைத் தந்து மகிழ்விப்பான்.

இனி, அடுத்ததாகக் கூறப்படும், காடும் காடு சார்ந்த இடமும் முல்லை யென்று பெயர்பெறும். அந்நிலத்துக்கு உரியவர் இடையராவர்; அவர் ஆயர் என்றும் கோவலர் என்றும் அழைக்கப்பெறுவர்; அவர்களுட் சிறந்தோரை நாடன் என்றும் தோன்றல் என்றும் விளிப்பது வழக்கம். அவர்களின் தொழில் மாடுமேய்த்தலும், பால் நெய் முதலியவற்றை விற்றலுமாம்; அங்கு விளையும் தானியங்கள் வரகு, சாமை முதலிய புன்செய்ப் பயிர்களாகும். இடையர் வாழும் இடங்களைப் பாடி என்றும், சேரி யென்றும், பள்ளி யென்றும் பெயரிடுவர். அங்கே காணப்படும் விலங்குகள் முயல், மான் முதலியன; பறவைகள் கானக்கோழி, சிவல் என்பன; பூ முல்லையாகும்; மரங்களுட் சிறந்தன கொன்றையும் குருந்தும்; நீர் பெறுமிடம் கான்யாறு.

முல்லை நிலத்துக்கு உரிய தெய்வம் கண்ணன். கோவலர் தம் ஆக்களைக் காக்கவேண்டுமென்று அவனுக்கு ஏறு கோட்பறையைக் கொட்டியும், முல்லையாழை வாசித்தும், குரவைக் கூத்தாடியும், பால்கலந்த சோறு முதலியவற்றைப் படைத்தும் விழாக்கொண்டாடுவர். அவனுக்கு உரிய காலம் கார்காலமும் மாலைப்பொழுதும்.

மக்கள் மிகப் பழையகாலத்திலே குன்றுகளிலே வசித்து வந்திருத்தல் வேண்டும். இயற்கையான பாதுகாப்பிடங்களான மலைக்குகைகளும் மரநிழல்களும் அவர்களுக்குத் தங்குமிடங்களாகவும், வேட்டையாடிப் பெறும் பொருள்களும் தாமே விளைந்து அகப்படும் பொருள்களும் அவர்களுக்கு உணவாகவும் இருத்தல் கூடும். பிறகு சிறிதளவு நாகரிகம் முதிர்ந்து பசுமேய்த்தல் போன்ற தொழில்களைச் செய்யத்தக்க பருவமடைந்தபின் காட்டிடங்களை அவர்கள் நாடியிருப்பர். அந்நிலத்தில் வாழ்க்கை நிலையற்றதாய் மேய்ச்சலிடங்களை நாடித் திரிதலைக் கொண்டுள்ளதாய் இருத்தல்வேண்டும். பின்பு அவர்கள் நிலைத்திருத்தலை விரும்பி, பயிர்த்தொழிலைக் கற்று, நாகரிகம் முதிர்ந்து, அமர்ந்துவாழும் நிலை முன்னிரண்டு நிலைகளிலும் முதிர்ந்ததாயிருத்தல்வேண்டும். அந்நிலையில் மக்கள் வயலிலும் வயல் சூழ்ந்த நிலங்களிலும் தங்கி வாழ்வர். அவ்விடங்கள் மருதம் என்று பெயர் பெறும்.

மருதநில மக்கள் உழவர் முதலியோர். அவர்களிற் சிறந்தோரை ஊரன், மகிழ்நன் என்றழைப்பது வழக்கம். அவர்களின் தொழில் பயிரிடுதல்; அவர்கள் வாழும் இடம் ஊர் என்று பெயர்பெறும்; அவர்கள் விளைக்கும் நெல் வகைகளே அவர்களின் உணவாகும்; ஆற்றிலிருந்தும், வீடுகளில் இறைக்கப்பட்ட கிணறுகளினின்றும், பொய்கைகளினின்றும் அவர்கள் தமக்கு வேண்டிய நீரைப் பெறுவர்; வஞ்சி, காஞ்சி, மருதம் முதலியன அந்நாட்டு மரங்கள்; தாமரை, கழுநீர் போன்ற பூக்கள் அங்கே கிடைக்கும். எருமை, நீர்நாய் முதலிய விலங்குகளும், புதாரா, நீர்க்கோழி போன்ற புட்களும் அந்நாட்டிற் காணப்படும்.

அவர்கள் தெய்வம் இந்திரன். அவனை மணமுழவு, நெல்லரி, கிணை யென்ற பறைகளைக் கொட்டியும், மருத யாழ் கொண்டு பாடியும் மருத நிலமாக்கள் வழிபடுவர். தமிழ் நாட்டிற் பண்டைக்காலத்தில் வழங்கிவந்த இந்திர விழாவும் இக்காலத்திற் கொண்டாடப்பெறும் போகிப்பண்டி

கையும் அவனைக் குறித்தனவே. மருதத்திற்குச் சிறந்த சிறுபொழுது வைகறையும் காலையு மென்பர். குறவர் வேட்டையிலிருந்து திரும்பி வருங்காலம் முன்னிரவும், கோவலர் மாடுமேய்த்துத் திரும்பும்பொழுது மாலை நேரமும் ஆகச் சிறந்திருப்பனபோல உழவர்கள் காலையிலெழுந்து உழச் செல்வது இயற்கைக்கு ஒத்திருத்தல் உணர்தற்குரியது.

இனி நான்காவதாகக் கூறப்படுவது நெய்தல் எனப் பெயர் பெறும் கடற்கரை நிலமே. கடல் காண்பதற்கு அச்சத்தை விளைக்குமாதலால் அங்கு மக்கள் குடியேறக் காலந் தாழ்த்திருப்பர். அங்கு வாழும் மக்கள் மீன்பிடித்தல், உப்பு விளைத்தலாகிய தொழில்களைச் செய்து ஜீவிக்கும் நுளையராவர்; அவர்களுட் சிறந்தோனைச் சேர்ப்பன் என்று கூறுவது மரபு. அவர்கள் வாழுமிடங்கள் பட்டினமென்றும் பாக்கமென்றும் பெயர் பெறும்; அவர்கட்கு நல்ல நீர் மணற் கிணறுகளினின்றே கிடைக்கும்; அவர்களுக்கு உமண், பகடு போல்வன சுமை விலங்குகளாக உதவும்; அங்கே கடலோரங்களில் உள்ள கானலிலும் கழியோரங்களிலும் புன்னை, கண்டலென்னும் மரங்களும் தாழை, நெய்தல் போன்ற பூக்களும் காணப்படுகின்றன. அன்னம், அன்றில் போல்வன அங்கு வாழும் பறவைகள்.

நுளையரின் தெய்வம் நீர்க்கடவுளான வருணன். சுறுமீன் கொம்பை நட்டும் மீன்கோட் பறையை முழக்கியும், நெய்தல் யாழைப் பயின்றும், வலையரும் வலைச்சியரும் வருணனை வழிபடுவர். அப்பொழுது வருணன் வெளிப்பட்டு அவர்களுக்கு வலைவளம் தப்பாமலிருக்கும் வரனை ஈவன்.

இந்நான்குமே நிலத்தின் நாற்பகுதிகள். இவற்றுள் ஒன்றேனும் பலவேனும் திரிந்து பாலையாகும் என்று முன்பு கூறினோம். அப்பாலையானது காய்ந்த குன்றுகளும் வறண்ட மணல்வெளிகளும் கொண்டு கடத்தற்கரியதான தன்மையுடையது. எயினர், மறவர் என்னும் ஆறலைக்

கள்வர் அங்கு வாழ்வர்; வழிப்போக்கர்களைக் கொள்ளை யடிப்பதும் சூறைகொள்ளுதலும் அவர்களின் தொழிலாகும். கழுகு, பருந்து, புறா ஆகிய புட்களும், வலியழிந்த யானை, புலி, செந்நாய் போன்ற கொடிய விலங்குகளும் அங்கு வாழ்கின்றன. வற்றின இருப்பை, உழிஞை போன்றன மரங்கள்; பூக்கள் மரா, குரா, பாதிரி என்பன. எயினரின் தலைவரைக் காளையென்றும் விடலை யென்றும் கூறுவர்; அவர்கள் வசிக்கும் இடம் பறந்தலை யெனப்படும். அவர்களின் தெய்வம் சூரியன், காளி, அக்கினி என்பவர். காளியின் பூசையைப்பற்றிச் சிலப்பதிகாரத்தில் மிக அழகான வருணனை யொன்று காணப்படுகிறது.

பாலைநிலத்தில் நீர் கிடைப்பது அரிது; நீரற்ற கூவலும் சுனையுமே அங்கே காணப்படும். எயினர் கையாளும் பறை சூறை கோட்பறை, நிரை கோட்பறை யெனப்படும்; அவர்களின் யாழ் பாலையாழ் என்பது; பாலைக்குரிய காலம் வேனிலும் நண்பகலுமாம்.

நாடு நாகரிகம் பெற்று அரசாட்சிகள் நிலைத்த காலத்தில் கொடிய செயல்களையுடைய மறவர்கள் போர்வீரர்களாயினர்; அவர்களின் வீரத்தைப்பற்றிப் பண்டையாசிரியர் பல பாடல்களைப் பாடியுள்ளார்கள்.

இவ்வாறு இயற்கைப் பிரிவுகளைப் பின்பற்றி நிலம் ஐவகையாகப் பிரிக்கப்பட்டது; அவ்வந்நில வாழ்க்கையை நன்கறிந்து அகம், புறம் என்னும் இருவகைப் பொருளும்படப் பாடப்பெற்ற பாடல்கள் பல்லாயிரம் இன்றும் கிடைக்கின்றன. அவற்றைப் படிப்பதாற் பண்டைத் தமிழரின் நுண்ணுணர்வும், ஆராய்ச்சி வன்மையும் தெற்றென விளங்கும்.

## 5. கௌதம புத்தரும் அவருடைய உபதேசங்களும்

இந்தப் பரதகண்டத்தில் உத்தரகோசல தேசத்தில் உரோகிணி நதிக்கரையிலுள்ள கபிலவாஸ்து என்னும் நகரத்தில், இக்ஷ்வாகு பரம்பரையிலுதித்துச் சுத்தோதன

னென்று பெயர்பெற்ற ஓர் அரசன் இருந்தான். அவனுடைய காலம், இற்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரத்தைந்நூறு வருடங்களுக்கு முந்தியதென்பர். அவனுக்கு மாயாதேவியென்ற மனைவியின் வயிற்றில், கடவுளருளால் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அது பிறந்த தினம் வைசாக சுத்த பூர்ணிமை. அன்று உலகத்தில் பல நன்னிமித்தங்கள் நிகழ்ந்தன. மாயாதேவி கருவுயிர்த்த எழாநாளில் இறந்தாள். குழந்தை சுத்தோதனனுடைய மற்றொரு மனையாளாகிய கௌதமி என்பாளிடம் வளர்ந்துவரலாயிற்று.

ஒருநாள் சுத்தோதனன் குழந்தையை எடுத்துக்கொண்டு கோயில் சென்று ஆங்குள்ள தேவரைத் தரிசித்த பொழுது, அத்தேவர் தமது படிமத்தினின்று வெளிப்பட்டு, அக்குழந்தையின் பெருமைகளை அவனுக்கு விரித்துக்கூறினர். பின்பு அக்குழந்தைக்கு ஸித்தார்த்தனென்று நாமகரணஞ் செய்தார்கள்; செய்தும் எல்லாரும் கௌதமனென்னும் குடிப்பெயராலேயே அழைத்துவந்தார்கள்.

கௌதமர், உரிய காலத்தில் வித்தியாரம்பஞ் செய்விக்கப் பெற்றுப் பல கலைகளையும் முறையாகக் கற்பாராயினர். ‘விளையும் பயிர் முளையிலே தெரியும்’ என்பதற்கேற்ப, ஜீவகாருணிய முதலிய நற்குணங்கள் பலவும் அவர்பால் இளம் பருவந்தொடங்கியே நாடோறும் வளர்ச்சியுற்று விளங்கின.

அவ்வளவில் அஸிதரென்னும் முனிவர் வந்து கௌதமரைக் கண்டு பரிபூர்ண புத்தர்களுக்குரிய லக்ஷணங்கள் பலவும் அவர்பால் உளவாதலையறிந்து வியந்து, ‘மானிடராகிய மரத்தில் பல நூற்றாண்டுகளுக்கு ஒரு முறையே மலரும் மலர் இக்குழந்தை; உமது குலப்பெருமையை என்னென்று சொல்லுவேன்! இவன் துறவுபூண்டு உலக ரக்ஷகனாக இருப்பான்’ என்று அரசனுக்குக் கூறினர். அரசன் அச்சொற்களைக் கேட்டுக் கவலையுற்று, கௌதமருடைய உள்ளத்தை உலகவழியிற் புகுத்தற் பொருட்டுப் பலவாறு

முயன்று வந்ததோடு உலகவாழ்வில் அவருக்கு ஒருபொழுதும் யாதொரு வெறுப்பும் தோற்றுமலிருக்கும் வண்ணம் செய்வித்தும் வந்தான். அரசன் செய்துவந்த பெருமுயற்சிகளால் பிணி, மூப்பு, சாக்காடு என்பவைகள் மனிதருக்கு உண்டென்ற ஞாபகம் கௌதமருக்கு உண்டாகவேயில்லை. பின்பு அரசன், தன் மைத்துனனாகிய சுப்பிரபுத்தனுடைய மகள் யசோதரையை அவருக்கு மணம்புரிவித்தான்; அப்பொழுது அவருக்குப் பிராயம் பத்தொன்பது.

அப்படியிருக்கையில் கௌதமர் ஒருநாள் தம் தந்தையைக் காணும்பொருட்டு வீதிவழியே செல்லும்போது அங்கே பிணியாளனொருவனைக் கண்டு எல்லாரும் இப்படியே பிணிவாய்ப்பட்டுத் துன்புறுவாரென்பதையும், மற்றொரு நாள் அங்ஙனஞ் செல்கையில் மிகத் தளர்ந்து வருந்திக்கொண்டுவந்த முதியோன் ஒருவனை வழியிடையே கண்ணுற்று எல்லோரும் இங்ஙனம் மூப்புற்று வருந்துவாரென்பதையும், வேறொருநாள் குதிரையேறி வெளியே செல்லுகையில் அங்கே அழுகிக்கிடந்த பிணமொன்றைக் கண்டு எல்லோரும் இறத்தற்குரியா ரென்பதையும் உடன்வந்த குதிரைக்காரனால் அறிந்தறிந்து, அநித்தியமாகிய உலக வாழ்வில் அருவருப்புற்று, 'இப்பிணி மூப்புச் சாக்காட்டிற்குக் காரணமாகிய பிறப்பிற்கு இடங்கொடாத நல்வழியையறிந்து நாமுமுய்ந்து உலகத்தையும் உய்வித்தல் எப்பொழுது கூடுமோ?' என்னும் கவலையடைந்து அதைக் குறித்து ஆலோசித்துக்கொண்டே வருவாராயினர். ஒருநாள் அவர்முன் ஒரு துறவி தோன்றித் துறவிகளின் பெருமைகளை எடுத்துச்சொல்லி அகன்றனர். அது கேட்டவுடனே துறத்தற்குத் துணிந்த கௌதமர், தம்மிடத்திலிருந்தும் எழுந்து அரண்மனை சென்று, தாம் துறவுபூண இச்சித்திருத்தலைத் தந்தைக்குத் தெரிவித்தார்; அதனைக் கேட்ட சுத்தோதனன், மனங்கலங்கிக் கண்ணீர் பெருக, "ஐய, அதற்கு இது காலம் அன்று; எம்மைப் பாதுகாத்து நெடுங்காலம் அரசாண்ட பின்னரே அது விரும்பத்தக்கது"

எனவே, கௌதமர், "பிறப்புப் பிணி மூப்புச் சாக்காடாகிய இத்துன்பங்களை ஒழித்தற்குரிய வழியை அறிந்துகொண்டாலன்றி இங்கு நில்லேன்" என்று உறுதியாகக் கூறி விட்டுத் தமது உறைவிடமடைந்தார்.

அப்பால் அவர் அன்றிரவின் முற்பாகத்தில் அயர்ந்து நித்திரை செய்து நள்ளிரவில் திடீரென்று விழித்தெழுந்து எல்லாவற்றையும் துறந்து வேற்றிடஞ் செல்லுதற்குத் துணிந்தார்; அவர் உடனே வெளியேவந்து அங்கே விழித்துக்கொண்டிருந்த சந்தகன் என்பவனை யழைத்துத் தம்முடைய குதிரையை விரைவிற் கொண்டுவரும்படி கட்டளையிட்டார்; அவன் அவ்வாறே குதிரையைக் கொணர்ந்து நிறுத்த, அவர் அதன்மேலேறி 'உலகத்திற் பிறப்புப் பிணி மூப்புச் சாக்காடாகிய துன்பங்களையெல்லாம் முற்றும் போக்குதற்குரிய வழியை அறிந்தாலன்றி மீளேன்' என்று உள்ளத்தில் உறுதிகொண்டு ஊக்கத்துடன் செல்வாராயினர். அப்பொழுது அவருக்குப் பிராயம் இருபத்தொன்பது.

கௌதமர் கபிலவாஸ்துவிலிருந்து சலிப்பின்றி மூன்று யோசனையளவு தூரத்திலிருந்த அநோமதிநதிக் கரையைச் சூரியோதயத்துக்கு முன்னமே அடைந்தார். பின்பு அவர் தம்முடன் வந்த சந்தகனை நோக்கி, "அடையவேண்டுமென்று பலநாளாக நினைத்துக்கொண்டேயிருந்த விடத்தை இப்பொழுது அடைந்தோம்; நம்முறவு இன்றோடு முடிவு பெற்றது" என்று கூறித் தமது கழுத்திலிருந்த விலையுயர்ந்த கண்டசரத்தைக் கழற்றி அவனுக்கு நன்கொடையாக இன்சொல்லோடு கொடுத்தார். பின்பு அவர் தமது முடிமணியையெடுத்து அவன் கையில் வைத்து, "இதனை நான் அன்புடன் கொடுத்ததாகச் சொல்லி அரசருக்குக் கொடு; என்னிடத்திலுள்ள காதலை முற்றும் மறக்கும்படி நான் சொன்னதாகத் தெரிவி; இல்வாழ்க்கையின் வழியாகத் துக்கக்கடலை நீந்துதற்குரிய தெப்பம் எனக்குக் கிடையாமையினாலேயே நான் பிரிந்தேனென்று சொன்னதாகவும் விண்ணப்பஞ் செய்" என்று கூறினர்; அதைக் கேட்ட சந்தகன் பெரிதும் மனம்

வருந்தி விடைபெற்றுச் சென்று ஊரையடைந்து நிகழ்ந்த வற்றை அரசனுக்கும் மற்றோருக்கும் தெரிவித்தான்; அவற்றைக் கேட்ட எல்லோரும் துக்கக்கடலில் ஆழ்ந்தார்கள்.

சந்தகன் போனபின் கௌதமர் அநோமதிநதியின் மணலில் தங்கி உடைவாளால் தமது மயிர்முடியை அறுத்தெறிந்துவிட்டு அங்கே சிறிதுநேரம் உண்மையை ஆராய்ந்துகொண்டே யிருந்தார். அச்சமயம் அங்கே துவராடையுடுத்து வில்லும் அம்பும் தாங்கிய வேடனொருவன் தோன்ற, கௌதமர் தம்முடைய பட்டாடையை அவ்வேடனுக்குக் கொடுத்துவிட்டு அவனுடைய துவராடையைத் தாம் வாங்கி யுடுத்திக்கொண்டு உண்மையை அறிவுறுத்தும் பெரியோரைத் தேடிச் சென்றார்.

அவர் முனிவர் பலரையுங் கண்டு உண்மை நெறியைப் பற்றி விசாரிக்கலாயினர்; ஒரு சமயம் நைரஞ்சரையென்னும் ஆற்றின் கரையிலே ஓர் அரசமரத்தடியி லிருந்துகொண்டு இருபத்தெட்டு நாட்கள் அகோராத்திரம் அயிலுதலும் துயிலுதலுமின்றி உபவாசமிருந்து உண்மையை ஆராய்ச்சி செய்துகொண்டே யிருந்தார்; இருபத்தொன்பதாவது தினத்தின் காலையில் அருகேயுள்ள ஊரிலிருப்பவனாகிய பலனென்னும் இடையனுடைய மகள் ஸுஜாதையென்பவள், தன்னுடைய வழிபடு தெய்வத்திற்கு நிவேதனஞ் செய்யச் சமைத்துக் கையில் வைத்துக்கொண்டிருந்த பாலன்னத்தை ஊட்டினள்; அதனையுண்டு கௌதமர் ஒளியால் விளங்கினர். அன்றிரவில் கௌதமருக்குப் பழம் பிறப்புணர்ச்சியும், தத்துவ ஞானமும் முறையே பிறந்தன; அப்பொழுது முதலில் முற்பிறப்பிற் பாவஞ்செய்தோர் இப்பிறப்பில் வருந்துதலையும், சீவகாருணியம் பூண்டோர் இன்பமுற்று வாழ்தலையும் அவர் தம்முடைய ஞானக்கண்ணால் அறிந்தார். இவ்வண்ணம் கௌதமர் ஞானத்தைப் பெற்றுப் புத்தரானபின் நாகரும் தேவரும் மற்றையோரும் களித்தனர்; நன்னிமித்தங்கள் பல நிகழ்ந்தன.

பின்பு புத்தர் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுப் பலவிடங்களுக்குஞ் சென்று தாம் கண்ட உண்மைகளை உப தேசிக்கலாயினர்; அவற்றைக் கேட்டுப் பலர் அவருக்குச் சிஷ்யர்களாயினர். இங்ஙனம் அவர்கள் தம்முட் கூடியிருக் கத் தொடங்கியதே பௌத்த சங்கத்தின் தொடக்கமென் பர்.

அப்பால் புத்தர், தாம் அறிந்து கைக்கொண்ட தரும மாகிய சக்கரத்தை எவ்விடத்தும் உருட்ட நினைத்து அந்த வனத்திலேயே இருந்துகொண்டு சாதிவேற்றுமை கருதாம லும், ஆண்பாலார் பெண்பாலாரென்று பாராமலும், இவர் பகைவர் இவர் நட்பினரென்று நினையாமலும் அங்கு வந் தோர் யாவருக்கும் ஒப்பத் தமது சித்தாந்தத்தை உபதே சித்துவந்தார்.

பின்பு தாம் பிறந்த நகராகிய கபிலவாஸ்துவைக் கிட் டிச் சுத்தோதனனால் தக்கவாறு உபசரித்தழைக்கப்பட்டு அந்நகரத்துள்ளே சென்றார். முன்பு கௌதமர் துறவின் பொருட்டு அரண்மனையை நீத்த அன்றிரவு பிறந்த அவர் குமாரன் இராகுலனும், அவன் தாய் யசோதரையும் புத்த ரால் தருமோபதேசம் செய்யப்பெற்றனர்.

அங்கிருந்து புத்தர் பலவிடங்களுக்கும் சென்று பலரை யும் சீடர்களாக்கி வந்தனர். இவ்வாறு இருபது வருடங் கள் கழிந்தன.

ஒருகாலத்தில், கிருசாகௌதமி யென்பாளொரு மங்கை, தான்பெற்ற அழகிய குழந்தை நடக்கும் பருவத்தி லேயே இறந்துபோனமையால், மிகவும் வருத்தமுற்றுப் பலவாறு புலம்பி, அன்பின் மிகுதியால் அக்குழந்தையின் உடம்பையெடுத்து மார்போடணைத்துக்கொண்டு, தன்பால் அன்புள்ளவர்களுடைய வீடுதோறும் சென்று, "இக்குழந் தையைப் பிழைப்பிப்பதற்குரிய மருந்து ஏதேனும் உங்க ளிடம் இருக்குமாயின் அதனைக் கொடுத்துப் பாதுகாக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டு பரிதபித்துத் திரிவா ளாயினள்; அது தெரிந்த பௌத்த பிக்ஷு ஒருவர் மனமிரங்கி

அவளைப் பார்த்து, "நீ கேட்கிற மருந்து இங்கே கிடைப்பதன்று; அதை வைத்துக்கொண்டிருக்கிற ஒருவரைமட்டும் யான் அறிவேன்" என்றார். கிருசாகௌதமி, "அவர் யார்? விரைவிற் சொல்லவேண்டும்" என்ன அந்தப் பிக்ஷு, "அவர் மிகப் புகழ்பெற்றவராகிய புத்தரேயாவர்; அவரிடம் போவாய்" என்று சொன்னார்.

அவள் புத்தரை யடைந்து வணங்கி, "ஸ்வாமீ, இறந்த குழந்தையைப் பிழைப்பிக்கும் மருந்தை அறிந்ததுண்டோ?" என்றாள். புத்தர் "அதனை அறிவேன்" என்ன, அவள், "நீர் எந்தப் பச்சிலை, எந்த வேர் அல்லது வேறெவை கொண்டுவரும்படி கட்டளையிட்டாலும் அவற்றையெல்லாம் விரைவிற் கொண்டுவருவேன்" என்றாள். அதற்குப் புத்தர், "ஒரு பிடி கடுகு வேண்டும்" என்றார். அவள் அது கொண்டுவருதற்கு விரைந்து போகா நிற்கையில், அவர் அவளை யழைத்து, "ஒருவரும் இறவாத வீட்டிலிருந்து வாங்கிவரவேண்டும்" என்று சொன்னார்; அவள் நன்றென்று சொல்லிவிட்டுக் குழந்தையை ஏந்தி அணைத்துக்கொண்டு ஒரு வீட்டு வாயிலிற்சென்று, "ஒரு பிடி கடுகு வேண்டும்" என்று கேட்டாள். அதைக்கேட்ட அவ்வீட்டார் கொணர்ந்து, "பெற்றுக்கொள்" என்று சொல்ல, அவள் அதை வாங்காமல் நின்று, "உங்கள் வீட்டில் இதுவரையில் யாரேனும் இறந்ததுண்டோ? இறந்திருப்பின் எனக்கு இது வேண்டுவதில்லை" என்றாள்; அதற்கு அவர்கள் அவளைப்பார்த்து நகைத்து, "நீ பித்துக்கொண்டனையோ? உயிரோடிருப்பவர்கள் மிகச் சிலர்; இறந்தவர்கள் மிகப் பலர்; அங்ஙனமிருப்பவர்களும் பின்பு இறத்தற்குரியவர்களே" என்று சொன்னார்கள். அவள் இவ்வளவில் நில்லாது ஒவ்வொரு வீட்டிலுஞ் சென்று விசாரித்தபொழுது, "என் பிள்ளை இறந்தான்; என் மனைவி இறந்தாள்; என் கணவன் இறந்தான்; என்னுடைய அடிமைக்காரன் இறந்துவிட்டான்" என்று இப்படியே பலவாறாக ஒவ்வொருவரும் கூறுவாராயினர். இவற்றை யெல்லாங்கேட்ட கிருசாகௌதமி

பின்னும் பலமுறை யலேந்தும் ஒருவரும் இறவாத வீடொன்றும் எங்கும் காணப்படாமையால், பிறந்தோர் யாரும் இறத்தற்குரியாரென்று தெளிந்தவளாகிப் புத்திர சோகம் ஒழிந்து, மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, பிணத்தை மயானத்திற் சேர்த்து, அங்கே செய்யவேண்டிய வற்றைச் செய்துவிட்டுப் புத்தரை அடைந்துவணங்கினுள். புத்தர், “நான் சொல்லியவாறு கடுகு கொண்டுவரப்பட்டதோ?” என்று கேட்ப, அவள் நிகழ்ந்தவற்றைக் கூறினள். அப்பொழுது புத்தர், “இவ்வுலகில் ஒன்றும் நிலேயுள்ளதன்று” என்னும் உண்மைப்பொருளே அவளுக்கு நன்கு விளங்கப் போதித்தார்; அதனைக்கேட்ட அவள் மனமாசு நீங்கிப் பௌத்த மதத்தைச் சார்ந்து பிறப்பறுப்பதற்குரிய வழியில் நின்று நோற்பாளாயினள்.

மற்ருெருகாலத்தில், மிக்க உலோப குணமுடையானெருவன், ஒருவருக்கும் ஒன்றுங் கொடாமல் தான்மட்டும் இன்ப நுகர்தலேயே பெரும்பயனுக எண்ணிச் சீவித்து வருகிருனென்று கேள்வியுற்ற புத்தர் இரக்கமுற்று, அவனிடத்துள்ள உலோபமென்னும் பெருங்குற்றத்தைப் போக்கி, அவனே நல்வழிப்படுத்த நினேந்து தாமாகவே அவனிடஞ் சென்ருர்; அப்பொழுது வேறிடத்திலிருந்தால் பிறர் தன்னேக் கண்டுபிடித்துக் கேட்பார்களென்று அஞ்சி, அவன் தன் மனேவியோடு மச்சில் ஏறி, அங்கே ஒருவருக்குந் தெரியாமல் தனியே அப்பஞ் சுட்டுத் தின்றுகொண்டிருந்தான்; புத்தரும் அம்மச்சிலேறி அவன் தின்னும் அப்பத்தைப் பிச்சையாக இரந்து பெற்றுக்கொண்டு தருமோபதேசஞ்செய்து அவனுடைய குற்றங்களேயெல்லாம் மாற்றி அவனே உய்வித்தார்.

இவ்வாறு ஞானம் உதயமானபின் நாற்பத்தைந்து வருஷகாலம் புத்தர் தருமோபதேசம் செய்து பல்லாயிரம் பெயர்களேத் தம்மதத்திற் சேர்த்துக்கொண்டனர். அவர் செய்துள்ள உபதேசங்களேயும், அவர் கொண்ட கொள்கைகளேயும் பௌத்தர்கள் பல நூல்களில் தொகுத்து வைத்

திருக்கின்றனர். அவற்றுள் சில துறவறம் பெற்றவர்களும் சில இல்லறத்தில் ஒழுகுகின்றவர்களும் தனித்தனியே அனுஷ்டிக்கவேண்டிய விதிகளை வரையறுத்துக் கூறும்.

புத்தர் உபதேசித்த இல்லறத்தார்க்குரிய நியமங்களிற் சில வருமாறு:—

1. தாய் தந்தையர்க்கும் மக்களுக்குமுரிய ஒழுக்கங்கள்:— தாய்தந்தையர் மக்களைத் தீச்செயல்களிலிருந்து விலக்க வேண்டும்; நற்செய்கைகளை அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும்; அவர்களுக்குத் தக்க பதிபத்தினிகளைத் தேடிக் கொடுக்கவேண்டும்; உரிய தாயபாகத்தை அவரவருக்குக் கொடுக்கவேண்டும். மக்கள் தங்களைப் பாதுகாத்த தாய் தந்தைகளைத் தாங்கள் பாதுகாப்பதாகவும், குடும்ப சம்பந்தமாகச் செய்யவேண்டிய கடமைகளை யெல்லாம் செய்வதாகவும், குடும்பத்தின் செல்வங்களைப் பாதுகாப்பதாகவும், குடும்பப் பொருளைப் பெறுவதற்குத் தக்கவர்களாகத் தங்களைச் செய்துகொள்ளுவதாகவும், தாய் தந்தையர் மரணத்தை யடைந்தபின்பு அவர்களை நினைவில் வைத்துப் பாராட்டிவருவதாகவும் நிச்சயித்துத் தங்கள் கடமைகளைச் செய்யவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

2. குரு சிஷ்யர்களுக்குரிய ஒழுக்கங்கள்:—ஆசாரியன் சிஷ்யர்களை நல்வழியிற் பயிற்றுதலாலும், ஞானத்தைக் கைவிடாமலிருக்கும்படி உபதேசித்தலாலும், சாஸ்திரங்களிலும் காவியங்களிலும் ஞானத்தை உண்டாக்குதலாலும், அவர்களைப்பற்றி அவர்களுடைய மித்திரர்களுக்கும் ஸகபாடிகளுக்கும் தன்னுடைய நல்ல அபிப்பிராயத்தை வெளியிடுதலாலும், அபாயத்திலிருந்து பாதுகாப்பதினாலும் அபிமானிக்கவேண்டியவனாக இருக்கிறான். சிஷ்யன் ஆசாரியர்களை, அவர்களுடைய எதிரில் நிற்றலாலும், அவர்களுக்குப் பணிவிடை செய்தலாலும், வணக்கத்தோடிருத்தலாலும், அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்தலாலும், அவர்களுடைய உபதேசத்தைக் கடைப்பிடித்தலாலும் கௌரவப்படுத்தவேண்டும்.

3. பதிபத்தினிக்குரிய ஒழுக்கங்கள்:—பதியானவன் பத்தினியை அன்புடனும் கௌரவத்தோடும் நடத்துவதனுலும், வீட்டைவிட்டுப் பிரியாமலிருத்தலினுலும், பிறர் கௌரவிக்கும்படி செய்தலினுலும், அவளுக்குத் தகுந்த ஆபரணங்களையும் உடையையும் கொடுப்பதனுலும் பாராட்டிக் கொண்டு வருவதற்குரியவனுக இருக்கின்முன். பத்தினியானவள், பதியினிடத்தில் தன் அன்பையும் கௌரவத்தையும் செலுத்துவாளானுல், வீட்டு வேலைகளைத் திறமையுடன் ஒழுங்காக நடத்திக்கொண்டு போகவேண்டும்; சுற்றங்களுக்கும் நட்பினர்க்கும் நன்முக விருந்தளிக்கவேண்டும்; கற்புடையவளாக இருத்தல்வேண்டும்; வீட்டுக்குரிய செலவை மிதமாகச் செய்யவேண்டும்; தான் செய்யும் வேலைகளிலெல்லாம் மறவாமையும் திறமையும் உள்ளவளாகக் காணப்படவேண்டும்.

4. நட்பினர் ஒருவரிடத்தில் ஒருவர் நடந்துகொள்ளவேண்டிய ஒழுக்கங்கள்:—சீலவானுன மனிதன், தன் மித்திரர்கட்கு நன்கொடை கொடுப்பதனுலும், கௌரவித்துப் பேசுவதனுலும், அவர்களுடைய நன்மையை அபிவிருத்தி செய்வதனுலும், தன்னுடைய பாக்கியத்தை அவர்களோடு பகிர்ந்துகொள்ளுவதனுலும் உபகரித்தற்குரியவனுக இருக்கிருன். அவர்கள் அவன் அஜாக்கிரதையாக இருக்கும் பொழுது அவனைப் பாதுகாப்பதனுலும், அவன் பொருளைப் பாதுகாப்பதனுலும், அவனுக்கு அபாயம் நேரிட்டபொழுது மறைவிடத்தைக் கொடுத்துப் பாதுகாப்பதனுலும், அவனுக்குக் கஷ்டம் நேரிடும்பொழுது அவனைக் கைவிடாமையினுலும், அவனுடைய குடும்பத்தாரிடத்தில் அன்பைச் செலுத்துதலினுலும் அவனிடத்தில் தங்களுக்குள்ள சிநேகத்தைப் பாராட்டவேண்டும்.

5. யஜமானனுக்கும் வேலைக்காரர்களுக்குமுரிய ஒழுக்கங்கள்:—யஜமானன், வேலைக்காரர்களுடைய நன்மையை அவரவர்களுடைய சக்திக்கு இயன்ற தொழில்களை அவரவர்களுக்கு விதிப்பதனுலும், அவரவர்களுக்குத் தக்க உணவை

யும் கூலியையும் கொடுப்பதனுலும், அவர்கள் வியாதியை அடைவாராயின் மருந்து உணவு முதலியன கொடுத்து உபசரிப்பதனுலும், (இருந்தால்) சுவையுள்ள நல்ல உணவுகளைக் கொடுத்து அவர்களை உண்பித்தலினுலும், விடுமுறை நாட்களை அவர்களுக்கு அப்போதைக்கப்போது கொடுத்தலினுலும் அபிவிருத்திசெய்யவேண்டியவனுயிருக்கிருன். அவர்கள், காலம்பெற எழுந்திருப்பதனுலும், யஜமானன் தூங்கினபின் தாம் தூங்குதற்குச் செல்லுதலாலும், கொடுத்ததைப் பெற்றுக்கொண்டு திருப்தியடைவதனுலும், யாதொரு மனக்குறைவுமின்றி ஊக்கத்துடன் வேலை செய்தலினுலும், அவனிடத்தும் அவனைப்பற்றிய பிறரிடத்தும் கௌரவமாக வசனித்தலினுலும் தங்களுக்கு யஜமானனிடத்துள்ள பக்தியைக் காட்டவேண்டியவர்களாக இருக்கிருர்கள்.

6. இல்லறத்தார்க்கும் பிக்ஷுக்களுக்குமுரிய ஒழுக்கங்கள்:— சீலவானுன உபாஸகன் (இல்லறத்திலிருந்து பௌத்த தருமங்களை அனுஷ்டிப்பவன்) பிக்ஷுக்களை வாக்கினுல் அன்பைச்செலுத்தலாலும், காயத்தினுல் அன்பைச் செலுத்தலாலும், எண்ணத்தினுல் அன்பைச் செலுத்துதலாலும், கண்டவுடன் நல்வரவு கூறி அழைத்து ஏற்றுக்கொள்வதனுலும், அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுப்பதனுலும் உபசரிக்க வேண்டியவனுக இருக்கிருன். அவர்கள் உபாஸகனிடத்தில் தங்களுக்குள்ள பிரீதியை அதர்மம் செய்யாதபடிக்கும், தர்மம் செய்யும்படிக்கும் உபதேசிப்பதனுலும், அன்பைச் செலுத்துவதனுலும், மதச்சார்புள்ள நூற்பொருள்களை உபதேசிப்பதனுலும், அவனுடைய சந்தேகங்களைத் தீர்த்தலினுலும், அவனுக்கு வீட்டுநெறியைக் காட்டிக் கொடுப்பதனுலும் பாராட்டிக்கொண்டு வரவேண்டும்.

இவ்வாறு இல்லறத்தாருக்குக் கூறப்பட்டனபோலவே துறவறத்தாருக்கும் பல ஒழுக்கங்களைப் புத்தர் வகுத்தருளினர். இவ்வாறு அவர் எண்பது பிராயம் இப்பூவுலகில் வாழ்ந்து வந்தனர்.

அக்காலத்தில் அவருக்குத் தேக அசௌக்கியம் உண்டாயிற்று. அப்பால் அவர் ஒரு மாத்தடியிற் சமாதியிலிருந்து தாம் சீவித்திருக்கவேண்டிய காலம் இவ்வளவென்பதை வரையறுத்தனர்; அப்பொழுது பல உற்பாதங்கள் நிகழ்ந்தன; பின்பு புத்தர் சமாதியினின்றும் நீங்கி, முன்னின்றுரை நோக்கி, "என்னுடைய வாழ்நாள் முழுவதும் நீங்கிவிட்டது. இனிமேல் சமாதியின் ஆற்றலாலேயே வாழ்வேன்; என்னுடம்பு வருதல் போதல் இரண்டிற்குங் காரணமாயிருத்தலை யொழிந்து நொறுங்கிய தேர்போன்றுள்ளது; இனிப் பரிபூரண நிவ்ருத்தியைப் பெற்று முட்டையினின்று வெளிப்படுங் குஞ்சுபோலத் தடையின்றிச் செல்வேன்" என்றார்; அப்பொழுது பூமி நடுங்கியது.

பின்பு அவர் அவ்விடத்தை விட்டு நீங்கி, அடிக்கடி இடையிடையே தங்கிக் குசீநகரத்தை யடைந்து, அதற்கு அருகே ஓடுவதான ஹிரண்யவதி யென்னும் ஆற்றின் கரையைச் சார்ந்து இளைப்பாறிவிட்டுத் தம் சிஷ்யர்களுள் ஒருவரான ஆனந்தனைப் பார்த்து, "அந்த இரட்டைச் சாலமரத்தின் நடுவிடத்தைப் பெருக்கி நீர் தெளித்துப் பாயையும் விரிப்பாயாக; நான் இன்று நடுயாமத்தே நிருவாணமடைவேன்" என்றார். அவர்கள் அவ்வண்ணமே செய்ய, புத்தர் அந்த இடத்தை யடைந்து, தலையை வடக்கே வைத்து, வலக்கையைத் தலையணையாகக்கொண்டு, மேற்றிசையை நோக்கி வலப்புறமாக ஒருக்கணித்துக் கால்மேற் காலைக் கிடத்திச் சிங்கவேறுபோற் படுத்துக்கொண்டனர். அந்நிலைமையிலிருந்தபடியே தம் சிஷ்யர்கள் கைக்கொண்டு ஒழுகவேண்டிய விதிகள் சிலவற்றை அப்பொழுது சொன்னார்.

அவருக்கு நிர்வாண காலம் நெருங்கியதை அறிந்த அங்குள்ளவர்கள் பெரிதும் வருந்தினார்கள். அப்பொழுது புத்தர் அவர்களை நோக்கி முகமலர்ச்சியோடு, "நீங்கள் துன்பமடையன்மின்; இது மகிழ்தற்குரிய காலம்; அடையக் கருதிப் பல நாளாக முயன்றுவந்த பெரும் பேற்றை இப்

பொழுது அடையப்போகிறேன்; துக்ககரமாகிய ஐம்புலச் சிறையினின்றும் நீங்கி என்றும் அழியாத இன்பமயமான நிருவாணத்தை அடையப் போகிறேன்" என்றனர்; இவ் வாறு புத்தர் இன்னும் பலவும் உபதேசித்துப் பின்பு எல்லாப் பற்றையுமொழித்து நிருவாணமடைந்தார்.

புத்தர் நிருவாணமடைந்த காலம் ஈசான சகாப்தம், 148-ஆம் வருஷத்தில் வைகாசி மாதத்திற் பூர்ணிமையும் விசாக நக்ஷத்திரமுங்கூடிய செவ்வாய்க்கிழமை யென்பர்.

## 6. கலைகள்

கலைகளுக் கெல்லாம் தெய்வமாக விளங்கும் தேவியைக் கலைமகளென்று வழங்குகின்றோம்.

"ஆய கலைக ளறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கு மென்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்"

என்ற செய்யுளால் கலைகள் அறுபத்துநான்கென்பதனையும் அவற்றைக் கலைமகள் அருளிச்செய்பவ ளென்பதையும் அறியலாம்; அறுபத்து நான்கு கலைகளையன்றி அவற்றைப் பின்பற்றிய கலைகளும் உள்ளன என்பர்.

அந்தணருக்குரிய கலைகள் இவை, மன்னருக்குரிய கலைகள் இவை, வணிகருக்குரிய கலைகள் இவை, வேளாளருக்குரிய கலைகள் இவை, மகளிருக்குரியன இவை, பொது இவையென அவற்றுள் வேறுபாடுகள் உண்டு. தமிழிலுள்ள பழைய நூல்களில் தமிழ்நாட்டிலும் பிற நாட்டிலும் இருந்த கலைகளைப் பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. அத்தகைய கலைகளிற் பலவற்றிற்குரிய நூல்கள் அக்காலத்தில் தமிழில் இருந்தன; இக்காலத்தும் சில உள்ளன.

தமிழ் நாட்டுக் கலைகளில் மிகச் சிறப்பாக இருந்து வந்தவை இசையும் நாடகமுமாம். பழைய நூல்களிற் காணப்படுகின்ற பலவகை இசைக் கருவிகளைப் பற்றிய செய்திகள் இக்காலத்தில் எந்த வகையாலும் அறியமுடியாமல் இருக்

கின்றன. தோற்கருவி வகைகளில் அளவிறந்தனவும், யாழ்வகைகளிற் பலவும், தாளம் முதலியவற்றில் அவ்வாறே பலவும் இருந்தனவென்று தெரிகின்றது. இசையானது மூன்று தமிழ்களுள் ஒன்ருகக் கூறப்படுவதிலிருந்தே அக்கலை மிக விரிவுடையதென்று தோற்றுகின்றதன்றே? இசைச் சங்கமொன்று பண்டைக்காலத்தில் இருந்ததென்றும், அதில் பல புலவர்கள் இருந்து இசைப் பயிற்சியும் ஆராய்ச்சியும் செய்து வந்தார்களென்றும், இசையைப்பற்றிய பல நூல்களை அவர்கள் இயற்றியுள்ளாரென்றும் பரிபாடல், சிலப்பதிகாரம் முதலிய பழைய நூல்கள் அறிவிக்கின்றன. பிற்காலத்திலும் அரசர்களிடத்தும் பிரபுக்களிடத்தும் சங்கீத வித்துவான்கள் பலர் இருந்து வந்தார்கள்.

நாடகக்கலையையும் தமிழர்கள் நன்கு போற்றி வந்தார்களென்பதை அது முத்தமிழிலொன்ருக வைக்கப்பட்டிருப்பதால் அறியலாகும். நாடகம் பலவகைப் படுதலையும், அதற்குரியவர்களுடைய இலக்கணங்களையும், பிறவற்றையும் விரிவாகக்கூறும் நூல்கள் பல முன்பு இருந்தன; இப்பொழுது அழிந்துவிட்டன. சிலப்பதிகாரத்தால் மட்டும் சில செய்திகள் தெரியவருகின்றன.

ஓவியக்கலை அல்லது சித்திரசாஸ்திரம் மிக உயர்ந்த நிலையில் இருந்தது.

"ஓவியச் செந்நூ லுரைநூற் கிடக்கையும்"

என்ற மணிமேகலையடி ஓவிய சம்பந்தமான நூல் இருந்தமையை அறிவிக்கின்றது. சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார், ஓவிய நூலென ஒன்றைக் கூறி அதிலிருந்து சில விஷயங்களை எடுத்துக் காட்டுகின்ருர். ஓவியம் வல்லார் பலர் தமிழ் நாட்டில் நிறைந்திருந்தனர்; மாடங்களில் அழகிய சித்திரங்கள் எழுதப்பட்டிருந்தன:

"மாடக்குச் சித்திரமும்"

என்பது மாடங்களுக்கு அழகு செய்வது சித்திரமென்ற தமிழ் நாட்டார் கொள்கையைக் காட்டுகின்றது.

மணிமேகலையில் மாளிகைகளிற் பலவகை ஓவியங்கள் காண்போர் கண்களைக் கவர்ந்து நின்றமை கூறப்படுகின்றது. ஆடைகளிற் சித்திரங்களை எழுதும் வழக்கம் பழமையானது; படமென்னும் பெயர் இக்காரணத்தாலேயே வந்தது (படம்-வஸ்திரம்). ஒத்த அன்பினளாகிய தலைவியொருத்தியைப் பெற முடியாமையால் வருந்தும் தலைவன் தனக்கும் அவளுக்கும் உள்ள அன்பை வெளிப்படுத்த எண்ணிப் பனைமடலாற் செய்த குதிரை யொன்றில் ஏறி வருவானென்றும் அப்பொழுது தலைவியைப்போன்ற படமொன்றை யெழுதி அதில் வைத்துக்கொண்டு வருவானென்றும் அகப்பொருள் நூல்கள் தெரிவிக்கின்றன. அந்தப் படத்தைக் கண்ட ஊரார் இன்ன மங்கையிடம் இவன் அன்பு பூண்டுள்ளானென்று ஐயமற அறிவாராம். இச் செய்தியால் ஒருவரைப் பார்த்து அவரைப்போலவே சித்திரம் எழுதும் வன்மை அக்காலத்தில் இருந்ததென்று அறிந்துகொள்ளலாம். ஓவியம் எழுதுபவர்கள் முதலில் தாம் கருதியிருக்கும் உருவத்தைக் குறித்துக்கொண்டு பின்பு வர்ணங்களை யமைத்து அதனை அழகுபடுத்துவார்கள். அவ்வாறு முதலில் எழுதப்படுவது புனையா ஓவியம் என்று வழங்கும். திரைச்சீலைகளில் சித்திரங்கள் அமைக்கப் பெற்றிருந்தன; பாயற்கட்டிலைச் சுற்றிக் கட்டப்படும் திரைகளிலும் படுக்கையின்மேல் விரிக்கும் துணிகளிலும் மேற்கட்டியிலும் சித்திரங்கள் இருந்தன; ஆடைகளிற் சித்திரங்கள் எழுதப்பட்டன; நெய்யும்பொழுதே ஆடைகளிற் சித்திரங்களை அமைத்துவந்தார்கள். இயற்கை யெழிலை அவ்வாறே எடுத்துக்காட்டும் சித்திரப் படங்களை அமைக்குந் திறனைத் தமிழ் நாட்டார் அறிந்திருந்தனர்.

சிற்பக்கலையில் வல்லுநர்கள் மண்ணினாலும், செம்பு, பொன் முதலிய உலோகங்களாலும், கல்லாலும், சுண்ணம்பினாலும், மரத்தினாலும், தந்தத்தினாலும் பலவகைப் பாவைகள் முதலியவற்றை அமைத்தார்கள். மண்ணாற் பாவை அமைப்பவர் மண்ணீட்டாளரெனப்பட்டனர். தந்தத்தி

ஞல் தேர் முதலியன அமைக்கப்பட்டன. கல்லிலமைந்த சிற்பங்களில் தமிழ்நாடு மிகச் சிறந்ததென்பதை யார்தாம் மறுப்பார்? பிற்காலத்திற் பல்லவர்கள் சோழர்கள் முதலியவர்களுடைய அரசாட்சியில் தமிழ்நாட்டுக் கோயில்கள் சிற்பத்திறன் அமையக் கட்டப்பட்டன. அக்காலத்தில் பல சிற்பிகள் அவ்வரசர்களால் முற்றூட்டுப்பெற்று வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய கைவன்மையை இன்றும் வெளிப்படுத்திக்கொண்டு விளங்கும் கோயில்களைக் காணும் பிறநாட்டார் வியப்படைகின்றூர்கள். சோழநாட்டுச் சிற்பிகள், 'திருவலஞ்சுழிப் பல்கணி, திருவீழிமிழலை வௌவானத்தி மண்டபம், ஆவுடையார்கோயிற் கொடுங்கை என்னும் மூன்றைப்போலச் செய்ய இயலா; மற்றவற்றைப்போலச் செய்வோம்' எனவும், கொங்கு நாட்டில், 'தாரமங்கலம், தாடிக்கொம்பென்னும் இரண்டிடங்களிலுள்ள சிற்பங்களைப் போல இயற்ற எங்களால் இயலாது' எனவும் உடன்படிக்கை யெழுதிக்கொடுக்கும் வழக்கமுண்டென்னும் கர்ணபரம்பரைச் செய்திகள் அவ்விடங்களில் உள்ள சிற்பத்தின் உயர்வை வெளிப்படுத்துகின்றன.

மரத்தினுலும் உலோகத்தினுலும் பலவகை வண்டிகள் செய்யப்பெற்றன. அவை வையம், பாண்டில், தேர் முதலிய பலவகையானவை. தாமரை மலரைப்போன்ற வண்டியொன்றின் வருணனை பெருங்கதையிற் காணப்படுகிறது.

பொன்னுலும் வெள்ளியினுலும் நவமணிகளாலும் செய்யப்பெற்ற பலவகை அணிகள் அக்காலத்தில் அணியப்பட்டு வந்தன. அவற்றை இயற்றும் பொற்கொல்லர்கள் தங்களுக்குரிய நூலில் நல்ல தேர்ச்சியுடையவர்களாக இருந்தார்கள்; நவமணிகளைப்பற்றிய இலக்கணங்களையும் நன்கு அறிந்திருந்தனர். அவற்றிற்குரிய நூல்கள் பல இருந்தன. சிலப்பதிகாரத்திலும் அதன் உரையிலுள்ள மேற்கோட் சூத்திரங்களிலும் நவமணிகளைப்பற்றிய வரலாறுகள் பல கூறப்படுகின்றன. கல்லாடத்திலும், திருவிளையாடற் புராணங்களிலும்,

பழைய சாஸனங்களிலும் நவமணிகளுக்குரிய குணங்களும் குற்றங்களும் சொல்லப்படுகின்றன.

நெய்யுந்தொழிலிலும் தமிழ்நாட்டார் சிறப்பெய்தியிருந்தனர். பருத்தியினாலும், எலிமயிர் ஆட்டுமயிர் முதலியவற்றாலும், பட்டினாலும் ஆடைகள் நெய்யப்பெற்று வந்தன. கைம்மை நோன்பு நோற்கும் பெண்டிரும் பிறரும் பஞ்சினை நூற்று வந்தனர்.

ஆடைகளிற் பலவகை உண்டு. நீல நிறம் முதலிய பல நிறக் கச்சுகளும், ஆடைகளும், பூத்தொழில் அமைந்த கலிங்கங்களும், முடிச்சுக்களையும் மணிகளையும் விளிம்பிலேயுடைய பட்டுடைகளும் இருந்தன.

பாம்பின் சட்டையையும் மூங்கிலில் உரித்த தோலையும் பாலாவியையும் புகையையும் ஆடைகளுக்கு உவமையாக நல்லிசைப் புலவர்கள் கூறியிருப்பதனால் மிக மெல்லிய ஆடைகளைத் தமிழ்நாட்டார் அணிந்து வந்தனரென்பது வெளியாகின்றது.

மாலைகளைத் தொடுப்பதிற் பலவகையான விசித்திர முறைகளைத் தமிழ்நூல்கள் தெரிவிக்கின்றன. "மலராய்ந்து தொடுத்தல்" என்று சீத்தலைச்சாத்தனாரும், "கடிமலர்ச் சிப்பம்" என்று கோங்குவேளிரும் அத்தொழிலைக் குறிக்கின்றனர். இண்டை, கண்ணி, தார் முதலிய பலவகைகள் மாலைகளில் உண்டு.

உணவு சமைக்கும் முறைகளைக் கூறும் நூல் மடைநூல் எனப்படும். அதைப்பற்றிய செய்திகள் சிறுபாணாற்றுப்படை, மணிமேகலை, பெருங்கதை முதலிய நூல்களிற் கூறப்படுகின்றன. பலவகை உணவு வகைகள் தமிழ் நூல்களிற் காணப்படுகின்றன. காலத்திற்கு ஏற்ற உணவுகளையும் சாதி, நிலம் முதலியவற்றிற்கேற்ற உணவுகளையும் அந்நூல்களால் அறிந்துகொள்ளலாம். சீவக சிந்தாமணியில் முத்தியிலம்பகத்தில் இருதுநுகர்வென்னும் பகுதியில் சில பெரும்பொழுதிற்குரிய உணவுவகைகள் கூறப்பட்டுள்ளன.

சோதிடம், நிமித்தம்பார்த்தல் முதலிய கலைகள் தமிழில் இருந்தன. அக்கலைத் திறனுடையார் காலக்கணிதரென்றும் கணிகளென்றும் கூறப்படுவார்கள். கணிதத்திற் சிறந்த சிலர் சங்கத்தே யிருந்த நல்லிசைச் சான்றோர்களுள்ளும் காணப்படுகின்றனர். அரசன் போர்புரியச் செல்லும் பொழுது நற்சொல், காக்கை கரைதல் முதலியவற்றால் நிமித்தம் பார்ப்பது வழக்கம். அகத்திணையுள்ளும் பல வகை நிமித்தங்கள் சொல்லப்படுகின்றன. விரிச்சி (நற் சொல்), தோள், கண் முதலியன துடித்தல், காக்கை கரை தல், பல்லி ஒலித்தல் முதலிய நிமித்தங்கள் உண்டு. கட்டு விச்சி யென்னும் வெறியாடுபவளாற் கட்டுப் பார்த்தலும் வெறியாடுபவனாகிய வேலனாற் கழங்கு பார்த்தலுமாகிய நிமித்தங்கள் தொல்காப்பியத்திற் சொல்லப்பட்டுள்ளன.

வானசாஸ்திரப் பயிற்சியும் அக்காலத்தே இருந்தது. சந்திரன் பரிவேடங் கொள்ளுங் காலத்தில் குறிஞ்சி நிலத் தார் மணம் செய்வார்கள். நெடுநல்வாடையில், கட்டிலுக்கு மேலே கட்டியிருக்கும் மேற்கட்டியில் பன்னிரண்டு ராசி களும் எழுதப்பட்டிருந்தனவென்னும் செய்தி உள்ளது; நட் சத்திரங்களின் பெயர்களிற் சில சங்கநூல்களில் வந்துள்ளன. அரசர் முதலியவர்கள் பிறந்த நட்சத்திரத்தைக் கொண் டாடும் வழக்கம் முன்பே இருந்து வந்தது. கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ் சேரலிரும்பொறை இறக்குங் காலத்தைக் கூடலூர்கிழார் ஏழு நாட்களுக்கு முன் ஒரு விண்மீன் விழுந்தமையால் அறிந்தனர்; அவன் துஞ்சிய காலத்து, "இதனை முன்னரே அறிந்தேன்" என்று வருந்தி ஒரு செய்யுள் கூறியுள்ளார். அதில் மீன் விழுந்தநாளில் இருந்த நட்சத்திரங்களின் நிலை காணப்படுகிறது (புற நானூறு, 229). இவற்றால் நட்சத்திரங்களைப்பற்றிய அறிவு இருந்தமை உணரப்படும்.

மருத்துவ நூல்களும் மருத்துவம் வல்ல நல்லிசைப் புலவர் கள் பலரும் இருந்ததைப் பழைய நூல்களால் அறியலாம். மூலிகைகளைப்பற்றிய ஆராய்ச்சி விரிவுற்றிருந்தது. தமிழ்

வைத்தியம் சித்தவைத்தியமென்னும் பெயரால் இக்காலத்து வழங்கப்படுகிறது. இப்பொழுதுள்ள நூல்கள் பண்டைக் காலத்தில் தமிழ்நாட்டினர் பயின்றுவந்த முறைகளை அறிந்த பிற்காலத்தார் எழுதியவை. அவை பெருஞ் சிறப்புடையன. ஆயுள்வேதத்தைப்பற்றிய செய்தி சிலப் பதிகாரத்தில் உள்ளது.

நகரமைப்பு, வீடுகட்டுதல் முதலியவற்றைப்பற்றிய சிறந்த அறிவும் தமிழ்நாட்டார்க்கு இருந்துவந்தது. நகரங்களில் உள்ள வீதிகள் ஒழுங்காக அமைந்திருந்தன. பல கடைகள் வகைவகையாக இருந்தன. சந்தி, சதுக்கம், அம்பலம், மன்றம், பொதியில் முதலிய இடங்கள் இருந்தன. அசுத்த நீரை ஊருக்கு வெளியே போக்குதற்குரிய கரந்துபடை அல்லது கரந்துறை (underground drainage) யென்னும் ஜலதாரைகள் வீதியின் நடுவிற் கீழே இருந்தன. கற்களால் அவை மூடப்பட்டிருக்கும். வேண்டின் நீரை நிரப்பியும் வேண்டாவிடிற் போக்கியும் விடுதற்குரிய வாவிகள் இருந் தன. அவை எந்திரவாவி யெனவும், இலவந்திகை யெனவும் கூறப்படும்; மாலை நேரங்களிலும் வேனிற்காலத்திலும் புகுந்து மகிழ்தற்குரிய பல சோலைகள் இருந்தன; செய் குன்றங்களும் உண்டு. இவற்றையன்றி,

"எந்திரக் கிணறு மிடுங்கற் குன்றமும்
வந்துவீ ழருவியு மலர்ப்பூம் பந்தரும்
பரப்புநீர்ப் பொய்கையுங் கரப்புநீர்க் கேணியும்
ஒளித்துறை யிடங்களும் பளிக்கறைப் பள்ளியும்"

(மணிமேகலை)

ஆகிய பல இடவகைகளும் உண்டு. அரசர் முதலியவர்களுக் குத் தனித்தனியே வீதிகள் இருந்தன. பலவகைத் தொழில் செய்வார்க்குரிய வீதிகள் முறைப்படி அமைக்கப்பட்டி ருந்தன. மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களில் மதுரை, காவிரிப்பூம் பட்டினம், வஞ்சிமாநகர், காஞ்சி முதலிய நகர அமைப்புக்

களைப்பற்றிச் சொல்லும் பகுதிகளால் அக்காலத்தில் நகரங்கள் அமைக்கப்பட்ட முறைகளையும், அவற்றிலிருந்த தெருக்கள், இடங்கள் முதலியவற்றைப்பற்றிய பல செய்திகளையும் அறியலாம். அப்பகுதிகள் படிக்கப்படிக்க இன்பத்தை அளிப்பனவாகும்.

மதுரை நகரத்திலும் காவிரிப்பூம்பட்டினத்திலும் நாளங்காடி, அல்லங்காடி யென்ற இருவகைக் கடைத்தெருக்கள் இருந்தன. நாளங்காடி காலைக்கடை; அல்லங்காடி மாலைக்கடை. அவ்விரு நகரங்களிலும் பலவகைக் கோயில்கள் இருந்தன. காவிரிப்பூம்பட்டினத்திற் பண்டசாலைகள் பல உண்டு.

அரசர்கள் வாழும் நகரங்களில் அகழியும் மதிலும் இருந்தன. மதிலின்மேற் பகைவர்களைத் தடுத்தற்குப் பலவகைப் பொறிகள் அமைக்கப்பெற்றிருந்தன. கோட்டை வாயில்களும் ஊருக்குள் பிறரறியாதவாறு வெளியிலிருந்து புகுதற்குரிய நுழைவழிகளும் இருந்தன. காஞ்சிநகர் தாமரைமலர்போல அமைந்துள்ளதென்று பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது.

“மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையுஞ் சீரூர் பூவின்
இதழகத் தனைய தெருவ மிதழகத்
தரும்பொகுட் டனையதே யண்ணல் கோயில்”

(பரிபாடல்)

என்பதில் மதுரையும் அவ்வாறு கூறப்பட்டுள்ளது. பெருங்கதையில் இராசகிரிய மென்னும் நகரத்தைத் தாமரை மலராகவும் பலவகைத் தெருக்களைப் புறவிதழ் புல்லிதழ் அகவிதழ் முதலியவைகளாகவும் அரசன் அரண்மனையை நடுவிலே யமைந்த கர்ணிகையாகவும் ஆசிரியர் உருவகஞ்செய்துள்ளார். இதனால் நகரங்கள் அழகும் ஒழுங்கும் சிறந்த வீதிகளாலமைந்திருந்தனவென்பது உணரப்படுகின்றதன்றோ?

வீடுகளை அமைப்பதில் சிலமுறைகள் அக்காலத்தில் உண்டு.

"பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து"

(நெடுநல்வாடை)

என்பதனால் அவரவர்களுக்கேற்றபடி மனைகள் அமைக்கும் வழக்கம் இருந்ததென்பதை அறிந்துகொள்ளலாம். வீடுகளைக் கட்டுவதற்காக அஸ்திவாரம்போடும் காலம் நெடுநல்வாடையிற் காணப்படுகின்றது. கோபுரங்களும், வாயின் மாடங்களும், நிலாமுற்றங்களும், தெற்றிகளும், அறைகளும் அமைக்கப்பட்டன. வீடுகளின் நிலைகளிற் சித்திர வேலைகள் செய்யப்பட்டிருந்தன. கஜலக்ஷ்மியின் திருவுருவம் நிலைக்கு மேலே மத்தியில் முற்காலத்தும் அமைக்கப்பட்டமையை நெடுநல்வாடை முதலியவற்றால் அறியலாம். மாடங்களாகவே சில வீடுகள் கட்டப்பட்டிருந்தன. வீட்டின் சுவர்களிற் பலவகைச் சாளரங்களை வைப்பதுண்டு. 'காலதர்' என்று அவை கூறப்படும்; காற்றுப்போகும் வழியென்பது அதன் பொருள். இதனால் தேக சௌக்கியத்திற்குரியனவும் கவனிக்கப்பெற்று வந்தமை தெரிகின்றது.

கிணறுகளை வெட்டும் முறைகளை யறிவிக்கும் கூபநூல் ஒன்று உண்டு. இன்ன இடத்தில் வெட்டினால் நல்ல ஜலமிருக்குமென்பதை அதனால் எளிதில் அறியலாம். பெருங்கதையில், உதயணன் இந்நூலில் தேர்ச்சியுடையவனாக விருந்தானென்ற செய்தி காணப்படும்.

காவல் காத்தற்குரிய காவல்நூல், கரவடநூல் முதலிய பல நூல்களின் பெயர்கள் தெரிய வருகின்றன. நூலேணியை அரையிற் சுற்றியவர்களாய்க் கறுப்புடையை அணிந்துகொண்டு கள்வர்கள் பதுங்கிவருவார்களென்றும், அவர்களை ஒற்றி யறிந்து காவலர்கள் பிடிப்பார்களென்றும், அக்காவலர்கள் காவல்நூல், கரவடநூல் என்னும் இரண்டிலும் வல்லவர்களாக இருந்தார்களென்றும் மதுரைக் காஞ்சி யென்னும் நூலும் அதன் உரையும் அறிவிக்கின்றன.

போருக்குரிய கலை தமிழ்நாட்டில் தனி இலக்கணத்தோடு இருந்தது. தொல்காப்பியம் புறத்திணையியலிலும் பன்னிரு படலத்திலும் புறப்பொருள் வெண்பாமாலை முதலிய நூல்களிலும் கூறப்பட்ட புறத்திணைத் துறைகளிற் பெரும்பாலன போரையும் அதனைச் சார்ந்தவற்றையும் பற்றிய செய்திகளைக் கூறுவனவாம். பகைவர்களுடைய நாட்டிலுள்ள பசுக்கள் மகளிர் முதலியோருக்குப் போரினால் துன்பம் வருமென்று அஞ்சி, "யாம் போர் செய்யப்போகிறோம்; மகளிர் முதலியோர் இந்நாட்டை நீங்கிக் காவலுடைய நாட்டிற்குச் சென்றுவிடுக" என்று போர்புரியச் செல்வோர் பறையறைவிப்பார். தாமே செல்ல ஆற்றலில்லாத பசுக்களை அப்பகைவரது நாட்டிலிருந்து தம் நாட்டிற்குக் கொண்டு வந்து விடுவார்கள். அதுமுதல் போர் தொடங்கப்படும்.

நிரைகவர்தல், போர்செய்யப் புறப்படுதல், மதிலை வளைத்தல், போர்செய்தல், வெற்றி யுறுதல் என்று போரில் பல பெரும் பிரிவுகள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றை வெட்சி முதலிய திணைகளாக நூல்கள் வழங்குகின்றன. அவ்வத்திணைக்குரிய மலர்களைச் சூடிக்கொண்டு போர்புரிதல் வழக்கம். ஒவ்வோர் அரசருக்கும் தனித்தனி அடையாளப்பூக்கள் உண்டு. போர்புரிகையில் அவற்றை வீரர்கள் அணிந்துகொள்வதால் அவர்களை இன்னாருடைய படையைச் சேர்ந்தவர்களென்று எளிதில் தெரிந்துகொள்ளலாம். அத்தகைய பூக்களைப் பொன்னாற் செய்வித்து அணிந்துகொள்வதும் உண்டு. புறத்திணைகளுள் ஒவ்வொன்றிலும் பல துறைகள் உண்டு. தோணிகளில் ஏறி அகழிற் போர்புரிதலும், மதில்மீதேறிப் போர்புரிதலும் ஆகிய பலவகைப் போர்கள் உள்ளன. வீரர்களுக்குள் படைத்தலைவர்கள் முதலிய பல வேறுபாடுகள் உண்டு. சேனாதிபதிகளுக்குப் பட்டங்கள் வழங்கப்பெற்றன. அவற்றுள் ஏனாதி யென்பது ஒன்று. அப்பட்டத்திற்குரிய மோதிரம் ஏனாதி மோதிரமென்று வழங்கப்பெறும். வீரர்களுக்குரிய பல ஆயுதங்களின் பெயர்களை நூல்களிற் காண

லாம். வேல், வாள், அம்பு, கிடுகு என்பவற்றிற் பலவகைகள் உண்டு.

தமிழ் நாட்டார் கப்பல்களைச் செய்து அவற்றைப் பலவகையிற் பயன்படுத்திக்கொண்டனர். காவிரிப்பூம் பட்டினத்துக் கடற்கரையில் உள்ள பல பண்டசாலைகளில் பல நாடுகளிலிருந்து வந்த பண்டங்கள் இருந்தன வென்று பட்டினப்பாலை தெரிவிக்கின்றது. பிறநாட்டிலிருந்து கப்பல்களிலும் பல பண்டங்கள் வந்து குவிந்தன.

"வாலுளைப் புரவியொடு வடவளந் தரூஉம்
நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை"

என்ற பெரும்பாணாற்றுப்படை யடிகளால் குதிரைகள் முதலிய வடநாட்டுப் பொருள்கள் தமிழ்நாட்டுக்கு நாவாய்களில் வந்தமை தெரியவரும்.

கட்டுரைவகை என்ற ஒரு கலையின் பெயர் மணிமேகலையிற் கூறப்படுகின்றது. தொடுத்துக்கூறும் சொல்வன்மையே அது. பெருங்கதை யாசிரியர் 'வாக்கின் விகற்பம்' என அதனைக் குறிப்பார். இன்னாரிடம் இன்னபடி பேச வேண்டுமென்பதும், இன்ன பொருளை இவ்வாறு அமைத்துப் பேசவேண்டுமென்பதுமாகிய பல வரையறைகளை இலக்கியங்களை நுணுகி ஆராய்வதனால் அறியலாம். அரசர் முதலியவர்களிடத்தில் ஒரு துயரச் செய்தியையோ, அறிவுரையையோ கூறப்புகுங்காலத்து அவர்களை வாழ்த்தி அவர்களுடைய பெருமையைச் சொல்லிப் பாராட்டிய பின்னரே அவற்றைச் சொல்லுதல் புலவர்கள் வழக்கம். வாழ்த்தின் வகைகளுக்குரிய இலக்கணங்கள் சில உண்டு.

அளவை நூல், எண்ணூல், கனா நூல், கோழி நூல், குதிரை நூல், யானை நூல், புதையல் நூல், யோக நூல் முதலிய நூல் வகைகளும், கரந்துறைகணக்கு, கோலங்கோடல் முதலிய வேறு பல கலைகளும் இருந்தன.

தங்களுடைய கருத்துக்களைப் பிறருக்கு அறிவிப்பதற்குரிய பலவழிகள் தெரியவருகின்றன. கோவலனுக்கு மாதவி

தாழை மடலில் செம்பஞ்சுக் குழம்பிற்றோய்த்த பித்திகை யரும்பினால் ஒரு திருமுகம் எழுதி அனுப்பினாளென்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. வாசவதத்தையின் வண்ணமகளாக இருந்த மானனீகை யென்பவளும் உதயணனும் தத்தம் உள்ளக் கருத்தை வாசவதத்தையின் முகத்தில் யவன பாஷையில் ஒருவருக்கொருவர் எழுதிவிடுத்த சித்திர வெழுத்துக்களால் அறிந்துகொண்டார்களென்ற ஒரு செய்தி பெருங்கதையில் காணப்படுகிறது. அந்நூலில், இவ்வரலாற்றைக் கூறும் பகுதி முகவெழுத்துக்காதை யென்றே பெயர்பெறும்.

அரண்மனையில் இருந்த நாகமாலை யென்பவள் அங்கே நடந்த நிகழ்ச்சிகளை மந்தணமாகச் சீவகனுக்கு அறிவித்து வந்தாள். அவள் ஒரு குவளைமலருக்குள் ஒரு திருமுகம் வைத்து அனுப்பினாளென்றும், அக்குவளையின் காம்பே அத்திருமுகவோலையின் சலாகையாக அமைந்திருந்ததென்றும், அவ்வோலை அகவிதழ்க்குள் பொருத்தப் பெற்றிருந்ததென்றும் அதனுள் எழுதப்பட்டவை துகிலிகைக் கணக்காலெழுதப்பட்டவை யென்றும், அதனை அதற்கு அமைந்த முறைப்படி சீவகன் பிரித்துக் காம்பிற் சுற்றி வாசித்தறிந்தானென்றும் சீவகசிந்தாமணியால் அறியலாம்.

இவ்வாறு பலவகைக் கலைகளும் அவற்றிற்குரிய நூல்களும் தமிழ்நாட்டில் மலிந்திருந்தன. அவற்றில் வல்லாரும் பலர் இருந்தனர். பிறநாட்டுக் கலைவல்லார் இந்நாட்டில் வந்து தம் ஆற்றலைப் புலப்படுத்தி வந்தனர்.

"மகத வினைஞரு மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடி" (மணிமேகலை)

வாழ்ந்து வந்தனர். பிற நாட்டாரிடமிருந்து கற்றவற்றையன்றித் தமிழ்நாட்டாரே அறிந்து பயின்ற கலைகளும் நூல்களும் பல உண்டு. வடமொழியிலுள்ள கலைநூல்களையும் தமிழிற் பெயர்த்துக்கொண்டார்கள்.

இக்காலத்தில் மேனாட்டாருடைய உதவியினாற் பல புதுக்கலைகள் உலகில் உலவுகின்றன. அவற்றிற்குரிய நூல்கள் பல ஆங்கிலம் முதலிய மொழிகளில் உள்ளன. அவற்றைத் தமிழில் மொழிபெயர்த்து வருதல் வேண்டும். பண்டைக் காலத்தினர் பிறமொழியிலுள்ள கலைநூல்களை மொழிபெயர்த்துக்கொண்டதுபோல இக்காலத்துக்கேற்ற நூல்களையும் பிறமொழிகளிலிருந்து அறிஞர்கள் பெயர்த்தமைத்தல் முறையேயாகும். நம் நாட்டிற் சிறந்தோங்கியிருந்த சிற்பம் முதலிய கலைகளின் திறத்திலும் நம்முடைய முயற்சி சிறக்கவேண்டும். ஏட்டுச் சுவடிகளில் உள்ள கலைநூல்களை ஆராய்ந்து அறிந்து வெளிப்படுத்தவேண்டும். கலைவல்லார்களுடைய குடும்பங்களிலுள்ளோரிடம் பல செய்திகளை வாய்மொழியாகக் கேட்டறியலாம். அவ்வாறு அறிந்து பலவற்றைத் தொகுக்கலாம். இப்பொழுது கிடைத்துள்ள பழைய நூல்களிலும் சாஸனங்களிலும் கலைகளைப்பற்றிய விஷயங்கள் பல உள்ளன. அவற்றை ஆராய்ச்சி செய்து வெளியிட்டால் உலகத்திற்குப் பயன்படும்.

## 7. குமரகுருபரர்

ஒன்பது கைலாசங்களும் ஒன்பது திருப்பதிகளும் தன்கரையில் அமையப்பெற்ற தாம்பிரபாணி நதிதீரத்தில் ஸ்ரீ வைகுண்டமென வழங்கும் நகரின் வடபாலுள்ள ஸ்ரீ கைலாசத்தில் சண்முகசிகாமணிக் கவிராயரென்பவருடைய திருக்குமாரராகக் குமரகுருபரர் தோன்றினார். ஐந்து பிராயம் வரையில் அவர் பேசாமல் இருந்தார். அவர் தந்தையார் அதனை யறிந்து வருந்தித் தம் குலதெய்வமாகிய செந்திலாண்டவனைத் தரிசிக்கத் திருச்செந்தூருக்குச் சென்று அங்கேயுள்ள கலியுகவரதனை வணங்கித் தம் பிள்ளையைக் காப்பாற்றுதல் அக்கடவுள் கடனென்று முறையிட்டுக் குமரகுருபரரைச் சண்முக விலாசத்திலே கிடத்தி விட்டுத் தாமும் அதில் வரங்கிடப்பாராயினர். சண்முக

சிகாமணியின் புத்திரர் சண்முக விலாசத்திற் கிடந்ததும் பொருத்தமானதுதான்.

பின்னர் முருகக்கடவுளுடைய திருவருளால் அவர் பேசத்தொடங்கித் தமிழ் நூல்களைப் பயில ஆரம்பித்தார்; முருகப்பெருமானுடைய திருவருள் வாய்ந்திருந்தமையின் பல தமிழ் நூல்களையும் எளிதில் விரைவிலே கற்றுச் சிறந்த புலமை பெற்றதுடன் வடமொழியையும் பயின்றனர்; அதன்பின் தம்மை ஆட்கொண்ட முருகக்கடவுள்மீது கந்தர் கலிவெண்பாவென்ற ஒரு நூலை இயற்றினர். அதனைத் தமிழ்நாட்டிற் பெரும்பாலோர் பாராயணம் செய்து வருவதே அதன் பெருமையை நன்கு புலப்படுத்தும்.

பின்பு தாம் பிறந்த தலத்திலுள்ள இறைவன் விஷயமாகக் கைலைக் கலம்பகம் என்ற ஒரு நூலை அவர் இயற்றினர். அதன் முழுப்பாகம் இப்பொழுது அகப்படவில்லை.

சிவஸ்தலங்களைத் தரிசிக்கவேண்டுமென்றும் புண்ணிய தீர்த்தங்களில் நீராட வேண்டுமென்றும் குமரகுருபரர் எண்ணி, மதுரை முதலிய ஸ்தலங்களை யடைந்து தரிசித்துக்கொண்டு சென்று காசியை அடைந்தார். அங்கே கங்கா ஸ்நானமும் விசுவேசுவர தரிசனமும் செய்துகொண்டு டில்லி பாதுஷாவைப் பார்த்துவிட்டு மீண்டும் தாம்பிரபாணி தீரத்தை அடைந்தார்; அங்கே ஸ்ரீ வைகுண்டம் முதலியவற்றிற் சில தினங்கள் தங்கியிருந்து திரும்ப மதுரைக்கு வந்தார். அவ்விடத்தில் அப்பொழுது திருமலை நாயக்கர் அரசாட்சி செய்து வந்தார். ஸ்ரீ மீனாட்சி விஷயமாக ஒரு பிள்ளைத்தமிழ் பாடித் திருமலை நாயக்கர் முன்னிலையில் அரங்கேற்றினர். அதில் வருகைப்பருவம் படிக்குங்கால் அங்கயற்கணம்மை ஒரு சிறு பெண்ணாக வந்து அவ்வரசர் மடியில் வீற்றிருந்து கேட்டருளியதாகச் சொல்லுவார்கள். அப்பிள்ளைத் தமிழைக் கேட்ட அரசர் வியந்து குமரகுருபரருக்கு இரண்டு கிராமங்களையும் சில விருதுகளையும் கொடுத்தார். பின்பு அவர் மதுரைக் கலம்பகம் பாடினர். மீனாட்சியம்மை இரட்டைமணிமாலையும்

மீனுட்சியம்மை குறமும் அவரால் பாடப்பட்டன வென்பர். ஆயினும் அதற்குரிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை. பின்பு தருமபுர ஆதீனத்தை யடைந்து அதில் நான்காம் பட்டத்து அதிபராக இருந்த ஸ்ரீ மாசிலாமணி தேசிகரை வணங்கி அவர்பால் ஈடுபட்டுக் காஷாயமும் ஞானேபதேசமும் பெற்றனர். அப்பொழுது அவ்வதிபர் விஷயமாக அவ ராற் செய்யப்பட்ட நூல் பண்டார மும்மணிக்கோவை யென்பது; அது யாருடைய மனத்தையும் உருக்கும்.

பின்பு அவர் திருவாரூர் சேர்ந்து தியாகராஜப் பெரு மானை வணங்கித் திருவாரூர் நான்மணி மாலையையும், புள் ளிருக்குவேளூர் (வைத்தீசுவரன் கோயில்) க்குச் சென்று ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி விஷயமாகப் பிள்ளைத்தமிழை யும் இயற்றினர். அதன்பின் சிதம்பரம் சென்று ஸ்ரீ ஆனந்த நடராஜப்பெருமானையும் சிவகாமசுந்தரி யம்மையையும் வணங்கிச் சிலநாள் அங்கே இருந்தார். அப்பொழுது சிதம் பர மும்மணிக்கோவை அவரால் இயற்றப்பெற்றது; யாப் பிலக்கணத்திற்கு இலக்கியமாகச் சைனமதக் கொள்கைகளை யுடைய செய்யுட்கள் காரிகையில் மேற்கோளாகக் காட் டப்பெற்றிருந்ததனை அறிந்து சிலர் வேண்டுகோளின்படி சிவபரமாகச் சிதம்பரச் செய்யுட்கோவையை அவர் இயற் றினர். நீதிநெறி விளக்கம் என்ற நூலையும் அப்பொழுது தான் இயற்றினரென்பர். குறள் மிக விரிந்திருப்பதால் அந்நூற் கருத்துக்களைச் சுருக்கி அமைத்து ஒரு சிறிய நூல் செய்துதரவேண்டுமென்று திருமலை நாயக்கர் கேட்டுக் கொள்ள அதனைப் பாடினுரென்று சிலரும், டில்லி பாதுஷா விற்குத் தமிழின் பெருமையையும் நீதிகளையும் அறிவுறுத் தப் பாடினுரென்று வேறு சிலரும் கூறுவர். அந்நூல் முதற் செய்யுளில், "நமரங்காளென்னே, வழுத்தாத தெம்பிரான் மன்று" என்று ஸ்ரீ நடராஜப்பெருமானது மன்றம் சொல் லப்படுவதால் சிதம்பரத்தில் இருக்கையிலேயே அவர் அத னைப் பாடினுரென்று கொள்வது பொருத்தமாகும்.

பின்னர் மறுமுறை காசிக்குச் சென்று கங்கையில் நீராடி ஸ்ரீ விசுவேசுவரரையும் விசாலாட்சியம்மையையும் தரிசித்துக் காசிக்கலம்பகம் என்று ஒரு பிரபந்தம் பாடினர். யாத்திரையாக வருவோர் இருத்தற்கு வசதியில்லாமல் வருந்துவதை யறிந்து காசியிலேயே இருந்து தருமம் செய்துவர வேண்டுமென்ற நோக்கம் அவருக்கு உண்டாயிற்று. ஆயினும் அதற்கு வேண்டிய இடம் பொருள் முதலிய சௌகரியங்கள் இல்லாமையால் அப்பொழுது டில்லியிலிருந்த பாதுஷாவினிடம் அவற்றைப் பெற எண்ணினர். எனினும், அவ்வரசரிடம் பேசுவதற்கு அந்தத் தேசபாஷையாகிய இந்துஸ்தானி தெரியாமையால், அதனை அறிந்துகொள்ள அவர் சரசுவதியைக் குறித்துச் சகலகலாவல்லி மாலை யென்ற ஒரு தோத்திர நூலைப் பாடினர். அம்மாலையிலுள்ள, "மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென், பண்கண்டளவிற் பணியச் செய்வாய்" என்னும் பகுதி இந்தக் கருத்தைப் புலப்படுத்தும். சரசுவதியின் திருவருளால் இந்துஸ்தானி பாஷையிற் பயிற்சியுற்றுத் தமிழ் நூல்களிலுள்ள விஷயங்களை அந்தப் பாஷையிலே பெயர்த்துப் பிரசங்கிக்கத்தக்க வன்மையையும் பெற்றார். பிறகு டில்லி பாதுஷாவைக்கண்டு தம்முடைய உரைவன்மையினல் அவ்வரசருடைய உள்ளத்தைக் கவர்ந்து அவரிடமிருந்து நன்கொடையாக நிலங்கள் முதலியன பெற்றார். கேதாரகட்டத்திலுள்ள சிவலிங்கத்தை மூடி மேலே முகம்மதியர்கள் மசூதி கட்டி யிருப்பதை யறிந்து அவ்விடத்தைப் பாதுஷா வழங்கத் தமக்குரிமை யாக்கிக் கொண்டு அங்கே சிவபெருமானுக்குக் கோயில் கட்டி நித்திய நைமித்திகங்களை நடத்தினர். இன்னும் அங்கே தமிழ்நாட்டு முறையில் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. தாம் இருப்பதற்குரிய மடம் ஒன்று அமைத்து அதில் அரசர்கள் மட்டும் கட்டிக்கொள்ளும் ஸர்ஜா என்று வழங்கப்படும் முன் கட்டிடத்தையும் அரசாது வேண்டுகோளின்மேற் கட்டிக்கொண்டார். இதனல் அரசருக்கு அவரிடம் இருந்த

பெருமதிப்பு விளங்குகின்றதன்றோ? அந்த மடம் இப்பொழுது குமாரசாமி மடமென வழங்கும்.

தம்முடைய மடத்தில், புராணசாலை யென்னும் பெயருடன் ஒரு மண்டபத்தை அமைத்து அங்கே நாள்தோறும் தமிழ்ப் புராணங்களையும் பிற தமிழ் நூல்களையும் வாசித்து இந்துஸ்தானி பாஷையில் அந்நூல்களின் பொருளை விரிவாக எடுத்து அவர் பிரசங்கித்து வந்தார். அக்காலத்திற் பல பக்தர்களும் வந்து கேட்டு மகிழ்ந்துபோவது வழக்கம். அங்ஙனம் வருவோர்களுள் இராம பக்தர்கள் பெரும்பான்மையோராவர். கம்பராமாயணம் முதலியவற்றையும் வாசித்து அவர் பொருள் சொல்லி வருவதுண்டு. அவ்வாறு இராமாயணம் வாசிக்கையில் இராம பக்தராகிய துளஸீ தாஸர் அதனை யறிந்து அங்கு வந்து கேட்டுப் போவாரென்று பெரியோர்கள் சொல்லுவர். அவ்வாறு கேட்டதற்கு அறிகுறியாக அவர் ஹிந்தியில் இயற்றிய இராமாயணத்தில், கம்பராமாயணத்தில் உள்ள பல கருத்துக்கள் காணப்படுகின்றனவாம்.

இவ்வாறு தமிழைப் பிற நாட்டிலும் விருத்தி செய்து விளங்கிய குமரகுருபர முனிவருடைய தமிழ் நூல்கள் எல்லோராலும் போற்றற்குரியன. பல பிரபந்தங்களையும், தோத்திரங்களையும், யாப்பிலக்கணத்திற்கு இலக்கியத்தையும் நீதிநூலையும் அவர் செய்திருக்கிறார். இன்னும் அவரால் இயற்றப்பட்ட நூல்கள் பல இருக்கலாம். அவை இப்பொழுது அகப்படாமையால் அவற்றின் பெயர் தெரியவில்லை.

விநாயகர், முருகக்கடவுள், சிவபெருமான், அம்பிகை, சரசுவதி, ஞானசிரியர் முதலியவர்களைப்பற்றி அவர் பாடியிருக்கிறார். மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் திருமாலைப் பாராட்டுகையில், "பைந்தமிழின் பின்சென்ற பச்சைப் பசுங் கொண்டலே" என்று திருமால் தமிழில் விருப்பமுடையவர் என்பதை விளக்கியிருக்கிறார்.

அவருடைய செய்யுட்களில் சங்கநூற் கருத்துக்களும், சொற்றொடர்களும், சைவ சித்தாந்த சாஸ்திரத்திலுள்ள

நுட்பமான பிரயோகங்களும் பலவிடங்களில் எடுத்தாளப் பட்டு விளங்குகின்றன.

பிறபாஷைச் சொற்களை அமைத்து அவர் பாடியிருக் கிறார். அதற்கு உதாரணமாக மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் முருகக் கடவுளைப்பற்றிக் கூறும், "கலாமயிற் கூத்தயர், குளிர்புன மொய்த்திட்ட சாரலிற் போய்ச் சிறு குறவர்மகட்குச் சலாமிடற் கேக்கறு குமரனை முத்துக் குமாரனைப் போற்றுதும்" என்ற செய்யுளில் இந்துஸ்தானி பாஷையிலுள்ள 'சலாம்' என்ற வார்த்தையை எடுத் தாண்டிருப்பதைச் சொல்லலாம். அவ்விடத்தில் அச் சொல்லை அமைக்காவிட்டால் சுவை குன்றிவிடும். அது வேறு பாஷைச் சொல்லேயாயினும் அந்த இடத்தில் தமி ழுடன் கலந்து அழகு பெறுகின்றது. இவ்வாறே வட மொழிச் சொற்களையும் தக்க இடங்களில் எடுத்தாண்டு தம் முடைய செய்யுட்களை அவர் அலங்கரித்திருப்பதைப் பல விடங்களிலும் காணலாம். "பால லோசன பானுவிலோ சன பரமலோசன பக்த சகாயமா, காலகாலத்ரி சூல கபாலஏ கம்பசாம்ப கடம்பவனேசனே" என்பதில் மிகவும் அழகாக வடமொழிச் சொற்களை அமைத்திருக்கின்றார். இவ்வாறு ஒரு முறையைக் கைக்கொண்டு தாமே பிரயோ கித்தலை 'உடம்படுபுணர்த்தல்' என்பர். அதன் பொருள் உடம்பட்டு உணர்த்தல் என்பது. அதாவது ஒரு விதிக்கு உடம்பட்டு அதனைத் தம்முடைய நூல்களில் எடுத்தாளல் என்பதாம்.

குமரகுருபரர் தாம் பிறந்த நாட்டு வழக்கச் சொல்லை ஓர் இடத்தில் அமைத்திருக்கின்றார். பாண்டி நாட்டில் ஒருவன் பிறர் நிலத்தையோ ஊரையோ ஸ்வாதீனம் செய்து கொள்ளும் செயலைத் தோரணம் வைத்தலெனக் குறிப்பார் கள். இதனைக் காசிக்கலம்பகத்தில், "ஆர்க்கும் படைவே ளரசிருப்பென் றஞ்சாதடிக ளருட்காசி, யூர்க்கும் புதுத் தோரணம் வைத்தால்" என்ற பகுதியில் அமைத்திருப் பதைக் காணலாம்.

வைணவர்கள் பெரும்பாலும் வழங்கிவரும் 'ததியர்' (அடியார்கள்) என்னும் சொல்லைப் பண்டாரமும்மணிக் கோவையில், "தவமார், ததியருளத் தானேநின் சந்நிதிப் பட்டேற்குக், கதியருளத் தானே கடன்" என்ற விடத்து எடுத்தாண்டிருக்கிறார்.

குமரகுருபரர் காசியிலேயே இருந்து தரும பரிபாலனமும் சைவ பரிபாலனமும் செய்து வந்தார். அவருக்குப்பின் அவருடைய தருமங்களை நடத்துவதற்கு ஒரு தம்பிரான் நியமிக்கப்பட்டார். அதுமுதல் ஒருவர்பின் ஒருவராக அந்தத் தருமங்களை நடத்திப் பாதுகாத்து வருகின்றனர்.

காசி வாசிகளாகிய இப்பரம்பரையினரில் தில்லை நாயக ஸ்வாமிகள் என்பவர் ஸ்ரீ குமாரசாமி மடத்திற்குரிய பல அறப்புறங்கள் சோழ நாட்டில் இருந்ததை அறிந்தும் வேறு சிலவற்றை நினைந்தும் திருப்பனந்தாளில் ஒரு கிளை மடத்தை நிறுவினர். அப்பால் ஸ்ரீ குமரகுருபரருடைய பரம்பரையினர் திருப்பனந்தாளிலேயே இருந்து தம்முடைய கடமைகளை நிறைவேற்றி வருவாராயினர்.

திருப்பனந்தாளிலுள்ள மடம் காசியிலுள்ள குமாரசாமி மடத்தோடு தொடர்புடையதாதலின் காசிமடமென்று வழங்கப்பெறும். அங்கே தலைவர்களாக இருப்பவர்கள் காசி வாசி யென்னும் பட்டத்தைப் பெற்று வருகிறார்கள். முதன் முதலில் தலைமைஸ்தாபனத்தை ஸ்ரீ காசியில் அமைத்தமையாலும், பிற்காலத்தில் குமரகுருபரர் என்ற பெயருடைய வேறு சிலர் தலைவர்களாக இருந்தமையாலும் அவர் ஆதி குமரகுருபர ஸ்வாமிகளென்று வழங்கப்படுவர்.

## 8. சங்கத்தமிழ்

உலகத்தில் வழங்கும் பண்டை மொழிகளுள் தமிழ் ஒன்று. தமிழென்னுஞ் சொல்லுக்கு இனிமையென்று பொருள்கூறுவர்; இதன் தோற்றம் எவராலும் வரையறுக்க முடியாதபடி அவ்வளவு பழமையாயிருத்தல் இதன் பெருமைக்கு ஒரு சான்றாகும்.

இம்மொழியை நம் முன்னோர்கள் பெரிதும் பாராட்டி வந்தனர். முடிமன்னரும், சிற்றரசரும், மற்றோரும் தாம் இம்மொழியை நன்கு கற்றிருந்ததோடு நில்லாமல் தமிழ்க் கல்வியில் தேர்ந்த சான்றோர்களைப் போற்றி வந்தனர். அதனால் தமிழ் நூல்கள் பல பெருகலாயின. புலவர்கள் ஆங்காங்கே கூடி நூல்களை ஆராய்ந்து வந்தனர்; அவர்களுடைய கூட்டம் தொகை, சங்கம், கூடல், கழகம் என்ற பெயர்களால் வழங்கி வந்தது.

அவற்றுள் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னே மதுரையில் பாண்டியமன்னரின் ஆதரவில் இருந்த சங்கமே மிகவும் பெரியது. அக்காலத்துக்குமுன் இரண்டு சங்கங்கள் தனித்தனியே நீண்டகாலம் நடைபெற்றனவென்றும், அவை விளங்கிய இடங்களும், அச்சங்கத்தாரால் இயற்றப்பெற்ற நூல்களும் அழிந்தொழிந்தென வென்றும் கூறுவர்.

மிகப் புராதனமான அக்காலத்திலே அகத்திய முனிவர் என்பார் தமிழுக்கு ஓர் இலக்கணம் இயற்றினாரென்றும், அவ்விலக்கணம் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழுக்கும் உரியதென்றும், அந்நூல் இருபத்து நாலாயிரம் சூத்திரங்கள்கொண்டதா யிருந்ததென்றும் வேறு சில நூல்களினின்றும் புலனாகின்றது. பிற்காலப் புலவர்களுட் பலர் அகத்தியரால் தமிழ்பெற்ற பேற்றைப் புகழ்ந்திருக்கிறார்கள். ஆயினும் அவரது நூலில் மிகச் சிறிய பகுதிகளே இப்பொழுது கிடைக்கின்றன.

அகத்தியருக்கு மாணாக்கர்கள் பன்னிருவர் இருந்தனரென்றும் அவர்களுள் ஒருவரான தொல்காப்பியர் என்ற முனிவரால் எழுதப்பட்டது தொல்காப்பியமென்னும் நூலாகுமென்றும் பெரியோர் கூறுவர். தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களை உடையது. அதுவே இப்பொழுது கிடைக்கும் தமிழ் நூல்களில் மிகப் பழையதாகக் காணப்படுகின்றது.

அகத்தியரும், தொல்காப்பியரும் மதுரையிலிருந்த கடைச்சங்க காலத்துக்கு முந்தியவர்களாவர். அச்சங்க காலத்திலிருந்த பெரியோர்களில் நக்கீரர், கபிலர், பரணர், ஔவையார் முதலியோர் சிறந்தவர்கள். அந்நல்லிசை வாய்ந்த பெரியோர்கள் கல்விப் பெருமையோடு குணப் பெருமையும் ஒருங்கே வாய்ந்தவர்கள். அவர்கள் ஒரு நாட்டினரல்லர்; ஒரு சாதியினரல்லர்; ஒரு தொழிலினரல்லர்; ஒரு மதத்தினருமல்லர். தமிழ்க் கல்வியும் சான்றாண்மையுமே அவர்களிடம் அமைந்த பொதுவிலக்கணம். அவர்களுட் பல்லோர் பெண்பாலராவர்; மன்னர்களுட் சிலரும் புலவர்களாய் விளங்கினார்கள். ஆயினும் புலவர்களிற் பெரும்பாலோர் ஏழை மக்களாகவே இருந்து வந்ததாகத் தெரிய வருகின்றது. அவர்களிடம் பேராண்மை குடிகொண்டிருந்தது; உயிர்போகவரினும் அவர்கள் நெறிவிட்டுப் பிசகியதில்லை; தம்மை மதியாத புரவலர்களை அவர்கள் புல்லினும் அற்பமாக மதித்திருந்தனர். தம் சுற்றத்தாரின் பொருட்டு அவர்கள் பரிசில் பெற்றனரேயன்றித் தாம் ஊதியம் பெறுதலை அவர்கள் கனவிலும் நினைத்ததில்லை. மன்னர்களும் புலவர்களின் பெருமையை யறிந்து அந்நிலைக்குத் தக்கவாறே ஒழுகிவந்தனர்; புலவர்பால் தம் மக்களை ஒப்படைத்த மன்னரும், தம் நாட்டையே புலவர்களுக்கு ஈந்த புரவலரும் உண்டு; புலவர்கள் அரசர்களுக்கு உயிர்த்துணைவராகவும், அமைச்சராகவும், தூதுவர்களாகவும் இருந்து வந்தனரெனக் கூறும் சரிதங்கள் மிகப் பல உள்ளன.

இத்தகைய புலவர்கள் ஒருங்கிருந்து தமிழாராய்ச்சி செய்துவந்த இடத்திற்குப் பட்டிமண்டபம் என்றும் சங்க மண்டபமென்றும் பெயருண்டு. இப்பொழுதும் மதுரையிலே ஸ்ரீசோமசுந்தரேசுவரர் ஆலயத்தின் தென்மேற்கு மூலையில் சங்கத்தார் கோயிலொன்று உளது; அதனில் நாற்பத்தொன்பது புலவர்களின் உருவங்களும், கலைமகளின் விக்கிரகமும் இருக்கின்றன. அந்நகரின் மேலைவீதியில் நக்கீரருக்கென ஒரு கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது; அதிலும்

சில புலவர்களின் பிம்பங்கள் காணப்படுகின்றன. பொற்ருமரைக்குளம் என்னும் தீர்த்தக் கரையின் மண்டபத்தினுள்ள தூண்களில் சங்கப்புலவர்களின் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு காலத்தில் சங்கம் பொற்ளிமரைக் கரையில் இருந்ததென்பதற்குத் தமிழ் நூல்களினின்று பல ஆதாரங்கள் கிடைக்கின்றன.

சங்கப் புலவர்கள் துவக்கத்தில் நாற்பத்தொன்பதின்மர் இருந்திருக்கக் கூடுமென்று தோன்றுகின்றது. ஸரஸ்வதி தேவி ஒருமுறை சபிக்கப்பட்டாளென்றும், அவள் நாற்பத்தொன்பது புலவர் உருக்கொண்டு சங்கத்தில் விளங்கினளென்றும் கூறுவர். சங்கத்தின் செல்வாக்கு அதிகரிக்க அதிகரிக்கப் புலவர் குழாமும் பல்கிற்று. ஒருமுறை வடவாரிய நாட்டில் பஞ்சமுண்டாக, அந்நாட்டினின்று நாலாயிரம் சமணப் புலவர்கள் தென்னுடு போந்து, மதுரையில் தங்கி, தமிழில் வல்லுநராயிருந்து பாடல்களைப் பாடினரென்றும், அச்செய்யுள்களுள் நானூறுகொண்டதே இப்பொழுது நாலடியார் என வழங்கி வருகின்றதென்றும் பழைய வரலாறு கூறுகின்றது.

இவ்வாறு புலவர்களின் கூட்டம் பெருகவே, அவர்களுள் உண்மைப் புலமை வாய்ந்தவர் எவரென்றும், அவர்களால் இயற்றப்படும் நூல்களிற் சிறந்தன எவையென்றும் கண்டறிதல் அரிதாயிற்று. அவ்விதத் துன்பத்தினின்றும் நீக்குவதற்காகக் கடவுள் சங்கத்தாருக்கு அரியதொரு பலகை கொடுத்தனரென்றும், அது சான்ரேருக்கன்றி மற்ரேருக்கு இடந்தராத அரிய சக்திபெற்றிருந்ததென்றும் கூறுவர். ‘மொழியறி சங்கப் பலகை’ என்றும், ‘பாவறி சங்கப் பலகை’ என்றும் பிற்காலத்தார் அதனைப் போற்றலாயினர். அத்தகைய பலகையொன்று இக்காலத்திலிருப்பின் எத்துணையோ நன்மை பயக்கும்.

புலவர்களால் ஆராயப்பெற்ற தமிழ்நூல்கள் மேலே கூறியபடி இயல், இசை, நாடகம் என்னும் மூன்று வகைப்படும். அவற்றுள் இசைத்தமிழ் நாடகத்தமிழ் நூல்கள்

இக்காலத்திற் பெரும்பாலும் குறைந்துவிட்டன; சங்க காலத்தில் அவ்விரு பகுதிகளிலும் மிகத்தேர்ந்த புலவர்கள் இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது.

இசைத்தமிழ் சங்கீத வகைகளைப் புலப்படுத்தும். தமிழில் தனிமையான ஸ்வரங்களும், அவற்றிலிருந்து உண்டான தமிழ்ப் பண்களும் திறங்களும் தனியே இருந்தன. அவற்றிற் பல வகைகளும் அவை ஒவ்வொன்றிற்கும் இலக்கணங்களும் வகுக்கப்பட்டிருந்தன. சங்ககாலத்தில் தமிழ் நாட்டில் மிகப் பல வாத்தியங்களும் வழங்கிவந்தன. அவை ஒவ்வொன்றையும்பற்றிய இலக்கணவிதிகளும் புலவர்களால் ஆக்கப்பட்டிருந்தன. அவற்றைப்பற்றிய சிற்சில செய்திகள் சிலப்பதிகாரம், பெருங்கதை முதலிய இலக்கியங்களால் நமக்கு இப்பொழுது தெரியவருகின்றனவேயன்றி அக்காலத்து இசைத்தமிழ் நூல்களிலொன்றும் இப்பொழுது கிடைத்தல் அரிதாயிற்று.

நாடகத்தமிழ் என்பது கூத்துக்களைப்பற்றிக் கூறும் தமிழாகும். அக்காலத்தில் நாடகம் வேத்தியலென்றும், பொதுவியலென்றும் இரு பெரும் பிரிவுகளாயிருந்தது. பெரியோர்களின் சரிதங்களையும், உலகநடைகளையும் தழுவி நாடகங்கள் அமைக்கப்பட்டிருந்தன. நாடகங்களின் பிரிவுகள், நாடகமேடை அமைக்கப்படவேண்டிய முறைகள், ஆடுவோரின் இலக்கணங்கள் ஆகிய இவைபோன்ற அரிய செய்திகளைக் கூறும் பல தமிழ் நூல்கள் இருந்தும் அவற்றுள் ஒன்றும் இப்பொழுது கிடைக்கப் பெறுமை நமது துர்ப்பாக்கியமே. சிலப்பதிகாரம் என்னும் ஒரு நூல் பண்டைக்கால நாடகமுறையின் ஒரு சிறு பகுதியை நமக்குக் காட்டுகின்றது.

இவைகளையன்றி இசைத்தமிழ் சங்ககாலத்தில் மிகவும் ஓங்கியிருந்ததென்பதற்கு நமக்கு ஆதாரங்கள் பல கிடைக்கின்றன. சங்க இலக்கியங்களில் அழிந்துபோனவைபோக எஞ்சியவற்றை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு எனப் பின்வந்தோர் பாகுபடுத்தி வைத்திருக்

கிறார்கள். அவற்றுள் சிற்சில பகுதிகள் நீங்கலாக மற்றவை யெல்லாம் சில அறிஞர்களின் உழைப்பால் இக்காலத்தில் கண்டெடுக்கப்பெற்றுப் புத்தகங்களாகக் கிடைக்கின்றன. அவை சங்ககாலத் தமிழரின் நாகரிகத்தை உள்ளங்கைநெல் லிக்கனிபோல் புலப்படுத்துகின்றன.

இறையனார் அகப்பொருள் என்னும் ஒரு நூலும் சங்க காலத்தில் இயற்றப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அதன் வரலாறு படிப்பதற்கு இன்பமாயிருக்கும். ஒருகாலத்தில் பாண்டிய நாட்டில் பஞ்சமொன்று உண்டாயிற்று; சங்கப் புலவர்கள் அதனால் மிகவருந்தி மதுரையைவிட்டுப் புறப் பட்டு ஆலஞ்சேரி என்னும் ஊரிலுள்ள அயிந்தன் என்னும் பிரபுவை அண்டினார்கள். அவன்,

"தாயில் லார்க்குத் தாயே யாகவும்
தந்தையில் லவர்க்குத் தந்தையே யாகவும்
இந்த ஞாலத் திடுக்கண் டீர
வந்து தோன்றினன் மாநிதிக் கிழவன்
நீலஞ் சேரும் நெடுமால் போல்வான்
ஆலஞ்சேரி அயிந்த னென்பான்
தன்குறை சொல்லான் பிறர்பழி யுரையான்
மறந்தும் பொய்யான் வாய்மையுங் குன்றான்
இறந்து போகா தெம்மைக் காத்தான்"

என்று அவர்களால் புகழப்படும்படி அப்பஞ்சகாலத்தில் அவர்களை ரக்ஷித்தான். பின்பு பஞ்சம் தீர்ந்து அவர்கள் மது ரையை அடைந்தபோது தொல்காப்பியத்தின் பகுதியான பொருளிலக்கணப் பகுதியின் ஒருபாகம் தவறிப்போயிற்று; அதனைக்கண்டு அரசனும் புலவர்களும் பெரிதும் கவன்றனர்; ஏட்டுச் சுவடி மிகச் சுருக்கியே இருக்கும் அக்காலத்தில் ஓரேடு கைதவறுமானால் அதனைத் திருப்பிப் பெறுதல் அரிய காரியமாகும். அவர்களின் கவற்சியைப் போக்கக் கட வுளே அறுபது சூத்திரங்களடங்கிய 'அகப்பொருள் இலக் கணம்' வரைந்து உதவினாரென்றும் அதுவே இக்காலத்தில்

இறையனார் அகப்பொருள் என்ற பெயருடன் விளங்கிவரு கிறதென்றும் பண்டைச் செய்தியொன்று வழங்குகின்றது.

அந்நூலுக்கு உரைகண்ட வரலாறு இன்னும் விந்தை யானது. பல புலவர்கள் அதற்கு உரைவகுத்துத் தத்தம் உரையே சிறந்ததென்று கூறி வாதித்தனர். அதனாற் கல கம் விளையவே அவர்கள் ஒருங்குகூடிச் சோமசுந்தரக் கட வுளே இதற்கு வழிகாட்டக் கடவர் என்று அவரிடம் விண் ணப்பிக்க அவர், "மதுரையில் வணிகர் குடியில் பிறந்துள்ள உருத்திரசன்மன் என்பான் இதற்கு வழிகாட்டுவான்; அவன் ஊமையன்; எனினும் அவனை அழைத்துச் சபையி லேற்றி, அவன்முன் நும் உரைகளை ஒருவர்பின் னொருவ ராய்க் கூறுவீராயின், உண்மையான உரைதோன்றுங் காலத் தில் அவன் அதனைத் தன் முகக்குறியால்தோற்றுவிப்பான்" என்றருளினார். அவ்விதமே செய்ய நக்கீரனார் கூறிய உரையே சிறந்ததெனக் காணப்பட்டது என்று கூறுவர். அம்மூங் கையன் முருகக்கடவுளின் அவதாரமேயென்றும் சொல் லுவர். இவ்விதம் உண்மையை ஆராய்வதில் மிக்க ஆர் வங்கொண்டு, தம்மால் இயலாத விடங்களில் கடவுளின் துணையாலும் தமிழை வளர்த்துவந்தனர் நம் பண்டைப் பெரியோர்.

இங்கே குறிக்கப்பட்ட பொருளிலக்கணம் இன்ன தென்று அறிந்துகொள்ளுவதும் இன்றியமையாத தொன்றே. தமிழிலக்கணத்தின் மூன்றாவது பிரிவாகிய பொருள் அகம், புறமென இருவகைப்படும். அகம் என் பது ஒத்த அன்பினையுடைய தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே நிகழும் இன்பத்தைக் கூறும். மனித வாழ்க்கை யில் இல்லற வாழ்க்கையே சிறந்ததாகலின் அவ்வாழ்க்கைக் குரிய இன்பத்தின் இலக்கணத்தை வரையறுத்துக் கூறுவது நம் புலவர்களுக்கு இன்றியமையாததாயிற்று. அகப் பொருள் இலக்கிய நூல்கள் தமிழில் மிகப்பல இருக்கின் றன. அவை அரிய கற்பனைகள் அமைந்து படிப்போர் மனத்தைப் பிணிக்கும் தன்மையுள்ளன; மனிதரின் நுண்

ணிய உணர்ச்சிகள் பலவற்றினையும் பலதுறைப்படுத்திப் புலவர்கள் பாடியுள்ள பன்னூறு சங்கப் பாடல்கள் நந் தமிழுக்கே பேரணிகலனாய் விளங்குகின்றன. அவற்றை ஆக்குதற்கும், அறிதற்கும் இலக்கண அறிவு அவசியமாதலின் இறையனார் அகப்பொருள் போன்ற இலக்கணங்கள் நம் முன்னோரால் பெரிதும் போற்றப்பட்டன.

புறப்பொருள் என்பது அகப்பொருளைப்போன்று மனிதர்களின் அகத்தே நிகழாததாய், யாருக்கும் புலனாகுமாறு புறத்தே நிகழும் எல்லாச் செயல்களையும்பற்றிக் கூறுவது. அது பல விஷயங்களையும்பற்றிக் கூறுமானாலும் அரசர்கள் பொருள்தேடும் முறைகளை முக்கியமாய் விளக்கமாகக் கூறும். அரசர்களின் தொழில்களைக் கூறும் முகத்தால், அவ்விலக்கணம் அக்காலத்துத் தமிழரின் உலக நடைக்கு அமைந்த அரியதொரு விதிநூலாகவும் ஆயிற்று.

இவ்விரண்டு பொருள்களையும் பல திணைகளாகவும், துறைகளாகவும் அமைத்துக்கொண்டு அவை ஒவ்வொன்றிற்கும் இலக்கணம் கூறப்பட்டது. அவ்விலக்கண விதிகளுக்குட்பட்டே புலவர்கள் தங்கள் நூல்களையும் தனிச் செய்யுட்களையும் இயற்றிவந்தனர்.

இவ்விதம் கடவுளருளாலும், மன்னர்கள் பிறவள்ளல்கள் இவர்களுடைய பேருதவியினாலும், நம்பண்டைச் சான்றோர் தமிழ்ச் செல்வியை வளர்த்துத் தமக்கும் என்றும் அழியாப் புகழைச் செய்துகொண்டனர். அதனாலன்றோ 'மலரவன் வண்டமிழோர்க்கொவ்வான்' என்னும் சிறப்பு, தமிழ்ப் புலவர்களுக்குண்டாயது? அவ்வாறு வளர்ந்த தமிழ்த் தாயை நாம் அன்பும் ஆதரவும் காட்டிப் போற்றிப் பணிவோமாக.

## 9. யூகியின் ஆற்றல்

பலவளங்களும் நிரம்பிய விபுலகிரி யென்னும் மலையொன்று உண்டு. அதைச் சார்ந்த தபோவனத்தில் முன்பு ஒரு காலத்தில் பல முனிவர் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கியவர் பிரமசுந்தர முனிவ

ரென்பவர். அவருக்கு அவர் பத்தினி பரமசுந்தரி யென்பவள்பால் யூகி என்னும் அருமைப் புதல்வனொருவன் தோன்றினான். அவன் இளமைமுதலே தன் பெயருக்கேற்ற மதியூகமும், பேராற்றலும் உடையவனாக விளங்கினான். அம்முனிவரோடு தவஞ்செய்துவந்த சேடக முனிவரென்பவர் தம்முடைய பெண்வயிற்றுப் பேரனும் வத்தவ நாட்டரசனுடைய குமாரனுமாகிய உதயணனென்பவனை அவரிடம் ஒப்பித்துக் கல்வி பயிலும்படி செய்தனர்.

யூகியும், உதயணனும் ஒருவரோடொருவர் மனங்கலந்து ஓருயிரும் ஈருடலுமாகப் பழகிவந்தனர். யூகியின் தந்தைபால் உதயணன் பல கலைகளைக் கற்றான்; யாழ் வாசித்து யானைகளை வசப்படுத்தும் அருந்திறனையும் அடைந்தான். அவன் எல்லாக் கலைகளையும் முற்றவறிந்த காலத்தில் அவனது பேரறிவை வியந்த முனிவர், தம் அருங் குமாரனை அவன்பால் அடைக்கலமாக ஒப்பித்தனர்.

அப்பால் உதயணனுக்கு மாமனான விக்கிரனென்பவன் உதயணனையும், யூகியையும் தன் நகரமாகிய வைசாலிக்கு அழைத்துச் சென்று அங்கே உதயணனை அரசனாக்கிவிட்டுத் தான் தவம்புரிய வனம் சென்றான். உதயணன், யூகியைத் தனக்கு மந்திரியாகக்கொண்டு அரசாட்சி புரிந்து வரலானான். உதயணனுக்கு யூகி பலவகையில் உதவிபுரிந்து பிற நாட்டரசர்களை அவன் வென்று புகழடையும்படி செய்தனன்.

உதயணன் வைசாலியிலே இருத்தலையறிந்த அவன் தந்தையும் கௌசாம்பி மன்னனுமான சதானிகனென்பவன் வைசாலிக்கு வந்து உதயணனைக் கண்டு உவந்தான். பிறகு சதானிகமன்னனும் துறவறத்தின்பால் வேட்கையுடையவனாகி உதயணனிடம் தன் அரசாட்சியை யளித்துத் தவ வாழ்க்கையை மேற்கொண்டான். வைசாலியிலே இருந்து அரசாளும்படி யூகியை நியமித்துவிட்டு, உதயணன் கௌசாம்பிக்கே வந்து அரசாட்சி நடத்திவர ஆரம்பித்தான்.

யூகி வைசாலி நகரத்திலே இருந்து அரசாண்டு வருகையில், குடிகளும் பிறரும் அளவற்ற நன்மைகளை அடைந்தார்கள்.

இங்ஙனம் இவர்கள் இருந்துவருகையில் அவந்திநாட்டின் அரசனான பிரச்சோதனனென்னும் சக்கரவர்த்தி தன் கீழ் உள்ள அரசர்கள் யாவரும் உரிய கப்பத்தைக் கட்டி வருகிறார்களாவென்று ஆராயுங் காலத்தில் கௌசாம்பி நகரத்தரசனாகிய உதயணனும், வைசாலி நகரத்தலைவனாகிய யூகியும் அங்ஙனம் கப்பம் கட்டவில்லையென்று உணர்ந்தான். சிலர், "யூகியும், உதயணனும் சேர்ந்து போர்புரியவந்தால் யாராலும் எதிர்த்து வெல்ல இயலாது. யூகியின் துணையை உதயணன் அடையாவண்ணம் தடுத்தால் உதயணனை வெல்லுதல் கூடும்" என்றனர். அதுகேட்ட அரசன் யூகியோடு போர்புரியும்பொருட்டு வைசாலி நகருக்குப் பலவகைப் படைகளையும், கௌசாம்பிக்குச் சென்று உதயணனை வஞ்சத்தாற் பிடித்துவரும்பொருட்டுப் பல படைவீரர்களை உள்ளடக்கிய மாய யானை யொன்றையும் அனுப்பினான்.

மாய யானையை ஒரு காட்டிலே கண்ட உதயணன், அதனை உண்மை யானை யெனவே எண்ணித் தனியே சென்று அதனுள் இருந்த படைவீரர்களோடு போர்புரிந்து அப்பால் அவர்களாற் பிணிக்கப்பட்டான். அப்பொழுது தன் நிலைமையை விரைவிலே எழுதி உதயணன் தன் நண்பர்களுள் ஒருவனாகிய வயந்தக னென்பவனிடத்திலே கொடுத்து யூகியிடம் அளிக்குமாறு விடுத்தான். அப்பால் அவனைப் பிரச்சோதனன் ஏவலாளர்கள் உச்சைனியிலே சிறையில் அடைத்தனர். அக்கடிதத்தால் உண்மையை உணர்ந்த யூகி, தன் ஆருயிர் நண்பனுக்குற்ற நிலைக்கு மிகவும் வருந்தினான். "இவ்வாறு வஞ்சகம் செய்து நம் அரசனைப் பிடித்த பிரச்சோதனனை வஞ்சகத்தால் வெல்லுவதே தக்க உபாயம்" என்று நினைந்து தன் நண்பர்களை நோக்கி, "கள்ள யானையால் மயக்கி எம் அரசனைப் பிடிப்பித்த பிரச்சோதனனுடைய நகரத்தை யான் ஒரு யானையாலேயே அழிப்பித்து உதயணனை மீட்பதல்லாமல் உச்சைனி நகரத்தைத் தீக்கிரை

யாக்கியும், அவனைக்கொண்டு பிரச்சோதனன் மகளாகிய வாசவதத்தையைப் பிரித்தும், அவள் தந்தை யறியாமல் அவளை வலிந்துகொண்டுவரச் செய்தும் அவனுக்கு அவளை மணம் செய்விப்பேன்" என்று சபதம் செய்தான்.

பின்பு அவன் வைசாலி நகரத்தையும் கௌசாம்பி நகரத்தையும் பிற இடங்களையும் பாதுகாத்து வரும்படி அங்கங்கே தன் நண்பர்களையும், சுற்றத்தாரையும் நியமித்துத் தன் எண்ணத்தை முடிப்பதற்குரிய உபாயங்களையெல்லாம் செய்யலானான்; "உதயணனுடைய பிரிவினால் வருந்திய யூகி இறந்துவிட்டான்" என்ற ஒரு செய்தியை எல்லா நாடுகளிலும் நகரங்களிலும் பரவச் செய்தனன். பின்பு அவன் ஒருவருக்கும் தெரியாதபடி தான் மறைந்துநின்று ஒரு பிணத்தைத் தன்னுடைய பிணமாகப் பிறர் நினைக்கும்படி செய்து அதற்குத் தன்னுடைய அணிகலம் முதலியவற்றை யணிவித்து, அதைச் சுடுவிக்கும்படி செய்தான்; தான் மாறு வேடம்பூண்டு அப்படியே வேறு வேடம்பூண்ட பல வீரர்களோடும் வயந்தகன் முதலிய தோழர்களோடும் உச்சைனியை அடைந்தான்; அதன் புறத்தேயுள்ள தனியிடமொன்றில் இருந்து மேல் நிகழ்த்தவேண்டியவற்றை எல்லோருக்கும் தெரிவித்துப் பிரச்சோதனனது அரண்மனையிலும், நகரத்தின் உள்ளும், வெளியிலும், அயலூர்களிலும் பிறர் அறியாதபடி அவ்வவ்விடத்திற்கேற்ற வேலைகளைப் பெற்று இருந்துவரும் வண்ணம் சொல்லி அவர்களை அனுப்பினான்; தான்மட்டும் அந்த நகர்ப்புறத்தேயுள்ள மாகாளவனத்தே யிருக்கும் காளிகோயிலிலிருந்து மேல் ஆகவேண்டியவற்றை முதலில் ஆராய்ந்தான்.

யூகி இறந்துவிட்டானென்ற செய்தியைக் கேட்ட பிரச்சோதனன் மிக்க மகிழ்ச்சியுற்றுப் போருக்குச் சென்ற சேனைகளை வைசாலியினின்றும் வருவித்துக் கவலை நீங்கி, உதயணனுடைய நாடுகளிற் சில பகுதிகளையும் வலிந்து கைப்பற்றினன். உதயணனது நாட்டை ஆருணியென்பவன் கைப்பற்றி அரசாளத் தொடங்கினான்.

யூகியோ உச்சைனியின் புறத்தேயுள்ள ஓர் ஊரை அடைந்து அங்கே ஒருவரும் இல்லாத பாழ் வீடொன்றில் அன்பர்களுடன் இருந்து ஆலோசித்து வேறு பாஷைகளை அவர்களுக்குக் கற்பித்துக் கடைவீதி முதலிய இடங்களில் வியாபாரம் முதலியவற்றைச் செய்யும்படி அவர்களை யனுப்பினான். அங்ஙனம் அனுப்பப்பட்ட அன்பர்களிற் சிலர் ஊமை வேடமும், சிலர் செவிடர் வேடமும் தரித்துக்கொண்டு அரண்மனையிலும், வேறு இடங்களிலும் தாம்தாம் செய்தற்குரிய வேலைகளைப் பெற்று அவற்றை நன்கு செய்பவர்களாகி அப்பொழுதப்பொழுது அங்கங்கே நிகழும் செய்திகளையும், ஆண்டுள்ளார் செய்யும் ஆலோசனைகளையும், ஒவ்வொன்றாக அறிந்துவந்து யூகிக்குச் சொல்வாராயினர். பிரிந்தவர்கள் ஒருங்கு சேர்வதற்கும், சேர்ந்தவர்கள் பிரிந்து செல்வதற்கும் சில குறிப்பொலிகளும், குறிப்புக்களும் யூகியினால் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தன.

ஒருநாள் யூகி மிக்க நோயுடையவன் போலவும், தெய்வாவேசங்கொண்டவன் போலவும் தன்னைக் காட்டிப் பல சனங்கள் வியந்தும், பயந்தும், இரங்கியும் தன்னைச் சூழ்ந்து வர நடித்துக்கொண்டும், பாடிக்கொண்டும் உதயணன் இருக்கும் சிறைச்சாலையின் பக்கத்தை யடைந்தான். அப்போது உதயணனும் தானுமே கற்றதும் பிறர் அறியாததுமானதொரு பாட்டைப் பாடினன்; கேட்ட உதயணன் யூகி வந்துள்ளானென்று அறிந்து மகிழ்ந்து கவலை தீர்ந்து தான் அங்கிருத்தலை வேய்ங்குழலை ஊதி அவனுக்குத் தெரிவித்தான்.

பின்பு யூகி, "இனி உதயணனைச் சிறையினின்றும் விடுவித்தற்கு உரிய உபாயம் யாது?" என்று தன்னுள் ஆராய்ந்தான்; ஒருநாள் நள்ளிரவிலே அவன் பேய் வடிவங்கொண்டு பிறர் அறியாமல் நகரத்துள்ளே சென்று, குணம் சிதைந்து, கெட்டு மயங்கித் திரிந்து பிறரை வருத்தும்படியாகப் பிரச்சோதனனது பட்டத்து யானையாகிய நளகிரிக்கு ஒருவகை மருந்தைக் கொடுத்து மதத்தை

உண்டாக்கினான்; பின்பு அதனருகிற் சென்று, "இந்நகரத்தை யழித்து அரசன் முதலியோர்களுக்குக் கவலை உண்டாகும்படி செய்து உதயணனைச் சிறையினின்றும் நீக்குவது உன்னுடைய கடன்" என்று சொல்லி உச்சாடன மந்திரமொன்றை அதன் செவியில் ஓதினான். உடனே அது மிகுந்த கோபமுற்று மதவெறிகொண்டு கட்டுத்தறியை முறித்துத் தன்னைக் கட்டிய சங்கிலியையும் அறுத்துவிட்டுப் பெருமுழக்கம் செய்துகொண்டு, சுழன்று சுழன்று ஓடி ஓடி ஊரை அழிக்கத் தொடங்கியது. அதனை அடக்குவதற்குச் செய்த முயற்சிகள் யாவும் வீணாயின.

அதன்நிலை கண்டு கலங்கிய பிரச்சோதனன், "இந்தத் துன்பத்தினின்றும் விடுபடும் வழி யாது?" என்று ஆலோசிக்கலானான். அப்பொழுது மந்திரிகள், "உதயணன் தன் யாழின் வன்மையால் எத்தகைய யானையையும் வசியப்படுத்தும் ஆற்றலை யுடையவன். அவனைக்கொண்டு இதனை அடக்குவதையன்றி வேறு வழியில்லை" என்றார்கள். அது கேட்ட அரசன் உதயணனது சிறையை நீக்குவித்துத் தக்க உபசாரங்களோடும் மரியாதையோடும் அழைத்து வந்து தன் விருப்பத்தை வெளியிடச் செய்தான். உதயணன் மிக மகிழ்ந்து பகையரசனென்றும் பாராமல் தன் யாழை வாசித்து அந்த யானையை அடக்கினான். அதனால் பெருமகிழ்ச்சியுற்ற அரசன் உதயணனுக்கெனத் தனியே ஒரு மாளிகையை அமைக்கச் செய்து அதில் அரசர்களுக்கேற்ற ஏவலாளர்களை ஏற்படுத்தி உதயணனை அதிலே தங்கியிருக்கும்படி செய்தான். பிரச்சோதனனுடைய வேண்டுகோளின்படி உதயணன் அங்கேயிருந்து அவன் மகளாகிய வாசவதத்தைக்கு யாழையும், அவன் குமாரர்களுக்குப் படைக்கலப் பயிற்சியையும் கற்பித்து வந்தான். அக்காலத்தில் வாசவதத்தையும், உதயணனும் ஒருவரையொருவர் நேசித்தனர். வாசவதத்தை யாழ்வித்தையிலும், அவளுடைய சகோதரர்கள் படைக்கலப் பயிற்சியிலும் சிறந்த தேர்ச்சி பெற்றனர். ஒருநாள் அவர்களுடைய பயிற்சித்

திறனை யாவரும் அறியும்படி அரங்கேற்றம் நடந்தது. அப்பொழுது உதயணன் சிறிதேனும் பகைமை பாராட்டாது சிறந்த படைப் பயிற்சியைத் தன் புதல்வர்களுக்குக் கற்பித்திருத்தலை உணர்ந்த பிரச்சோதனன் மனங்கனிந்து அவ்வுதயணனைப் பாராட்டினான். பிறகு ஆருணியை வென்று உதயணனைக் கௌசாம்பி நகரத்திற்கனுப்பி முடிசூட்ட எண்ணி அதற்கு வேண்டியவற்றைச் செய்யத் தொடங்கினான்.

அச்செய்தியைக் கேள்வியுற்ற யூகி, "உதயணன் கௌசாம்பிக்கு இப்போது செல்வானாயின் முன்னமே நாம் செய்த சபதம் நிறைவேறுமற்போம். ஆதலால், இதனை இப்பொழுது நடைபெறுமற் செய்வித்து நம்முடைய சபதத்தை நிறைவேற்றுதல் இன்றியமையாதது" என்று தன்னுள் நிச்சயித்தான். உடனே குறி சொல்பவளாகிய பாகீரதி யென்னும் ஒருத்தியை வருவித்துச் சில செய்திகள் கூறி ஏவினான். அவனது ஏவலின்படியே அவள் நகருள் சென்று தெய்வாவேசம் உடையவள் போல யாவரும் கேட்கும்படி, "சென்ற ஆண்டில் நீர்விழாவை இந் நகரத்தார் செய்யாமல் நிறுத்திவிட்டனர்; அதனாலே கோபமுற்று முன்பு நளகிரியால் ஊரை அழிக்கும்படி செய்த தெய்வம் யான்; இப்பொழுதும் அவ்விழாவை நீங்கள் செய்யீராயின், பழையபடியே தீங்கு விளைவிப்பேன்" என்று கூறினாள். அவள் கூற்றைக் கேட்ட மாந்தர் அதனை அரசனுக்குத் தெரிவித்தனர். அவனுடைய கட்டளையின்படி யாவரும் நீர் விழாவை நடத்தலாயினர்.

ஊரினர் யாவரும் நீர்த்துறைக்குச் சென்றனர். வாசவதத்தையும் சென்றிருந்தனள். அப்பொழுது உதயணன் பத்திராபதி என்னும் பெண் யானையின்மேல் ஏறி அங்கே நடைபெறும் காட்சிகளைப் பார்த்துக்கொண்டே வரலாயினன்.

யூகி வயந்தகனிடம், "உதயணன் இப்போது பிரச்சோதனனுடைய பாதுகாப்பில் உள்ளானாயினும், பாம்

பைப் போலச் சமயம் பார்த்துப் பகையை வெல்லுதல் அரசர்க்குக் கடமையாதலாலும், தான் பத்திராபதியின் மேல் ஏறியிருத்தலாலும், வாசவதத்தை தனியே நீராடுதலாலும் அவளைக் கைப்பற்றி அந்த யானையின்மேல் ஏற்றிச் செல்லுதற்குரிய சமயம் இதுவேயாம்; முன்னமே என்னால் நியமிக்கப்பட்ட சில கள்ள மகளிர் விரைவில் அந் நகரத்தைத் தீக்கு இரையாக்குதல் கூடும்; அங்கே புகை தோன்றியவுடன் சிறிதும் தாமதமின்றி வாசவதத்தையை யானையின்மீது ஏற்றிச் செல்வானாக; ஏற்றியவுடன் தடுக்கவந்த பிரச்சோதனனுடைய வீரர்களை, நாற்றிசைகளிலும் மறைத்துத் திரிதரும் நம் வீரர், 'வாழ்க உதயணன்' என்று கூறிக்கொண்டும் அங்கங்கே மரப்பொந்து முதலியவற்றில் ஒளித்து வைத்திருக்கும் ஆயுதங்களை வெளிப்படையாகத் தாங்கிக்கொண்டும் போர் செய்து தொலைத்துவிடுவார்கள். அதுபற்றிய கவலை தனக்குச் சிறிதும் வேண்டாம்; வாசவதத்தை முதலியவர்களுடன் அங்கே வந்தாற் பாதுகாத்து வரும்படி அவ்விடமுள்ள வேடர்களின் தலைவனும் என்னுடைய நண்பனுமாகிய ஒருவனிடம் முன்னமே சொல்லி வைத்திருக்கிறேன்; அவன் பாதுகாப்பான்; யான் எண்ணித் துணிவது எந்தக் காரியமாயினும் தீதின்றி நிறைவேறு மென்பதை இதன் முகமாகத் தெளிக; யூகி என்னும் பெயர் பரவும்படி மான் கூட்டத்திற் புலி புகுந்தாற்போலப் பகைவருடைய வீரரை வாளால் வீழ்த்திவிட்டு விரைவில் தன்னிடம் வந்து சேருவேன். யான் சொல்லியவண்ணம் செய்யாவிட்டால் அரசாட்சியைத் தான் இழந்துவிடுதல் நிச்சயம்" என்று சொல்லி அனுப்பினான். வயந்தகன் வந்து அதனைத் தெரிவிக்க உதயணன், "அவனும் யானும் உயிரோடிருப்பின் வானுலகத்தையும் வணங்கச் செய்வோம்" என்று சொல்லி வாசவதத்தை நீராடும் பெருந் துறையை அடைவானாயினன்.

அப்பொழுது யூகியின் ஏவலினால் அக்கூட்டத்தில் மாறு வேடம் புனைந்திருந்த வீரர்கள் ஆண்டுள்ளாரோடு போர்

செய்யத் தொடங்கினர். நகரத்திலும் அவனுடைய ஏவ லின்படியே தீவைக்கப்பட்டது. ஊரினர் யாவரும் நிலை குலைந்து, "இனி என் செய்வோம்?" என்று தத்தளிக்க லாயினர்.

இதனை யறிந்த உதயணன் வாசவதத்தையைப் பத்தி ராபதியின்மேல் ஏற்றிக்கொண்டு கௌசாம்பியை நோக்கி விரைவாகச் செல்லத் தொடங்கினான். பிரச்சோதனனு டைய வீரர்கள் அதனை உணர்ந்து அவனைத் தடுத்தும் அவன் அவர்களைப் பின் தங்கச்செய்து யானையின்மீது முடுகலாயினன். யூகியால் அங்கங்கே இருத்தப்பட்ட வீரர் களும் பிரச்சோதனனுடைய வீரர்களை வெட்டி வீழ்த் தினர். அந்தச் சமயத்தில் யூகி, இயல்பான உருவமுடைய வனாகி வெளிப்பட்டுத் தன்னை எதிர்த்தவர்களை எளிதிற் கொன்றுவிட்டு, அதிவேகமாக உதயணனை அடைந்தான். வந்து அரசனை நோக்கி, "விரைந்து செல்க; வெற்றி உண் டாகுக" என்றனன்.

உதயணன் யூகியினுடைய ஆலோசனையின் மேம்பாடும் அவற்றாலுண்டாகிய இன்பமும் தன் உள்ளத்தை நிரப்பத் தனக்காகவே இமையவர் நிருமித்துத் தந்தாற்போன்ற அந்தப் பிடியைச் செலுத்தத் தொடங்கினான்.

பத்திராபதியை உதயணன் செலுத்திக்கொண்டு போகும் வழியிலே நேர்ந்த பல இடையூறுகளையெல்லாம் கடந்து செல்லும்போது அவ்யானை இறந்துபட்டது. அதன் பின் சில மறவர்கள் அவனைச் சூழ்ந்துகொண்டனர். அச் சமயம் அங்கு வந்து சேர்ந்த தன் நண்பர்களுடைய உதவி யால் அம்மறவர்களை வென்று உதயணன் வாசவதத்தை யுடன் சயந்தியென்னும் நகரத்தை யடைந்தான். அந் நகரத்திலே அவ்விருவர்களுக்கும் மிக்க சிறப்பாக மணம் நடைபெற்றது.

சயந்தி நகரத்தில் வாசவதத்தையும் உதயணனும் இன் புற்று வாழ்ந்து வந்தார்கள். அப்பொழுது உச்சைனி நகரத்தில் இருந்த யூகியோ மேல் ஆகவேண்டியவற்றை நாடி

னுகித் துறந்தோர்களின் வேடம் பூண்டு நகரத்தாருடைய மனங்களைக் கவர்ந்து காரியங்களை முடிப்பவர்களாய்ச் சென்று முனிவர் ஆச்சிரமங்களில் இருக்கும் தன் தோழர்களைக் கண்டு அங்குள்ள முனிவர் தெரிந்துகொள்ளாதபடி வேற்ருன்போலத் தன்னைக் காட்டி அவர்களிடம் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லி உதயணன்பாற் சொல்லும்படி அனுப்பினன். பின் ஆண்டுள்ள முனிவர்களுடன் சமய விகற்பங்களையும் நீதிகளையும் பகற்கால முழுவதும் பேசிக்கொண்டே யிருந்து இரவிற் புறப்பட்டுப் புட்பகமென்னும் நகரத்தை யடைந்தான். அங்கே உதயணனுக்கும் யூகிக்கும் நண்பனுகிய இடவகனென்பான் இருந்தான். அவன் வாயிலாக யூகி உதயணனது செய்தியை அறிந்து மகிழ்ந்தான்.

உதயணன் வாசவதத்தையோடு பொழுதுபோக்குவதிலே ஈடுபட்டுத் தனது நாட்டைப் பகையரசன் கைப்பற்றியதைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை; மீட்டும் அதனைக் கைக்கொள்ள வேண்டுமென்பதையும் நினைத்திலன். அவனது நிலையை உணர்ந்த யூகி அவனை மீட்டும் கௌசாம்பியின் அரசனுக்குதற்குரிய வழியை ஆராய்ந்தான்.

அப்பால் அவன் தான் இறந்துவிட்டதாக ஒரு பொய்ச் செய்தியை மீட்டும் வெளிப்படுத்தி உதயணனும் அதனை அறிந்துவரும்படி செய்வித்தான். உதயணனிடமிருந்து வாசவதத்தையைச் சிலநாள் பிரித்து வைப்பதற்கேற்ற சூழ்ச்சியை ஆராய்ந்து தன் நண்பர்களிடம் வெளியிட்டான். அதன்படியே வாசவதத்தை இருந்த இடத்துக்கும் யூகியுள்ள விடத்துக்கும் ஒரு சுருங்கை அமைக்கப்பட்டது. ஒருநாள் உதயணன் வெளியே சென்று வேட்டையாடுகையில் வாசவதத்தையின் அந்தப்புரத்தில் தீ வைக்கச் செய்து சுருங்கை வழியே யூகி அவளைத் தான் உள்ள இடத்திற்கு அழைத்துவரச் செய்தான். அவளை நோக்கி, "தாயே! கேட்டருள்க. உன் தந்தை சேனைகளின் இடையே உதயணனைச் சிறைப்படுத்தித் தலையிட்டமையால், பாஞ்

சாலராயன் கௌசாம்பி நகரத்தைக் கைப்பற்றிக்கொண்டான். அதனை யறியாத உன் தலைவன் யாதொன்றையும் நினைத்தலின்றிக் கவலையற்று உன்னுடன் இடைவிடாமல் உறைவானாயினான். பகைவனைக் கொன்று அவனை நல்ல பதவியில் நிறுத்தவேண்டுமாயின் நீ சிலநாள் பிரிந்துறைதல் வேண்டும். ஆதலால் உங்கள் குடிக்கு வந்த சிறுசொல் நீங்கும்படி ஆவதைச் சொல்லும் உயிர்போன்ற என்னை நோக்கியும் நிலம்புடை பெயரினும் விசும்பு வந்திழியினும் சிறிதும் கலங்காத நின் கடவுட் கற்பை நோக்கியும் இந்த வரத்தை அருளிச்செய்ய வேண்டும்" என்று யூகி மிகவும் இரந்து வேண்டினன்.

யூகி கூறிய நியாயங்களை யெல்லாம் அவள் உட்கொண்டவளாயினும் உதயணன் பிரிவை நினைந்து முதலில் வருந்தி அப்பால், 'இவன் எண்ணியது உறுதி பயப்பதாகும்' என்று துணிந்து, "என் இறைவன் முன்பு மாய யானையாற் சிறைப்பட்டபொழுது உன்னுடைய தந்திரத்தால் மீட்டனை! நீ வேண்டியதைச் செய்வாயாக" என்று அவனுக்கு உபசார மொழிகளைக் கூறி ஒருவாறு கவலை யொழிந்திருந்தனள். அப்பால் யூகி வாசவதத்தையையும் வேறு நண்பர் சிலரையும் அழைத்துக்கொண்டு சண்பை யென்னும் நகரத்திற் சென்று மறைவாகக் காலங்கழிப்பானாயினன். உதயணன் வாசவதத்தையின் பிரிவினால் மிக வருந்தி யிருந்தான்.

கௌசாம்பி நகரத்தைக் கைப்பற்றிய பாஞ்சால அரசனாகிய ஆருணி யென்பவன் யூகி இறந்த செய்தியையும் வாசவதத்தையை இழந்தமையால் உதயணன் மெலிவுற்றிருத்தலையும் அறிந்து பெருமகிழ்ச்சி யடைந்திருந்தனன். அதனை யறிந்த உதயணனுடைய நண்பர்களிற் சிலர், "இனி மகத மன்னனோடு நட்புப்பூண்டு அவனுடைய படைகளையுஞ் சேர்த்துக்கொண்டு பகைவனை வெல்லவேண்டும்" என்று உதயணனுக்குக் கூறினர். அவன், "யூகியையும் இழந்த பின்பு எனக்கு வேண்டுவது யாது?" என்று மறுத்

தனன். பின்பு நாளடைவில் நண்பர்கள் பலவகையில் ஆறுதல் கூறி அவனைத் தேற்றினர். உதயணனும் ஒருவாறு ஊக்கம் பெற்ருன்.

நண்பர்கள் உதயணனைக் கூட்டிக்கொண்டு மகதநாடு சென்று அந்நாட்டு அரசனுகிய தருசகனை எதிர்த்த அரசர்களோடு போர்செய்து வென்றனர். உதயணனுல் தனக்கு வெற்றியுண்டாகியதை யறிந்த தருசகன் மிக மகிழ்ந்து தன்னுடைய தங்கையை அவனுக்கு மணம் புரிவித்தான்.

உதயணன் மகத அரசனுடைய உபசாரங்களைப் பெற்று இருக்கையில் அவனுடனுறைந்த நண்பனுகிய வயந்தகனென்பவனுக்கு யூகி ஓர் ஓலையை விடுத்தான். அதில், "இனி தக்க படைகளைத் திரட்டிக்கொண்டு கௌசாம்பி சென்று பாஞ்சாலராயனுடன் போர்புரிந்து உதயணன் தன் நகரத்தைக் கைப்பற்றவேண்டும்" என்று எழுதியிருந்தான். அதனை யறிந்த வயந்தகனும் பிறரும் போருக்குரிய முயற்சிகளைச் செய்யலாயினர். நண்பர்களுடைய பேருதவியினுல் உதயணன் ஆருணி யரசனைப் போரிலே கொன்று தன் அரசை மீட்டும் கைப்பற்றிக்கொண்டான்.

ஆருணி யரசனுல் இடையே அமைக்கப்பட்ட புதிய கொடுங்கோல் முறைகளை யெல்லாம் உதயணன் அடியோடே அகற்றிச் செங்கோற் செல்வம் சிறப்பப் பல நன்மைகளைச் செய்தான்.

தான் மீட்டும் தன் அரசை யெய்தி வாழ்ந்திருப்பினும் உதயணனுக்கு வாசவதத்தையின் பிரிவும் யூகியின் பிரிவும் அவ்வாழ்வின் இன்பத்தை நுகராமற் செய்வித்தன. உடலெல்லாம் அணிகளை யணிந்தாலும் கண்கள் இலவாயின் அவ்வணிகளாற் பயன் யாது?

உதயணனது மெலிவை யூகி உணர்ந்து, "நாம் எண்ணிய் காரியம் நிறைவேறியது. நம் ஆருயிரன்பன் தன் பழைய நிலையை அடைந்தான். இனியும் அவனைப் பிரிந்திருத்தல் தகாது. அவனைப் பிரிந்து உயிரற்ற உடலைப்

போலத் தவிக்கும் வாசவதத்தையையும் இனி அவனோடு சேர்த்தல்வேண்டும்" என்று எண்ணினான்.

அதன்பின் ஒரு சோலையிலுள்ள மாடமொன்றில் யூகி தவக்கோலத்தோடு வந்திருந்தான். அருகிலுள்ள அறையில் வாசவதத்தை தங்கியிருந்தாள். "இந்தச் சோலையில் ஒரு முனிவர் வந்திருக்கிறார். அவர் இறந்தவரைப் பிழைப்பிக்கும் உபாயம் அறிந்தவர். அவரை நீயும் பார்க்கவேண்டும்" என்று நண்பர்கள் கூற, உதயணன் வந்து தவவேடம் பூண்டிருந்த யூகியைக் கண்டான்; அவனைக்கண்ட மாத்திரத்தில் சில அடையாளங்களால் அவன் யூகியே யென்பதை உணர்ந்தான். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?

இருவரும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டனர்; அன்பு வெள்ளத்தில் மூழ்கினர். உதயணன், "இனி எதைக் கருதியாவது நீ நீங்குவாயாயின், என் உயிர் நீங்கிவிடும்" என்று கதறினான்.

அப்பொழுது யூகி, "வாசவதத்தையை இவனுக்குக் காட்டவேண்டும்" என்று எண்ணி உள்ளேயிருந்த வாசவதத்தையை வருவித்தான். உதயணனும் வாசவதத்தையும் ஒருவரையொருவர் சந்தித்த காட்சியைக் கண்ட யாவரும் மனம் உருகி நின்றனர். வாசவதத்தை, "நமக்குப் பெரிய அனுகூலம் பிறக்குமென்பதை உணர்த்திநும் அன்பர் சொல்லியதை மேற்கொண்டு நுமக்கு அபசாரத்தைச் செய்தேன்" என்று நடுங்கி எழுந்து கைகுவித்துக் கண்ணீர் விட்டு உதயணனை வணங்கிக் கிடந்தனள்; உதயணன் அவளை யெடுத்துப் பலமுறை தழுவி அன்புரை கூறினன்.

சோலையிலிருந்து உதயணன் தன் அருமைத் தேவியோடும் ஆருயிர் நண்பனோடும் நகரத்துக்குட் புகுந்தான். அப்பொழுது நகரிலுள்ள குடிமக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

"கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ—பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்
கேதோ உரைப்ப னெதிர்."

நகரத்தார் தத்தம் மாடங்களின்மீது கொடியெடுத்து விழாவயர்த்தனர்; யூகியின் ஆற்றலையும் மதியூகத்தையும் ராஜதந்திரத்தையும் பாராட்டிப் பாராட்டி அவனை நாவார வாழ்த்தினர். வாசவதத்தையின் நிறையையும் வியந்தனர்.

உதயணன் பேரத்தாணியிற் பல பெரியோர் சூழ இருந்து யூகியை நோக்கி, "உச்சைனி நகரத்தில் நான் அடைந்த சிறைத் துன்பத்தை நீக்கிய பின்பு மீட்டும் உனக்கு நேர்ந்த மாயச் சாக்காட்டிற்கும் வாசவதத்தை தீயில் மாய்ந்தனளென்ற மாயச் செய்திக்கும் உரிய காரணங்களை விளங்கச் சொல்லவேண்டும்" என்று கேட்டான். யூகி அவற்றிற்குரிய காரணங்களைக் கூறி, "உன்னுடைய கட்டளையின்றி உரிமையால் யான் செய்தவற்றைப் பொறுத்தருளவேண்டும்" என்றனன். கேட்ட உதயணன், "என்னுடைய தலைமையை நான் அடையும்படி செய்தாயென்பதை அயலார் இருக்கும்பொழுது சொல்வேனாயின் அது வேற்றுமை பயக்கும்; யாம் இருவரும் ஒருயிரே" என்று முகமன் கூறினான்.

அதன்பின் உதயணன் சேதிநாட்டையும் வைசாலி நகரத்தையும் யூகிக்கு அளித்து அச்செய்தியை அந்நாட்டாரும் நகரத்தாரும் அறிந்துகொள்ளும்படி அங்கங்கே திருமுகமனுப்பித் தெரிவித்தனன். அவர்கள் தாம் பெறும்பேறு பெற்றாரைப்போலக் களித்தனர்.

சேதி நாட்டின் தலைமையை யூகி பூண்டு செங்கோல் செலுத்தி உதயணனுக்கு உயிர்த்துணையாக இருந்து வாழ்ந்து வரலானான். "யூகி யில்லையேல் உதயணன் இல்லை; உதயணன் இன்பமே யூகிக்கு இன்பம்" என்ற சொல் உலக முழுவதும் பரந்து விளங்கியது.

## 10. பணத்தின் வரலாறு

'பணம் பத்தும் செய்யும்' என்பது பழமொழி. இன்றைய உலகத்தில் பணம் மிகச் சிறப்பான நிலையை வகித்து வருகிறதென்பது யாவரும் அறிந்ததொன்றே. பணமதிப்பின் மாறுதலால் அரசியல் அழிவதையும், அதன் ஏற்றத் தாழ்வுகளால் உலகத்தின் செல்வநிலை மாறுபடு வதையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். அத்தகைய பணத்தின் வரலாற்றை அறிவது நமக்கு இன்பம் பயக் கும்.

இன்று நம் நாட்டில் பணமாக வழங்குவன செம்பு, நிக்கல், வெள்ளி இவற்றாலான நாணயங்களும், ஐந்துமுதல் லக்ஷம் ரூபா வரையிலுள்ள தாள் நாணயங்களும், எத் தகைய அளவுக்கும் செலாவணியாகக்கூடிய செக், உண்டி யல்கள் போன்றனவுமாகும். ஆனால் இவ்வாறு எப்பொழு தும் இருந்ததில்லை. மிகப் பழைய காலத்திய மக்கள் ஒரு வகைப் பொருள்களைக் கொடுத்து அவற்றிற்கு ஈடாக வேறு வகைப் பொருள்களைப் பெற்று வந்தனர். இதற்குப் பண்ட மாற்று என்று பெயர். இப்பொழுதும் கிராமங்களில் நெல், அரிசி இவற்றைக் கொடுத்துச் சாமான்கள் பெறுவதை நாம் காண்கிறோம்.

இவ்வாறு செய்வதிற் பல இடையூறுகள் நேர்ந்தன. கொடுக்கல் வாங்கலாகிய தொழில்களைச் செய்யும் இருதிறத் தார்க்கும் அப்பொருள்கள் தேவையாயிருந்தாலன்றிப் பண்டமாற்று நிகழாது. மற்றும் ஆதிகாலத்திலே அவரவர் களும் தத்தமக்கு வேண்டிய பொருள்களைத் தாமே செய்து கொண்டமையால் அயலாரிடமிருந்து வாங்கவேண்டியன மிகக் குறைவாகவே யிருந்தமையால் பண்டமாற்றில் அதிக மான கஷ்டம் ஏற்படவில்லை. பிறகு நாளடைவில் எல்லோ ரும் எல்லாவற்றையும் செய்துகொள்வதென்பது குறைந்து, சிலர் சிலவற்றைச் செய்வதும் வேறு சிலர் வேறு சிலவற் றைச் செய்வதுமாகிய தொழிற்பிரிவினை ஏற்படலாயிற்று.

இவ்வாறு செய்வதால் தாம் செய்யும் பொருள்களை விற்றே தமக்கு வேண்டிய பலவற்றையும் பெறவேண்டியவர்களாயினர். இதனுல் வியாபாரம் வளரலாயிற்று; ஆகவே பண்டமாற்றுல் உண்டாகும் துன்பங்கள் அதிகரித்தன. ஆகவே ஒவ்வொரு தொழிலாளியும், தன்னுல் செய்யப்படும் பொருள்களையன்றி, யாரும் தன் பொருளுக்கு ஈடாக ஒப்புக்கொள்ளக்கூடிய வேருெரு பொதுப்பொருளை வைத்துக்கொண்டிருப்பது இன்றியமையாததாயிற்று.

இவ்வாறு விற்பவர் எவரும் ஏற்றுக்கொள்ளத்தக்கதும், அவர்களிடமிருந்து இலகுவில் செலாவணி ஆகக்கூடியதுமான ஒரு பொதுப் பொருளைக் கண்டறிவது இலகுவான காரியமாக இல்லை. ஒவ்வொரு கூட்டத்தார் ஒவ்வொரு வஸ்துவைப் பொதுப்பொருளாக உபயோகித்து வந்தனர். உதாரணமாக, கிரேக்கர் எருதுகளையும், அபிசீனியர் உப்பையும், நியூபவுண்ட்லாந்துக்காரர் காய்ந்த மீனையும், வர்ஜீனியா நாட்டினர் புகையிலையையும், நம் தேசத்தினர் சோழியையும் உபயோகித்து வந்ததாக அறிகிறோம்.

இவைகளும் பல இடர்ப்பாடுகளை விளைவித்திருக்க வேண்டுமென்றே? காளைகள் மூப்பினுல் மதிப்பிழக்கின்றன; உப்பு முதலியன சிறிய அளவிலிருக்கும்வரை துன்பந்தரா; பெரிய மதிப்புக்களுக்கு உப்பு எவ்வாறு மாற்றுப் பொருளாகும்; மீன் முதலியன் காலத்தாற் கெடும். ஆகவே மக்கள் பலவாறு முயன்று கடைசியாக உலோகங்களை இப் பொதுப் பொருள்களாக உபயோகித்தலை அறிந்திருக்க வேண்டும்.

உலோகங்கள் அழியமாட்டா; வேண்டிய அளவிற்கு அவற்றை நறுக்கிக்கொள்ளலாம்; ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு அவற்றை எடுத்துச் செல்வது இலகுவான காரியம்; அவற்றின் பளபளப்பு, அவைகளை மதிப்புள்ள பொருள்களாகக் கருத உதவுகின்றது. ஆதலால் மக்கள் உலோகங்களைக் கண்டறிந்தவுடன் அவற்றை விலையை

யளக்கும் பொதுக் கருவிகளாக உபயோகிக்கத் தொடங்கினுர்கள்.

வெள்ளி, தங்கம்போன்ற உலோகங்கள் முதலில் கட்டிகளாகவே உபயோகிக்கப்பட்டன. சிலவிடங்களில் ஆற்று மணலிலிருந்து வடித்தெடுக்கப்பட்ட தங்கப் பொடிகள் சிறிய முடிப்புக்களாகக் கட்டப்பட்டு அம்முடிப்புக்கள் நாணயங்களாக வழங்கின. இவற்றைக் கையாளுவதிலும் பல குறைகள் காணப்பட்டன; கட்டிகள் அல்லது முடிப்புக்களின் நிறையை ஒவ்வொரு தடவையும் நிறுத்துப்பார்ப்பதென்பது மிகுந்த காலதாமதத்தை உண்டாக்கியது; மேலும் வெள்ளி, தங்கம் இவற்றின் மாற்றுக்களை ஆராய்ந்து அறிவதுமிகவும் சங்கடமாயிற்று; இவற்றை நீக்கச் சில அரசர்கள் உலோகக் கட்டிகளை ஒரே நிறையுள்ளனவாக நறுக்கி அவற்றின்மேல் தங்கள் முத்திரையை இட்டனர். இம்முறை சிலகாலம் சரியாக நடந்தது; ஆனுல் ஒரு கட்டியிலிருந்து சிறிதளவு உலோகத்தைச் சுரண்டி எடுத்தாலும், அல்லது போலி உலோகங்களைக் கட்டிகளாக்கி அரச முத்திரைபோலப் போலி முத்திரைகளை யிட்டாலும் நாணயத்தின் தன்மை கெட்டுவிடும்; ஆகவே இத்தகைய ஏமாற்றங்களைச் செய்பவர்களைக் கடுமையாகத் தண்டிக்கச் சட்டங்கள் ஏற்பட்டன; சிலவிடங்களில் இத்தகைய குற்றத்திற்குக் கொலைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

ஆனுல் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது அரிது; நாணயங்கள் கைமாறிக்கொண்டே செல்லுமாதலால் மோசஞ் செய்பவர்கள் எளிதில் தப்பித்துக்கொள்வார்கள். அதனைத் தடுத்து மக்களிடம் நல்ல நாணயங்களைக் கொடுக்கத் துரைத்தனத்தார் ஒன்றன்பின் ஒன்ருய்ப் பலவித நாணயங்களைச் செய்து பார்த்துக் கடைசியாக இப்பொழுது இருப்பதுபோல அவற்றை வட்டமாகச் செய்து இருபுறங்களிலும் முத்திரையிட்டனர். ரூபாய், பவுன்போன்ற உயர்ந்த விலையுள்ள நாணயங்களின் ஓரங்களில் மெல்லிய

கோடுகளையும் அமைத்தனர். நாணயம் செய்யும் உரிமையையும் அவர்கள் தங்கள் கையிலேயே வைத்துக்கொண்டனர்.

நம் நாட்டில் வெள்ளி, நிக்கல், செம்பு இவற்றால் நாணயங்கள் செய்யப்படுகின்றன. இவற்றுள் ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் உள்ள சம்பந்தத்தையும் துரைத்தனத்தார் சட்ட மூலமாகத் திட்டப்படுத்தியிருக்கின்றனர். அவர்களே நாணயச்சாலைகளை வைத்துக்கொண்டு கட்டி வெள்ளி கொண்டுவந்து கொடுப்பவர்களிடமிருந்து சிறிதளவு கூலி பெற்றுக்கொண்டு அவ்வெள்ளியையே நாணயங்களாக அடித்துக்கொடுத்து வந்தனர். அப்படிச் செய்வதில் இவ்வளவுதான் நாணயம் அடிக்கப்படவேண்டுமென்ற நியதி ஏற்படாமலிருந்தது. வெள்ளியும் அதிகமாக நாணயம் செய்வதிலேயே செலவிடப்பட்டு வந்தது.

ஆதலால் ஜனங்களிடமிருந்து வெள்ளியைப் பெற்று நாணயங்கள் அடிப்பதை நிறுத்தி, நாணயங்களின் அளவையும் திட்டப்படுத்திக்கொண்டு துரைத்தனத்தார் தாமே அவற்றை அடித்து வெளியில் விடலாயினர். மேலும் முழு எடையையும் வெள்ளியாகவே உபயோகிப்பதைக் காட்டிலும் சிறிதளவு மட்டமான உலோகத்தைக் கலந்து நாணயம் அடித்து, அந்நாணயங்களை எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று சட்டமிடுவதில் நன்மையுண்டு என்பதை அவர்கள் உணர்ந்து அவ்விதமே செய்யலாயினர். அப்படிச் செய்வதால் மக்கள் நாணயத்தை வீணாக உருக்க மாட்டார்கள்; அதனால் கிடைக்கும் மிகுதி வெள்ளியைக் கொண்டு நாட்டின் வளனை வளர்க்கலாம். இப்பொழுது உபயோகத்திலிருக்கும் வெள்ளி ரூபாய் நூற்றெண்பது தானியமணி எடை அல்லது ஒரு தோலா நிறையுள்ளதாக இருக்கிறது; அதனில் சுத்த வெள்ளி 165 தானியமணி எடை; பிற வேறு தாழ்ந்த உலோகங்களின் கலப்பு. ஒரு தோலா கட்டி வெள்ளியின் விலை இன்று ஒன்பது அணா என்றாலும், ஒரு தோலாவிலும் குறைந்த நிறையுள்ள

வெள்ளியாலாக்கப்பட்ட ரூபாயின் மதிப்பு ஒரு ரூபாயே யாகும்.

ஏராளமான பணத்தை ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்துக்கு எடுத்துச் செல்வதில் மிகுந்த கஷ்டமுண்டென்பதை எவரும் அறிவர். செல்வாக்குடையவராகிய ஒருவர் மற்ருெருவருக்குப் பணம் கொடுப்பதற்குப் பதிலாக ஒரு காகிதத்தில் இவ்வளவு பணம் தருவதாகக் குறித்துக் கையெழுத்திட்டால் அதை முணுமுணுக்காமல் அம்மற்ருெருவர் பெற்றுக்கொள்ளுகிருர் அல்லவா? அதைப்போலவே துரைத்தனத்தார் பணமாகக் கொடுப்பதற்குப் பதிலாக ஒரு காகிதத்தில் ஒரு தொகையைக் குறித்துக் கையெழுத்தும் முத்திரையும் இட்டு, 'இதனைக் கொண்டுவருபவரிடம் இதனிற் குறிக்கப்பட்ட தொகையைக் கேட்ட உடனே கொடுப்போம்' என்றெழுதிக் கொடுத்தால் அதனை எவரும் வாங்கிக் கொள்ளப் பின்வாங்காரன்ருே? காகிதத்தைக் கொடுத்துப் பணம் பெறுவதில் கஷ்டமிராது என்பதை ஜனங்கள் தெரிந்துகொண்டுவிட்டால் பாரமான ரூபாய்களைக் கட்டிச் சுமப்பதைவிட மெல்லிய காகிதங்களைப் பெற்றுக்கொள்வதில் இன்பமே யுறுவர். இந்நுட்பத்தை யறிந்து சிறிய தொகைகள் முதல் பெரிய தொகைகள் ஈருகத் துரைத்தனத்தார் காகிதப் பணத்தை வெளியிட்டு அவற்றைச் சட்டப்படி எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டிய நாணயமாகச் செய்தனர். வெளியிலே செலாவணிக்காக விடும் காகிதப் பணத்திற்கு ஈடாகத் தங்கம் வெள்ளி இவற்றைக் கட்டியாக வைத்துக்கொண்டனர். இதனுல் வீணுக அதிக உலோக நாணயமிடும் தொல்லை நீங்கிற்று. மக்களுக்கும் ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்துக்கு இலகுவில் அனுப்பக் கூடிய ஒருவகைப் பணம் உண்டாயிற்று.

இவ்வாறு சிறிதுகாலமாக ஜனங்கள் கூசாமல் காகிதப் பணமான நோட்டுக்களைக் கையாளத் தொடங்கினுர்கள்; பெரிய தொகைகள் வேண்டிய இடங்களில் அவர்கள் உலோக நாணயங்களைவிடக் காகிதப் பணத்தையே விரும்

பினர். இவற்றிற்கு ஈடாக வைக்கப்பட்டிருந்த தங்க வெள்ளிக் கட்டிகள் பயன்படாமல் சுமையாய்க் கிடந்தன. அந்நிய நாடுகளுடன் வியாபாரம் செய்யவும், வேறுபல காரியங்களுக்காகப் பணம் அனுப்பவும் வேண்டி வருங் காலங்களில்—அவர்கள் காகிதப் பணத்தை ஒப்புக்கொள்ள மாட்டார்களாதலால்—வேண்டிய அளவு உலோகக் கட்டிகளை அனுப்பமுடியாவிட்டால் வியாபாரம் முடைப்பட்டு, விலைவாசிகள் ஏறுமாதலால் துரைத்தனத்தார் வீணுக உறங்கிக்கொண்டிருக்கும் கட்டிகளிற் சிலவற்றை அக்காரியங்களுக்கு உபயோகப்படுத்தலாயினர். அதனுல் முன்பு காகித நாணயங்களுக்குச் சரிக்குச் சரி மதிப்புள்ள உலோகக் கட்டிகளை ஈடாக வைக்கும் எடையில் சிறிதளவு குறைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. அதன் அளவுகளையும், காகிதப் பணத்தின் வெளியீட்டின் அளவையும் சட்டப்படி இவ்வளவென்று தீர்மானித்துக்கொண்டிருத்தலால் அவற்றை அடிக்கடியும் இஷ்டப்படியும் மாற்றுதல் கூடாத காரியம். இப்பொழுது அரசாங்கத்தின் நாணய அதிகாரத்தை 'ரிஸர்வ் பாங்க்' என்ற நிதிச்சாலையின் வழியாகச் செய்கிறுர்கள்.

நல்ல நிதிச்சாலைகள் இருப்பது நாட்டிற்கு நல்ல வளமைக்கு அறிகுறி. ஒரு நாட்டின் பெருமையும் முன்னேற்றமும் அதன் செல்வ நிலையைப் பொறுத்திருப்பதால், அச் செல்வத்தைப் போற்றும் நிதிச்சாலைகளை நாட்டின்வளம் பொறுத்திருக்கிறதென்பது பிழையாகாது.

நிதிச்சாலைகள் மற்ருெரு வகையிலும் மக்களுக்குப் பயன்படுகின்றன. அதனில் ஒருவர் பணம்போட்டு வைத்திருப்பதாக எண்ணிக்கொள்வோம். அவர் தம் வேலையாளுக்குச் சில ரூபாய்கள் சம்பளம் கொடுக்கவேண்டியவராயிருந்தால் அந்நிதிச்சாலைக்கு ஒருத்திரவு அனுப்பினுல் அவர்கள் அக்கனவானின் சேமநிதியிலிருந்து குறித்த பணத்தைக் கொடுத்துவிட்டுக் கணக்கிற் பதிந்துகொள்வர். இம்மாதிரி கொடுக்கப்படும் உத்தரவுச் சீட்டுகளுக்கு,

'செக்' என்று பெயர்; இவற்றை 'உண்டியல்' என்றும் சிலர் வழங்குவர். இவ்வாறு நமக்குப் பணத்தைக் காவல் காத்து ஒப்பிப்பதுடன் நாம் வேண்டும்போது வேண்டிய வர்களுக்குப் பணம் கொடுத்துக் கணக்கு வைக்கும் கணக் காளர்களாகவும் நிதிச்சாலைகள் உதவுகின்றன.

நிதிகள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்றும், கணக்குகள் எவ்விதம் வைத்துக்கொள்ள வேண்டுமென் றும், 'செக்' முதலியன எவ்வாறு கையாளப்படவேண்டு மென்றும் துரைத்தனத்தார் பல சட்டங்களை ஏற்படுத்தி யிருக்கின்றனர். 'செக்'குகளில் மோசடியுண்டாகாமலிருப் பதற்கும் பல முறைகளை வகுத்திருக்கின்றனர்.

ஒரு நாட்டின் நாணயமுறை மற்றொரு நாட்டின் நாணய முறையைப்போல் இராது. ஆதலால் ஒருதேசத்திலிருந்து மற்றொரு தேசத்துக்குப் பணம் அனுப்பவேண்டுமானால் அவ்விரு தேசங்களின் நாணயமாற்று விகிதம் ஓரளவில் நிச்சயிக்கப்பட்டிருக்கவேண்டும். அந்த விகிதத்தில் ஏற் றத்தாழ்வு உண்டாகுமானால் குழப்பங்கள் பல நேரிடும். பொருள்களின் விலையேற்றத்திற்கும் தாழ்வுக்கும் உரிய காரணங்களுள் நாணய முறையின் மாறுபாடு முக்கிய மானது.

நாணயங்களைப்பற்றிய நுட்பமான விஷயங்கள் பல உண்டு. அவற்றைப் படித்தறிவது அறிஞர்க்கு இன்றி யமையாதது. நீங்கள் பெரியவர்களான பிறகு அவற்றைப் பற்றிய பல விஷயங்களையும் அறிந்துகொள்ளுதல் நல மாகும்.

## 11. கல்வி முறை

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."

ஒருவருக்குக் கல்வியறிவைக் காட்டிலும் சிறந்த தனம் வேறொன்றில்லை. பொருட்செல்வம் அழிந்துபோம்; கல்விச் செல்வம் அழியாதது. பொருள் பிறருக்குக் கொடுக்கக்

கொடுக்கக் குறையும்; கல்வி பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க விருத்தியாகும். ஒருவனுக்குப் பலவகையான செல்வங்கள் இருந்தாலும் கல்வியறிவு இல்லையானால் அவற்றால் சிறிதும் பயன் இல்லை. தேடிய பொருளைக் காப்பாற்றுவதற்கும், அதை விருத்திசெய்வதற்கும், நன்மை தீமைகளைத் தெரிந்துகொள்வதற்கும், புண்ணிய பாவங்களை உணர்வதற்கும் கல்வியே தக்க கருவியாகும். ஒருவனுடைய அங்கங்களுள் கண் எவ்வளவு இன்றியமையாததோ அப்படியே பலவகை நலங்களுள் கல்வியே முதன்மையானது. மற்ற எல்லாப் பொருள்களும் கல்வியை மூலமாகக்கொண்டே உண்டாவன. ஆதலின், கல்வியறிவைப் பரவச்செய்வதே எல்லாத் தானங்களிலும் உத்தமதானமாகும்.

உலகத்தில் பலவேறு ஜாதியார் இருந்தாலும் எல்லோரையும் படித்தார் படியாதாரென்ற இரண்டுவகையில் அடக்கிவிடலாம்.

இளமையிலேயே கல்வியறிவு ஏற்படுவது மிகவும் அவசியம். ஆனாலும், குடும்பநிலைமை காரணமாக அநேகருக்கு இளமையில் கல்வியறிவு ஏற்படுவதற்கு வழியில்லாமற் போய்விடுகிறது.

முற்காலத்தில் அதிகப் பொருட் செலவில்லாமல் ஜனங்கள் படித்து மேன்மையடைந்து செல்வப்பொருளையும் தேடியிருக்கிறார்கள். இக்காலத்திலோ அநேகம் குடும்பத்தினர்கள் தங்கள் பிள்ளைகளைப் படிப்பித்தலில் பொருளைச் செலவிட்டு வறுமை யடைந்திருக்கிறார்கள்.

உணவுவகைகளிலும் உடைவகைகளிலும் ஒழுக்கங்களிலும் முன்பிருந்த வழக்கங்களெல்லாம் அடியோடே மாறிப் புதிய புதிய கொள்கைகள் ஜனங்களுக்குள் உண்டாகி இருக்கின்றன. அவற்றால் ஜனங்கள் பலவிதமான நோய்களுக்கு உள்ளாகிறார்கள். வைத்தியர்களும் அதிகரித்திருக்கிறார்கள். புதிய புதிய பெயர்களோடு வியாதிகளும் அதிகரித்திருக்கின்றன. பரமதரித்திரன்கூட மிக்க செல்வவானைப் போல் தன் குடும்பவாழ்க்கையை நடத்தவேண்டுமென்ற

அபிப்பிராயத்தோடிருக்கிறான். சிலர் அநாவசியமான காரியங்களிற் பொருளைக் கண்டபடி செலவுசெய்கிறார்கள். நல்வாழ்க்கைக்கு உபயோகமான வழிகளில் மனத்தைச் செலுத்தித் தங்கள் தங்கள் குடும்பத்திற்கும் தேசத்திற்கும் நல்ல புகழை உண்டாக்குவதற்கு ஜனங்கள் பாடுபடவேண்டும். இளமையிலேயே நல்ல பழக்கம் ஏற்படவேண்டும். பாலியத்தில் எது மனத்தில் நன்றாகப் பதிகிறதோ ஆயுள் வரையில் அது நீங்குவதில்லை. படிப்பவர்களெல்லோரும் ஒரேவகையிற் படித்து உத்தியோகம் பெறவேண்டுமென்று ஆசைப்படுகிறார்களேயல்லாமல் உலகவாழ்க்கைக்குப் பயன் தரக்கூடிய கல்வித்துறையிற் காலத்தைப் போக்குகிறார்களில்லை.

ஒருவன் விவசாயியாகவோ வியாபாரியாகவோ தொழிலாளியாகவோ இருந்து காலத்தைக் கழிப்பான். அவனுடைய பரம்பரையினர் முன்னோருடைய முறையை அனுசரித்து அந்தப் பழக்கத்தை விருத்தி செய்தால் அவனுடைய குடும்பம் ஒருநாளும் மெலிவடையாது. ஆனால் முன்னோர்கள் அனுசரித்துவந்த முறையையும் மேற்கொண்டு வந்த முயற்சியையும் பின்னவர்கள் பின்பற்றாமல் வேறு வகையாகப் பொருள் தேடலாமென்று தவறான எண்ணங் கொண்டு மனத்தைப் பலவிதமான வழிகளிற் செலுத்துவதனாலேதான் நஷ்டமடைகிறார்கள். 'பழையன கழிதலும் புதியன புகுதலும் விதி' என்பதை அவர்கள் ஆதாரமாக எல்லோருக்கும் எடுத்துக் காட்டுகிறார்கள்.

முற்காலங்களில் கிராமங்களில் ஒரு சிறுவனுக்கு ஐந்தாவது பிராயத்தில் வித்தியாரம்பம் செய்வித்தால் அவன் பத்துப் பன்னிரண்டு பிராயத்துக்குள் கணித சாஸ்திரத்திலும் இலக்கண இலக்கிய நூல்களிலும் நீதிமார்க்கத்திலும் விசேஷமான பாண்டித்தியத்தை அடைந்துவிடுவான். அதற்குக் காரணம் அப்போதிருந்த படிப்பு முறையே. இவ்வளவு படிப்பிற்கும் அவனுக்கு ஏற்பட்ட செலவோ மிகக் குறைவாகவிருக்கும். தேகதிடமும் நன்றாகவிருக்கும். இக்

காலத்திலோ ஆயிரக்கணக்கான ரூபாய் செலவிட்டாலும் ஒருவனுக்கு அவ்வளவு படிப்பு ஏற்படுமென்று சொல்ல முடியாது. முன்னைநாட் படிப்பு உலகவாழ்க்கைக்கு உப யோகமான பரந்த ஞானத்துடன் கூடியதாக இருந்தது.

விவசாயிகள் தங்கள் நிலங்களைத் தங்கள் கிராமங்களி லிருந்து பண்படுத்தி விருத்திக்குக் கொண்டுவராமல் தங்கள் கிராமங்களை விட்டு நீங்கிக் குடும்பத்துடன் நகரங்களில் வசிக்கத்தொடங்கித் தங்கள் நிலங்களை அயலார் மேற்பார் வையில் விட்டுவிட்டு வரவுவகையைக் குறைத்துக்கொண்டு செலவுவழியை விருத்திசெய்து நாளடைவில் மிக்க துன் பத்தை அடைகிறார்கள்.

தெய்வமென்பதொன்றில்லை, எல்லாவற்றையும் தாங் களே சாதித்துவிடலாமென்ற எண்ணமும் சிலருக்கு உண்டாகின்றது. அது மிகவும் தவறானது. தெய்வத்தை நாம் நேரிற் காணாவிட்டாலும் புகையைக்கொண்டு நெருப் பிருப்பதை நாம் தெரிந்துகொள்வதுபோல மனுஷ்யசக்தி யைக் கடந்த சில அசாத்தியமான காரியங்கள் நிகழ் வதைக்கொண்டுதெய்வம் இருப்பதை நிச்சயமாகக்கொள்ள வேண்டும். கிறிஸ்தவர்கள் மகம்மதியர்கள் முதலியோர் குறிப்பிட்ட சில தினங்களில் அவரவர்களுக்குரிய ஆலயங் களுக்குச் சென்று சிறிது நேரமாவது தெய்வத்தைத் தொழுதுவருகிறார்கள். மற்ற மதத்தார்களிற் பெரும்பா லோர் அவ்வழக்கத்தை விட்டுவிட்டார்கள்.

வியாபார வழியில் ஜீவிப்பவர்கள் அயல்தேச சரித்திரங் களையும் பூகோளசாஸ்திரங்களையும் நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும். அவ்வாறு தெரிந்துகொண்டால் இன்ன இடத்தில் இன்ன சாமான் விலை நயமாக இருக்கிற தென்றும், இன்ன இடத்தில் விலை அதிகமாக இருக்கிற தென்றும், இன்ன இடத்தில் இன்ன பொருள்கள் விசேஷ மாகக் கிடைக்குமென்றும், இன்ன இடத்தில் இன்ன தொழில்கள் நடத்தலாமென்றும், இன்ன இடத்தில் ஜனங்

களுக்கு இன்ன பொருள்கள் தேவையென்றும் தெரிந்து கொள்ளலாம்.

முற்காலத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள பெரியோர்கள் சாதாரண நோய்களாகிய தலைவலி, காய்ச்சல், வயிற்றுவலி முதலியவற்றை மிகவும் சுலபமான வீட்டு மருந்துகளாலும் ஓஷதிகளாலும் ஆகாரபக்குவங்களாலும் போக்கிவந்தார்கள். அந்த விஷயத்தில் அவர்களுக்கேற்பட்ட செலவோ மிகவும் குறைவாக இருக்கும். இப்பொழுதோ மிகவும் சிறிய நோயென்று கண்டாலும் பெரிய டாக்டர்களிடம்போய் ஆலோசிக்கிறார்கள். நோய் இன்னதென்று கண்டுபிடிப்பதற்கே பல நாட்களாகின்றன. சில சமயங்களில் நோயும் விருத்தியாகிறது. இதற்குக் காரணம் சுதேச வைத்தியசாஸ்திரத்தை முறையாகத் தெரிந்து கொள்ளாமையே. ஆனாலும், இப்பொழுது சில கனவான்களுடைய நன்முயற்சியால் இந்திய வைத்தியசாஸ்திரங்களைப் பின்பற்றி அனேக ஔஷதசாலைகள் ஆங்காங்கு ஏற்பட்டு வருகின்றன.

சிறு தொழிலாளிகள் முதல் பெரியோர்கள் வரையில், செட்டாகக் குடித்தனம் செய்யவேண்டுமென்ற நோக்கமே பெரும்பாலும் இல்லை. மாதம் பத்துரூபாய் சம்பாதிப்பவன் ஒரு ரூபாயாவது மிகுத்துவைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் செலவுகளைச் செய்யவேண்டும். பெரும்பாலோர் அவ்விதம் நடந்து வாராமையால் அவர்களுடைய குடும்பங்கள் பலவிதமான துன்பங்களுக்கு உட்படுகின்றன. எந்த எந்த வகையிற் செலவைக் குறைத்துக்கொள்ளலாமென்று ஒவ்வொருவரும் தீர்க்காலோசனைசெய்து குடும்பத்தின் நன்மையை உத்தேசித்துக் கூடுமானவரையில் பொருளை மிகுத்து வைப்பதற்கு முயற்சிசெய்யவேண்டும்.

கல்யாணமென்பது ஒரு சந்தோஷமான காரியமாக இருந்தாலும் எல்லோரும் ஒரேவிதமாக நடத்தவேண்டுமென்ற முறையையே மேற்கொண்டு வருவதால் சில குடும்பங்கள் மிகவும் சீர்க்கேடான நிலைமையை யடைந்துவரு

கின்றன. அவரவர்கள் தகுதிக்கும் செல்வத்திற்கும் ஏற்ற படி காரியங்களை நடத்திவந்தால் இவ்விதமான துன்பம் உண்டாகாது.

ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள ஜனங்கள் அந்த அந்தக் குடும்பத் தலைவனுக்கு அடங்கி நடக்கவேண்டும். அவ்விதம் நடவாமல் அநேகர் கெட்டுப்போயிருக்கின்றனர்.

அற்பவிஷயங்கள் காரணமாக அநேக இடங்களில் பெரிய பெரிய கலகங்களும் வியவகாரங்களும் உண்டாகின்றன. அவை காரணமாக அவர்கள் நீதிஸ்தலங்களில் பொருள் களைச் செலவிட்டு வேறு வேலைகளையும் கவனியாமல் தங் கள் காலத்தையும் போக்குகிறார்கள். அவ்விதம் செய்யா மல் தங்களுக்குள்ளாகவே சமாதானஞ் செய்துகொண்டால் இருதிறத்தார்க்கும் சௌகரியமுண்டு. கோபத்தை யடக் கிப் பொறுமையை மேற்கொள்ளவேண்டும். பிறர் செய்யுங் குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளவேண்டும். அதனால் பொறுத்துக் கொள்ளுகிறவர்களுக்கு ஒருவிதமான நஷ்ட மும் உண்டாகாது.

சிலர், காரியங்களை உத்தேசித்துப் பிறரிடத்தில் வஞ்சக மாகப் பழகி வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய குணங்களை அறிந்துகொண்டு அவர்களுடைய பழக்கத்தை நீக்கிக்கொள்ளவேண்டும்.

சிலசில ஜனங்களுக்குச் சிலசில கெட்ட பழக்கங்கள் தலைமுறை தத்துவமாக ஏற்பட்டிருக்கலாம். அவர்கள் மற்ற வர்களுடன் பழகும்போது அந்தப் பழக்கங்கள் அவர் களுக்கு அதிருப்தியாக விருக்குமென்பதை யுணர்ந்து அவர் கள் முன்னிலையில் அப்பழக்கங்களை அனுசரிப்பதை நிறுத்த வேண்டும். ஒருவருக்குப் பிரியமாக வுள்ளது மற்றொரு வருக்கு அப்பிரியமாக இருக்கலாம். தனக்குப் பிரியமாக வுள்ளதென்ற காரணத்தைக்கொண்டே ஒரு வழக்கத்தை அனுசரிக்கவேண்டுமென்று ஒருவன் மற்றவர்களை வற்புறுத் தக்கூடாது.

மற்றவர்களிடத்திற் காணப்படும் நற்குணங்களை ஒருவன் மேற்கொள்ளவேண்டுமேயல்லாமல் அவர்களிடமுள்ள தீயகுணங்களைப் பின்பற்றக்கூடாது.

சிலசில சிறுவர்களுக்குச் சிலசில விஷயங்களிலேதான் புத்தி செல்லும். ஒருவனுக்குப் படிப்பில் புத்தி செல்லும். ஒருவனுக்கு ஸங்கீதத்தில் புத்தி செல்லும். ஒருவனுக்கு வியாபாரத்திற் புத்தி செல்லும். ஒருவனுக்குச் சித்திர வேலையிற் புத்தி செல்லும். யார் யாருக்கு எந்த எந்தத் துறையில் நோக்கமிருப்பதாகத் தெரிகிறதோ அந்த அந்தத் துறையில் அவரவர்களைப் பயிற்றுவிக்கவேண்டுமேயல்லாமல் அவர்களுடைய மனத்திற்கொவ்வாத துறைகளில் பயிற்றுவித்தலாகாது. அங்ஙனஞ் செய்தால் பொருள் நஷ்டமேற்படுமே யன்றிப் பயனொன்று மேற்படாது.

முற்காலத்தில் கிராமங்கள்தோறுமிருந்த திண்ணைப் பள்ளிக்கூடங்களில் கணக்கும் எழுத்தும் மாணவர்களுக்குக் கற்பித்துவந்ததல்லாமல் பல பெரியோர்களுடைய சரித்திரங்களையும் இராமாயணம் மகாபாரதம் முதலிய நூல்களிலிருந்து கிளைக்கதைகளையும் உசிதமான பழமொழிகளையும் மிகவும் நன்றாகச் சொல்லிவந்தார்கள். தவிரவும், அந்த அந்த வகையினர்கள் தத்தமக்கு ஏற்ற புராணங்களையும் இதிகாசங்களையும் கதைகளையும் பொதுவான இடங்களில் அறிந்தவர்களைக்கொண்டு சொல்லுவித்தும், பக்தியையும் அறிவையும் தரக்கூடிய காலக்ஷேபங்களைச் செய்வித்தும் கேட்டும் வந்தார்கள். ஒவ்வொரு வீட்டிலும் முதியவர்களான ஆண்பாலாரும் பெண்பாலாரும் தங்கள் பேரன் பேத்திகளை மாலைக்காலத்தில் கூட்டி வைத்துக்கொண்டு விநோதமும் அறிவை வளர்ப்பனவுமாகிய கதைகளையும் பாட்டுக்களையும் சொல்லி அவர்களுக்கு ஊக்கத்தை உண்டாக்கிவந்தார்கள். உண்பிக்குங்காலத்தும் தூங்குவதற்கு முன்பும் இவ்வாறே செய்துவந்தார்கள். அவை உலகப் பழக்கத்திற்கு ஒவ்வொருவருக்கும் பிற்காலத்தில் மிகவும் உபயோகமாக இருந்து வந்தன. அப்பழக்கங்கள் பெரும்

பாலும் இப்போது நின்றுவிட்டன. அப்பழக்கங்களை மறுபடியும் சிறுவர்கள் அப்பியசிக்கும்படி செய்யவேண்டும்.

விஷயங்களை ஏற்றுக்கொள்வதற்கு ஒவ்வொருவனுக்கும் அவனவனுடைய தாய்மொழியே மிகவும் உபயோகமானது. ஒருவன் வேறு மொழிகளில் எவ்வளவு தேர்ச்சி பெற்றவனுயிருந்தாலும் அவன் ஒரு விஷயத்தைத் தாய்மொழி வாயிலாக எவ்வளவு இலகுவாக அறிந்துகொள்வானே அவ்வளவு வேறு மொழிகளால் அறிந்துகொள்ள மாட்டான்.

அறியாமை மிகுந்திருப்பதால் நம் நாடு சிறப்புறுமல் சீர்குலைந்து போகிறதென்பது அறிவாளர்கள் ஒப்புக்கொண்ட விஷயம். சில ஜனங்களுக்குச் சிறுவயதில் தேசபாஷையைப் படிப்பதற்கு மார்க்கமில்லாமல் பால்யத்திலேயே வேலைசெய்து பிழைக்கும்படியான நிர்ப்பந்தங்கள் உண்டாகின்றன. சிறுவயதிலேயே கல்விகற்கவேண்டியது அவசியமானுலும் அதற்குச் சௌகரியமில்லாமல் வேலை செய்து பிழைத்துவரும் பிராயமுதிர்ந்தவர்களுக்கும் கல்வியறிவைப் புகட்டவேண்டுவது அவசியம்.

சிறுசிறு கிராமங்களில் ஞானத்தை விளைவிக்கக்கூடிய புத்தகசாலைகளை அமைப்பது மிகவும் அவசியமான காரியம். எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் அவற்ருற் பயனடைவார்களே யல்லாமல் எழுத்து வாசனை யில்லாதவர்கள் அவற்ருற் பயனடைய மார்க்கமில்லை. ஆதலால் முக்கியமாகத் தோன்றுமிடங்களில் இராப்பாடசாலைகளை யேற்படுத்திப் பகல் முழுவதும் வேலைசெய்து ஜீவிப்பவர்களுக்குக் கல்வியைப் புகட்டும்படி செய்யலாம். பிராயமுதிர்ச்சியால் சிலருக்கு அவற்றைக் கிரஹித்துக்கொள்ளும் சக்தியில்லாமற்போம். அப்படிப்பட்ட நிலையிலுள்ளவர்களுக்கு உபந்நியாசங்கள் மூலமாக மேலே கூறிவந்த விஷயங்களையெல்லாம் அவர்கள் மனத்தில் நன்ருகப் படும்படி போதிக்கச் செய்யலாம். ஸங்கீதத்திலும் சிறிதுநேரம் பொழுது

போக்கும்படி செய்யலாம். பகல் முழுவதும் வேலைசெய்து களைத்துவந்தவர்களுக்கு ஸங்கீதம் ஆறுதலைக் கொடுக்கும்.

தினப்பத்திரிகையோ, வாரப்பத்திரிகையோ, மாதப் பத்திரிகையோ ஏற்படுத்திக் கைத்தொழில்கள், நல்லொழுக்கம், பெரியோர்கள் சரித்திரம் முதலான விஷயங்களை வெளியிட்டுப் படிக்கும்படி செய்யலாம். படிக்கத்தெரியாதவர்களுக்குப் படிக்கத் தெரிந்தவர்களைக்கொண்டு படித்துக்காட்டச் செய்யலாம்.

உபந்நியாசங்கள் மூலமாக விஷயங்களைச் சொல்வதோடு நல்லொழுக்கங்களை நாடகரூபமாகவுங் கற்பிக்கலாம்.

## 12. தமிழ் உரை நடை

தமிழ் மொழியிலே மிகப் பழையகாலத்தில் உரை நடை நூல்கள் செய்யுள்நூல்களைக் காட்டிலும் மிகவும் குறைவாகவே இருந்தன. ஆயினும், அவை இலக்கண நூல்களிற் குறிக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது கிடைக்கும் பழைய தமிழ் இலக்கணநூலாகிய தொல்காப்பியத்தில் நான்கு வகையான உரைநடைகள் சொல்லப்பட்டுள்ளன. (1)''பாட்டுக்களுக்கு இடையிடையே காணப்படும் உரைநடை ஒரு வகை; இதனைச் சிலப்பதிகாரம் என்னும்காவியத்திற் காணலாம். (2) நூலுக்குப் பொருளுரைக்கும் உரை நடை. இது தமிழில் அதிகமாக உள்ளது. (3) பொய்யான கதைகளைப் புனைந்து கூறுவது. (4) நகைப்பை உண்டாக்கும் வரலாறுகள். மேற்கூறியவகைகள் யாவும் பழையகாலத்திலுள்ளபடி இப்பொழுது காணப்படவில்லை. அவை நாளடைவில் மாறுபட்டு வந்துள்ளன.

இப்பொழுது கிடைக்கும் உரைநடைகளை ஏழு வகைகளாகப் பிரிக்கலாகும். 1. பழையகாலத்து உரைநடை. 2. பிற்காலத்தில் நூல்களுக்கு எழுதப்பட்ட உரை. 3. வடமொழியும் தமிழும் கலந்த மணிப்பிரவாள நடை. 4. பிற்காலத்தில் கதையெழுதப்படும் நடை. 5. சாஸனங்

களிற் காணப்படும் நடை. 6. இக்காலத்துப் பத்திர முதலியவற்றிற் காணப்படும் நடை. 7. சமாசாரப்பத்திரிகைகளின் நடை. இவற்றின் போக்குக்குப் பின்வரும் பகுதிகள் உதாரணங்களாகும்.

### (1) பழைய உரை நடை

அன்றுதொட்டுப் பாண்டியனுடு மழை வறங்கூர்ந்து வறுமையெய்தி வெப்புநோயும் குருவும் தொடரக் கொற்கையிலிருந்த வெற்றிவேற்செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால்விழவொடுசாந்தி செய்ய நாடுமலிய மழைபெய்து நோயும் துன்பமும் நீங்கியது.

அதுகேட்டுக் கொங்கிளங்கோசர் தங்கணுட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்திசெய்ய மழை தொழிலென்றும் மாருதாயிற்று.

அதுகேட்டுக் கடல்சூழிலங்கைக் கயவாகு வென்பான் நங்கைக்கு நாட்பலிபீடிகைக் கோட்டமுந்துறுத் தாங்கு அரந்தை கெடுத்து வரந்தருமிவளென ஆடித்திங்களகவையினுங்கோர் பாடிவிழாக் கோள் பன்முறையெடுப்ப மழை வீற்றிருந்து வளம்பல பெருகிப் பிழையா விளையுணுடாயிற்று.

அதுகேட்டுச் சோழன் பெருங்கிள்ளி கோழியகத்து எத்திறத்தானும் வரந்தருமிவளோர் பத்தினிக் கடவுளாகுமென நங்கைக்குப் பத்தினிக் கோட்டமுஞ் சமைத்து நித்தல்விழாவணி நிகழ்வித்தோனே.

[சிலப்பதிகாரம்—உரைபெறுகட்டுரை.]

### (2) நூலின் உரை

பொருட்பிணி யென்பது பொருளிலனுய்ப் பிரியுமென்பதன்று; தன் முதுகுரவராற் படைக்கப்பட்ட பல்வேறு வகைப்பட்டபொருளெல்லாங் கிடந்ததுமன்று; அதுகொடுதுய்ப்பது ஆண்மைத்தன்மை யன்றெனத் தனது தாளாற்றலாற்படைத்த பொருள்கொண்டு வழங்கி வாழ்தற்குப்பிரியு

மென்பது; அல்லதூஉம், தேவர்காரியமும் பிதிரர்காரிய மும் தனது தாளாற்றலாற் படைத்த பொருளாற்செய்தன தனக்குப் பயன்படுவன. என்னை? தாயப் பொருளாற் செய்தது தேவரும் பிதிரரும் இன்புறாராதலான், அவர்களை யும் இன்புறுத்தற்குப் பிரியுமென்பது.

[இறையனாரகப் பொருளுரை.]

### (3) மணிப்பிரவாள நடை

குமாரனும் யௌவனாவஸ்தையினையடைந்து செல்கின்ற காலத்துக் காளகூடனென்பான் ஒரு வியாதபதி, அந்நக ரத்தே நிரைதுரந்து கொண்டுபோக, அந்நிரைக்கு அதிபதி யான கோபாலன் கோபேந்திரனென்பான்; இவன் பார்யை கோபஸ்ரீயென்பாள்; 'இவள் புத்திரியாகிய கோதாவரியினை இந்நிரை மீட்கவல்ல வீரபுருஷனுக்குக் கொடுத்தும்' என்று காஷ்டாங்காரிகன் நகரத்திலே கோஷணைபண்ணுவிப்ப, அதனைக் கேட்டு ஜீவந்தரன் மித்திரரோடுகூடப் போகி வியாத பலமடைந்து யுத்தம்பண்ணிச் சயித்து மீட்டுக் கொண்டுவந்து நகரமடைந்து யுத்தமுகத்துப் பராக்கிரமம் பண்ணிய நந்தாட்டியனுக்குக் கோதாவரியினைக் கொடுப் பித்தனன்.

[ஸ்ரீபுராணம்—ஸ்ரீவர்த்தமானர் புராணம்.]

### (4) கதையின் நடை

மத்தியந்தின முனிவர், தம்முடைய குமாரருக்குச் சிவ புண்ணியங்களெல்லாவற்றுள்ளுஞ் சிறந்தது சிவலிங்கபூசை யென்றும், சிவஸ்தலங்களெல்லாவற்றுள்ளும் சிறந்தது சிதம்பரமாகிய தில்லைவனமென்றும் போதித்தார். அது கேட்ட குமாரர், தந்தையாருடைய அநுமதிபெற்றுக் கொண்டு, தெற்கு நோக்கி நடந்துசென்று, தில்லைவனத்தை அடைந்து, அதனுள்ளே சிவகங்கை யென்னும் சிவதீர்த்தத் தையும், அதற்குத் தெற்கே ஓராலமர நிழலிலே திருமூலட் டானேசுரர் என்னும் சிவலிங்கப் பெருமானையும் தரிசித்து வணங்கி நாடோறும் அத்தீர்த்தத்திலே ஸ்நானம்செய்து,

அச்சிவலிங்கப் பெருமானைப் பூசைசெய்துகொண்டுவந்தார். சிலநாளாயபின்பு, திருமூலட்டானேசுரருக்கு மேற்கே ஒரு திருக்குளத்தைக் கண்டு, அதற்கு மேற்கே ஒரு சிவலிங்கம் தாபித்து, அதற்குச் சமீபத்திலே ஒரு பர்ணசாலையில் இருந்தார்.

இப்படியிருக்கும் நாளிலே ஒருநாள், அப்பாலமுனிவர், "பூக்களை விடிந்தபின் எடுக்கலாமெனின் வண்டுதேம்; விடியு முன் எடுக்கலாமெனின் வழி தெரியாது; பழுது தெரியாது, மரங்களிலேறிற் கைகால்கள் பனியினால் வழுக்கும்; பழுதில்லாத பூக்கொண்டு சிவபூசை செய்தற்கு யாது செய்வேன்!" என்று தளர்ந்தார். உடனே சிவபெருமான் இடபவாகன மேற்கொண்டெழுந்தருளிவந்து, "நீ விரும்பிய வரம் யாது?" என்று வினவியருள, அப்பாலமுனிவர், "எம்பெருமானே! அடியேன் மரங்களிலே வழுக்காமற் பற்றி ஏறுதற்கு அடியேனுடைய கால்களுங் கைகளும் புலிக்கால்களையும் புலிக் கைகளையும்போல வலிய நகப்பற்றுடையவைகளாய் இருக்கும்பொருட்டும், வழி பார்த்து நடத்தற்கும் பூக்களைப் பழுது பார்த்தெடுத்தற்கும் அக்கால்களிலும் கைகளிலும் கண்கள் பொருந்தும் பொருட்டும் அருள்செய்யும்" என்று பிரார்த்தித்தார். சிவபெருமான், அவர் வேண்டுகோளுக்கு அருள்செய்து மறைந்தருளினார். பாலமுனிவர், அன்று முதல் வியாக்கிரபாதரென்னும் பெயரையுடையராய், நாடோறும் விடியுமுன் நியதிமுடித்துக் கோட்டுப்பூ கொடிப்பூ நிலப்பூ நீர்ப்பூ வென்னும் நால்வகைப் பூக்களையும் எடுத்துச் சிவாகமப்படி சிவபூசை செய்துகொண்டு எண்ணில் காலம் இருந்தார்.

[ஆறுமுக நாவலர் எழுதிய சிதம்பரமான்மியம்.]

## (5) சாஸனங்களின் உரை நடை

ஸ்வஸ்திஶ்ரீ ஸகல புவனச் சக்ரவர்த்திகள் ஶ்ரீஅவனியாளப் பிறந்தாரான கோப்பெருஞ் சிங்க தேவர்க்கு யாண்டு முப்பத்தாறுவது வேணுடையான் ஓலை: தென்னவன் பிரம

மாராயரும் ஜயதுங்கப் பல்லவரையரும் தில்லையம்பலப் பல்லவரையரும் உடையார் திருச்சிற்றம்பலமுடையார் கோயில் ஸ்ரீமாஹேச்வரக் கண்காணி செய்வார்களும் ஸ்ரீகாரியஞ் செய்வார்களும் சாமுதாயஞ் செய்வார்களும் கோயிலுகஞ் செய்வார்களும் திருநந்தவனமும் திருமாளிகைக் கூறு செய்வார்களும் பண்டார பொத்தகமுடையார்களும் கணக்கரும் கண்டுவிடுதந்ததாவது: கோயிலுக்கும் திருக்காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியார் கோயிலுக்கும் திருநந்தவனமும் திருநந்தவனப்புறமும் திருஓடையும் திரு ஓடைப்புறமும் ஆடியருள் கரும்பிடுவிளாகமும் பசுமஞ்சள் காப்புக்கொல்லையும் ஆகக் குன்றப்பெருமாள் நாச்சியார் கொண்டுவிட்ட பெரும்பற்றப்புலியூர்ப் பிடாகை மிதினிக்ம சோழ நல்லூரிகுடியான தானவிநோத நல்லூரிலும் நல்லாலியான விக்கிரலும் எருக்காட்டஞ்சேரியான செயங்கொண்ட சோழநல்லூரிலும் மிதினிக்குடியில் திருநிலை அழகியாள் என்னும் திருநாமத்தால் செய்த திருநந்தவனத்துக்கும் திருஓடைக்கும் திருநந்தவனப்புறமும் திருஓடைப்புறமும் உட்பட்ட நிலம் மூன்றே இரண்டுமாக் காணியும் பெரும்பற்றப் புலியூர் மூலபுருஷையார் எழுதின மஹாஸபா நியோகப்படியே முப்பத்தாறுவது முதல் திருநாமத்துக் காணியாகவும் இந்நிலத்துக்கு வரும் மடக்கு ஊரிலே ஏற்றிக் கொள்ளவும், கோயில் குடிமை திருஅரங்கு வீரபோகம் மட அரிசி உள்ளிட்டன தவிர்வதாகவும், இப்படிக்கு விக்கிரமசோழன் திருமாளிகையிலே கல்வெட்டவும் கடவதாகப் பண்ணுவதே. இவை வேணுடையான் எழுத்து என்று புகுந்த ஏவற்றீட்டின்படி கல்வெட்டியது.

[சிதம்பரம் சிலாசாஸனம்.]

## (6) பத்திரங்களின் நடை

### ரூ எழுநூறுக்குக் கிரயபத்திரம்.

**1920**-ம் ஸூ ஆகஸ்டு மீ **17**-ம் உ க்குச் சரியான தமிழ் ரௌத்திரி ஸூ ஆவணி மீ **2**-ம் உ சித்தூர் ஜில்லா குடி

யாத்தம் தாலூகா, பாலூர் மஜரா கொத்தூர் கிராமத்தில் இருக்கும் கம்மகுலம் விஷ்ணுமதம் பயிர்த்தொழில் ஜீவனம் அப்புல் கன்னைய நாயுடு குமாரன் அப்புல் வீராசாமி நாயுடுவுக்கு ஷை கொத்தூர் கிராமத்தில் இருக்கும் வேடஜாதி, சிவமதம், பயிர்த்தொழில் வேடபாபையன் குமாரன் வேட சின்னசாமியாகிய நான் எழுதிவைத்துக் கொடுத்த புஞ்சை (புன்செய்) நிலவிக்கிரய பத்திரமாவது என்னவென்றால்:—

சித்தூர் டிஸ்டிரிக்ட், ஆம்பூர் ஸப்டிஸ்டிரிக்டைச் சேர்ந்த ஷை பாலூர் கிராமத்தில் எனக்குப் பிதிரார்ஜிதமாயும் சுயார்ஜிதமாயும் பாத்தியப்பட்டு என் சுவாதீன அனுபவத்தில் இருந்துவரும், ஓடைக்குக் கிழக்கு, வழிநடைக்குத் தெற்கு, வீரப்ப உடையான் தரிசுக்கு மேற்கு, கண்ணிக்கு வடக்கு இந்த நாற்பாங் கெல்லைக்கு உட்பட்ட கவர்ண்மெண்டு சர்வே 138/1 நம்பர் உள்ள புஞ்சை ஏகர் 1–4 தீர்வை ரூ 2–5–0 உள்ள புஞ்சை நிலத்தையும் அதிலுள்ள சேந்து கிணறு ஒன்று, ஈச்சமரம் 1 ஆக இந்த ஸ்திதிகளையும் என் அவசர நிமித்தமாக இதற்குமுன் 1918-ம் ஸு த்தில் உங்களிடத்தில் ரூ 500 வாங்கி எழுதிக்கொடுத்திருக்கும் அடைமானக் கடன் பத்திரம் பாபத்துக்காக நாளது தேதியில் உங்களுக்கு விக்கிரயம் செய்ய நிச்சயித்தது ரூ 700. இந்த ரூ எழுநூறையும் நான் பெற்றுக்கொண்டு ஷை சொத்துக்களை உங்கள் சுவாதீனம்செய்துவிட்டேன். ஆதலால், இன்று முதல் நீங்களே ஷை சொத்துக்களைக் கைப்பற்றி, புத்திர பௌத்திர பாரம்பரியமாய், தானாதி வினிமய விக்கிரயங்களுக்கு யோக்யமாய், ஆசந்திரஸ்க்கஸ்தாயியாய், அஷ்ட போக தசவிதஸ்வாம்யங்களுடன் சர்வ சுதந்திர பாத்தியமாய் சர்க்கார் கிஸ்தி செலுத்திக்கொண்டு ஆண்டு சுகத்தில் இருக்கக்கடவீராகவும். இனி எனக்காவது என் வார்சுகளுக்காவது ஷை சொத்துக்களில் யாதொருவிதமான பாத்தியமும் இல்லை. இதில் ஒருவிதமான கலனுமில்லையென்று உறுதியாய்ச் சொல்லுகிறேன். அப்படிக்கு ஏதேனும் உண்டானால் நானே முன்னின்று என் இதர ஆஸ்தி

களைக்கொண்டு தீர்த்து வைப்பேனாகவும். இந்தப்படி என் மனோராசியில் சம்மதித்து எழுதிக்கொடுத்த புஞ்சைநில விக்கிரய பத்திரம்.

இப்படிக்கு,
சின்னசாமி.

சாட்சிகள்:
வேங்கடநாராயண பிள்ளை
ஆதிநாராயண பிள்ளை குமாரர்,
மிராசு, கொத்தூர்.

எழுதியதுள்பட
குப்புசாமி ஐயர்
கர்ணம் ஷை யூர் அறிவேன்.

## (7) பத்திரிகை நடை

யுத்தம் ஆரம்பித்துவிட்டோமென்று சொல்லிக்கொண்டு யுத்தம் ஆரம்பிப்பது பழங்கால முறையாகப் போய் விட்டது. சர்வதேச சங்கம் தோன்றிய பிற்பாடு ஏற்பட்ட அநுகூலங்களில், அறிக்கையில்லாமல் யுத்தம் ஆரம்பிக்கும் அநுகூலமும் ஒன்றாயிருக்கிறது. மஞ்சூரியாவை ஜப்பான் பிடித்ததும், அபிசீனியாவை இத்தாலி பிடித்ததும் இந்த நவீன முறையினால்தான். மறுபடியும் சீனாமீது ஜப்பான் பாய்ந்திருக்கிறது. யுத்தம் என்னவோ கடுமையாய் நடக்கிறது. ஆனால் இரு நாடுகளிலுள்ள ஸ்தானாபதிகள் இன்னம் இருந்துகொண்டிருக்கிறார்கள். அதாவது ராஜாங்கத் தொடர்பு அறுபட்டுப் போகவில்லையாம். ஆனால் யுத்தம் நடப்பதில் குறைவில்லை. இம்மாதிரியான நவீன சட்ட விரோதமான காரியங்கள், தர்க்கம் செய்யும் வக்கீல்களுக்கு வாதத்திற்கு விருந்தாயிருக்கலாம். ஆனால் ஜப்பான் செய்வது அக்கிரமந்தான். அதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. ராஜாங்க சம்பந்தத் தொடர்பு அறுபடாமல் இருக்கும்போது ஒரு நாட்டுச் சர்க்கார்த் தலைவரை மற்றொரு நாட்டு ராணுவம் கொல்ல முயற்சிப்பது பெரிய நியாய

விரோதமான காரியம். அதையும் ஜப்பான் செய்திருக்கிறது. பிரிட்டிஷ் ஸ்தானாதிபதி மீது குண்டுபோட்டுக் காயப்படுத்தியதை நண்பர்கள் அறிவார்கள். அதைப் பற்றி ஜப்பானியர் சொல்லும்போது, சியாங்காய் ஷேக் (சீனசர்க்காரத் தலைவர்) என்று தவறுதலாக நினைத்துக் குண்டுபோட்டுவிட்டதாகக் கூறுகிறார்கள். ஜப்பானிய முதன்மந்திரி நேற்று முன்தினம் பேசியபோது, "சீனா இனி யுத்தத்திற்குக் கிளம்பாத விதத்தில் முறித்துப்போட வேண்டும்" என்று சொன்னார். இவைகளையெல்லாம் பார்த்தால், ஜப்பான் எவ்வளவு அக்கிரமமான காரியங்களிற் பிரவேசித்திருக்கிறதென்பதை அறிந்துகொள்ளலாம். சீனா முழுவதையும் விழுங்கிவிட வேண்டுமென்பதே ஜப்பானின் பகிரங்க நோக்கம். இதில் ஒளிவு மறைவு வைத்து எதுவும் ஜப்பான் பேசுவதில்லை. இவ்வளவு பகிரங்கமாக ஜப்பான் பேசியும், செய்தும் வந்தும், சீனாவைக் காப்பாற்றுவார் யாருமில்லை. உலகில் யுத்தம் ஏற்படாமல் இருக்கவே சர்வதேச சங்கத்தை ஸ்தாபித்ததாய்ச் சொல்லுகிறார்கள். அந்தச் சங்கத்தில் சீனாவும் ஒரு மெம்பர்தான். என்றாலும் மன்சூரியாவைப் பறிகொடுத்ததற்கு இதுவரை பரிகாரம் கிடைக்கவில்லை. இன்று ஜப்பான் செய்யும் அக்கிரமத்தை அது நிறுத்துமென்று நினைப்பதற்கு இடமில்லை.

[தினமணி, 30-8-1937.]

# செய்யுள் நூல்களின் வரலாறு

## அறநெறிச்சாரம்

இது சைனப் பெரியாராகிய முனைப்பாடியா ரென்பவரால் இயற்றப் பெற்றது; மக்களுக்குரிய அறங்களில் தலைமையானவற்றைச் சுருக்கமாகச் சொல்வது.

## ஆசாரக்கோவை

இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இதனை இயற்றிய ஆசிரியர் பெருவாயின் முள்ளியார். மனிதர்கள் இன்னவாறு ஒழுக வேண்டுமென்பதை வெண்பாக்களால் இந்நூல் கூறுவது.

## ஐங்குறுநூறு

இந்நூல் சங்கமருவிய எட்டுத்தொகையினுள் ஒன்று; அகப்பொரு ளுக்கு இலக்கியமாக உள்ளது. கடவுள் வாழ்த்து முதலிய 501 அகவற் பாக்களை உடையது. இஃது இற்றைக்கு 1800 வருடங்களுக்கு முற் பட்டது.

## காஞ்சிப் புராணம்

இது ஸ்ரீ காஞ்சீபுரத்திற் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஏகாம்பரநாதருடைய பழைய வரலாற்றை விருத்தங்களாற் கூறும் நூல்; இரண்டு காண்டங்களை உடையது. அவற்றுள் முதலா வது திருவாவடுதுறையாதீனத்தைச் சார்ந்த ஸ்ரீ சிவஞான யோகிகளா லும், இரண்டாவது அவர் மாணக்கராகிய ஸ்ரீ கச்சியப்ப முனிவராலும் இயற்றப்பெற்றவை.

## சீகாளத்திப் புராணம்

இந்நூல் ஸ்ரீ காளஹஸ்தி என்னும் சிவஸ்தலத்தின் பழைய வரலாற் றைக் கூறுவது. ஸ்ரீ கருணைப்பிரகாசர் முதலிய வீரசைவப் புலவர்கள் மூவரால் இயற்றப்பெற்றது. இம்மூவரும் சகோதரர்கள். இங்கே வந்துள்ள சீகாளத்திச் சருக்கம் கருணைப்பிரகாசரென்னும் மூன்றும் சகோதரரால் பாடப்பெற்றது. பிரபுலிங்கலீலையின் இறுதிச் செய்யுளால் இவர் காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டு என்று தெரியவருகிறது.

## சீவகசிந்தாமணி

இந்நூல் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்ருகச் சொல்லப்படுவது; சைனசமயக் கொள்கைகளைத் தெரிவிப்பது; சீவகனென்னும் அரசனுடைய சரித்திரத்தை விரித்துக் கூறுவது. இதனை இயற்றியவர் சைனத் துறவியாகிய திருத்தக்க தேவரென்பவர். இந்நூலின் காலம் ஒன்பதாம் நூற்ருண்டென்பர்.

## தாயுமானவர் பாடல்

இது தாயுமானவரென்னும் சிவானுபூதிச் செல்வரால் இயற்றப் பெற்ற செய்யுட்டொகுதி. தாயுமானவர் திருச்சிராப்பள்ளியிற் பிறந்து விஜயரங்க சொக்கநாத நாயக்கரிடம் அதிகாரியாக இருந்து, ஸ்ரீ மௌன ஸ்வாமிகளென்பவருடைய உபதேசத்தைப் பெற்றுத் துறவுபூண்டவர். இவருடைய சமாதி இராமநாதபுரத்தில் உள்ளது.

## திருக்குற்ருலக் குறவஞ்சி

இது பாண்டிநாட்டிலுள்ள திருக்குற்ருலமென்னும் ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்மீது மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராயர் என்பவரால் இயற்றப்பட்டதொரு பிரபந்தம். இக்குறவஞ்சி அந்த ஸ்தலத்தின் பழைய வரலாறுகளையும், குறவர்களின் வழக்கச் செய்திகளையும் தெரிவிப்பது.

இது நாடகப்பிரபந்த வகைகளுள் ஒன்று. இந்தக் குறவஞ்சிக்காக மானியம்விட்ட சாசனத்தின் காலம் கொல்லம் ஆண்டு 891 என்று தெரிதலால் இந்நூலாசிரியர் காலம் இற்றைக்கு 200 வருடங்களுக்கு முற்பட்டதாகும்.

## திருக்குறள்

இதனை இயற்றிய ஆசிரியர் திருவள்ளுவர். இந்நூல் சங்கமருவிய பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்று; அறம் முதலிய மூன்று பகுதிகளையும் தனித்தனியே விளங்கக்கூறுதலின் முப்பாலெனவும், குறள்வெண்பாக்களால் இயற்றப்பட்டமையின் குறள் எனவும் பெயர் பெறும். இஃது அதிகாரம் ஒவ்வொன்றற்குப் பப்பத்துப் பாடல்கள் அமைந்த நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையுடையது. இந்நூலாசிரியரது காலம் இற்றைக்கு 1800 வருடங்களுக்கு முந்தியது.

## திருவரங்கக் கலம்பகம்

இந்நூல் ஸ்ரீரங்கமென்னும் ஸ்தலத்தில் எழுந்தருளியுள்ள பெருமாள்மீது திவ்யகவி பிள்ளைப்பெருமாளையங்காரென்னும் ஸ்ரீ வைஷ்ண

வப் பெரியோரால் இயற்றப்பெற்றதொரு பிரபந்தம். அகத்திணை, புறத்திணை என்பவற்றிலுள்ள துறைகள் பலவும், பலவகைப் பாக்களும் பாவினங்களும் கலந்து வருதலால் இந்நூல் கலம்பகம் என்ற பெயர் பெற்றதென்பர்; வேறு காரணம் கூறுவதும் உண்டு. ஸ்ரீரங்கநாதருடைய சரித்திரங்கள் பலவும், உலக இயல்புகள் பலவும் இந்நூலால் விளங்கும். இந்நூலாசிரியர் ஸ்ரீ பராசரபட்டருடைய மாணுக்கராதலால் இவர் காலம் இற்றைக்குச் சற்றேறக்குறைய எழுநூற்றறுபது வருடங்களுக்கு முந்தியதாகும்.

## திருவாசகம்

இது சைவ சமயாசாரியர் நால்வருள் ஒருவராகிய திருவாதவூரடிகளால் சிவபெருமான்மீது துதிரூபமாக இயற்றப்பெற்றது; பல பகுப்புக்களை உடையது; இசைப்பாட்டுக்கள் பல இதிற் காணப்படும்; இது 656 செய்யுட்களால் அமைந்தது. திருவாசகம்: அடையடுத்த ஆகுபெயர்; வாசகம்-சொல்; வாச்சியம்-பொருள். இந்நூலாசிரியரின் காலத்தைப் பற்றிய கொள்கைகளுள் வேறுபாடு உண்டு; திருஞான சம்பந்தருக்கு முற்பட்டவரென்பர் ஒரு சாரார்; சுந்தரமூர்த்தி நாயனுருக்குப் பிற்பட்டவரென்பர் மற்றொரு சாரார்.

## திருவிரிஞ்சைப் புராணம்

இது பிரமதேவரால் பூசிக்கப்பெற்ற விரிஞ்சிபுரம் என்னும் தொண்டைநாட்டு ஸ்தலத்தில் எழுந்தருளிய சிவபெருமானுடைய பழைய வரலாறுகளைப் புலப்படுத்தி எல்லப்ப நயினுரென்னும் புலவரால் இயற்றப்பெற்றது. இவர் எல்லப்ப நாயனுரென்றும், எல்லப்ப பூபதியென்றும் வழங்கப்பெறுவர். இவர் காலம் பதினாறும் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். விரிஞ்சன்-பிரமதேவர்; புராணம்-பழமை.

இதில் பாயிரமும், எட்டுச்சருக்கங்களும் உள்ளன. இதன்பால் உள்ள செய்யுட்கள் 370. இத்தலம் பாலாற்றின் கரையிலுள்ளது.

## திருவிளையாடற் புராணம்

இது மதுரையில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சோமசுந்தரக் கடவுள் இயற்றிய அறுபத்துநான்கு திருவிளையாடல்களை அழகுபெற விரித்துக்கூறும் புராணநூல். இதனை இயற்றியவர் அபிஷிக்தராகிய பரஞ்சோதி முனிவரென்பவர். இதன்பாலுள்ள செய்யுட்டொகை 3393. இராமநாதபுரம் விஜயரகுநாத சேதுபதியின் காலத்

தவரான பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் இந்நூற்குச் சிறப்புப் பாயிரம் இயற்றியிருத்தலின் இந்நூலாசிரியர் மேற்படி சேதுபதியின் காலத்தவரென்பது தெரியவருகின்றது.

### நாலடியார்

நாலடிகளாகிய நேரிசை, இன்னிசை வெண்பாக்களால் அமைக்கப் பெற்ற நூலாதலின் இஃது இப்பெயர் பெற்றது. இதனை இயற்றியவர் சைன முனிவர்கள். அறத்துப்பால் முதலிய மூன்று பால்களையும், அதிகாரத்துக்குப் பத்துச் செய்யுட்கள் வீதம் கொண்ட நாற்பது அதிகாரங்களால் தெரிவிப்பது. சங்கமருவிய பதினெண் கீழ்க்கணக்கைச் சேர்ந்ததாகலின் இந்நூல் 1800 வருடங்களுக்கு முற்பட்டது. பிற்காலத்த தென்று கூறுவாரும் உளர்.

### நீதிநூல்

மாயூரத்தில் 50 வருடங்களுக்கு முன்பு முன்சீபாக இருந்த குளத்தூர் வேதநாயகம் பிள்ளை என்பவரால் இயற்றப்பெற்றதொரு நூல். முதலில் பாயிரத்தையும், அப்பால் தெய்வ முண்டெனல் முதலிய 44 அதிகாரங்களையும் 600 செய்யுட்களையும் உடையது. இந்நூலாசிரியர் ரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவக் கனவான். திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களிடம் பழகித் தமிழ் நயமறிந்தவர். இவருடைய வாக்கு மிக இனிமை உடையதாக விளங்கிப் படிப்பவர் உள்ளத்தையும் கேட்பவர் உள்ளத்தையும் கவரும்.

### நைடதம்

நிடத தேசத்து அரசனாகிய நளனது சரித்திரத்தைக் கூறுதலின் இந்நூல் இப்பெயரைப் பெற்றது. வடமொழியில் ஸ்ரீ ஹர்ஷகவியால் செய்யப்பெற்ற நூலிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டமையின் இந்நூல் வழிநூலாகக் கூறப்படும். இதனை இயற்றிய ஆசிரியர் அதிவீரராம பாண்டியர் என்னும் சிற்றரசர். இவர் வெற்றிவேற்கை, கூர்மபுராணம், காசிகாண்டம் என்னும் வேறு நூல்களையும் இயற்றியுள்ளார். இவருடைய மூத்த சகோதரர் பிரமோத்தர காண்டமென்னும் நூலின் ஆசிரியராகிய வரதுங்கராம பாண்டியர். இவ்வாசிரியர் பட்டத்துக்கு வந்த காலம் கி. பி. 1564 என்று ஒரு கல்வெட்டால் தெரிதலால் இவர் காலம் கி. பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். இந்நூல் முதலிற் பாயிரத்தையும் அப்பால் நாட்டுப்படலம் முதலிய 28 படல உறுப்புக்களையும் உடையது.

## பட்டினத்தார்

பட்டினமென்றது காவிரிப்பூம் பட்டினம். பட்டினத்தாரது இயற் பெயர் இன்னதென்று தெரியவில்லை. காவிரிப்பூம் பட்டினத்தில் வணிகர் குலத்திற் பிறந்து பெருஞ் செல்வராக வாழ்ந்திருந்து அப்பால் துறவு பூண்டவர். இவர் பல பிரபந்தங்களையும் தனிப்பாடல்களையும் இயற்றியிருக்கின்றார். இவர் இயற்றிய பிரபந்தங்கள் சைவத் திருமுறைகளுள் ஒன்றாகிய பதினோராந் திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ளன.

## பரிபாடல்

இது சங்கமருவிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. பரிபாடல் என்னும் ஒருவகைப் பாவால் இயற்றப்பெற்றமையின் இஃது இப்பெயர் பெற்றது. இதிலுள்ள பாக்கள் எழுபது. அவற்றுள் திருமாலுக்கு 8; முருகக்கடவுளுக்கு 31; காடு கிழாளுக்கு (துர்க்கைக்கு) 1; வையை நதிக்கு 26; மதுரைக்கு 4. இந்நூல் கடைச்சங்க காலத்ததாதலின் இற்றைக்கு 1800 வருடங்களுக்கு முந்தியது என்று சொல்லலாம்.

## புறநானூறு

இது சங்கம் மருவிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று; பொருளிலக்கணங்களின் வகையான புறத்திணை யிலக்கணங்களுக்கு இலக்கியங்களாக உள்ள 400 அகவற்பாக்களை யுடையது. இதன்பால் தமிழ்நாட்டுப் பழைய சரித்திரங்கள் பல காணப்படும்; இஃது இற்றைக்குச் சற்றேறக் குறைய 1800 வருடங்களுக்கு முற்பட்டது.

## மணிமேகலை

இந்நூல் பஞ்சகாவியங்களுள் ஒன்றாகக் கூறப்படும்; மணிமேகலை என்பவளது சரித்திரத்தை விரித்துக்கூறுவது; சிலப்பதிகாரக் கதையோடு தொடர்புடையது; பௌத்தமதக் கொள்கைகளை விளக்குவது; 30 அகவற்பாக்களாலாகிய 30 உறுப்புக்களையுடையது. சங்கப் புலவராகிய சீத்தலைச் சாத்தனாரால் இயற்றப்பெற்றதாகத் தெரிதலின், இதன் காலம் கடைச்சங்க காலமான கி. பி. 2-ஆம் நூற்றாண்டென்று கொள்ள வேண்டும்.

## வளையாபதி

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்ருகச் சொல்லப்படுவது. இது முற்றுங் கிடைக்கவில்லை. சைனசமயச் சார்புடையதென்று தெரிய வருகின்றது.

## வில்லிபுத்தூரார் பாரதம்

இது சந்திரவமிசத்து அரசனுகிய பரதனென்பவனுடைய பரம்பரையினராகிய அரசர்களது வரலாற்றைக் கூறுதலின் பாரதமென்று பெயர் பெற்றது; வில்லிபுத்தூராரென்னும் வைணவ அந்தணப் பெரியாரால் இயற்றப்பெற்றது. இதிற் பலவகைச் சந்தப்பாடல்களுண்டு; வடசொற்களும், வடமொழித் தொடர்களும் இதில் விரவிவரும். செய்யுள் நடை மிகச் சிறந்தது. வரபதியாட்கொண்டானென்னும் பிரபுவின் காலத்துச் செய்யப்பெற்றதாதலின், இந்நூல் அவன் காலமாகிய கி. பி. 15-ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியாகுமென்று சரித்திர நூல்வல்லார் கூறுவர்.

# செய்யுட்களின் குறிப்புரை

1. வாலிழை-தூய்மையான ஆபரணத்தையுடைய உமாதேவியார்; அன்மொழித்தொகை. ஒருவன்-பரமசிவனுடைய. முகிழ்த்தன-தோன்றின.

இறைவனுடைய வியாபகத்தில் கீழேயுள்ள காற்பாகத்தில் எல்லா உலகமும் அடங்கியிருத்தலின், அடிக்கீழ் மூவகையுலகமும் முகிழ்த்தன என்றார். இது வேதத்திற் கூறப்பட்ட செய்தி.

2. யானென்பது அகங்காரம் என்றும், எனதென்பது மமகாரம் என்றும் வழங்கப்படும். நின்றாயை-நின்றாயாகிய நின்னை.

3. நின்னென்றது திருமாலை. ஞாயிறு-சூரியன். உள-உள்ளன. சாயல்-மென்மை. திங்கள்-சந்திரன். திங்கள் உள-திங்களில் உள்ளன. சுரத்தல்-கொடுக்கக் கொடுக்கப் பொருள் வளர்தல். மாரி-மேகம். புரத்தல்-தாங்குதல். நோன்மை-பொறுமை. ஒண்மை-ஒளியின் தன்மை. பூவை-காயாமரத்தின் பூ. தோற்றம்-வெளிப்படுதல். அகலம்-பெருமை. உருவம்-ஞானக்கண்ணாற் காணப்படும் உருவம். ஒலி-சொல். வருதல்-அவதரித்தல். ஒடுக்கம்-மீண்டு சென்று அடங்குதல். மருத்து-காற்று.

4. புலவன்-அறிவுடையவன். தீர்த்தன்-தூயவன். புராணன்-பழையவன். உலக நோன்பு-பெரியோர்கள் கைக்கொண்ட விரதம். குற்றம்-காமம், வெகுளி, மயக்கம் என்பன. செற்றம்-தணியாக் கோபம். முற்றவுணர்ந்த முதல்வன்-சருவஞ்ஞன். காமன்-மன்மதனை. ஏமம்-பாதுகாப்பு. கடும்பகை-காமம் முதலிய அறுவகைக் குற்றம். என்கோ-என் பேனோ? ஆயிர ஆரத்து ஆழ்-தன்னுள் 1000 ஆரக்கால்களையுடைய சக்கரம்; இது சகஸ்ரார சக்ரம் என்று வழங்கப்படும். துதிப்பதற்கு நா ஆயிரம் இலேன் என ஒரு சொல் வருவிக்க.

இளவேனில்-இளவேனிற் பருவம்; சித்திரை வைகாசி மாதங்கள். இவை, குறித்த பருவத்தில் தலைவன் வாராதது கண்ட தலைமகள் கூறியவை.

5. குயிற் பெடை-பெண் குயில். அகவ-அழைப்ப. அயிர்க்கேழ் நுண் அறல்-கருமணலாகிய நிறத்தையுடைய நுண்ணிய நெறிப்பு; இஃது ஆற்றின்கண் காணப்படுவது. நுடங்கும்-வளைந்து காணப்படும். வந்தன்று-வந்தது; பொழுது வந்தன்று.

6. சுரும்பு-வண்டு. ஆலும்-முழங்குகின்ற. சினை-கிளை. நுணவம்-நுணாமரம்.

7. கோங்கம்-கோங்கிலவமரம். முகை-அரும்பு. உடைதல்-மலர்தல்.

8. அம் சினை-அழகிய கிளைகளையுடைய. பாதிரி-பாதிரி மரம். அலர்ந்தென-மலர. இருங்குயில்-கரிய குயிற்பறவை.

9. பொரிகால்-பொரிந்த அடியையுடைய. மாஞ்சினை-மாமரத்தின் கிளை. புதைய-மறைய. எரி கால்-நெருப்பின் தோற்றத்தைத் தருகின்ற.

10. ஒரு நிறை-ஒரு பக்கத்தில் நிறுக்கப்படும் பொருள். தான் என்றது மதுரையை. புலக்கோல்-அறிவாகிய தராசுத்தட்டு. வாட-(கனமில்லாமையால்) தாழ. தென்னவன்-பாண்டியன். நான்மாடக் கூடல் நகர்-நான்கு மாடங்கள் கூடியிருத்தலால் கூடல் என்னும் பெயர் பெற்ற நகர்; மதுரை. நகர் தன்மைத்து என இயைக்க.

11. மாயோன்-திருமால். கொப்பூழ்-உந்தி. சீரூர்-சிறப்பையுடைய ஊர். புரையும்-ஒக்கும். இதழகம்-இதழின் உள்ளிடத்தை. தெருவம்-தெருக்கள். பொகுட்டு-உட்கொட்டை. அனைத்து-போல்வது. அண்ணல் கோயில்-பாண்டியனது அரண்மனை. தாது-மகரந்தம். தமிழ்க்குடிகள் தாதின் அனையர். தாதுண் பறவை-வண்டு. பரிசில் வாழ்நர்-இரந்து பெறும் பரிசிற் பொருளால் வாழ்க்கையை நடத்துவோர்; இவர் புலவர், பாணர், பொருநர் முதலியோர். மதுரை உந்தித்தாமரையை ஒக்கும்; அப்பூவிலுள்ள இதழ்களின் உள்ளிடங்களை ஒக்கும் தெருக்கள். இதழின் இடையேயுள்ள கொட்டையை ஒக்கும் அரண்மனை. கொட்டையைச் சூழ்ந்த தாதுக்களை ஒப்பர் குடிகள். பொருளை விரும்பிவந்த யாசகர்கள் வண்டுகளை ஒப்பர். பூவினுட் பிறந்தோன்-பிரமன். நான்மறைக்கேள்வி நவில் குரல்-வேத மந்திரத்தைச் சொல்லும் குரல். எடுப்ப-எழுப்ப. ஏமம்-இன்பம். எழுதல்-விழித்தல். அல்லதை-அல்லாமல்; ஐ, சாரியை. வஞ்சி-சேரரது இராசதானி; வஞ்சி நகரம். கோழி-உறையூர்; சோழனது இராசதானி. மதுரை வேதவொலியால் துயிலெழுமேயன்றி, கோழியின் ஒலியால் துயிலெழுவதன்று.

12. திருப்பரங்குன்றத்தின் சிறப்பு. தமிழ் வேலி-தமிழ் மொழியைக் கூறும் குடிகளையுடைய ஊர்கள் சூழப்பெற்ற. நிலஇ-நிலத்து. கொடித் தேரான்-பாண்டியன். குன்றம்-திருப்பரங்குன்றம்.

13. வையையின் சிறப்பு. செய்யாட்கு-திருமகளுக்கு. புனை தேரான்-பாண்டியன்.

14. கூடல்-மதுரை. கூடலிலும் குன்றிலும் வாழ்வாரே வாழ்வார் எனப்படுவர்; இங்கு வாழாதவர் புத்தேள் உலகத்திற்குச் செல்லமாட்டார் என்றது கருத்து.

15. அறவிலை வாணிகன்-தருமத்தை விற்கும் வியாபாரி; ஆய்: ஏழுவள்ளல்களுள் ஒருவன். பட்டன்று-உண்டாகியது. வண்மை பட்டன்று.

16. துகிர்-பவழம். பயந்த-பெற்ற. மணி-மாணிக்கம். சேய-நெடுந் தூரத்திலுள்ளன. தொடை-மாலை. அருவிலை-மதித்தற்கரிய விலை. கலம்-ஆபரணம். ஆப-ஆவார்கள்.

17. ஏதம் கொண்டு-தனக்குக் கேடு தருவனவற்றைக் கைக்கொண்டு. ஊதியம்-இலாபம்.

18. காதன்மை-விருப்பம். கையல்லதன்கண் - தகாத ஒழுக்கத்தி னிடத்தே.

19. நாணுமை-பழிபாவங்களைச் செய்தலில் நாணுமை. நாடாமை-விதிவிலக்குக்களை ஆராயாமை. நார் இன்மை-அன்பின்மை. பேணுமை-பாதுகாத்துச் செய்யாமை.

20. அடங்கா-அடங்கி நடவாத.

21. ஏழு பிறப்புக்களில் அடையவேண்டிய துன்பங்களை ஒரே பிறப் பில் தேடிக்கொள்வான். அளறு-நரகம்.

22. கை-ஒழுக்கம்; செயல். வினை-ஒரு காரியத்தை. ஒன்றே: எண்ணிடைச் சொல். புனை பூணும்-விலங்கையும் பூண்பான். பேதை யின் செயல் பொய்படுதலேயன்றி, அவனையும் சிறைப்படுத்திவிடும்.

23. ஏதிலார்-அயலார். ஆர-வயிறு நிரம்ப உண்ண. தமர்-உற வினர்.

24. ஏதேனும் ஒரு பொருளைப் பெற்ற பேதையர் செயல், இயல் பாகவே மயக்கத்தையுடைய ஒருவன் கள்ளையுங் குடித்து மயங்கினாற் போல்வது.

25. கேண்மை-நட்பு. பீழை-துன்பம்; பீடை என்பதன் திரிபு.

26. கழாஅ-கழுவாத.

27. இசையா-தங்களால் கொடுக்கமுடியாத. இல்லென்றல்-இல்லை யென்றல். நசை-யாசிப்பவனுடைய ஆசை. அழுங்க-கெட. நின்றோடிப் பொய்த்தல்-நெடுநாள் பொய் கூறுதல். நிரைதொடீஇ: மகடூஉ முன்னிலை. கொன்றாரின்-கொன்றவருடைய குற்றத்தைப் போன்ற.

**28.** நிலாப்பாரிக்கும்-நிலாவைப் பரவவீசும். சான்றோர்-கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவர். ஆற்றும்-சுமக்கும். அஃது-மறு. மறுவந்தால் உயிரை வைத்துக்கொள்ளமாட்டார். தெருமந்து-சுழன்று. தேய்வர்-தேய்ந்து போவார்கள்.

**29.** கண்-கணுக்கள். நூறி-அழித்து. வைது இறந்தக்கண்ணும்-வைது ஒழுகிய இடத்தும். வாயிற் சிதைந்து கூறுர்.

**30.** மறை-இரகசியம். திறனறிந்து-அறியவேண்டுபவற்றை அறிந்து. இற்கண்-மனைவியின் திறத்தில்; பிறர்மனையைப் பார்த்தலாகாது என்றபடி. புறங்கூற்று-காணுதவிடத்தே ஒருவரை இகழ்ந்து கூறுதல். மூகை-ஊமை. யாதும்-சிறிதும்.

**31.** தெளிவிலார்-தெளிந்த அறிவில்லாதவர். விளியா அருநோய்-தீர்த்தற்கரிய வியாதியைக் காட்டிலும். அளிய-மனம் நையும்படி. இல்ல புகழ்தல்-இல்லாதவற்றைக்கூறிப் புகழ்வது.

**32.** அல்லாரெனினும்-தீயசெய்கையை உடையவராயினும். அடக்கி-மனத்தினுள்ளே அடக்கி. புல் இதழ்-புறவிதழ்.

**33.** இறப்ப-மிக. பொறுத்தல் தகுவதாகிய ஒரு நற்காரியமல்லவா? கோங்கு-கோங்கமரத்தின் மலரில். உருவ வண்டு-அழகினையுடைய வண்டு. நாட: ஆடூஉ முன்னிலை.

**34.** நாறுத் தகடு-வாசனையில்லாத பொன்தகடு; போன்ற பாவாய் என்றது திருமகளை. விளி-அழிந்துபோவாயாக. புகுவாய்-வலியச் செல்கிறுய்.

**35.** புத்த ஞாயிறு-புத்தனுகிய சூரியன். நாண்மீன்-27 நக்ஷத்திரங்களும். வானம்-மேகம். ஊன் உடை-உடம்பையுடைய. வளி-காற்று. வலங்கொட்கும்-வலமாகச் சுழலும். மாதிரம்-திக்கு; மலையுமாம். நளி-செறிந்த. முந்நீர்-கடல். தரூஉம்-தரும். கறவை-கறக்கும் பசு. ஆர்த்தி-நிரம்ப உண்ணச்செய்து. கலம்-பால் கறத்தற்குரிய பாத்திரம். நிறை பொழியும்-நிறையும்படி சுரக்கும். வெரூஉப் பகை-அஞ்சுதற்குக் காரணமான பகை. அஞர்-துன்பம். துன்பத்தை நரகச்சாதியும் பேய்ச்சாதியும் விட்டொழியும். கூன்-வளைந்த முதுகையுடைய வடிவம். குறள்-குறுகிய வடிவம். ஊம்-ஊமைத்தன்மை. மா-விலங்குவடிவாய்ப் பிறப்பது. மருள்-அறிவின்றி மயங்கியிருப்பது. **13-14.** கூன் முதலியவற்றை உயிர்கள் பெறு. இன்னு-துன்பம். இகந்தோர்-கடந்தோர். போதி-அரசமரம். மூலம்-அடி. நாதன்-புத்ததேவன்.

**36**. கடிப்பு-குறுந்தடி. முதுகுடிப் பிறந்தோன்-வள்ளுவன். கோள் நிலை-கிரகங்களின் நிலை. தீவகச்சாந்தி-ஜம்புத் தீவுக்குச் செய்யப்படும் பீடாபரிகாரம். ஆயிரங்கண்ணோன்-இந்திரன். நால்வேறு தேவர்-ஏகாதசருத்திரர், துவாதசாதித்தர், அஷ்டவசுக்கள், அச்சுவினிதேவரிருவர் என நால்வகையினராகிய முப்பத்துமூவர். பால்வேறு தேவர்-பதினெண் கணங்கள். படர்ந்து-வந்து.

அடி, **9-12**. கரிகாற்சோழன் இமயத்தை நோக்கிச் சென்றபொழுது இந்நகரம் அழகிழந்ததுபோலவே, தேவர்கள் இங்கே வந்துவிட்டமையின் தேவலோகம் அழகிழந்தது.

தோமறுகோட்டி-நல்லோர் கூட்டம். பொலன்-பொன். வஞ்சி-வஞ்சிக்கிளை. பத்திவேதிகை-வரிசையாகிய திண்ணை. தாமம்-மாலை. மன்றம்-சபை; ஊர்க்குப் பொதுவாய் எல்லாரும் இருக்கும் மரத்தின் அடி. கதலிகைக்கொடி-ஒருவகைத் துவசம். காழ்-காம்பு. விலோதம்-கொடி. மதலை-கொடுங்கை. இறையோன்-பரமசிவன்.

அடி, **25**. சதுக்கத்தெய்வம்-நான்கு தெருக்கள் கூடுமிடத்திலுள்ள தெய்வமாகிய பூதம்.

ஆறு அறி-வேதாங்கங்கள் ஆறினையும் அறியும். பொதியில்-அம்பலம். புண்ணிய நல்லுரை-அறவுரை. பட்டி மண்டபம்-கல்வி மண்டபம். பற்றா மாக்கள்-பகைவர். செற்றம்-தணியாக்கோபம். கலாம்-பிணக்கு. துருத்தி-ஆற்றிடையிலுள்ள திட்டு. நன்கறிந்தீர்: விளி. கண்-முரசில் அடிக்கும் பக்கம். வசி-மழை. வளன்-செல்வம். மருங்கில் விழா அறைந்தனன்.

**37**. வினைஞர்-மள்ளர்கள். கம்பலை-முழக்கம். வெரீஇ-அஞ்சி. கயம்-குளம். எருமை: எழுவாய். கழை-தண்டு. இளமை-மடல். முருக்கி-அழித்து. சவட்டி-கெடுத்து. கேழ்-நிறம். வண்டு உகள்-வண்டுகள் சுற்றுகின்ற. கூம்பல்-குவிதலையுடைய. பழனம்-வயல். படப்பை-தோட்டம். கூடு குலை கமுகு-குலைகூடிய கமுகு: பாக்குமரம். அசைந்து-இளைப்பாறி. மன்று-தொழுவம். மருதம்-மருதநிலத்தை. அருவி: எழுவாய். மானவர்-மனிதர். வெறிது-ஒன்றும் கைக்கொள்ளாமல். விழுப்பம்-சிறப்பு. அள்ளிலை-செறிந்த இலை. பல-பலாக்கனி. அமிர்தம்-பழம். மாஅத்துக் கனி-மாங்கனி. காய்: காவி என்பதன் திரிபு. வான்றி-அரித்து. பணிவு-தாழ்வு. பாக்கம்-மலைப்பக்கத்திலுள்ள ஊர். பயம்-பிரயோஜனம். சீர்த்தி-பெரும்புகழ். தலைமணந்த-கலந்த. முல்லைத்திணை-முல்லை நிலத்திலுள்ள. வேலி-எல்லை. கோலம்-அழகு. துறக்கம்புரியும்-தேவலோகம்

தன்பால் வருதற்கு விரும்புகின்ற. தேசிகம்-ஒளி; கௌரவம். மறம்-வீரம். தகைய-தன்மையையுடைய. விறற்புகழ்-வீரத்தோடுகூடிய கீர்த்தி. வீரியம்-நிலவளம். அலகைவேந்தன்-மற்ற அரசர்களுக்கு உவமையாக வுள்ள அரசன். அரம்பு-குறும்பு. கரம்பு-பாழ்நிலம்.

38. அற்றம்-சோர்வு. காத்தல்-வாராமற் காத்தல். குரவர்-ஐங்குரவர். ஒன்றி-மனம் ஒன்றுபட்டு. கன்றியது-அடிப்பட்ட குற்றத்தை.

39. தரங்கம்-அலை. தருதி-தருகின்றாய். உழந்தேன்-வருந்தினேன். இயைந்ததொன்று-கொடுக்கக்கூடியதாகிய ஒன்றை. இக்கணம்-இந்த க்ஷணத்தில். சுடர்-சூரியன். தோன்றால்-பெருமையிற் சிறந்த கர்ணனே.

40. விசயன்-அருச்சுனன். நன்று-நீ கூறியது மிகவும் நல்லது. நவில்க என. மறையவனும்-பிராமணவேடங் கொண்டுவந்த கண்ணபிரானும். ஒன்றியபடி-நீ சம்மதித்தபடியே.

41. யாக்கை அகத்ததோ-உடம்பின் உள்ளே உள்ளதோ அவ்வுயிர். நயக்கும்-விரும்பிக் கொடுக்கும். பக்குவம்-உரியகாலம். ஒ இலாது-ஒழியாமல். நீ கொள்க.

42. முனிவன்-தவவேடங் கொண்டுவந்த கண்ணன். தருதும்-தருவேம். சூரன்-சூரியன். உற்பவம்-பிறவி. எழ் எழுபிறப்பு-ஒவ்வொன்றும் ஏழாகிய எழுவகைப் பிறப்பு. இதயம்-ஹிருதயம்.

43. மைத்துனன்: கண்ணனுக்குக் குந்தி அத்தையாவள்; அவள் மைந்தனுதலின் கர்ணனை இங்ஙனம் கூறினார். உகந்து உகந்து: இவ்வடுக்கு இடைவிடாமைப் பொருளில் வந்தது. ஈகை-கொடை. முடிவில் முத்தியும் பெறுதி. மூவர்-பிரமன் முதலிய மும்மூர்த்திகள்.

44. புணரி-கடல். பஞ்சவாயுதம்-சங்கம், சக்கரம், கதை, கட்கம், சார்ங்கம். கூற்று உறழ்-யமனை ஒத்த. கரா-முதலை. குஞ்சர ராசன்-கஜேந்திரன்.

45. மகம்-யாகம். அனிலம்-காற்று. சிறுக்கி-சிறுகச் செய்து.

46. பவ்வம்-கடல். காயா-காசாமரத்தின் மலர். கதை-தண்டாயுதம். நேமி-சக்கரம். கோதண்டம்-வில். இதழ்-உதடு. வாரிசாதம்-தாமரை.

47. மலைந்து-போர்செய்து. தறுகண்-அஞ்சுவனவற்றை அஞ்சாமை. தோழற்கு-துரியோதனனுக்கு. தேவர்கோ-இந்திரன். மருதிடை-மருத மரங்களினிடையே. வாழ்ந்தவாறு எத்தன்மையதென ஒரு சொல் வருவிக்க.

48. வான்பெற்ற நதி-ஆகாயகங்கை. மதிபெற்ற திருவுளத்தான்: திருமாலின் உள்ளத்திலிருந்து சந்திரன் தோன்றிற்றென்பது நூல் வழக்கு. தைவந்து-தடவி. பகழி-பாணம்.

49. குனித்திட-ஆட. பிலிற்றின-துளித்தன. பூங்கொடி துணர்த்த-பூங்கொத்துக்களைத் தோற்றின; முற்று. முளி சினை-உலர்ந்த கிளைகள். முகைத்த-அரும்புவிட்டன. தானை-சேனை. கானம்-கானத்தில்.

50. அதரிடை-வழியினிடத்தே. பரல்-பருக்கைக்கல். அழற்கதிர்-சூரியன். சுரம்-பாலைவனம். வள்ளவாய் மலர்-தாமரை மலர்; வள்ளம்-கிண்ணம். சுரம் மருதம் போன்றது.

51. ஊறு-இடையூறு. வீக்கிய-பெருக்கச் செய்த. ஆறலை கள்வர்-வழிப்பறிசெய்யும் திருடர். அளியர்-அன்புடையர். உழுவை-புலி. மாற்றம்-விரோதம்.

52. அணங்கு அன்னாளொடு-தெய்வப் பெண்ணையொத்த தமயந்தியோடு. நகர்-மாவிந்த நகரம். காய்கதிர்-சூரியன். ஆடல்போல்-விளையாடல்போல்.

53. அள்-செறிந்த. ஆறு இடை-வழியினிடத்தே. கொள்ளை-மிகுதி. நறவு-தேனை. கூட்டு உணும்-சேர்ந்து உண்ணும். புள் உரு-அன்னப் பறவையின் வடிவத்தை. கலி-கலிபுருடன்.

54. தூவி-அன்னத்தின் சிறகு; தூவியாகிய சிறகு. மென்புள்-அன்னப்பறவை. ஓவியர்-சித்திரம் எழுதுவோர். உருவப்பைங்கொடி-தமயந்தி. காவி-கருங்குவளை மலர்.

55. கஞலிய-நெருங்கிய. கொடுஞ்சிறை-வளைந்த சிறை. நோக்குறூ-பார்த்து. மன்ன: விளி. புள்ளின்-புள்ளைப்போல. ஈது-இப்பறவை.

57. அகில்தீம்புகை; ஆடைக்கு அகிற்புகை ஊட்டுவது வழக்கம். நீவி-ஆடை. எர்-அழகு. வளைத்தும்-தடுத்துப் பிடிப்போம்.

58. காமுற-விரும்ப. துகிலில் அன்னத்தைச் சேர்த்தலும். அந்தரத்து-ஆகாயத்தில்.

60. கல் அதர்-கல் நிரம்பிய வழி; நடந்து சிவப்புறல் என்க. வீழிவாய்-வீழிப்பழம் போன்ற சிவந்த வாய். மயிற்கு-தமயந்திக்கு. உந்தை-உன் தந்தையினது.

61. மாழ்கி-மயங்கி. பிழைத்தது-செய்த தவறு. பொறி-நல்வினை.

62. செயிர்-குற்றம். கோடலை-கொள்ளாதே. இயல்-சாயல். உய்யுமோ-பிழைக்குமோ.

**63.** முருகு-வாசனை. உயிர்த்து-வீசி. அளியினம்-வண்டின் கூட்டங்கள். கருத அரு-நினைத்தற்கு அரிய. பரிதி வானவன்-சூரியனாகிய தேவன். உரவு-உலாவுகின்ற. இச்செய்யுள் தற்குறிப்பேற்ற வணி.

**64.** மாயிரு-மிகப் பெரிய. நுங்கிய-விழுங்கிய. பாயிருள்-பரவிய இருளையுடைய. அரில்-சிறு தூறு. விதியின் கொட்பினால் மேயினன்; கொட்பு-சுழற்சி.

**65.** அமளி-படுக்கை. பள்ளிகொள்பவர்-படுப்பவர். நுனை-நுனி.

**66.** பனித்திடும்-நடுங்கும். கண்படின்-உறங்கினால். தமி-தனிமை.

**67.** களைகண்-ஆதாரம். நண்ணுமேல்-நண்ணுவாளானால்.

**68.** உளை-பிடரிமயிர். அரிப்பைந் தவிசு-சிங்காதனம். எம்பிரான்: அண்மை விளி. முளரி-முட்செடி. முற்றும்-சூழ்ந்த. வந்து-தடவி. ஆயிழை: விளி. நடுங்கல்-நடுங்காதே.

**69.** நளன் ஆற்றிட. நள்ளியாமம்-பாதியிரவு; நள்-நடு. மடங்கல்-சிங்கம். மொய்ம்பு-வலி. மன்னர் மன்னன்-சக்கரவர்த்தி. குடங்கை-வளைந்த கை.

**70.** உலவாக்கோட்டை-அழிதலில்லாத நெற்கோட்டை. பொடி-திருநீறு. ஏறு-இடபம். வேதக்குடுமி-உபநிடதத்துக்கு. படி - பூமியிலே. சீர்த்தி-கீர்த்தியையுடைய. கூடலாகிய பதியிலுள்ள. படியார்க்குஞ் சீர்த்தி: இடைப்பிறவரல். உழவோர்-வேளாளர்.

**71.** ஆன்ற - நிறைந்த. மரபின் - முறையில். தருமசீலையென்பது மனைவியின் பெயர். எனையாரும்-எத்தன்மையுடையவரும். நீராள்-தன்மையையுடையவள். தனை ஆள் பதிக்கு-தன்னை ஆள்கின்ற கணவனுக்கு. கதிக்கு-முக்தியையடைவதற்கு.

**72.** கொள்வான்-கொள்ளும்பொருட்டு. வில்லேருழவர் கடனென்றது அரசர்க்குக் கொடுக்கவேண்டிய ஆறில் ஒரு பங்கு. இல்லேருழத்தி-மனையாள். மடைச்செல்வம்-பலவகையான உணவுகள். அல்-இருள். அருத்தும்-உண்பிக்கும்.

**73.** தொகை-கூட்டம். தழீஇய-தழுவிய. நால்வகை உண்டி-உண்ணல், தின்னல், நக்கல், பருகல் என்னும் நான்கு வகைக்குரிய உணவு. மாறுபடும் உண்டி-பலவகைப்பட்ட உணவு. தொண்டர் மறுத்து அருந்த; மறுத்து-வேண்டாமென்று மறுத்து. அன்பின் தலையாயவன்-முதன்மையான அன்புடையவன். கேணியின்-கேணியில் நீர் ஊறுவது போல். பல்குதல்-பெருகுதல்.

**74.** வளம்-செல்வம். இன்மை கூறு-தன்னிடம் வந்து இரப்போர்க்கு இல்லையென்று கூறாத. தேற்ற-தெளியச் செய்ய. அஃகி-குறைந்து. நலிவு செய்ய-வருத்த. மின் நீர வேணி-மின்னலின் தன்மையையுடைய சடை. விலக்கினர்-செல்வத்தை நீக்கினர்.

**75.** விருத்தி-ஜீவிதம். பூண்டான்-நின்றான்.

**76.** கொடுப்பாரவரே-கொடுப்பவராகிய இறைவரே. அடுப்பார் விழுமம் களைவார்-அடுப்பவருடைய துன்பத்தைக் களைபவராகிய இறைவரது. மடுப்பான்-மடுப்பவன். நியமம்-அன்னதானமாகிய விரதம்.

**77.** பட்டினிவிட்டு-பட்டினி கிடந்து. ஆகம்-உடம்பு.

**78.** அறக்குன்றனையான், சலியாதவன் என்றபடி. நிறக்கின்ற-ஒளிவீசுகின்ற. செம்பொற்சிலையார்-பொன்மயமான மேருவாகிய வில்லையுடைய பரமசிவன். நிகழ்த்தி-விண்ணப்பம் செய்துவிட்டு.

**79.** நஞ்சாகிய உணவை. செய்-நன்செய். புலம்-புன்செய்.

**80.** விடன் நல்கு-விஷம்பூசப்பெற்ற; ஆயுதத்தின் இயல்புகூறியபடி.

**81.** பஞ்சாதி-வேதத்தின் ஒருவகை உறுப்பு. வாக்கு-அசரீரி வாக்கு. அஞ்சாதி-அஞ்சாதே. செஞ்சாதி-செந்நிறமுள்ள சாதியாகிய. வால் அரிக்கோட்டை-வெண்மையாகிய அரிசிக்கோட்டை. எடுக்குந்தோறும் எஞ்சாதிருக்கும்.

**82.** அதில்-அக்கோட்டையில். ஆனாத-அமையாத. நானாதருமங்களும்-பலவகையான தருமங்களும்.

**83.** விம்மிதன்-ஆச்சரியமுடையவன். பயன் என்றது சோமசுந்தரக் கடவுளை. கோட்டையைக் கண்டான்.

**84.** வானாறு-ஆகாயகங்கை. புகை-புகையும். சுடர்-தீபம். கருவி-அரிசிக்கு வேண்டிய உபகரணங்கள்.

**85.** தமர்-அடியார். வேதச்செல்வர்-பிராமணர்கள். தென்னடர்-பிதிர்க்கள். விருந்து-புதியராய் வருவோர். ஒக்கல்-சுற்றம். நோய் இன்று-நோயில்லாமல்; இன்றியென்பதன் விகாரம். அளகாதிபன்-குபேரன்.

**86.** சைவவேதியர்-ஆதிசைவ வேதியர். ஒருவன் அத்தலத்தில். முடியவும்-முற்றவும். ஐவகைப்படுவேள்வி-பிரமயாகம், தேவயாகம், பிதிர் யாகம், முனிவர்யாகம், பூதயாகம் ஆகிய ஐந்தும். அறுவகைத்தொழில்-ஓதல், ஓதுவித்தல், யாகம் செய்தல், செய்வித்தல், ஈதல், ஏற்றல். அவை புரிந்திடும்-அவற்றைச் செய்யும்.

**87.** சித்திரப்பெயர்முனி-சித்திரமுனிவர் என்ற ஒரு முனிவர். அத்திரித்தவன் கோத்திரம்-அத்திரிருஷி கோத்திரம்.

**88.** பதிபாசம் புகல் பலநூலும்-ஆகம சாஸ்திரங்கள். இயலாகும் பெயர்-இயற்பெயர். சிவநாதனென்பது அவன் பெயர். மான்-மான் போன்ற கண்களையுடைய. நயனநந்தினி-சிவநாதன் மனைவியின் பெயர். வடமீன்-அருந்ததி. சிவசருமா: கதாநாயகன்.

**89.** மதன்-மன்மதன். சுதன்-முருகக்கடவுள். வயது ஓர் ஐந்தொடு. பவரோகம் களை-பிறப்பாகிய நோயைக் களைந்த. சிவபதமீது ஒன்றினன்-இறந்தான்.

**90.** உழந்தாள்-அனுபவித்தாள். ஒன்னலர்-பகைவர். தாயமுடையோர்-தாயாதிகள். பகிர்-பிரித்துக்கொடுப்பாயாக. வளைத்து-தடுத்து.

**91.** ஞாதியர்-தாயத்தார்கள். அழல்-நெருப்பு. ஏதம்-துன்பம். உரம் எய்துவதன் முன்னே-பலம் அடைவதன் முன்னே. 'இளைதாக முள்மரங்கொல்க களையுநர், கைகொல்லும் காழ்த்தவிடத்து' என்று முட்செடியை முற்றுவதற்கு முன்னர்க் களையவேண்டுமென்பர் திருவள்ளுவர். முன் இரண்டடியும் கவியின் கூற்று. இச்செய்யுளின் முதலிரண்டடிகளில் பழிப்பு ஒப்புமைக்கூட்டவணி அமைந்துள்ளது. அவற்கு-சிவசருமாவிற்கு. நீதியிலர்-நீதியில்லாத தாயத்தார்.

**92.** ஒன்று புரி-ஒன்றைச் செய். காணிகளை-உரிமைகளை.

**93.** அன்னை மடவாள்-உன் தாயாரோ பெண்ணாக இருக்கின்றாள். இல்லளவும் எய்தி-வீட்டளவும் சென்று. ஆயை வினவு-தாயைக் கேள். நல்லதமர்: குறிப்பால் இகழ்ந்தபடி.

**94.** மொழிதல்-மொழிதலை. கலுழ்ந்தாள்-அழுதாள்.

**95.** நங்கள் துணை ஆருமிலை-நண்பர் யாருமில்லை. தேரின்-ஆராய்ந்தால். மானும்-ஒக்கும்.

**96.** இறை-சிவபெருமான். அமலன்-பரமசிவன்.

**97.** என் மகவு-என் பிள்ளை. காணி அழியாதே காத்தருள்வீர். யார்-உன்னையன்றி வேறு யாவர். வழித்துணையர்: அத்தலத்துக்கிறைவர் திருநாமம்; இது, மார்க்க சகாயர் என்று வடமொழியில் வழங்கும்; வழித்துணை மருந்தே என்பர் பின்னும். பணித்தருளும் - கட்டளையிட்டருளும்.

**98.** கூற்றம்-யமன். என்துயர் ஆற்ற அரிது. மாற்றம்-பரிகாரம்.

**99.** முன்பு பெறுபேறு-முதன்மையாகிய சுதந்திரப்பங்கு. அடைக்காய்-வெற்றிலை பாக்கு. இளந்தலை-தாழ்வு. வன்பு-பலாத்காரம்.

**100.** ஓர் பேதை-வந்தி. கொட்டு-மண்வெட்டி. சிவபெருமான் மதுரையின்கண் பிட்டு வாணிச்சிக்காக வையை யாற்றின் உடைப்பை அடைத்

தற்குக் கூலியாளாகச் சென்றார்; இக்கதை திருவிளையாடலில் மண் சுமந்த படலத்தால் அறியலாகும். இட்டு இரை-சிறிதளவான இரையை.

101. அகற்ற-செலுத்த. மைந்தருடன்-விநாயக சுப்பிரமணிய ருடன். வாணன்-பாணசுரன். இக்கதை பாகவதம், 10-ஆவது கந்தத்தில் அநிருத்தன் மணம்புரியும் அத்தியாயத்தால் அறியலாகும். எந்தை: அண்மை விளி. ஒரு வேடன்-கண்ணப்ப நாயனார்.

102. இருள் ஊடு-இரவில். மன்றுள்-சிற்சபையில். பொன்றரிய-அழிதலில்லாத.

104. நம்பேர் வழித்துணை இறைவர். விழிக்குத் தோன்றாத துணை யாக இருக்கும் யாம் இன்று விழித்துணையாவோம். அந்த உரு-ஆதி சைவ உருவம்; ஆதி சைவ உருவத்தைப் பஞ்சலிங்கத்துள் ஒன்றாக ஆகமங்கள் கூறுமாதலின் அந்த உரு அரன் உரு ஆகும் என்றார்.

105. பாலன்—சிறியன்; பகை பெருத்தது. அணங்கு-தெய்வப் பெண்.

106. கனகம்-பொன். செற்றவர்-பகைவர்.

108. அரனே-அரனே என்ற சப்தம். அந்தக்கரணம்-மனம், சித்தம், புத்தி, அகங்காரம். களை மலம்-ஆணவம் முதலிய மூன்று மலங்கள். களைந்து-களைகளைக் களைந்து. இருவினை வகை-புண்ணிய பாபம். இறைவனானன்-தலைவனானன்.

109. நெருக்கு உளத்தவர்-ஒருவழிப்பட்ட மனத்தை உடையவர்கள். நல்கும் தரு-அளிக்கும் கற்பகதருப்போன்ற சிவபெருமான். குளம்-நெற்றி. குள்ள உருவையுடைய தவத்தினன்; அகத்தியன். சுகன்-சுக முனிவர். இருவரும் இளமையிலேயே துறவுபூண்டவராதலின் சிவ சருமாவுக்கு உவமையாகக் கூறப்பட்டனர். சிவசருமாவும் தோற்றத்தில் சிறியவனாகவே இருந்தான்.

110. புரிநூல்-முப்புரிநூல்; பூணூல். முஞ்சி-முஞ்சிப்புல்லாலாகிய அரைஞாண். முதுகூடு-முதுகின் நடுவே. சிகை-குடுமி. அங்கை-உள்ளங்கையில். இருநால் ஒரு நூறு-நூற்றெட்டு. மணிமாலை-உருத்திராக்க மாலை. ஒளி-பிராமணருக்குரிய தேஜஸ். இருநூறு-பலவென்னும் பொருளது.

111. விழுப்பம்-சிறப்பு. தபனமண்டபம்-ஸ்தபன கலசம் வைக்கும் மண்டபம்.

112. தூபம்-புகை. ஆயிரக்கதிரண்ணல் தன் பூசை-சூரிய பூஜை. வாயிலிற் புரி பூசை-துவார பூஜை.

**113.** சந்தி என்பவை இரண்டு-வைதிகம் சைவம் என இரண்டுக்கு முரிய சந்திகள். ஐந்து சுத்தி-பூதசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திர சுத்தி, லிங்கசுத்தி ஆகிய ஐந்து. அர்க்கியம் இரண்டு-சாமானியம், விசேஷம் என்னும் இரண்டு. குந்தி-காலின் நுனிவிரலைக் கீழே ஊன்றி.

**114.** எய்த்து-இளைத்து. பதவி சகாயன் என்பது மார்க்க சகாயனின் திருநாமம். மரகதவல்லி என்பது விரிஞ்சிபுரத்திலுள்ள அம்பிகையின் திருநாமம்.

**115.** அலை-அலைகளையுடைய கடல். மூடி வளைக்க எல்லாம் வளைந்தன.

**116.** நெக்கு நெக்கு-நெகிழ்ந்து நெகிழ்ந்து. மன்பதை-மக்கட்கூட்டம். வன்பர்-அன்பில்லாதவர்.

**117.** கடல்போல் கங்கை ஒலித்திட. குமுகுமு: ஒலிக்குறிப்பு. அரவம் தாழ்ந்திட; அரவம்-திருமுடியிலணிந்திருக்கும் பாம்பு. நாரி-நாண்.

**118.** ஆதனத்தையும் மூர்த்திமானையும் முறையே சிவலிங்கத்தில் நாட்டினன். கலை-ஆடை. கலன்கள்-ஆபரணங்கள். நானம்-கஸ்தூரி. போதும்-பூக்களையும். அமுது-நிவேதன அன்னம்.

**119.** கோது-தீண்டுகின்ற. தாதை தாளற எறிந்தவன்-சண்டேசுவரன். பிழையுமாகிய தீதை.

**120.** வாயாதி-வாக்கு முதலிய கர்மேந்திரியங்கள். மனமாதி-மனம் முதலிய அந்தக்கரணங்கள். மாயாதிகள்-மாயை முதலியன. மண்ணீர் தீயாதிகள்-பஞ்சபூதங்கள். ஒளி-சூரிய சந்திரர்கள். யாயாகியும்-தாயாகியும். அருள்-அருள்செய்வாயாக. சரண்-நீயே புகலிடம்.

**121.** பிரியாவிடை அருளவேண்டும் என்று ஒரு சொல் வருவிக்க. கரியானதன்-யானையின். மேல்—தோளின்மேலே. அரியார்-திருமால். அரியாய்-அரியவனே. ஆராமை-தெவிட்டாமை. பரிவால்-அன்போடு.

**122.** வாணி-சரஸ்வதி. நாவுடையோன்-பிரமன். பேணி-காப்பாற்றி. வேணியாளர்-சடையையுடைய சிவபெருமான். வேதியன்-சிவசருமா.

**123.** கந்தவேளன-முருகவேளைப்போன்ற. கழைசிலைவேள்-கரும்பை வில்லாகவுடைய மன்மதன். சந்தஞ்சல முனிவன்-அகத்தியன். இவர்கள் முறையே வீரம், அழகு, நூலாராய்ச்சி இவைகளிற் சிறந்தவர். ஐந்து மாமுகன்-சத்தியோஜாதம் முதலிய ஐந்து திருமுகங்களையுடைய பரமசிவன்.

124. இறை-அரசன்.

125. சீ + காளம் + அத்தி = சீகாளத்தி. சீ-சிலந்திப்பூச்சி; காளம்-பாம்பு; அத்தி-யானை. இவை மூன்றும் இறைவனைப் பூசித்துப் பேறு பெற்றமையால் இத்தலம் இப்பெயர் பெற்றது. இமைக்கும்-பிரகாசிக்கும். எழுவாயுகம்-முதல்யுகம்; கிருதயுகம். முதற்பிறப்பு-பழைய சனனம். பொன்முகரி-காளஹஸ்தியைச் சார்ந்த ஒரு நதி. திருக்காளத்தி தென்கயிலாயமென்று கூறப்படுதலால் கயிலாயம் என்றூர். தந்து-நூல். சமைத்தது-உண்டாக்கியது.

126. மாளிகை-மேற்பரப்புள்ள கட்டிடம். தோமில்-குற்றமில்லாத. கருப்பெயர்த்தலம்-கருப்பக்கிருகம். சூளிகை-மாளிகையின் மேலறை. காமர்-அழகு. மார்ப என்றது யாதவராசனை நோக்கி; நாராயணபுரத்திலிருந்த யாதவனென்னும் அரசனை நோக்கி இச்சரிதம் உரைக்கப்பட்டதாதலால் இங்ஙனம் கூறப்பட்டது. கோயிலெலாம் செய்தது.

127. ஓர் திணையளவேனும்-சிறிதளவாவது. பரிந்து-வருந்தி. பண்டு போல்-முற்பிறப்பிற் செய்ததுபோல. நாள்-நாளில். அதன்-சிலந்தியின். எம்பெருமான் என்பது அடுத்த செய்யுளிலுள்ள செய்தான் என்பதைக்கொண்டு முடிந்தது; இங்ஙனம் வரும் செய்யுள் குளகம் என்ற இலக்கணத்தின்பாற் படும்.

128. வேந்த: விளி. எம்பெருமான் செய்தான்.

129. அன்னே-ஐயோ. அவிந்தது-அவிந்ததற்குக் காரணம்.

130. அரையிருள்-பாதியிரவும். தமியேன்பால்-யாதொரு துணையுமில்லாத என்பால்; தமி-தனிமை.

131. தவ-மிக. பொன்றியது-அழிந்தது. பொல்லாது-தீயது. இறப்பல்-இறப்பேன்.

132. வெளிநின்று-தோற்றி. வேட்கையினை-விருப்பத்தினை. உரை-சொல்வாயாக.

133. கறை-குற்றம். காற்கமலம்-காலாகிய தாமரை. அறவாழி அந்தணன்-தருமக்கடலாகிய சிவபெருமான்.

134. இரண்டாம் உகம்-திரேதாயுகம்; உகம்-யுகம். தென்கயிலை-திருக்காளத்தி. கையையும், கொம்பினையும், முரணினையும் உடைய களிறு.

135. குழந்தை மதியும்-இளமதியம்; பிறையை. மணியைத் தள்ளி என்க. விழைவின்-விருப்பத்தோடும். கூவிளம்-வில்வம். பல்லவம்-தளிர். சென்னி-தலை.

**136.** இலைக்குப்பை என்றது வில்வத்தளிர்களை. அன்னோ-ஐயோ.

**137.** என் ஆருயிர் என்றது இறைவனை. கல் என்றது இரத்தினத்தை. அனகன்-சிவபெருமானை.

**138.** மற்றை ஞான்று-மறுநாள். உரும் ஏறு-இடி. பற்றலரே-பகைவரே. பகையினுற் செய்தார்.

**139.** கடு-விடம். நான் ஆவி குடியேனோ? அதுலன்-ஒப்பில்லாதவன்; சிவபெருமான். ஈது-இச்செயல்.

**140.** காளம்-பாம்பு. ஒருத்தல்-யானை. அஞ்சனவெற்பு-கருமலை. முந்நீர்-கடல்.

**141.** கற்கள்தமை-கற்களை. நந்தா-கெடாத. அந்தோ-ஐயோ. கற்கள்தமை ஐயோ யாங்ஙனம் பொறுத்திருந்தாய்?

**142.** இறையும் பகைவர் பாலானர்-பரமசிவனும் சத்துருக்களின் பக்கமாயிருந்தார்; எனக்குத் துணை இனி யார்? மேவார்-பகைவர். வினையேன் காண்கிலேன். சாய்த்தல்-கொல்லுதல். ஓவா-ஒழியாத. உவா-யானை. தன்னுழை—தன்னிடத்து.

**143.** ஒருத்தலும்-யானையும். ஒய்யென-விரைவாக. இட்டாங்கு-இட்டபடியே. உவகை மூழ்கி—உவகைக்கடலில் அழுந்தி.

**144.** செய்வான்-செய்வதற்கு. போய்-யானை சென்று. பன்னகம்-பாம்பு. மத்தகம்-யானையின் மத்தகம். நால்வாய்-தொங்குகிற வாயையுடைய. ஊழிநாள்-பிரளயகாலம். அயர்ந்தது-சோர்ந்தது.

**146.** குருதி-இரத்தம். உலம்-உருண்ட கல். கோடு-மரக்கிளை. பிலம்-ஆழ்ந்த இடம், பாதாளம். கடு-விடம்.

**147.** முன்னுபு-நினைந்து. கொம்மென-விரைவாக. குழல்-துவாரம்.

**148.** பண்ணவர்—தேவர். துண்ணென்ருர்—திடுக்கிட்டார். தருக்கள்-மரங்கள். உம்பர் தாரு—தேவருடைய மரங்கள்.

**149.** உம்பல்-யானை; யானைக்கொம்பில் முத்துண்டென்பர். அரவு மெய் நுறுங்கிற்று. அழல் திரித்தன்ன வேணி-அக்கினியை முறுக்கினுற்போன்ற வேணியையுடைய. பெரியவன்-சிவபெருமான். தன் உருவம்-சாரூபம்.

**150.** அலைபாய் நெடுநீர் வேணிப் பண்ணவன்.

**151.** புலையாம் பிறவி-இழிவாகிய பிறவியை. என் செய்தேம்-என்ன பயனடைந்தோம். பொன்னி-காவிரிநதி. அரங்கத்து-திருவரங்கத்தில் எழுந்தருளிய. அரங்கம்-ஆற்றினிடையிலுள்ள திட்டு; இந்தத் தலம் அங்கே இருத்தலால் இது திருஅரங்கம் என்னும் பெயர்பெற்றது.

எம்பிரான்—அரங்கநாதரின் அமிசமாகிய இராமனை. அன்னையொடும்-சீதாதேவியோடும். கானம்-தண்டகாரணியத்தை. தடந்தோறும்-வழி தோறும். கழல்-திருவடி.

**152**. தீயிடைநின்றும்-பஞ்சாக்கினி மத்தியிலிருந்தும். காயிலை தின்றல் முதலியன தவம்செய்யும் வழிகள். பூமகள்-திருமகள். நாகப்பாயல்-ஆதிசேஷனாகிய படுக்கையையுடைய. முகுந்தன்-திருமால். பணிந்தால் நல்ல பயனடையலாம்.

**153**. ஆலி-நீர்த்துளி. இந்தளூர் - திருஇந்தளூர்; இப்போது திருவழுந்தூர் என்று வழங்கும். உள்ளுவார்...சோதியை-நினைப்பவரின் உள்ளத்திலுள்ள சோதியை; காஞ்சீபுரம் குமரகோட்டத்திலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம் உள்ளுவார் உள்ளம் என்று வழங்கப்படுகிறது. ஊரகம், நீரகம்-காஞ்சீபுரத்திலுள்ள விஷ்ணு ஸ்தலங்கள். எவ்வுள்-திருஎவ்வுளூர்; இக்காலத்தில் இது திருவள்ளூர் என்று வழங்கும். ஏர்-அழகு. நீர்மலை-திருநீர்மலை. ஓதம்-வெள்ளம். அழுந்தி வாடுவது ஒழிதி.

இச்செய்யுள் உயிர்வருக்கத்தை முறையே பெற்ற அடிகளையுடைய நேரிசையாசிரியப்பா.

**154**. இரவில்-இராத்திரியில். மதியுள்-புத்தியினிடத்திலுள்ள. இறையும்-சிறிதளவேனும். கரவன்-கள்ளமுடையவன். காவுமுதலை; கஜேந்திரனைப்பிடித்த முதலையிடத்தே கோபத்தையுடையவனை. கருத்தனை-கருத்திலுள்ளவனை. கரு தனை துடைத்து-பிறவியை நீக்கி. பரமபதத்தன்-ஸ்ரீ வைகுண்டத்திலிருப்பவன். பதத்துட்பாரனை-திருவடிகளிலடங்கிய பூமியை யுடையவனை. இது திருவிக்கிரமாவதாரத்தில் நிகழ்ந்ததைக் கூறியபடி. நத்து-சங்கம். அரவனை-முழக்கத்தையுடையவனை. அராவின் அரங்கனை—காளிங்கனாகிய பாம்பையே நடனசாலையாய் உடையவனை. அடிகளை—சுவாமியை.

இச்செய்யுள் தொடர்மொழியில் முன்வந்த சொல்லை விட்டுவிட்டுப் பின்வந்த சொல்லையே கொண்டு செல்லும் எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

**155**. சிவத்துரோகம் தேவர்களுக்கு நீங்கியது என்பது புராண கதை. குழல்வாய்மொழி என்பது திருக்குற்றாலத்திலுள்ள அம்பிகையின் திருநாமம். பாண்டிநாட்டுள் ஆரியநாடு என்பது ஒரு நாடு. அஃது இருவகைப்படும்; அவற்றுள் இத்தலம் தென்னாரிய நாட்டிலுள்ளது.

**156.** இந்நாட்டில் பகைவர்க்கு அஞ்சிய போரொன்றுமில்லை யென்றபடி. மின்னார்-மகளிர். மருங்கு-இடை. சூல் உளை-கருப்பத்தால் வருந்துகின்ற. வித்து-விதை. கிண்கிணி-ஓராபரணம்.

**157.** பிறரைப் பழியார். இழியார்-இழிந்த வழியிற் செல்லார். இயலாதவற்றைச் செய்விப்பதாக உடன்பட்டுப் பின்பு ஒளியார். இசைவு இன்றி-உடன்படுதலின்றி. தள்ளியும்-தடுமாறியும். தாங்கரும் கேள்வியர்-மிகுதியான கேள்வி யறிவுடையவர்.

**158.** காய்தல்-கோபித்தல். உவத்தல்-மகிழ்தல். ஆய்தல்-ஆராய்ச்சி செய்தல்.

**159.** நாக்கு எல்லாவற்றிற்கும் மூலகாரணம். அதனை வெல்வது இன்றியமையாதது. ஆக்கப்படுக்கும்-செல்வத்தைக் கெடுக்கும்; ஆக்கம் படுக்கும் என்றது ஆக்கப்படுக்கும் என்று மாறியது. தளை-விலங்கு. போக்கப்படுக்கும்-உடனிருந்தவர்கள் நீங்கும்படி செய்யும்.

**160.** கல் நின்று உருக.

**161.** வெகுளி-கோபம்.

**162.** சின்னத்துணி-துண்டமாகிய துணி; சிறிய துணியுமாம். முள்ளின் துன்ன-காரைமுள்ளாகிய ஊசியினால் தைத்த. மூசிய ஆசை-மொய்த்த ஆடை. அகல்-மண்பாத்திரம். பழம்பிறப்பில் கொடுத்தறியாதவர் நிற்பர்; ஆதலால் கொடுத்தல் இன்றியமையாதது.

**163.** செய்யாய்-செய்வாய்.

**164.** செம்மையர்-செம்மையையுடைய பெரியார்க்கு.

**166.** தம் உயிரை முறையாகக் காக்கும். சரம்-சரிக்கிற உயிர்கள். அசரம்-தாவரங்களோ. "எறும்பு முதலியவைகளும் உழைத்துத் தம்மையும் தம் இனத்தாரையும் காக்கின்றன; உமக்கு அந்த அறிவில்லையே! உங்கள் பிறப்பு என்ன பிறப்பு?" என்று ஆசிரியர் வினவுகிறார்.

**167.** ஒப்பனை-முகமன்கள்.

**168.** பானுகிரணம்-சூரிய கிரணத்தை. பங்கேருகம்-தாமரை. சகோரம்-ஒருவகைப் பட்சி; அது நிலவை உண்பது. மையை-மேகத்தை. மாவிசய ஆனந்தரங்கன். ஆனந்தரங்கன்-ஆனந்தரங்கப்பிள்ளை; இவர் புதுச்சேரியிலிருந்த ஒரு பிரபு.

**169.** சோலையப்ப முதலியார் பெயர் சோலை என்றும் வழங்கும். சோலையாயிருந்தால் அஃது அலையும், கிளைபடும், காய்க்கும், இலையைப்

பெற்றிருக்கும்; இவரிடத்தில் அலைதலில்லை; வஞ்சனையில்லை; கோபித்தல் இல்லை; இலை என்பதில்லை. அப்படியிருக்க இவரைச் சோலை என்பது எவ்வாறு என்று நயமாக உரைக்கின்றார்.

**170.** செல்லப்பன்: ஒரு பெருங்கொடையாளி; இவன் பிறந்தபின்பு காமதேனு முதலியவைகள் இவனோடு சேர்த்து எண்ணப்படின் ஒவ்வொன்றாக அதிகரிக்கின்றது. அஃதாவது, ஒன்றாயிருந்த காமதேனு இரண்டாயிற்று. மும்மணிகள் நான்காயின; ஐந்தரு ஆறாயின. எழுமேகங்கள் எட்டாயின; நவநிதி-பத்தாயின. கொடையிற் சிறந்த காமதேனு முதலியவற்றோடு சேர்த்துச் சொல்லுதற்குரிய கொடையுடையவன் என்பது கருத்து.

**171.** கிடுகிடெனப் பல்லடிக்க. வில்லாலடித்தவன் அருச்சுனன்; பிரம்பாலடித்தவன் அரிமர்த்தன பாண்டியன்; கல்லாலடித்தவர் சாக்கிய நாயனர். செல்-மேகம்.

**172.** கச்சி எகம்பன்-காஞ்சீபுரத்திலுள்ள ஏகம்பநாதன்.

# வினாக்கள்

## செய்யுட் பகுதி

### I

1. திருமாலின் குணங்கள் இயற்கைப்பொருள்களிற் காணப்படும் என்பதைக் கடுவன் இளவெயினனார் எவ்வாறு கூறுகின்றார்?

2. உலக நோன்பி; ஏமமாயோய்; மூவகையுலகு—இவற்றை விளக்குக.

### II

1. இளவேனிற்காலத்தில் மலரும் மரங்கள் யாவை?
2. சீரூர் பூவொடு புரைதலை ஆசிரியர் எவ்வாறு கூறுகின்றார்?
3. புலக்கோல்; நான்மாடக்கூடல்:—விளக்குக.
4. 'அறவிலை வாணிகன் ஆய் அலன்': ஆகாமை எங்ஙனம்?
5. சான்றோர் சான்றோர் பாலராவதற்கு உவமை யாது?
6. பேதை செய்யும் தீய செயல்கள் யாவை?
7. மையலொருவன் களித்தற்று—எது? எதனால்?
8. மேன்மக்களின் இலக்கணங்கள் யாவை?
9. நெல்லுக்குமியுண்டு; கரும்பினை இடித்து நீர் கொள்ளினும் அஃது இன்சுவைத்தேயாகும்:—இவற்றிற்கு உபமேயங்கள் யாவை?

### III

1. புத்த ஞாயிறு தோன்றுங்காலை நிகழ்வனவும் நீங்குவனவும் யாவை?
2. இந்திரவிழாக் காலத்தில் வீதிகள் எவ்வாறு அலங்கரிக்கப்படுதல் வழக்கம்?
3. மருதம், குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல் இவற்றிற்குரிய நிலங்கள் யாவை?
4. மருதத்தின் தன்மை எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது?
5. அருவி தன்னுடன் எடுத்துவருவன யாவை?
6. மகததேயத்தின் பெருமைகள் யாவை?
7. அன்பர் தம்முட் செய்தற்குரியன யாவை?

### IV

1. கர்ணன் கிருஷ்ணனிடம் வேண்டிப் பெற்றுக்கொண்ட வரன் யாது?

2. 'பெறுதற் கெட்டாப் பெரும் பயனின் றிருவருளாற் பெறப் பெற்றேனே'—சந்தர்ப்பத்துடன் விளக்குக.

3. 'என்னையன்றி இருநிலத்திற் பிறந்தோரில் யார் பெற்றூரே?'—இவ்வாறு கூறக் கர்ணன் பெற்றவை யாவை?

4. நளன் அடைந்த கானம் தன் இயற்கை மாறிக்காட்டியது எங் ஙனம்?

5. தமயந்தி தன் கணவன் நிலையைக் கண்டு எவ்வாறு வருந்தினுள்?

## V

1. சுவையாறு தழீஇய நான்குவகை மாண்ட மாறுபடுமுண்டி—கோடிட்ட பாகங்களை விளக்குக.

2. இல்வாழ்வான் தன் வருவாயை யார் யாருக்குக் கொடுத்தல் வேண்டும்?

3. 'பவரோகங்களை சிவநாதன் சிவபதமீதொன்றினனே'—பொருள் கூறுக.

4. உரமெய்துவதன்முன்னே ஒழிக்கற்பாலன யாவை?

5. தாயத்தாரால் துன்புறுத்தப்பட்ட சிவநாதனின் தாய் கடவுளிடம் எவ்வாறு இரங்கினுள்?

6. சிவபெருமான் அடியார்களுக்காகத் தாம் செய்தருளிய உபகாரங் களுள் ஏதேனும் ஒன்றினைப்பற்றி எழுதுக.

7. குளத்தில் முழுகி எழுந்த பாலன் எவ்வாறு தோன்றினுன்?

8. சிவபெருமான் தம் முடியை விளக்கப் பிறவிடங்களில் நேர்ந் தவை யாவை?

9. சிலந்தி தான் அமைத்த திருக்கோயிலை எவ்வாறு புகழ்ந்து கொண்டது?

10. பாம்பும் யானையும் கடவுளை எவ்வாறு பூசித்தன?

11. மும்மதத்து நால்வாய்க் குஞ்சரம்—பொருள் கூறுக.

## VI

1. திருமால் உறையும் திருப்பதிகளில் நான்கினைக் கூறுக.

2. இரவியை......என்னும் தொடக்கத்தையுடைய செய்யுட்குப் பதவுரை கூறுக.

3. குறவஞ்சியில் நாட்டின் பெருமை எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

## VII

1. காய்தலுவத்தல் அகற்றவேண்டுவது ஏன்?

2. நா காவாக்கால் விளைவன யாவை?

3. கொடுத்தலின் மேன்மையைச் சிந்தாமணி எவ்வாறு கூறுகின்றது?

## VIII

1. முத்துக்கிருஷ்ணனருள் சற்குண சிந்தாமணியைச் சோலையென்று சொன்னவரார்?—இவ்வாறு கூறக் காரணம் என்ன?

2. 'செல்லப்பன் கச்சியிலே' என்ற தொடக்கத்தையுடைய செய்யுளுக்குப் பொழிப்புரை கூறுக.

# உரைநடைப் பகுதி

## 1

1. 'நான் ஒரு புலவன்தானே! என்னை இப்படிச் சொல்லலாமா?' என்று ஒட்டக்கூத்தர் கூறக் காரணமென்ன?

2. பெரிய மலைகளையும் மண்ணையும் விழுங்கிய பழக்கம் மகாராஜாவுக்கு உண்டென்பது எவ்வாறு உண்மையாகும்?

## 2

1. உத்தம ஆசிரியருக்கு மலை உவமையாவதெப்படி?

2. மன்றம் என்பது யாது? அதன் உபயோகம் என்ன?

3. பள்ளி என்னும் பெயர் எவ்வெவற்றிற்குப் பொதுவாய் நடந்து வந்தது? அதற்குக் காரணம் யாது?

4. குருகுலவாசம் செய்த எந்த இரு பெரியோர்களின் வரலாறுகளையேனும் கூறுக.

5. நெடுங்கணக்கு, குழிமாற்று, காரிகை—பொருள் கூறுக.

6. சிறுர்களின் ஞாபகசக்தியை விருத்திபண்ண உபாத்தியாயர்கள் கையாண்ட முறைகள் யாவை?

7. பிள்ளைகள் தங்கள் சுவடிகளை எவ்வாறு வைத்திருப்பார்கள்?

## 3

1. சிவஞான முனிவர் இயற்றிய நூல்கள் யாவை? அவை ஒவ்வொன்றிலும் அமைந்த பொருள் யாது?

2. கச்சியப்பர் ஒதுவாரை எவ்வாறு அடக்கினர்? (10 வரிகளுள் எழுதுக.)

4

1. குறிஞ்சி நிலமக்களின் தொழில்கள் யாவை?

2. சேரி, குறிச்சி, பாடி, ஊர்—இப்பெயர்கள் எந்த எந்த நிலத்துக்கு உரியன?

3. ஐந்நிலங்களுக்கும் உரிய கடவுள்கள் யாவர்? நெய்தல் நிலத்தினர் எவ்வாறு தங்கடவுளை வழிபடுவர்?

5

1. கௌதமருக்குத் துறக்கவேண்டுமென்னும் எண்ணம் எவ்வாறு தோன்றிற்று?

2. கௌதமர் புத்தரானது எவ்விதம்? அப்பொழுது அவர் அறிந்தவை யாவை?

3. கிரிசா கௌதமி 'இவ்வுலகில் ஒன்றும் நிலையுள்ளதன்று' என்பதை எவ்வாறு அறிந்தனள்?

4. குரு சிஷ்யர்களுக்குரிய ஒழுக்கங்கள்; யஜமானனுக்கும் வேலைக்காரர்களுக்குமுரிய ஒழுக்கங்கள்—இவற்றைப்பற்றிப் புத்தர் கூறியவை யாவை?

6

1. பண்டைத் தமிழர் ஓவியக்கலையிற் சிறந்திருந்தனர் என்பது எவ்வாறு அறியப்படும்?

2. இணையற்ற சிற்பக்கலைகள் தமிழகத்தில் இன்றும் காணப்படும் இடங்கள் யாவை?

3. தமிழர் நகரமைப்பின் செயலை நன்கறிந்தனர் என்பது எவ்வாறு விளங்கும்?

4. கரந்துபடை, மண்ணீட்டாளர், அல்லங்காடி, கரவடநூல், கரந்துறை கணக்கு—இவற்றின் பொருள்கள் யாவை?

5. பண்டைத் தமிழரின் போர்புரிதலைப்பற்றி நீவிர் அறிவன யாவை?

6. முகவெழுத்து, துகிலிகைக் கணக்கு—இவற்றை விளக்குக.

7

1. குமரகுருபரர் மதுரையிற் பாடியவை யாவை?

2. நீதிநெறி விளக்கம், சகலகலாவல்லிமாலை—இவை பாடப்பட்ட வரலாறுகள் யாவை?

3. துளசிதாசரது இராமாயணத்தில் கம்பராமாயணக் கருத்துக்கள் காணப்படக் காரணம் என்ன?

4. 'பைந்தமிழின் பின்சென்ற பச்சைப்பசுங் கொண்டலே'—இதனில் அமைந்துள்ள வரலாறு யாது?

5. குமரகுருபரரின் தமிழ்நடையைப்பற்றி நீவிர் அறிவன யாவை?

## 8

1. தமிழ்ச்சங்கம் இருந்ததென்பதற்கு ஆதாரங்கள் யாவை?

2. இறையனார் அகப்பொருள் தோன்றிய வரலாறு யாது?

3. பொருளிலக்கணத்தின் பகுதிகள் யாவை? அவை ஒவ்வொன்றிலும் அமைந்துள்ள பொருள்கள் யாவை?

## 9

1. தான் இறந்துவிட்டதாக எழுப்பிய செய்தியை உலகத்தார் உண்மையென உணருமாறு யூகி செய்தன யாவை?

2. நளகிரிக்கு மதம் பிடித்தது எதனால்? அஃது எவ்வாறு அடக்கப்பட்டது?

3. யூகி உதயணனுக்கு வயந்தகனிடம் சொல்லியனுப்பிய செய்தி யாது?

4. உதயணனை வாசவதத்தையிடமிருந்து பிரிப்பதற்கு யூகி செய்த தந்திரம் யாது?

5. யூகி தனக்குச் செய்த நன்மைகளை உதயணன் எவ்வாறு பாராட்டினான்?

## 10

1. பண்டமாற்றால் உண்டாகும் அசௌகரியங்கள் யாவை?

2. விலையை யளக்கும் பொதுக்கருவியாக உபயோகிக்க உலோகங்கள் எவ்வாறு சிறப்பானவையாகும்?

3. நாணயங்களின் விலையைத் திட்டப்படுத்தத் துரைத்தனத்தார் செய்துள்ள முயற்சிகள் யாவை?

4. நிதிச்சாலைகளால் உண்டாகும் நன்மைகளைக் குறித்துப் பத்து வரிகளில் ஒரு கட்டுரை வரைக.

## 11

1. கல்வியின் சிறப்புக்கள் யாவை?

2. இக்காலக் கல்வியிலுண்டாகும் குறைபாடுகளைப்பற்றி உங்கள் பாடத்தில் சொல்லப்பட்டுள்ளவை யாவை?

3. கெட்ட பழக்கங்களை நீக்க ஒருவர் கையாளவேண்டிய முறைகள் யாவை?

4. பிராயம் முதிர்ந்தவர்களுக்குக் கல்வியறிவைப் புகட்டத்தக்க மார்க்கங்களிற் சிலவற்றைக் கூறுக.

12

1. தொல்காப்பியத்திற் கூறப்பட்டிருக்கும் உரைநடைவகைகள் யாவை?

2. பழைய உரைநடைக்கு உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கும் பகுதியைக் கதையின் நடையில் அமைத்துக் காட்டுக.

3. மணிப்பிரவாள நடையிற் காணப்படும் வடமொழிக்குத் தமிழ்ச் சொற்களை அமைத்து அப்பகுதியை மாற்றி எழுதுக.

4. கண்காணி செய்வார்; ஸ்ரீகாரியஞ் செய்வார்; கண்டுவிடு தருதல்; பிடாகை; மாக்காணி; நியோகம்—இவற்றிற்குப் பொருள் தருக.

5. ஒரு வீட்டை உங்கள்பேரில் கிரயசாஸனம் செய்துகொள்வதாகக் கருதி, அதற்கொத்த பத்திரமொன்றை எழுதுங்கள்.

6. உங்கள் கலாசாலையில் நடைபெறும் ஏதேனும் ஒரு விழாவைக் குறித்துப் பத்திரிகைக்குக் கட்டுரையொன்று எழுதுக.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்
நூல் வரிசை எண்: 2567
நன்கொடை எண்: 2567
அவ்வை தி.க. சண்முகம் நூலகம்

PRINTED IN INDIA AT THE DIOCESAN PRESS, MADRAS—1937. B 2805

SELECTIONS FROM TAMIL POETRY AND PROSE

BY

MAHAMAHOPADYAYA DR. V. SWAMINATHA AIYAR

&

PART II]     VIDWAN R. VISVANATHA AIYAR, B.A.     [PRICE 12 AS.